ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம: 2894

# அமலனாதிபிரான்

# வ்யாக்யானங்கள்

[ பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளையும்,
அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும்,
ஸ்ரீவேதாந்ததேசிகரும் அருளிச்செய்தவை.]

(பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டுடன்கூடியது)

பதிப்பாசிரியர்:-

ஸ்ரீ S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சிராப்பள்ளி.

★

விலை ரூ. 1—14—0.

தபாற்கூலி 0–4–0.

# முகவுரை

திருப்பாணாழ்வார் அருளிச்செய்த அமலனாதிபிரான் என்னும் திவ்ய ப்ரபந்தம், பரமகாருணிகரான பெரியவாச்சான்பிள்ளையும், ஆசார்ய ஹ்ருதயகாரரான அழகியமணவாளப்பெருமாள் நாயனாரும் அருளிச் செய்த வியாக்கியானங்களோடும், ஸ்ரீவேதாந்ததேசிகர் அருளிய 'முனி வாஹநபோகம்' என்னும் அமலனாதிபிரான் வ்யாக்யானத்தோடும் ஸ்ரீஸூக்திமாலையின் பதினாறாவது மலராக வெளியிடப்படுகிறது. பல மஹாசார்யர்களால் வியாக்கியானம் செய்யப்பெற்ற பெருமையுள்ள ஒரு சில பிரபந்தங்களில் இதுவுமொன்று. குறிப்பாக, ஸ்ரீவேதாந்ததேசிகர் திவ்யப்ரபந்தங்களில் இப்பிரபந்தம் ஒன்றுக்கே வியாக்கியானமருளிச்செய் துள்ளார். இம்மூன்று வியாக்கியானங்களும் ஒரே புத்தகத்தில் முதன் முதலாக இப்போதே வெளியிடப்படுகிறது. இது உபந்யாஸகர்களுக்கும், ரஸிகர்களுக்கும் மிகவும் பயன்படுமென்று நம்புகிறோம்.

இவ்வாழ்வாரின் பெருமையைச் சிறிது பேசுவோம். குலங்களாய ஈரிரண்டில் ஒன்றிலும் பிறந்திலாதபோதிலும், தம் பகவத்பக்திப் பெருமையாலே சாதிச்சிறுமையழியப்பெற்று, பகவானுடைய நியமனத் தின் பேரில் அந்தணராய், யதியாகையாலே வர்ணத்திலும், ஆச்ரமத் திலும் உயர்ந்தவரான லோகஸாரங்கமஹாமுனிகளின் தோளில் ஏறி வந்து, வருகிற வழியிலேயே 'அமலனாதிபிரான்' என்று தொடங்கி எம் பெருமானைத் திருவடிதொடங்கித் திருமுடியளவும் அநுபவித்து, கடைசிப் பாசுரத்தைப் பெரியபெருமாள் திருமுன்பே அருளிச்செய்து அவருடைய திருமேனியிலேயே தம்முடைய திருமேனியும் ஐக்யமடையப்பெற்றார் என்பது இவரைப்பற்றிய சரித்திரம். இவருடைய அவதாரஸ்தலம் அடியோங்கள் வாழுமிடத்திற்கு மிக ஸமீபத்திலுள்ள கோழியூர் என்னும் உறையூராகும். தினந்தோறும் வீணையைக்கைக்கொண்டு திருவரங்கம் பெரிய கோயிலிருக்கும் திசைநோக்கிக்கொண்டு பாடுவதையே தொழி லாகக்கொண்ட இவருடைய பிரபந்தம் வீணாநாதத்திலும் இனிமையான ஒலியுடையதென்பது மிகைமொழியன்று. முதல் மூன்று பாசுரங்களின் முதலெழுத்துக்களும் வேதஸாரமான ஓங்காரத்திலடங்கியுள்ள 'அ' 'உ' 'ம' என்னும் எழுத்துக்களாயிருப்பதிலிருந்து, இப்பிரபந்தம் வேதஸார விவரணமாயிருக்கிறதென்பது வெளிப்படை. இப்படி ப்ரமாணஸாரமான ஓங்காரத்தை முதல் மூன்று பாசுரங்களாலே உணர்த்தி, ப்ரமேயஸாரம் எம்பெருமானுடைய திருக்கமலபாதப்பாதுகையே என்பதை ஐந்து, ஆறு, ஏழாவது பாசுரங்களின் முதலெழுத்துக்களான 'பா' 'து' 'கை' என்னும் எழுத்துக்களால் உணர்த்துகிறார் என்று பெரியோர் பணிப்பர். நடுவி லுள்ள நான்காவது பாசுரத்தின் முதலெழுத்தான சகாரம் ப்ரமாண ஸாரத்தையும், ப்ரமேய ஸாரத்தையும் ஸமுச்சயிக்கிறது போலும்.

வியாக்கியானங்களின் பெருமையைச் சிறிது பகர்வோமினி. இம் மூன்று வியாக்யாதாக்களில் காலத்தால் முந்தியவர் பெரியவாச்சான்

பின்ளை. நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கும் வியாக்கியானம் செய்த பேராசிரியர் இவரே என்பது ஸுப்ரஸித்தம். தஞ்சை ஜில்லாவில் திருவெள்ளியங்குடியென்னும் திவ்யக்ஷேத்திரத்திற்கருகிலுள்ள 'சங்கநல்லூர்' என்னுமிடத்தில் பூர்வசிக ஸ்ரீவைஷ்ணவகுலத்தில் அவதரித்தவர் இம்மஹான். இப்பிரபந்தத்திற்கு இவரருளிய வியாக்கியானம் ஸூத்ரம் போலே ஸங்க்ஷிப்தமாய் அதிகம்பீரபாவகர்ப்பமாய் விளங்குகிறது. இதற்கு பாஷ்யம் போலே விளங்குகிறது அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிய விரிவான வியாக்கியானம். நம்பிள்ளையின் சிஷ்யராய், பெரியவாச்சான்பிள்ளையின் ஸப்ரஹ்மசாரியான வடக்குத் திருவீதிப் பிள்ளையின் இரண்டாவது குமாரர் இவ்வாசார்யர்; 'ஆசார்ய ஹ்ருதயம்' என்னும் அற்புதமான நூலை அருளிச்செய்தவர்; பற்பல ரஹஸ்யக்ரந்தங்களை உபகரித்தருளிய பிள்ளைலோகாசார்யரின் திருத்தம்பியாராவர் இவர். திருப்பாவை, அமலனாதிபிரான் முதலான சில திவ்யப்ரபந்தங்களுக்கு இவர் விரிவான வியாக்கியானங்கள் அருளிச்செய்துள்ளார்.

முனிவாஹநபோகமருளிய வேதாந்ததேசிகரின் பெருமை அதிப்ரஸித்தமானது. வடமொழியிலும் தென்மொழியிலும் பற்பல நூல்களை அருளிய பெரியார் இவர். திவ்யப்ரபந்தங்களில் அமலனாதிபிரான் ஒன்றுக்கே இவர் வியாக்கியானமருளியுள்ளார். 'ஆழ்வார்களைப்போன்ற பரமபக்தர்களுக்கும் ஜாதி கழியுமோ கழியாதோ?' என்னும் ஐயத்தைப் பெரியவாச்சான்பிள்ளையிடமிருந்து தெளியப்பெற்று, அவருடைய நியமனத்தினால் அமலனாதிபிரானுக்கு 'முனிவாஹனபோகம்' என்னும் வியாக்கியானத்தை அருளினார் ஸ்ரீதேசிகன் என்றும், இதையே முனிவாஹனபோகத்தில் "ஸாத்விகப்ரீத்யை" "விரக்ததோஷாய" "வேதாந்தவாரியனென்றியம்பநின்றோம் நாண்பெரியோமல்லோம் நாம் நன்றும் தீதும் நமக்குரைப்பாருளரென்று நாடுவோமே" என்னும் தொடர்களாலே உணர்த்தினாரென்றும் ஆராய்ச்சி வல்லுனரான அஸ்மத்தாதபாதர்கள் அருளிச்செய்வர். அபயப்ரதராஜ விஜயத்திலே விரிவு காணலாம். சில பழைய நூல்களிலும் இவ்விருத்தாந்தம் உண்டு. நிற்க; 'முனிவாஹனபோகம்' என்னும் இவ்வியாக்கியானம் அதிஸங்க்ஷிப்தவிஸ்த்ருதமாய், அமலனாதி பிரானிலுள்ள சாஸ்திரார்த்தங்களையெல்லாம் அதிகம்பீரஸூக்திகளாலே விளக்குவதாய் அமைந்துள்ளது. இம்மூன்று வியாக்கியானங்களோடு இப்பிரபந்தத்தை ஸேவிக்குமவர்கள், இவ்வாழ்வாரைப்போலே, "இந்நூலைக் கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்பர் என்பது திண்ணம். அடுத்தபடியாகக் கண்ணிநுண் சிறுத்தாம்பு வ்யாக்யானங்கள் வெளியிடப்படும்.

தாஸன்,

தையில் ஸ்வாதி. ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



மயர்வறமதிநல மருளப்பெற்ற திருப்பாணாழ்வார் அருளிச்செய்த

# அமலனாதிபிரான்

## தனியன்

आपादचूडमनुभूय हरिं शयानं मध्येकवेरदुहितुर्मुदितान्तरात्मा।
अद्रष्टृतां नयनयोर्विषयान्तराणां यो निश्चिकाय मनवै मुनिवाहनं तम्॥

ஆபாதசூடமநுபூய ஹரிம் ஶயாநம்
மத்யே கவேரதுஹிதுர்முதிதாந்தராத்மா
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணும்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம் ||

பதவுரை:—ய:-யாவரொரு திருப்பாணாழ்வார், கவேரதுஹிது:- திருக்காவேரியின், மத்யே—நடுவில் ஶயாநம் — திருக்கண்வளர்ந்தருளுகிற, ஹரிம்—ரங்கநாதனை, ஆபாத சூடம்—திருவடிதொடங்கித் திருமுடியளவாக, அநுபூய—அநுபவித்து, நயநயோ: விஷயாந்தராணும் அத்ரஷ்ட்ருதாம்—(தமது) திருக்கண்கள் (அப்பெருமானைத் தவிர) மற்றொன்றையும் காணமாட்டாமையை, நிச்சிகாய—அறுதியிட்டருளினரோ, தம்—அப்படிப்பட்ட, முநிவாஹநம்—லோகஸாரங்க மஹாமுநியை வாஹநமாகக்கொண்ட திருப்பாணாழ்வாரை, மநவை—சிந்திக்கக்கடவேன்.

## பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த தனியன் வ்யாக்யானம்

அவ:— (ஆபாதசூடமித்யாதி) இதில் §"கெடுவாகனனும் நிற்க" என்றும், ||"அஞ்சிறைப்புட்பாகனையான் கண்டது தென்னரங்கத்தே" என்றும் சொல்லுகிறபடியே பெரிய பெருமாளை

§ திருமாலை-10. || பெரியதிரு 5-6-6.

ஸேவித்து அநுபவித்த முநிவாஹநரை மநஸ்ஸாலே அநுபவிக்கும்படி சொல்லுகிறது. கருடவாஹநத்வமும் ஶேஷஶாயித்வமும் ஸ்ரிய:பதித்வமுமிறே ஸர்வஶேஷியான ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணம்; இப்படி ஸர்வாதிகவஸ்துவினுடைய ஸர்வாவயவங்களையும் ஸக்ரமமாக அநுபவித்தபடி சொல்லுகிறது.

வ்யா:-(ஆபாதசூடம்) *திருப்பாதகேசத்தை. (அநுபூய)* அமலனாதிபிரானையே யநுபவித்து. (ஹரிம் ஶயாநம்) l.“**श्रीमान् सुखसुप्तः परन्तपः**”(ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:) என்னும் படியாய்க்கிடக்கை. கிடந்த கிடையிலே * உட்குடை யசுரருயிரெல்லா முண்டவரிறே. “ஹரதீதி ஹரி:” அநுகூலர் மநஸ்ஸையும் ப்ரதிகூலர் ப்ராணன்களையும் ஹரிக்கு மவரென்கிறது. அநுகூலரை * தருஷ்டி சித்தாபஹாரம் பண்ணும்படியாயிருக்கை. || “கிடந்ததோர் கிடக்கைகண்டு மெங்ஙனம் மறந்துவாழ்கேன்” §“ஏரார்கோலம் திகழக்கிடந்தாய் கண்டேன்” என்னும்படி தாபஹரரானவரை. அவர்தாம், * அரவினணை மிசை மேயமாயனான முகில் வண்ணரிறே. இப்படி அநுகூல ப்ரதிகூலரக்ஷண ஶிக்ஷணங்களைப் பண்ணுமவரானவரை.

(கவேரதுஹிதுர்மத்யே) கவேரகந்யையான காவேரிமத்யே. * கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டிலேயிறே படுகாடுகிடக்கிறது. * வண்பொன்னி * திருக்கையாலடிவருட * திருவாளனினிதாகவாய்த்துத் * திருக்கண்கள் வளருகிறது. இப்படி (கவேரதுஹிதுர் மத்யே ஶயாநம் ஹரிம் ஆபாதசூடம்) என்று * குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம்நீட்டி வடதிசை பின்புகாட்டித் தென்திசையிலங்கை நோக்கிக், கடல்நிறக் கடவுளெந்தை அரவணைத்துயிலுமாகண்டு அநுபவித்தாரென்கை. (முநிதாந்தராத்மா) இப்படி அநுபவித்து ஹ்ருஷ்டமநாவானார்; அகமகிழப்பெற்றார். * உவந்தவுள்ளத்தரானார். ஸந்துஷ்டசித்தஸமாஹிதானார். †“மகிழ்ந்தது சிந்தை” என்னக்கடவதிறே.

இனி அவ்வளவில் நில்லாதே (அத்ரஷ்ட்ருதாம்நயநயோர் விஷயாந்தராணாம்) என்னும்படி * காணாக்கண்ணே யுடையரானார்.

---

|| திருமாலை-23. § திருவாய் 5-8-1 † இர திருவ-32.

|| "அணியரங்கனென்னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றாய்த்து இவர் இவ்விஷயத்திலே * அஸ்தமிதாந்ய பாவராயிருப்பது; 2. "एतदेवामृतं दृष्ट्वा तृप्यन्ति" (ஏததேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி) || "அரங்கமா கோயில்கொண்ட கரும்பினைக் கண்டு கொண்டென் கண்ணிணை களிக்குமாறே" 3. "रामं मेऽनुगता दृष्टिः" (ராமம் மேநுகதா த்ருஷ்டி:) 3 "न त्वा पश्यामि" (நத்வாபச்யாமி) யிறே. ஸௌந்தர்யஸாகரத்திலேமக்நரானார்; இவர்க்கு அழகு அஜ்ஞானத்தை விளைத்ததாய்த்து. அத்ருஷ்டம் த்ருஷ்டமாகையாலே த்ருஷ்டம் அத்ருஷ்டமாய்த்து. அன்றிக்கே, § "சிந்தைமற்றொன்றின் திறத்ததல்லா" 4. "भावो नान्यत्र गच्छति" (பாவோ நாந்யத்ர கச்சதி) என்னும்படி பரத்வாதிகளாய்த்து பரோக்ஷவிஷயமாகிற தென்னுதல்; || "கட்கிலீ" என்னும் வடிவையிறே கண்ணால் கண்டநுபவித்தது. காணாதவையும் கண்டவஸ்துவிலே யுண்டிறே. இப்படி * மைப்படி மேனியை யநுபவித்து மற்றவிஷயங்களைக் காணாக் கண்ணா யிருக்குமவரைச் சொல்லுகிறது.

(யோ நிச்சிகாய மநஸா முநிவாஹநம் தம்) என்று-யாவரொருவர் "கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்று அறுதியிட்டார் அப்படிப்பட்ட அந்தமுநிவாஹநரை. (மநஸா) மநஸ்ஸாலே ப்ரதிபத்திபண்ணுகிறேனென்றபடி. † "அயனலர்கொடுதொழுதேத்த" என்னும்படி ஹம்ஸவாஹநனை சதுர்முகன் பஹுமுகமாக அநுபவித்தாப்போலே முநிவாஹநரான இவரும் ஏகமுகமாக இரண்டு கண்ணாலும் கண்டநுபவித்தார்.

5. "किरीटकेयूरकरत्नकुण्डलं प्रलम्बमुक्तामणिहेमभूषितम्। विशालवक्षःस्थलशोभिकौस्तुभम् श्रिया च देव्याध्युषितोरुविग्रहं॥ प्रतप्तचामीकरचारुवाससम् सुमेखलानूपुरशोभिताङ्घ्रिकम्। सुबन्धुनीजातमृणालकोमलं दधानमच्छच्छवियज्ञसूत्रकम्॥ भुजोपधानं प्रसृतान्यहस्तम् निकुञ्चितोत्तानितपादयुग्मं। सुदीर्घमुर्वंसमुदग्रवेषं भुजङ्गतल्पं पुरुषं ददर्श॥" (கிரீடகேயூரக ரத்நகுண்டலம் ப்ரலம்பமுக்தாமணி ஹேமபூஷிதம்। விசால வக்ஷஸ்ஸ்தல சோபிகௌஸ்துபம் ச்ரியாச தேவ்யாத்யுஷிதோருவிக்ரஹம்॥ ப்ரதப்தசாமீகரசாருவாஸஸம்। ஸுமேகலாநூபுர சோபி

|| திருமாலை-17. § திருவாய் 7-10-10. || திருவாய் 7-2-3.
† பெரியதிரு 4-2-6.

தாங்க்ரிகம்। ஸுபந்துஜீஜாத ம்ருணாள கோமளம் ததாநமச்சச்சவி யஜ்ஞ ஸூத்ரகம்॥ புஜோபதாநம் ப்ரஸ்ருதாங்யஹஸ்தம் நிகுஞ்சிதோத்தாநித பாதயுக்மம்। ஸுதீர்க்கமூர்வம்ஸமுதக்ரவேஷம் புஜங்கதல்பம் புருஷம் ததர்ஸ॥) என்று ப்ரஹ்மாவானவன் அபிமானியாகையாலே, முடியே தொடங்கியநுபவித்தான்; இவர் அடியாராகையாலே அடியேதொடங்கி அநுபவித்தார். அவன்கண்டவநந்தரம் விஷயங்களையும் கண்டான்; இவர் விஷயங்களைக் கண்டிலர். "திருக்கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன" "கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்றார்.

வீணையும் கையுமாய் ஸேவிக்கிற இவர்க்கு *சேமமுடை நாரதனாரும் ஒருவகைக்கு ஒப்பாகார்.

பெரியாழ்வார் அவதாரத்தில் அநுபவம் இவர்க்கு அர்ச்சாவதாரத்திலே; அவர் *"பாதக்கமலம்" என்றதை 'திருக்கமலபாதம்' என்றார்; *"பீதகச்சிற்றாடையொடும்" என்றதை "அரைச்சிவந்தவாடையின்மேல்" என்றும், * அழகியவுந்தியை * அயனைப்படைத்ததோரெழிலுந்தியென்றும், * பழந்தாம்பாலார்த்தவுதரத்தை * திருவயிற்றுதரபந்தமென்றும், * குருமாமணிப்பூண் குலாவித்திகழும் திருமார்வை * திருவாரமார்வென்றும், * அண்டமும் நாடுமடங்க விழுங்கிய கண்டத்தை * முற்றுமுண்ட கண்டமென்றும், * நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய கைத்தலத்தை * கையினார் சுரிசங்கனலாழியரென்றும், * செந்தொண்டை வாயை * செய்யவாயென்றும், * கண்களிருந்தவாவென்றதை * அப்பெரியவாய கண்களென்றும், * உருவுகரிய வொளிமணி வண்ணனென்றதை * எழில் நீலமேனியென்றும், * குழல்களிருந்தவா என்றதை * துளவவிரையார் கமழ்நீண்முடியென்று மருளிச்செய்தார். * கோவலனாய் வெண்ணெயுண்ட வாயனிறே பெரியபெருமாள். ஆகையால் அநுபவத்தில் இருவரும் ஸகோத்ரிகளாயாய்த்திருப்பது. இப்படி மந:ப்ரீதி பிறக்கும்படி அநுபவித்த ஆழ்வாரை இங்கு மந:ப்ரீதி பிறக்கும்படி (மநவை) என்று-மந்ஸ்ஸாலே ஸேவிக்கும்படி சொல்லிற்று.

## திருமலைநம்பி அருளிச்செய்த தனியன்

(அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம்)

காட்டவே கண்ட பாதகமல நல்லாடையுந்தி
தேட்டரு முதரபந்தந் திருமார்வு கண்டஞ் செவ்வாய்
வாட்டமில் கண்கள்மேனி முனியேறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டுவாழும் பாணர்தாள் பரவினோமே.

பதவுரை:—முனி ஏறி—லோகஸாரங்க முனியின் (தோளின் மேல்) ஏறி, தனி புகுந்து—தனியே உள்ளே புகுந்து, காட்டவே கண்ட—(அம்முனிவரர் காண்பித்தபடியே கண்டு ஸேவிக்கப்பட்ட, பாத கமலம்—திருவடித்தாமரைகளும், நல் ஆடை—சிறந்த திருப்பீதாம்பரமும், உந்தி—திருநாபியும், தேட்டரும் — கிடைத்தற்கு அரிதான, உதர பந்தம்-பொன் அரைநாணும், திரு மார்வு-பிராட்டி வாழ்கிற மார்பும், கண்டம்—திருக்கழுத்தும், செம் வாய்—சிவந்த வாயும், வாட்டம் இல்—சோர்வு இல்லாத, கண்கள்—திருக்கண்களும், (ஆகிய இவற்றோடு கூடிய) மேனி-திருமேனியை, பாட்டினால் கண்டு வாழும்-பாசுரங்களின் அநுஸந்தாநத்தோடுகூட ஸேவித்து ஆநந்தித்த, பாணர்—திருப்பாணாழ்வாருடைய, தாள்-திருவடிகளை, பரவினோம்—துதிக்கப்பெற்றோம்.

அவ:— (காட்டவேகண்ட பாதகமலம்) பெரிய பெருமாளைப் பாதாதிகேசாந்தமாய் அநுபவிக்கப்பெற்ற பாண்பெருமாளை ஸ்தோத்ரம் பண்ணி ஹர்ஷிக்கும்படி சொல்லுகிறது.

வ்யா:— (காட்டவேகண்ட பாதகமலம்) "அரங்கத்தம்மான் திருக்கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே" என்று 6. "श्रीरङ्गेशयपादपङ्कजयुगं" (ஸ்ரீரங்கேசயபாதபங்கஜயுகம்) என்ற *ஸ்ரீரங்கராஜ சரணாம்புஜங்களைச் சொல்லுகிறது. (நல்லாடை)"அரங்கத்தம்மான் அரைச்சிவந்தவாடை" என்று-ரங்கதுரந்தரனுடைய பீதாம்பரத்தைச் சொல்லுகிறது. (உந்தி) "அரங்கத்தரவினணையான் அயனைப் படைத்ததோ ரெழிலுந்தி" என்று விதிஸிவநிதாநமான நாபீபத்மத்தைச் சொல்லுகிறது.

(தேட்டருமுதரபந்தம்) *தேட்டரும் திறல்தேனை தென்னரங்கனுடைய தேடற்கரிய உதரபந்தம். "அரங்கத்தம்மான் திரு

வயிற்றுதரபந்தம்" என்று 7 "पट्टं किलोदरबन्धनम्" (பட்டம்கிலோதரபந்தநம்) என்றத்தைச் சொல்லுகிறது. (திருமார்வு) "அரங்கத்தம்மான் திருவாரமார்பு" என்று-லக்ஷ்மீலளித க்ருஹமான வக்ஷஸ்ஸ்தலத்தைச் சொல்லுகிறது. (கண்டப்) "அரங்க நகர்மேயவப்பன் முற்றுமுண்டகண்டம்" என்று ஸ்ரீரங்கநேதாவின் கண்டத்தைச் சொல்லுகிறது. (செவ்வாய்) "அணியரங்கனார்-செய்யவாய்" என்று 8 "अधरमधुरांभोजं" (அதர மதுராம்போஜம்) என்று - அருணாதர பல்லவத்தைச் சொல்லுகிறது. (வாட்டமில்கண்கள்) * க்ஷேணாஜ்வலமாய் அழலானியையுடைய தாமரைப்பூவில் வ்யாவ்ருத்தமாய், * ஸதைகரூபமாய், "அரங்கத்தமலன் முகத்துக் கரியவாகிப்புடை பரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்பெரியவாய கண்கள்" என்று * விஶால ஸ்பீதாயத ருசிர ஶிஶிர தாம்ர தவளமான ஸ்ரீரங்க ப்ரணயி நயநாப்ஜங்களைச் சொல்லுகிறது. (மேனி) ஏவம்விதமான திவ்யமங்கள விக்ரஹத்தை.

(முனியேறி) முநிவாஹநராய். (தனிபுகுந்து) இந்தமஹா போகத்திலே தாம் ஏகராய் உள்புகுந்து. (பாட்டினால்) அநுபவத்துக்குப் பாசுரமிட்டுப்பேசின "அமலனாதிபிரான்" என்கிற ப்ரபந்தத்தின் பாட்டுக்களாலே * அண்டர்கோனணி யரங்கனைக் கண்டு வாழுமவராய்த்து இவர். பின்பு இவ்வநுபவத்துக்கு பட்டர் தேஶிகரானார். (கண்டுவாழும்) காட்சியே வாழ்ச்சியாக வாழுகிற பாணர் தாள்—வீணாபாணியாய்ப் பெரியபெருமாள் திருவடிக்கீழே நிரந்தர ஸேவைபண்ணிக்கொண்டு நிற்கிற திருப்பாணாழ்வார் திருவடிகளை. (பரவினோம்) ஸ்தோத்ரம் பண்ணினோம். அலப்யலாபமானது லபிக்கவும் பெற்றோம்; இனியொருகுறைகளு மில்லையென்கிறது.

பிள்ளைலோகம் ஜீயர் அருளிச்செய்த
அமலனாதிபிரான் தனியன் வ்யாக்யானம் முற்றிற்று.
பிள்ளைலோகம் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த

# அமலனாதிபிரான் வ்யாக்யானம்

## அவதாரிகை

ப்ரணவம் போலே அதிஸங்குசிதமாயிருத்தல், வேதமும் வேதோபப்ரும்ஹணமான மஹாபாரதமும் போலே பரந்து துறுப்புக் கூடாயிருத்தல் செய்யாதே பத்துப்பாட்டாய் ஸங்க்ரஹமாய் ஸர்வாதிகாரமுமாயிருக்கும். 1. **"वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः"** (வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:)என்றும், 2.**"वेदानध्यापयामास महाभारतपञ्चमान्"** (வேதாநத்யாபயாமாஸ மஹாபாரதபஞ்சமாந்) என்றும் சொல்லுகிற படியே—வேதோபப்ரும்ஹணமான மஹாபாரத ராமாயணங்களும், 3.**"नारायणकथामिमां"** (நாராயணகதாமிமாம்) இத்யாதிகளைச் சொல்லிவைத்து பகவத்கதை அல்லாதவற்றையும் சொல்லிவைத்தது.

---

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் அருளிச்செய்த

# அமலனாதிபிரான் வ்யாக்யானம்

## அவதாரிகை

வேதம்போலே முதலாழ்வார்கள் மூவரும் பரத்வத்திலேமண்டி அர்ச்சையையும் தொட்டுக்கொண்டு போந்தார்கள்; ஸ்ரீவால்மீகி பகவானைப்போலே ஸ்ரீகுலசேகரப்பெருமாள் ராமாவதாரத்திலே ப்ரவணராய் அர்ச்சாவதாரத்தையு மநுபவித்தார்; ஸ்ரீபராஶர பகவானையும் ஸ்ரீவேதவ்யாஸ பகவானையும் போலே, நம்மாழ்வாரும் பெரியாழ்வாரும் * ஆழ்வார் திருமகளாரும் க்ருஷ்ணாவதாரத்திலேமண்டி அர்ச்சாவதாரத்தை அநுபவித்தார்கள்; திருமழிசைப்பிரான் § "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்று தொடங்கி, † "இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்குந் தெய்வம்" என்று-தேவதாந்தர பரத்வநிரஸநத்திலே தத்பரராயிருந்தார்;

---

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான

## அரும்பதவுரை

அமலன் ப்ரவேசே; ப்ரபந்த வைலக்ஷண்யமருளிச் செய்கிறார் (ப்ரணவமித்யாதி) (துறுப்புக்கூடு) பதறும் கூளமும் கூட்டித் தூற்றுப் பொலி.

---

§ நான்-திருவ-1. † நான்-திருவ-96.

திருவாய்மொழியும் § "அமர்சுவையாயிரம்" ¶ "பாலோடமுதன்னவாயிரம்" ¶ "உரைகொளின்மொழி" என்று * ஏதமிலாயிரமாயிருந்ததேயாகிலும் அந்யாபதேசஸ்வாபதேசமென்ன, ஸாமாநாதிகரண்ய நிர்ணயகமென்ன, த்ரிமூர்த்திஸாம்ய ததுத்தீர்ண தத்வ நிஷேதமென்ன இவை தொடக்கமான அருமைகளையுடைத்தாயிருக்கும்; திருநெடுந்தாண்டகமும் பரப்பற்று முப்பது பாட்டாயிருந்ததேயாகிலும் அதுக்கும் அவ்வருமைகளுண்டு; திருமாலைக்கு அவ்வருமைகளில்லையே யாகிலும் தம்முடைய லாபாலாபரூபமான ப்ரியா ப்ரியங்களை ப்ரதிபாதியாநிற்கும்; திருப்பல்லாண்டுக்கு இக்குற்றங்களில்லையே யாகிலும் அதுக்குமொரு குற்றமுண்டு; த்ரிவிதாதிகாரிகளுடைய குணகுணங்களை ப்ரதிபாதிக்கையாலே; ப்ரணவம் போலே அல்ல, அதிஸங்குசிதமாய் துர்ஜ்ஞேயமாயிராமையாலே. 4. **"यदिहास्ति तदन्यत्र यन्नेहास्ति न तत्क्वचित्"** (யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி நதத்க்வசித்) என்கிறபடியே ஆயிரத்திலொன்றும் கடலில் குளப்படியும்போலே புறம்பில்லாதவையெல்லாம் இதிலேயுண்டாய் ¶ இதிலில்லாததொன்றும் புறம்பின்றியேயிருக்கும்.

---

திருமங்கையாழ்வார், / "தேரார் நிறைகதிரோன் மண்டலத்தைக் கீண்டுபுக்கு, ஆராவமுதமங்கெய்தி, அதில்நின்றும் வாரா தொழிவதொன்றுண்டே, அதுநிற்க ஏரார் முயல்விட்டுக் காக்கைப் பின் போவதே" என்று-பரத்வத்தைக் காற்கடைக் கொண்டு அர்ச்சாவதாரத்திலே யிழிந்து அதுதன்னிலும் ஓரிடத்திலிரண்டிடத்திலன்றிக்கே, || "நெருநற்கண்டது நீர்மலையின்றுபோய்க் கருநெல்சூழ் கண்ணமங்கையுள் காண்டும்" என்றிப்படி * தானுகந்த வூரெல்லாம் தன்தாள் பாடிப் பரபரப்பாய்த் திரிந்தார். பெரியபெருமாளையும் அல்லாத திருப்பதிகளோபாதி ‡ "கண்டியூரரங்கம் மெய்யம் கச்சி பேர் மல்லை" என்று * கோல்தேனுக அநுபவித்தாநித்தனையிறே; அதுதானும், § "என்றசொற்கள் வந்தடியேன் மனத்திருந்திட" என்கிறபடியே-பெரியபெருமாளுடைய விபவதசையிற் பாசுரங்களுபதேசமாய்க் கொண்டு தந்திருவுள்ளத்திலே ஊற்றிருக்க, § "நின்னடியிணையடைந்தேன்" என்று-திருவடிகளை யநுபவித்தவளவிறேயுள்ளது;

---

துறுப்புக்கூடானபடி எப்படி யென்ன அருளிச்செய்கிறார் (வேதோபப்ரும்ஹணேத்யாதி) எல்லாவற்றிலும்பற்ற ஆதிக்யம் எத்தாலேயென்ன, அருளிச்

§ திருவாய் 1-3-11. ¶ திருவாய் 8-6-11. ¶ திருவாய் 6-5-3.
¶ (பா) இதிலுள்ளவை. / சிறியதிருமடல். || பெரியதிரு 10-1-1.
‡ திருக்குறு-19. § பெரியதிரு 5-8-1.

பரவ்யூஹவிபவங்களை ப்ரதிபாதிக்கையன்றிக்கே அர்ச்சாவதாரரூபேண வந்தவதரித்து * திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி திரைக்கை யாலடிவருடப் பள்ளிகொள்ளும் கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டு, மணத்தூணேபற்றி நின்று வாயாரவாழ்த்துகிற ப்ரபந்தமாகை யாலே எல்லாப்ரபந்தங்களிலும் இப்ரபந்தத்துக்கு வைலக்ஷண்யமுண்டு. மற்றையாழ்வார்களிற்காட்டில் இவர்க்கு நெடுவாசியுண்டு; ''பல்லாண்டு'' "போற்றி" என்று பாவிக்கவேண்டிற்று அவர்களுக்கு; அதுவேண்டாதே

தொண்டரடிப் பொடியாழ்வார் பெரியபெருமாளை அநுப வியா நிற்கச்செய்தே தம்மையுணர்ந்தநுபவிப்பு பரோபதேஶம் பண்ணுவது,ஶபத பூர்வகமாகப் பெரியபெருமாளுடைய பரத்வஸ்தா பநம் பண்ணுவதாய், அந்யபரராய்ப் போந்தார்; இவர் அங்ஙனன் றியே 1 "**पूर्ण**" (பூர்ணம்) என்று சொல்லுகிறபடியே பரத்வாதி களால் பூர்ணரான பெரியபெருமாளையே அநுபவிக்கிறார்; நம்மாழ் வார் தொடக்கமான ஆழ்வார்களுக்கு பகவதநுபவம் நடவாநிற்கச் செய்தே முன்புள்ள ஜந்மபரம்பரைகளிலுண்டான து:க்காநுபவஸ்மர ணத்தாலும் ஸ்வரூபாநுரூபமான பகவத்போகத்தினுடைய அலாபத் தாலும் க்லேஶாநுபவம் கலசி நடவாநின்றது.

ஜாத்யந்தனுக்குக் கண்ணைக்கொடுத்துக் கடலையிலக்காக்குமா போலேயும், அர்ஜுநனுக்கு திவ்யசக்ஷுஸ்ஸைக் கொடுத்து வைச்வ ரூப்யத்தைக் காட்டி அநுபவிப்பித்தாப் போலேயும், அக்ரூர மாலா காராதிகளுக்கு ஸௌந்தர்ய ஸௌஶீல்யாதி குணாவிஷ்காரத்தாலே அநுபவிப்பித்தாப் போலேயும், 2 "**एकैकस्मिन् परमवयवेऽनन्त सौन्दर्य मग्नं सर्वं द्रक्ष्ये कथमिति मुधा मामधा मन्दचक्षुः। त्वां सौभ्रात्रव्यतिकरकरं रङ्ग राजाङ्ग कानां तल्लावण्यं परिणमयिता विश्वपारीणवृत्तिः॥**"(ஏகைகஸ்மிந் பரம வயவேநந்த ஸௌந்தர்யமக்நம் ஸர்வம் த்ரக்ஷ்யே கதமிதி முதா மாமதா மந்தசக்ஷு: । த்வாம் ஸௌப்ராத்ரவ்யதிகரகரம் ரங்கராஜாங்ககாநாம் தல்லாவண்யம் பரிணமயிதா விச்வபாரீணவ்ருத்தி: ॥) என்கிறபடியே- இவருடைய ஸத்யதையாலே பெரியபெருமாள் அர்ச்சாரூபமா யிருக்கச் செய்தேயும் தம்முடைய ஸௌந்தர்யத்தை ஆவிஷ்கரிக்க,

செய்கிறார் (யதி ஹாஸ்தித்யாதி). வக்த்ருவைலக்ஷண்யமருளிச்செய்கிறார் (மற்றையாழ்வார்களித்யாதி), பெருமாளையொழிய வேறொரு ஸ்தலாந்தர மறியாது எப்படியிருக்கிறதென்ன, அருளிச்செய்கிறார் (ஸ்நேஹோமே யித்யாதி),

ஜந்மஸித்த மாய்த்து இவர்க்கு. § "குலங்களாய வீரிரண்டிலொன்றிலும் பிறந்திலேன்" என்கிறபடியே இவர் தம்மைநாலு வர்ணத்திலும் புறம்பாக நினைத்திருப்பர்; பெரியபெருமாளும் அப்படியே நினைத்திருப்பர்; நித்ய ஸூரிகள் நாலுவர்ணத்திலு முள்ளாரல்லரே. "ஆழ்வார்கள் இருகரையர்" என்னும்படியிறே ஸ்ரீதொண்டரடிப்பொடியாழ்வார் ஐகாந்த்யம்! அவரிலும் இவர் "பரோபதேசமும் இதரநிரஸநமும் அநுபவவிரோதி" என்று வெறும் பெரிய பெருமாளையே அடித்தலை செவ்வி நாகவநுபவிக்கிறார்.

5 "**स्नेहो मे परमः**" (ஸ்நேஹோமேபரம:) ‡ "என்றனளவன்றால் யானுடையவன்பு" 5 "**राजंस्त्वयि**" (ராஜம்ஸ்த்வயி) இதுதானும் என்னால் வந்ததன்று; *அதுவுமவனதின்னருளே. 5 "**नित्यं प्रतिष्ठितः**" (நித்யம் ப்ரதிஷ்டித:) இன்றன்றாகில் மற்றொருபோது கொடுபோகிறோமென்ன; அங்ஙன் செய்யுமதன்று; தர்மியைப்பற்றி வருகிறதாகையாலே; ‡ "நின்னலாலிலேன்காண்" என்னுமாபோலே. 5 "**भक्तिश्च नियता**" (பக்திச்சநியதா)

---

அந்த ஸௌந்தர்ய ஸாகரத்தை லாவண்யமாகிற மரக்கலத்தாலே எங்கு மொக்க அநுபவிக்கிறார்.

இன்னம் மற்றையாழ்வார்களிற்காட்டில் இவர்க்கு வாசி- "பல்லாண்டு" "போற்றி" என்றுபாவிக்க வேண்டிற்று அவர்களுக்கு. அது வேண்டாதே இவர்க்கு அது ஜந்மஸித்தமாய்த்து. § "குலங்களாய வீரிரண்டி லொன்றிலும் பிறந்திலேன்" என்கிறபடியே- இவர் தம்மை நாலுவர்ணத்துக்கும் புறம்பாக நினைத்திருப்பர்; பெரிய பெருமாளும் அப்படியே நினைத்திருந்தார்; நித்யஸூரிகள் நாலு வர்ணத்திலுமுள்ளாரல்லரே. ஆழ்வார்கள் இருகரையரென்னும்படியிறே ஸ்ரீதொண்டரடிப் பொடியாழ்வார் ஐகாந்த்யம்; அவரிலும் இவர் பரோபதேசமும் இதர நிராகரணமும் அநுபவவிரோதி என்று வெறும் பெரியபெருமாளையே அடிக்கும் தலைக்கும் செவ்விதாக அநுபவிக்கிறார்.

3 "**स्नेहो मे परमः**" (ஸ்நேஹோமேபரம:) ‡ "என்றனளவன்றால் யானுடையவன்பு." 3 "**राजंस्त्वयि**" (ராஜம்ஸ்த்வயி) இது தானும் என்னால் வந்ததன்று; *அதுவுமவனதின்னருளே 3 "**नित्यं प्रतिष्ठितः**" (நித்யம் ப்ரதிஷ்டித:) இன்றன்றாகில் மற்றொருபோது கொடுபோகிறோ

---

§ திருச்சந்த-77. ‡ இரண்டாந்திருவ-100.

ஸ்நேஹமாவதென்? பக்தியாவதென்னென்னில்; பெருமாளையொழியச் செல்லாமை பிறந்து வ்யதிரேகத்தில் முடிந்த சக்ரவர்த்திநிலை—ஸ்நேஹம்; பக்தியாவது "நில்" என்ன. 6 "**कुरुष्व**" (குருஷ்வ) என்னும்படியாய் முறையறிந்துபற்றின இளையபெருமாள் நிலை.

5"**वीर**"(வீர)தன்னைத்தோற்பித்த துறை. உம்முடைய வீரங்கொண்டு புறம்பே வென்றீரென்று இங்கு வெல்லமுடியாது; தானும் வீரனுகையாலே தோற்பித்த துறையைப்பிடித்துப் பேசுகிறான். 5 "**भावो नान्यत्र गच्छति**" (பாவோ நாந்யத்ர கச்சதி)என்னை மீட்டீராகிலும் என்னுடைய நெஞ்சை மீட்கப்போகாது. 5 "**अन्यत्र**" (அந்யத்ர) என்கிறது– § "மற்றாரானுமுண்டென்பார்" என்னுமாபோலே கொடுபோக நினைத்த தேசத்தின் பேருங்கூடத்தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடி. இப்படி ராமாவதாரமல்லதறியாத திருவடியைப் போலேயாய்த்து இவரும், இவர் தேவாரமான பெரியபெருமாளை யல்லது பரவ்யூஹவிபவங்களை அறியாதபடி.

ஸ்ரீவைகுண்டம் திருப்பாற்கடல் திருவவதாரஸ்தலம் உகந்தருளின திருப்பதிகள் இவையெல்லாம் பெரியபெருமாளேயாருப்போலே அவ்வோவிடங்களிலுண்டான ஸௌந்தர்ய குணசேஷ்டிதாதிகளெல்லாம் பெரிய

---

**மென்ன; அங்ஙன் செய்யுமதன்று; தர்மியைப்பற்றி வருகிறதாகையாலே. "நின்னலாலிலேன்காண்" என்னுமாபோலே. 3 "भक्तिश्च नियता"(பக்திச்ச நியதா)ஸ்நேஹமாவதேது,பக்தியாவதேது என்னில்; பெருமாளையொழியச் செல்லாமைபிறந்து வ்யதிரேகத்தில் முடிந்த சக்ரவர்த்திநிலை– ஸ்நேஹம்; பக்தியாவது-"நில்" என்ன, 4"कुरुष्व" (குருஷ்வ)என்னும்படி முறையறிந்து பற்றின இளையபெருமாள் நிலை 3 "वीर" (வீர) தன்னைத்தோற்பித்த துறை. 3 "भावो नान्यत्र गच्छति" (பாவோநாந்யத்ர கச்சதி) § "மற்றாரானுமுண்டென்பார்" என்னுமாபோலே கொடுபோக நினைத்த தேசத்தின் பேருங்கூடத் தனக்கு அஸஹ்யமானபடி. இப்படி ராமாவதாரமல்லதறியாத திருவடியைப்போலேயாய்த்து இவரும், இவர்தேவாரமான பெரியபெருமாளையல்லது பரவ்யூஹ விபவங்களை யறியாதபடியும்.**

**அநுபாவ்யரான பெரியபெருமாள்தம்மைப் பார்த்தாலும், பரத்வம்போலே தேஶவிப்ரக்ஷ்டமாயிருத்தல், வ்யூஹம்போலே தத்ப்ராயமாயிருத்தல், விபவம்போலே காலவிப்ரக்ருஷ்டமாயிருத்தல்,**

---

§ சிறியதிருமடல்.

பெருமாள் பக்கலிலே காணலாம். பெரியபெருமாளழகும் ஐச்வர்யமுமெல்லாம் பரமபதத்திலே முகுளிதமாயிருக்கும்; அவதாரத்தில் சரிலைபோரும்; இங்கே வந்தபின்பு தழைத்தது. எங்ஙனேயென்னில்;— * பொங்கோதஞ் சூழ்ந்த புவனியும் விண்ணுலகுமங்காதும் சோராமேயாள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாகையாலே அவ்வோவிடங்கள் ஸங்குசிதமாயிருந்ததிறே.

தன்னையுகந்தாரை யநுபவிக்கையன்றியே, 'தான்' என்றால் விமுகராயிருப்பாரும் கண்டநுபவிக்கலாம்படி யிருக்கையாலே நீர்மையினால் வந்த

---

அந்தர்யாமித்வம்போலே அசக்ஷுர் விஷயமாயிருத்தல், அர்ச்சாந்தரங்கள் போலே * தெய்வமல்லால் செல்லவொண்ணாதிருத்தல், அங்குவர்த்திக்கும்பேர் * சிலைக்கை வேடரேயாய் பயங்கரமாயிருத்தல், பெரிய ஏற்றமேற வேண்டியிருத்தல், வருந்திப் பெருங்கூட்டத்தோடேபோயேறினால் * கானமும் வானரமும் வேடுமேயாய் * மேலை வானவரின்றிக்கே யிருத்தல் செய்கையன்றிக்கே இத்தேசத்திலே இக்காலத்திலே எல்லார் கண்ணுக்கும் விஷயமாய்க்கொண்டு || "பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய் முனிவர்களும் பகர்ந்தநாடுஞ் சித்தர்களுந் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய் நிற்கின்ற திருவரங்கம்" என்கிறபடியே—எல்லார்க்கும் நின்றநின்ற நிலைகளிலே ஆச்ரயிக்கலாம்படி ஸர்வஸுலபருமாய் / "வன்பெருவானகம்" இத்யாதிப்படியே உபயவிபூதியையும் நிர்வஹித்துக்கொண்டு போருகிற மேன்மையை யுடையராய், இப்படி ஸர்வாதிகருமாய் ஸர்வசேஷியுமாய் ஸர்வரக்ஷகருமாய் ஸர்வஸமாச்ரயணீயருமாய் நிரதிசய போக்ய பூதருமாயிருப்பவர். 5 "शेष्ये पुरस्ताच्छालायां यावन्मे न प्रसीदति" (சேஷ்யேபுரஸ்தாச்சாலாயாம் யாவந்மே ந ப்ரஸீததி) என்று ஸ்ரீபரதாழ்வான் என்தலையில் சுமைவாங்கினாலல்லது எழுந்திரேனென்று கிடந்தாற்போலே உங்கள் சுமைகளை என்தலையில் வைத்தாலல்லது எழுந்திரேன், 6 "योगक्षेमं वहाम्यहं" (யோகக்ஷேமம் வஹாம்யஹம்) என்று கிடக்கிறவரிறே. ஸ்ரீவைகுண்டம், திருப்பாற்கடல், திருவவதாரங்கள், உகந்தருளின திருப்பதிகளெல்லாம் பெரியபெருமாளே யானாற்போலே அவ்வோவிடங்களிலுண்டான ஸௌந்தர்ய குணசேஷ்டிதாதிகளெல்லாம் பெரிய பெருமாள் பக்கலிலே காணலாம்.

ஏற்றமுமிங்கேயுண்டு; குணாதிக்யத்தாலேயிறே வஸ்துவுக்கு உத்கர்ஷம்; குணம் விலைபெறுவது இங்கேயிறே. குணத்திலகப்பட்டார் இவ்விஷயம் போக்கி அறியார்களிறே.

7 "यतो वाचो निवर्तन्ते" (யதோ வாசோ நிவர்த்தந்தே) என்று வேதங்களுக்கெட்டாத ஸர்வேச்வரனை, ஆற்றில் தண்ணீரோபாதி ஆற்றுக்குள்ளே கண்டநுபவிக்கலாம்படி யிருக்கிறவிடமிறே. * மழைக்கன்று வரை முனேந்தும் மைந்தன்மதுரவாறுன அவ்வாறு இவ்வாறுய்ந்துக் காணும். இவர் தமக்கு ப்ராப்யரும் ப்ராபகரும் ருசிஜநகரும் விரோதி நிவர்த்தகருமெல்லாம் பெரியபெருமாளே யென்றிருக்கிறுர்.

பலபோக்த்ருத்வம் தம்மதாயிருக்க, "எல்லாமவரே" என்கிறபடி யெங்ஙனேயென்னில்; ப்ரதமஸுக்ருதமும் தாமுய், பேற்றுக்கு வேண்டுவன நிர்வஹித்துப்போந்த ஸௌஹார்த்தமும் அத்தலையிலே கிடக்கை யாலே, பேற்றுக்கு இத்தலையிலுள்ளது சொல்லப்பார்த்தம் போராதிறே;

---

பெரியபெருமாளுடைய அழகும் ஐச்வர்யமும் பரமபதத்தில் முகுளிதமாயிருக்கும்; அவதாரத்திலே ஈரிலைபெறும்; இங்கே வந்த பின்பு தழைத்தது. எங்ஙனேயென்னில்; * பொங்கோதஞ்சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் அங்காதுஞ் சோராமே யாள்கின்ற எம்பெருமான் செங்கோலுடைய திருவரங்கச்செல்வனாகையாலே அவ்வவ்விடங்களில் ஸங்குசிதமாயிருந்ததிறே; தன்னையுகந்தாரநுபவிக்கையன்றிக்கே "தான்" என்றால் விமுகராயிருப்பாருங்கூட அநுபவிக்கும்படி யிருக்கையாலே நீர்மையாலே வருமேற்றமிங்கே யுண்டு. குணாதிக்யத்தாலேயிறே வஸ்துவுக்கு உத்கர்ஷம்; குணம் விலைபெறுவதிங்கேயிறே. குணத்திலகப்பட்டார் இவ்விஷயம்போக்கி யறியார்களிறே. 7 "यतो वाचो निवर्तन्ते" (யதோவாசோநிவர்த்தந்தே) என்ற-வேதங்களுக்கு மெட்டாத ஸர்வேச்வரனை ஆற்றில் தண்ணீரோபாதி ஆற்றுக்குள்ளே கண்டநுபவிக்கலாம்படி யிருக்கிறவிடமிறே. * மழைக்கன்றுவரைமுனேந்தும் மைந்தனேமதுரவாறுன அவ்வாறு இவ்வாறுய்த்துக்காணும். ஆச்ரயணீயராகையாலே மேன்மையும், நீர்மையாலே உபாயபாவத்தையும், வீர்யாதிகளாலே விரோதிநிரஸநத்தையும் ஸௌந்தர்யத்தையும் சொல்லுகையாலே

---

எல்லா ஸ்தலங்களையும் விட்டுப் பெரியபெருமாளைப் பற்றுகைக்கு ஹேதுவேதென்ன, அருளிச்செய்கிறுர் (ஸ்ரீவைகுண்டமித்யாதி). (அவ்வாறு

உள்ளதுண்டாகில் அநுக்ரஹத்துக்கு ஹேதுவாமித்தனை. இதரவிஷயங்களில் அருசியும் பகவத்விஷயத்தில் அப்ரதிஷேதமும் விளைந்த இம்மாத்ரத்திலே பெரியபெருமாள் தம்முடைய ஸ்வரூப ரூபகுணவிபூதிகளைக் காட்டக் கண்டநுபவித்து ப்ரீதராகிறார். 8 "**आनयैनं हरिश्रेष्ठ**" (ஆநயைநம்ஹரிச்ரேஷ்ட) என்று—மஹாராஜரையிட்டு ஸ்ரீவிபீஷணாழ்வானை அருள் பாடிட்

போக்யதையும் சொல்லிற்றாகிறது. ப்ராபக ஸ்வரூபம் அநுபவத்திலே மறைந்துபோய்த்து. இப்ரபந்தந்தான் ப்ரணவம்போலே அதிஸங்குசிதமாயிருத்தல், வேதமும் வேதோபப்ரும்ஹணமான மஹாபாரதமும்போலே பரந்து துறுப்புக்கூடாயிருத்தல் செய்யாதே பத்துப் பாட்டாய் ஸுக்ரஹமுமாய் ஸர்வாதிகாரமுமாய், 8 "**प्राप्यस्य**" (ப்ராப்யஸ்ய) இத்யாதிப்படியே அர்த்தபஞ்சக ப்ரதிபாதகமுமாயிருக்கும்.

9 "**वेदोपबृंहणार्थाय तावग्राहयत प्रभुः**" (வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு:) என்றும் 10 "**वेदानध्यापयामास महाभारतपञ्चमान्**" (வேதாநத்யாபயாமாஸ மஹாபாரத பஞ்சமாந்) என்றும் சொல்லுகிறபடியே-வேதோபப்ரும்ஹணமான மஹாபாரத ஸ்ரீராமாயணங்களும் 11 "**नारायणकथामिमां**" (நாராயணகதாமிமாம்) இத்யாதிகளைச் சொல்லிவைத்து பகவத்கதையல்லாதவற்றையும் சொல்லிற்று; திருவாய்மொழியும் / "அமர்சுவையாயிரம்" || "பாலோடமுதன்னவாயிரம்" ‡ "உரைகொளின்மொழி" என்று * ஏதமிலாயிரமாயிருந்ததேயாகிலும், அந்யாபதேச ஸ்வாபதேசமென்ன, ஸாமாநாதிகரண்ய நிர்ணயமென்ன, த்ரிமூர்த்திஸாம்யத்துத்தீர்ண தத்வநிஷேதமென்ன, இவைதொடக்கமான அருமைகளை யுடைத்தாயிருக்கும்; திருநெடுந்தாண்டகமும் பரப்பற்று முப்பது பாட்டாயிருந்ததேயாகிலும் அதுக்கும் அவ்வருமைகளுண்டு; திருமாலைக்கு அவ்வருமைகளில்லையேயாகிலும் தம்முடைய லாபாலாபமான ப்ரியாப்ரியங்களை ப்ரதிபாதியாநிற்கும்.

இவ்வாறு) என்றது—ரஸோக்தி. க்ருஷ்ணன் தானேவந்து இவ்வாற்றிலே கண்வளர்ந்தானென்றபடி. ப்ரதிபாத்ய வைலக்ஷண்யத்தைச் சொல்லாநின்றுகொண்டு ப்ரபந்தத்தினுடைய அவதரணக்ரமத்தை அருளிச் செய்கிறார் (இவர்தமக்கித்யாதி).

/ திருவாய் (1-3-11). ‡ திருவாய் (6-5-3). || திருவாய் (8-9-11)

டாப்போலே, * தாழ்ச்சி மற்றெங்கும் தவிர்ந்து * கடைத்தலையிருந்து வாழும் சோம்பராயிருக்கிற லோகஸாரங்க மஹாமுநிகளை அருள்பாடிட்டு, "நம் பாடுவானை அழைத்துக்கொண்டு வாரும்" என்ன; அவரும் "அருள்பாடருள்

---

திருப்பல்லாண்டுக்கு இக்குற்றங்களொன்றுமில்லையேயாகிலும் அதுக்குமொரு குற்றமுண்டு - த்ரிவிதாதிகாரிகளுடைய குண தோஷங்களை ப்ரதிபாதிக்கையாலே. இது ப்ரணவப்போலுமல்ல, அதிஸங்குசிதமாய் துர்ஜ்ஞேயமாயிராமையாலே. 12 **"यदि हास्ति तदन्यत्र यन्नेहास्ति न तत्क्वचित्"** (யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத் க்வசித்)என்கிறபடியே. ஆயிரத்திலொன்றும் கடலிற் குளப்படியும்போலே புறப்பில்லாதவையெல்லாம் இதிலேயுண்டாய் இதிலில்லாததொன்றும் புறம்பின்றியே யிருக்கும் பரவ்யூஹவிபவங்களை ப்ரதிபாதிக்கையன்றியே அர்ச்சாவதாரரூபேண வந்தவரித்து, * திருவரங்கப்பெருநகருள் தெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளுங் கருமணியைக் கோமளத்தைக் கண்ணாரக்கண்டு, * மணத்தூணேபற்றி நின்று வாயாரவாழ்த்துகிற ப்ரபந்தமாகையாலே எல்லா ப்ரபந்தங்களிலும் இப்ரந்தம் விலக்ஷணம். இவர், தமக்கு ப்ராப்யரும் ப்ராபகரும் ருசிஜநகரும் விரோதி நிவர்த்தகரும் எல்லாம் பெரியபெருமாளே என்கிறார். பலபோக்த்ருத்வம் தம்மதாயிருக்க, "எல்லாமவரே" என்கிறபடி யெங்ஙனேயென்னில்,—ப்ரதம ஸுக்ருதமும் தானாய் இப்பேற்றுக்கு வேண்டுவன நிர்வஹித்துப் போந்த ஸௌஹார்த்தமும் அத்தலையிலே கிடக்கையாலே பேற்றுக்கு இத்தலையிலுள்ளது சொல்லப்பாத்தம் போராதிறே. உள்ளதுண்டாகில் அவனநுக்ரஹத்தாலே யாமித்தனை.

இதர விஷயங்களில் அருசியும் பகவத்விஷயத்தில் அப்ரதிஷேதமும் விளைந்த மாத்ரத்திலே பெரியபெருமாள் தம்முடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைக் காட்டக்கண்டநுபவித்து ப்ரீதராகிறார். 13 **"आनयैनं हरिश्रेष्ठ"** (ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட) என்று - மஹாராஜரையிட்டு ஸ்ரீவிபீஷணாழ்வானை அருள் பாடிட்டாப்போலே, * தாழ்ச்சி மற்றெங்குந் தவிர்ந்து * கடைத்தலையிருந்து வாழும் சோம்பரான லோகஸாரங்க மஹாமுநிகளை யருள்பாடிட்டு, "நம்பாடுவானை யழைத்துக்கொண்டுவாரும்" என்ன; அவரும் "அருள்பா

1. அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீண்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளன ஒக்கின்றதே.

பதவுரை:—அமலன்—பரிசுத்தனாய், ஆதி-ஜகத்காரணபூதனாய், பிரான்—(எனக்கு) உபகாரகனாய், என்னை—(தாழ்குலத்தவனான) என்னை, அடியார்க்கு—(தனது) அடியவர்களாய பாகவதர்களுக்கு, ஆள்படுத்த-அடிமையாக்குவதாலே வந்த, விமலன்—சிறந்த ஒளியை யுடையனாய், விண்ணவர் கோன் — நித்யஸூரிகட்குத் தலைவனா யிருந்துவைத்து, (ஆச்ரிதர்கட்காக) விரை ஆர்பொழில்—பரிமளம் மிக்க சோலைகளையுடைய, வேங்கடவன்—திருவேங்கடமலையில் வந்து தங்குமவனாய், நிமலன்—கைம்மாறு கருதாமையாகிற சுத்தியை உடையனாய், நின்மலன்—தனபேறாக உதவும் சுத்தியை உடையனாய், நீதி வானவன்—சேஷசேஷி முறைவழுவாதபடி நியாயமே செல்லும் நிலமான பரமபதத்துக்கு நிர்வாஹகனாய், நீள் மதிள் — உயர்ந்த மதிள்களையுடைய, அரங்கத்து — கோயிலிலே (கண்வளர்ந்தருளுகிற)அம்மான்—ஸ்வாமியான அழகியமணவாளனுடைய, திருக் கமல பாதம்—திருவடித்தாமரைகளானவை, வந்து—தானேவந்து, என் கண்ணின் உள்ளன ஒக்கின்றவே—என்கண்ணுக்குள்ளே புகுந்தன போலிராநின்றனவே.

---

பாடு" என்று சொல்ல; இவரும், "அடியேன் அடிப் பாணனடிப்பாணன்" என்று இருய்க்க; அவரும் விடாதே தோள்மேலே யெழுந்தருளப் பண்ணுவித்துக் கொண்டுபோக, வழியிலே ஒன்பது பாட்டுப்பாடித் திருப்பிரம்புக் குள்ளே நின்று பத்தாம்பாட்டுப்பாடித் தலைக்கட்டுகிறார். *

---

டருள்பாடு" என்றுசொல்ல; இவரும "அடிப்பாணனடிப்பாணன்" என்று இருய்க்க; இவரைவிடாதே தோள்மேலே யேற்றிக்கொண்டு போக, வழியிலே ஒன்பதுபாட்டுப்பாடித் திருப்பிரம்புக்குள்ளே நின்று பத்தாம்பாட்டுப் பாடித் தலைக்கட்டுகிறார். *

அவ:—முதற்பாட்டு. பெரியபெருமாள் திருவடிகளிலழகு மேல் விழுந்து தம்மை அடிமைகொண்டதென்கிறார்.

வ்யா:—(அமலன்) நித்யஸம்ஸாரியாய்த் தண்ணியராயிருக்கிற தாம் கிட்டுகை அத்தலைக்கு அவத்யமென்றிருந்தார்; வந்து கிட்டின பின்பு பெரியபெருமாளுக்குப் பிறந்த வைலக்ஷண்யத்தைக்கண்டு "அமலன்" என்று கொண்டாடுகிறார். "அமலன்" என்றது—ஹேய ப்ரத்யநீகனென்றபடி. அபஹதபாப்மத்வாதிகுணங்கள் ஆத்மாவுக்குண்டாயிருக்கச்செய்தேயும் ஹேயஸம்பந்தாவஹமாய், பகவத் ப்ரஸாதத்தாலே உண்டாகவேண்டியிருக்கும். இவன் அங்ஙனன்றிக்கேயிருக்கை.

---

அவ:—முதற்பாட்டில்; பெரியபெருமாள் திருவடிகளினழகு தம்மை ஆட்கொண்டதென்கிறார். ஆகாஶத்தினின்றும் ஸஹ்யத்திலே வர்ஷித்து அங்குநின்றும் காவேரியாறாய்ப்போந்திழிந்து கால்களாய்ப் புகுந்துபோய் நாட்டார்க்கு உபயுக்தமாமாபோலே, பரமபதமாகிற பரமவ்யோமத்தினின்றும் திருமலையிலே வந்திழிந்து தெற்குநோக்கிவந்து பள்ளநாலியான கோயிலிலே தேங்கிக் கீழ்மேலாகக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளாகிற * மதுரவாற்றினிடைப் புகுந்தோடுகிற காலையநுபவிக்கிறார்.

வ்யா:—(அமலன்) ஸ்ரீவால்மீகிபகவான், 14 "को गुणवान्"(கோ குணவாந்)என்று ப்ரச்நம்பண்ண, 15 "इक्ष्वाकुवंशप्रभवः" (இக்ஷ்வாகு வம்ஶப்ரபவ:) என்று ஶீலகுணத்தை முந்துறச் சொன்னாப்போலவும், நம்மாழ்வார் ஆநந்தவல்லியிலாநந்த குணத்தை, § "உயர்வற வுயர்நலமுடையவன" என்று ப்ரதமத்திலேயநுபவித்தாப்போலவும், இவரும் தம்முடைய நிஹீநதையைப்பாராதே மேல்விழுந்தபடியைக் கண்டு அவனுடைய ஹேயப்ரத்யநீகதையை முற்படவநுபவிக்கிறார். தம்முடைய ஜந்மாதிகளாலுண்டான நிகர்ஷாநுஸந்தாநத்தாலே அகல, அதுதானேபற்றாசாகத் திருவுள்ளம் புண்பட்டு மேல்விழுந்தவிடத்திலும் அத்தலைக்கவத்யமின்றியிலே நிர்மலனாயிருக்கிறபடியைக்கண்டு "அமலன" என்கிறார். || "என் கண்பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதி".

---

§ திருவாய் 1-1-1. || திருவாய் 3-3-4.

(அமலன்) சுத்தனென்றபடி. இவன் சுத்தனாகையாவது- §தான் ஒருத்தன் சுத்தனாகையன்று; தன்னோடு ஸம்பந்தித்தாரையும் சுத்தராக்க வல்ல அடியுடைமை. *துயரறு சுடரடியிறே. 9"पावनस्सर्वलोकानां त्वमेव रघुनन्दन" (பாவநஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந) என்னுமா போலே. (அமலன்) என்கிறது—ஜந்மவ்ருத்தாதிகளால் குறையநின்ற தம்மை விஷயீகரித்தபின்பு தன்பக்கல்தோஷம் தட்டாதே, 10"अनश्नन्नन्यो अभिचाकशीति" (அநச்நந்நந்யோ அபிசாகஶீத்) என்கிறபடியே விளங்குகிறபடி. Ⅰ 'என்கண் பாசம்வைத்த பரஞ்சுடர்ச்சோதிக்கே"

---

(அமலன்) * அபஹதபாப்மத்வாதி குணங்கள் ஆத்மாவுக்குமுண்டாயிருக்கச்செய்தேயும் ஹேயஸப்பந்தாவஹமாய் பகவத் ப்ரஸாதத்தாலேயுண்டாகவேண்டியிருக்கும்; இவன் அங்ஙனன்றியே யிருக்கும். (அமலன்)ஶுத்தனென்றபடி. இவன் ஶுத்தனாகையாவது- §தானொருத்தன் சுத்தனாகையன்று; தன்னோடு ஸம்பந்தித்தாரையும் சுத்தராக்கவல்லவடியுடைமை. * துயரறுசுடரடியிறே. 16 "पावनस्सर्वलोकानां त्वमेव रघुनन्दन" (பாவநஸ்ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந) என்னுமாபோலே. (அமலன்) அகிலஹேயப்ரத்யநீகன். அசித்கதமான பரிணாமம், தத்ஸம்ஸ்ருஷ்ட சேதநகதமான அஜ்ஞாநது:க்கங்கள், முக்தகதமான ஜ்ஞாநஸங்கோச விகாஸங்கள், நித்யஸித்தகதமான பாரதந்த்ர்யம் இவையாகிற ஹேயங்களுக்கு ப்ரத்யநீகனாயிருக்கும். பாரதந்த்ர்யத்துக்குக் குறையென்னென்னில்; தனக்கவ்வருகொருவனுளனானால் வருமதே பாரதந்த்ர்யம்; அது ஈச்வரனுக்கு அவத்யமிறே. பரதந்த்ரனுக்குஶேஷித்வம் அவத்யமாமாபோலே. புருஷனுக்கு ஸ்தநோத்பேதமும் ஸ்த்ரீகளுக்கு ச்மச்ருஸம்யோகமும் போலேகாணும் அந்த மாறுபட்டத்தாலே வருமவத்யம். ப்ரத்யநீகனாகையாவது - உக்தாவத்யங்கள் தன்னை ஸ்பர்ஶியாமலிருக்குமளவன்றிக்கே புறம்புள்ள அவத்யங்களையும் அறுத்துக் கொடுக்கவல்லனாகை. தேஜஸ்திமிரங்கள் போலே ஹேயப்ரதிபடனென்கை. ,, ஆகையிறே இவனையொழிந்தார்க்குடைய இவனே சுபாச்ரயமாயிருக்கிறது.

---

Ⅰ திருவாய் 3-3-4. § தன்னைவருந்தி சுத்தனுக்குகையன்று.

(ஆதி) 11 "**आदीयत इति-आदिः**"(ஆதீயத இதி-ஆதி:) ஸ்ப்ருஹணீய னென்றபடி. தம்மை விஷயீகரிக்கைக்கு அடியாஞனென்று 'ஆதி' என்னவு மாம். ஜகத்காரணத்வாதிகளைச் சொல்லவுமாம். ஆக இரண்டு பதத்தாலும் ஹேயப்ரத்யநீகத்வமும் கல்யாணகுணயோகமும் சொல்லுகிறது.

(பிரான்) இவ்வோநிலைகளை எனக்கறிவித்த உபகாரகன். (பிரான்) உபகாரத்தைச் சொல்லி, சொல்லப்பற்ருமே "எத்திறம்" என்கிருர். (அடியார்க்கு) 12"**रत्नहारी च पार्थिवः**"(ரத்நஹாரீ சபார்த்திவ:) என்கிறபடியே

---

(ஆதி) இப்படி நிஹீநரான உம்மை மேல்விழுந்து அங்கீகரிக்கைக்கடியென்னென்ன; பெற்றபாவிக்கு விடப்போமோவென்கிருர். (ஆதி) 17 "**आदीयत इति आदिः**" (ஆதீயத இதி ஆதி:) ஸ்வரூபரூபாதிகளைக்கண்டு எல்லாரும் மேல்விழும்படி யிருக்கிற தான் இத்தலையில் நிஹீநதை பாராதே மேல்விழுந்தானென்கை. "17**आदियत इति आदिः**" (ஆதியத இதி ஆதி:) தன்னை யநுபவித்தால் வேறென்றிற்போகவொட்டாதபடியாயிருக்கும். (ஆதி) 18"**पूर्वज**" (பூர்வஜ) என்னுமாபோலே என்னுடைய நிகர்ஷத்தைப்போக்கித் தன்பக்கலிலே சேர்த்துக் கொள்ளுகையாலே என்பேற்றுக்கு முற்பாடனானவன். (ஆதி) அடியில் அழிந்த ஜகத்தை உண்டாக்கினாப்போலே நானழித்துக்கொண்ட ஸ்வரூபத்தை உண்டாக்கினவன். இத்தால்-கல்யாண குணயோகத்தைச் சொல்லிற்று. ஆக இரண்டுபதத்தாலும் ஹேயப்ரத்யநீகத்வமும் கல்யாண குணயோகமும் சொல்லிற்று. (பிரான்) கீழ்ப் பண்ணின உபகாரத்தை நினைத்து "பிரான்" என்கிறதாதல்; மேல் பண்ணப்புகுகிற உபகாரத்தை நினைத்துப் பிரானென்கிறதாதல். (பிரான்) என்நிகர்ஷம் பாராதே என்னை விஷயீகரித்த உபகாரகன்.

(அடியார்க்கென்னை யாட்படுத்தவிமலன்) "எனக்கு" என்றும், "பிறர்க்கு" என்றும் திரிந்தவென்னை, தனக்கும் தன்னடியார்க்கு மாக்கின பரிசுத்த ஸ்வபாவன். தலையைப்பிடித்துக் காற்கீழேயிட்டுக் கொண்டான். 19"**रत्नहारी च पार्थिवः**"(ரத்நஹாரீ சபார்த்திவ:) என்னுமாபோலே. நல்லதுகண்டால் "அவர்களுக்கு" என்றிறே அவனிருப்பது. ஸ்வவிஷய ஶேஷத்வத்தை யுண்டாக்கினவளவன்றிக்கே ததீய ஶேஷத்வ பர்யந்தமாக்கி, தச்சேஷத்வம் நிலை நிற்கும்படி பண்ணி

இவ்வஸ்துவின் சீர்மையாலே இது நம்மளவிலடங்காது; நம்மடியார்க்காமித் தனையென்று அவர்களுக்காக்கிறானென்கிறார். (அடியார்) தன்பக்கலிலே நிக்ஷிப்தபரராயிருக்குமவர்கள்.

(என்னையாள்படுத்த விமலன்)தன்னிடையாட்டமுமறியாதவென்னைத் தன்னடியார்க்கு சேஷபூதனாக்கின சுத்தனென்கிறார். (என்னை) ப்ரக்ருதிக் கடிமைசெய்து போந்தவென்னை; § தந்தநத்தின் சீர்மை யறியாதவென்னை. (என்னை) தேஹாத்மாபிமாநிகள் தீண்டாதவென்னை. நன்மைக்குத் தனக் கவ்வருகில்லாதாப்போலே தீமைக்கு எனக்கவ்வருகில்லாத என்னை. (ஆள் படுத்த) அவர்களோடே ஒப்பூணுண்ண வைத்திலன்; அவர்களுக்கு சேஷமாக்கினான் பகவச் சேஷத்வத்தளவிலே நின்றால் மீளசங்கையுண்டு; பாகவதசேஷத்வத்தளவும் சென்றால் மீளப்போகாதே; உகப்பாலே வருமதாகையாலே. ஒருக்ஷேத்ரம் பத்தெட்டு க்ரயம்சென்றால் மீளவிரகில்லை; ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு முதலிகளுடைய விஷயீகாரம் பெருமாளுடைய விஷயீகாரத்துக்கு முற்பட்டாப்போலே இவர்க்குத் ததீய விஷயீகாரம் முற்பட்டபடி. 13"ददृशुः"(தத்ருஶு:) 14"आनयैनं हरिश्रेष्ठ" (ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட) அங்கு; இங்கு லோகஸாரங்கமஹாமுநிகளைப்போய் ஆழ்வாரை அழைத்துக்கொண்டுவாருமென்றான்.

---

ளன். ஆத்மாவுக்கு நிலைநின்ற வேஷம் ஶேஷத்வமாகையாலே "அடியார்க்கு" என்கிறார்.

(அடியார்க்கு) இவர்களுக்கு * ஊரும் பேரும் தாருமாகிறது ஶேஷத்வமாய்த்து. ஶேஷத்வமிறே இவ்வாத்மாவுக்கு ப்ரதமநிரூபகம். (என்னை) தேஹாத்மாபிமாநிகளும் தீண்டாதவென்னை. ப்ரக்ருதிக்கடிமை செய்துபோந்தவென்னை. தந்தபதத்தின் சீர்மையறியாதவென்னை. நன்மைக்குத் தனக்கவ்வருகில்லாதாப்போலே தீமைக்கு எனக்கவருகில்லாத வென்னை. (ஆட்படுத்த)பகவச்சேஷத்வத்தளவிலே நின்றால் மீளஶங்கையுண்டு; பாகவதஶேஷத்வத்தளவும் சென்றால் மீளப்போகாதே; உகப்பாலே வருமதாகையாலே. ஒருக்ஷேத்ரம் பத்தெட்டு க்ரயப்சென்றால் மீளவிரகில்லை. ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு முதலிகளுடைய விஷயீகாரம் பெருமாளுடைய விஷயீகாரத்துக்கு முற்பட்டாப்போலே, இவர்க்குக்ததீயவிஷயீகாரம் முற்பட்டபடி. 20"ददृशुः"(தத்ருஶு:) 21"आनयैनं हरिश्रेष्ठ" (ஆநயைநம் ஹரிச்ரேஷ்ட) (ஆட்படுத்த)தான் சேஷித்வத்தினுடைய எல்லையிலே நின்று என்னை ஶேஷத்வத்தினுடைய எல்லையிலே வைத்தான்.

---

§ (பா) தன் திறத்தில்.

(அடியார்க்கென்னை ஆட்படுத்த) தான் சேஷித்வத்தினுடைய எல்லையிலே நின்றாப்போலே சேஷத்வத்தினெல்லையிலே என்னை வைத்தான். (விமலன்) §என் சிறுமை பாராதே ததீயர்க்கு சேஷமாக்குகையால் வந்த ஔஜ்வல்யம். எதிரிகள் தரம்பாராதே சீரியர்தந்தாமளவிலேயிறே கொடுப்பது.

(விண்ணவர்கோன்) ஆளில்லாதவனல்லன் கிடீர் இப்படி விஷயீகரித்தான். நித்யஸூரிகள் எடுத்துக் கைநீட்டும்படி இருக்கிறவன்கிடீர் கதிர்பொறுக்கி ஜீவிப்பாரைப்போலே நித்யஸம்ஸாரியாயிருக்கிறவென்னை நித்யமுக்தரோடொக்க விஷயீகரித்தான். இவ்வௌதார்யம் கற்றதும் அவர்களோடேகிடீரென்றுமாம். 15"**अस्माभिस्तुल्यो भवतु**" (அஸ்மாபிஸ் துல்யோபவது) என்றார்களிறே. (விண்ணவர்கோன்) இங்குத்தைக்

---

(அடியார்க்கென்னையாட்படுத்த விமலன்) அவர்களோடு ஸமபுத்திபண்ணியிராமே அவர்களுக்கு சேஷபூதனுக்கினபரிஶுத்த ஸ்வபாவன். ஐச்வர்யார்த்திகளும் ஆத்ம ப்ராப்திகாமரும் தன்னைப் பற்றுவர்களிறே; இவ்வளவு புகுரநிறத்துகைக்கு அதிகாரிகளல்லர்களேயவர்கள்; அநந்யப்ரயோஜநரிறே இவர்க்கு ஆவார்; தாமும் அநந்ய ப்ரயோஜநராகையாலே விசேஷித்து லோகஸாரங்கமஹாமுநிகளேயிட்டுத்தம்மைவிஷயீகரித்தபடியைச் சொல்லுகிறார். தம்மை வஹித்தவளவில்தாம் சேஷபூதரானபடி என்னென்னில்; திருத்துழாய் திருவபிஷேகத்திலே இருந்ததென்ன, ஶேஷத்வம் குலையாதே; 22"**मयि भृत्ये स्थिते देवानाज्ञापयतु किं नृपैः**" (மயி ப்ருத்யே ஸ்திதே தேவாநாஜ்ஞாபயது கிம்ந்ருபை:) என்றுனென்ற அவனுடைய ஶேஷித்வம் குலையாதாப்போலே. (விமலன்) என்சிறுமை பாராதே ததீயர்க்கு சேஷமாக்குகையால் வந்த ஔஜ்வல்யம். எதிரிகள் தரம்பாராதே சீரியர் தந்தாமளவிலேயிறே கொடுப்பது.

(விண்ணவர்கோன்) நிஹீநரான உம்மை இப்படி விஷயீகரித்தது ஆளில்லாமையாலேயோ என்னில், ஒரு த்ரிபாத்விபூதியாகத் தன்னைத் தாலாட்ட இருக்கிறவன்கிடீர் என்னை விஷயீகரித்தானென்கை. இவ்வௌதார்யங்கற்றது அவர்களோடேகிடீரென்றுமாம். 23 "**अस्माभिस्तुल्यो भवतु**" (அஸ்மாபிஸ்துல்யோபவது) என்றார்களிறே. இங்குத்தைக் குழாத்தையொழிய அங்குத்தைக் குழாத்

---

§ (பா) இதின்.

குழாத்தையொழிய அங்குத்தைக் குழாத்தையும் காட்டித்தந்தான். † "உடன் கூடிவதென்று கொலோ?" என்று இவர் ஆசைப்படவேண்டுவதில்லை. (கோன்) அவர்களாலும் எல்லைகாணவொண்ணாது· (விரையார் பொழில் வேங்கடவன்) பரிமளம் நிறைந்திருந்துள்ள சோலையையுடைய திருவேங்கட மலையையுடையவன். பெரியபெருமாளைப்பாடாநிற்கத் திரு

---

த்தையும் காட்டித்தந்தான், † "உடன் கூடுவதென்றுகொலோ" என்று இவருக்கு ஆசைப்படவேண்டுவதில்லை. (கோன்) அவர்களாலும் எல்லை காணவொண்ணாது.

(விரையார் பொழில் வேங்கடவன்) லீலாவிபூதியிலொருவரில்லாமையாலே உம்மை அங்கீகரிக்கலாமேயென்ன 24"**नावेव यान्तमुभये हवन्ते**" (நாவேவ யாந்தமுபயே ஹவந்தே) என்றும் 25 "**चक्षुर्देवानामुत मर्त्यानां**" (சக்ஷுர்த்தேவாநாமுத மர்த்த்யாநாம்) என்றும், ‡"கண்ணாவானென்றும் மண்ணோர் விண்ணோர்க்கு" என்றுஞ் சொல்லுகிறபடியே இந்த லீலாவிபூதியிலுள்ள முமுக்ஷுக்களோடு பரமபதத்திலுள்ள நித்யமுக்தரோடு வாசியறத் திருமலையிலேவந்து * சூட்டுநன்மாலைகளிற்படியே §"வழுவிலா வடிமை செய்யவேண்டு நாம்" என்று ப்ரார்த்திப்பார், ||"நல்கியாளென்னைக் கொண்டருளே" என்று ப்ரார்த்திப்பாராய் அடிமைசெய்ய அடிமைகொள்ளுகிற பூர்ணன் என்கை. இப்படி உபயவிபூதியிலுள்ளாரும் அடிமை செய்ய அடிமைகொள்ளுகிற பூர்ணன் கிடீர் தன் மேன்மை பாராதே என்னை விஷயீகரித்தானென்கை.

(விரையார்பொழில் வேங்கடவன்) பரிமளம் நிறைந்த திருச்சோலையையுடைய திருமலையை உடையவன். 26"**सर्वगन्धः**"(ஸர்வகந்த:) என்கிற வஸ்துவாகையாலே போலியான பரிமளங்கண்டு கால்தாழ்ந்ததித்தனை. 27 "**कुशस्थले निवसति**" (குஶஸ்தலே நிவஸதி) என்னுமாபோலே பரமபதத்தில் நின்றும் கோயிலேற வருகைக்கென்று தங்குகிற தேசம் திருமலை. பிள்ளை திருநறையூரரையரைச் சிலர், "பெரியபெருமாளையனுபவிக்க விழிந்தவர் திருவேங்கடமுடையான்பாடே போவானென்" என்ன; ஆற்றிலே அமிழ்ந்துகிறவன ஒருகாலைத் தரையிலே யூன்றினால் பிழைக்கலாமோவென்று கால்தாழ்க்குமாபோலே, இவரும் பெரியபெருமாளழகிலே அழுந்துகிறவராகையாலே திரு

---

† திருவாய் 2-3-10. § திருவாய் 3-3-1. || பெரியதிருமொழி 1-9-1.
‡ திருவாய் 1-8-3.

மலையிலே போவானென்னென்னில்; ஒருவனைக் கவிபாடும்போது அவனுடைய வரத்துச்சொல்லியிறே கவிபாடுவது. "பரமபதத்தில் நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கித் திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே, ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக்காணும் கோயிலுக்குவந்தது" என்று பட்டரருளிச்செய்யும்படி. அன்றியே, கோயில் போக்யதை தமக்கு நிலமல்லாமையாலே திருமலையிலே போய் தரிக்கப்பார்க்கிறாரென்றுமாம். (விரையார்) நித்யஸூரிகளையுடையனுவதுக்குமேலே ஓரைச்வர்யம்.

(விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்) ஆற்றிலே யழுந்துவார் ஆழங்காலிலே இளைப்பாறத் தேடுமாபோலே அவர்களும் வந்து அடிமைசெய்யுமிடம். (வேங்கடவன்) அர்ச்சாவதாரத்துக்குப்பொற்கால் பொலியவிட்டவிடம். (நிமலன்) இத்தலையில் அர்த்தித்வமும்கூட வின்றிக்கேயிருக்க, இப்படி உபகரிக்கையால் வந்த ஔஜ்வல்யம். இவனும் ஓரடியிடப்பார்த்திராதொழிகை. † (அசித்வயாவ்ருத்தியாலே)ஓரடியிட்டா

---

மலையிலே கால்தாழ்ந்தார்; அது மடுவாகிறதறிகிறிலர்;" வேறேசிலர், "பெரியபெருமாளைப் பாடாநிற்கத் திருமலையிலே போவானென்" என்று அவரைக்கேட்க; "ஒருவனைக்கவிபாடும்போது அவனுடைய வரத்துச்சொல்லியிறே கவிபாடுவது; பரமபதத்திலே நின்றும் ஸ்ரீமதுரையிலே தங்கி திருவாய்ப்பாடிக்கு வந்தாப்போலே ஸ்ரீவைகுண்டத்தினின்றும் திருமலையிலே தங்கிக்காண்வந்தது" என்றருளிச்செய்தார். நித்ய ஸூரிகளையுடையனைதுக்குமேலே ஓரைச்வர்யம்.

(விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்) ஆற்றிலே அழுந்துவார் ஆழங்காலிலேயிளைப்பாறத் தேடுமாபோலே அவர்களும் வந்தடிமை செய்யுமிடம். (வேங்கடவன்.) அர்ச்சாவதாரத்துக்குப் பொற்கால் பொலியவிட்டவிடம்.

(நிமலன்) நிர்ஹேதுகமாகவிஷயீகரித்த ஸௌசீல்யத்தையுடையவன். இத்தலையைப் பெறுகைக்குப் பச்சையிட்டானும் தானே. இத்தலையில் அர்த்தித்வமின்றிக்கேயிருக்க இப்படி உபகரிக்கையால் வந்த ஔஜ்வல்யம். இவனும் ஓரடியிடப்பார்த்திராதொழிகை. ஓரடியிட்டாருண்டாகில் 28 "पद्भ्यामभिगमाच्चैव स्नेहसन्दर्शनेन च" (பத்ப்யாமபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்சநேந ச) ஆபிமுக்யமடியாக அங்கீகரித்து

---

† குண்டலிதமதிகம்.

ருண்டாகில் 16 "पद्भ्यामभिगमाच्चैव स्नेहसन्दर्शनेन च (பத்ப்யாமபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்ஶநேந ச) (நின்மலன்) இத்தலைக்கு உபகரித்தானாயிருக்கையன்றிக்கே தன்பேறாயிருக்கை. "அமலன்" என்று தனக்காக்கினபடி; "விமலன்" என்று தன்னடியார்க்காக்கினபடி; "நிமலன்" என்று-நான் பச்சையிடாதிருக்க என்கார்யம் செய்தானென்கிறார். (நின்மலன்) இதுதன்பேறாகச் செய்தானென்கிறார், 17 "कृतकृत्यस्तदा रामः" (க்ருத்க்ருத்யஸ்ததாராம:) என்கிறபடியே.

(நீதிவானவன்) சேஷசேஷித்வங்கள் முறைமாறாத நித்யவிபூதியிலேயுள்ளவன். "ஈச்வரோஹம்" என்று எதிரிட்டிருக்குமிடமிறே இவ்விடம். அங்குகலக்குவாருமில்லை, கலங்குவாருமில்லை; இங்குகலக்குவாருமுண்டு, கலங்குவாருமுண்டு. (நீண்மதிளரங்கத்தம்மான்.) * நீதிவானவன் என்று, * நீண்மதிளரங்கத்தம்மானென்கிறார்; ¶ "அளப்பரியவாரமுதை யரங்கமேய

---

ஓரஞ்ஜலிமாத்ரமுங்கூடவுண்டறுக்க மாட்டாதா னொருவன். (நிமலன்) இத்தலைக்கு உபகரித்தானாயிருக்கையன்றிக்கே தன்பேறாயிருக்கை. "அமலன்" என்றது-இவரைத் தனக்காக்கினபடி; விமலனென்கிறது-தன்னடியார்க்காக்கினபடி. "நிமலன்" என்றது நான் பச்சையிடாதிருக்க என்காரியஞ் செய்தானென்கை. (நிமலன்) இது தன்பேறாகச்செய்தானென்கிறார். 29"कृतकृत्यस्तदा रामः" (க்ருதக்ருத்யஸ்ததாராம:)என்கிறபடியே. (நின்மலன்)தான் உபகரித்தானாய், இத்தலை, § "உதவிக்கைம்மாறென்னுயிர்" என்றாப்போலே ப்ரத்யுபகாரந்தேடித் தடுமாறாதபடி, 30 "प्रणष्टस्य यथा लाभः" (ப்ரணஷ்டஸ்ய யதாலாப:) என்கிறபடியே-உடையவன் உடைமையைப்பெற்றானாகில் நமக்கென்னென்று, ஆத்மலாபம் தன்னதாம்படியிருக்கிற ஶுத்தியையுடையவன்.

(நீதிவானவன்) இப்படிப் புகுரநிறுத்துகைக்கடி ஶேஷஶேஷித்வங்கள் முறைகெடாமல் நடக்கும் நித்யவிபூதி வாஸனையென்கை. "ஈச்வரோஹம்" என்று-எதிரிட்டிருக்குமிடமிறே இவ்விடம். அங்கு கலக்குவாருமில்லை; கலங்குவாருமில்லை; இங்குகலக்குவாருமுண்டு; கலங்குவாருமுண்டு. (நீண்மதிளரங்கத்தம்மான்) "நீதிவானவன்" என்று, "நீண்மதிளரங்கத்தம்மான்" என்கிறார். ‡ "அளப்பரிய வாரமுதை யரங்கமேயவந்தணனை" என்னுமாபோலே.

---

¶ திருநெடு-14. § திருவாய் 2-9-10. ‡ திருநெடு-14.

வந்தணனை" என்னுமாபோலே (நீண்மதிள்) ரக்ஷகத்வத்துக்குப் போரும்படியான மதிளையுடைய பெரியகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பரம சேஷி. (அம்மான்) ஈரரசுதவிர்த்தாலிறே சேஷித்வம் பூர்ணமாவது. திருமலையில் போக்யதை நிலமல்லாமையாலே மீளவும் கோயிலிலே புகுகிறார். வெள்ளத்தைக் கள்ளமடையாலே பள்ளத்தே விடுமாபோலே, திருவேங்கடமுடையான் வடக்குத்திருவாசலாலே வந்து புகுந்தானத்தனை யென்றுமாம். (திருக்கமலபாதம்) செவ்வியும் குளிர்த்தியும் விகாஸமும் பரிமளமும் தொடக்கமானவை.

ஆதித்யனைக்கண்டாலிறே தாமரையலருவது; இத்தாமரைக்கு ஆதித்யன் இவர். பிராட்டி திருமுலைத்தடங்களிலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொள்ளும் திருவடிகள். இவருடைய * தளிர்புரையும் திருவடிகளிருக்கிறபடி. (அம்மான் திருக்கமலபாதம்) தொடர்ந்து வருகைக்குப்ராப்தி. (வந்து) த்வீபாந்தரத்தில் சரக்குச்சேரவேண்டினால் பாதிப்பாதி வழியாகிலும் வருதல், ஒருதலைப்பற்றுதல் செய்யவேணுமிறே; அங்ஙனன்றியே, ‡ "வந்துனதடியேன் மனம்புகுந்தாய்" என்கிறபடியே வழிவந்தானும் தானே, பற்றி

---

(நீண்மதிளரங்கம்) ரக்ஷகமாகப்போரும்படியான மதிளையுடைய பெரியகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற சேஷி. இப்பாசுரம் கேட்டுப்போலேகாணும் திருமங்கையாழ்வார் திருமதிள் செய்தது; அழகிய வாயாலே இதருளிச் செய்தபின்பாகாதே திருமாளிகைகளும் திருக்கோபுரங்களும் கனத்தது. (அம்மான்) அங்குள்ளாரோடொத்த ப்ராப்தி இங்குள்ளாரோடுண்டாகையாலேயிறே இங்கு வந்து சாய்ந்தருளிற்று. (அம்மான்)ஈரரசு தவிர்ந்தாலிறே சேஷித்வம் பூர்ணமாவது. திருமலையில் போவது நிலமல்லாமே மீளவும் கோயிலிலே புகுகிறார். வெள்ளத்தைக் கள்ளமடையாலே பள்ளத்தே விடுவாரைப்போலே, திருவேங்கடமுடையான் வடக்குத் திருவாசலாலே வந்து புகுந்தானத்தனை யென்றுமாம்.

(திருக்கமலபாதம்) பெருக்காற்றிலே யிழிவார் தெப்பங்கொண்டு இழியுமாபோலே ஒரு தாமரைப்பூவை த்ருஷ்டாந்தமாக்குகிறார் செவ்வி குளிர்த்தி நாற்றம் விகாஸம் இவை தாமரைப்பூப்போலே யிருக்கையாலே. ஆதித்ய ஸந்நிதியிலே அலரும் தாமரைபோலே ஆச்ரிதஸந்நிதியிலே அலருந்தாமரையாய்த்துத் திருவடிகள்,

---

‡ பெரியதிரு 3-5-1.

ஞனும்தானே என்கிறது. (என்கண்ணினுள்ளன) § (நீதிவானவன்-கமல பாதம்—என் கண்ணினுள்ளன) ஸதாதர்சநம் பண்ணுகிறவர்கள் கண்ணுக் கிலக்கானதுகிடீர் என் கண்ணுக்கிலக்காகிறது! வல்லதனை நாளும் விரோதம் பண்ணினேன்; போக்கற்றவாறே என்கண்ணைச் செம்பளித்தேன்; தொடர்ந்து வந்து செம்பளித்த கண்ணையுறுத்து உள்ளேபுகுந்து நிற்கை யாலே "என்கண்ணினுள்ளன" என்கிறார். அன்றியே தம்கண்ணாலே பார்க்கை அவத்யமென்று கண்ணைச் செம்பளித்தார்; கண்ணினுள்ளே ப்ரகாசிக்கத் தொடங்கிற்று.

(ஒக்கின்ற) ப்ரயோஜநம் இரண்டுதலைக்கும் ஒத்திராநின்றது; அங்குத்தைக்கு சேஷஸித்தி; இங்குத்தைக்கு ஸ்வரூபஸித்தி. (ஒக்கின்ற) ப்ரத்யக்ஷஸமானாகாரமாயிருந்ததென்னுதல்; என்கண்ணுக்கிலக்கான விடத்

---

பிராட்டி திருமுலைத் தடத்திலும் திருக்கண்களிலும் ஒற்றிக்கொள்ளும் திருவடிகள். இவருடைய * தளிர்புரையுந் திருவடி யிருக்கிறபடி. § "அம்மான் திருக்கமலபாதம்" என்கையாலே-ப்ராப்தமுமாய் ப்ராப்யமுமான திருவடிகளென்கை. "நாராயண சரணங்கள்" என்றபடி.

"வந்து" என்று அதினுடைய உபாய பூர்த்திசொல்லுகிறது. (வந்து) 31 "विधिशिवसनकाद्यैर्ध्यातुमत्यन्तदूर (விதிஶிவஸநகாத்யைர்த்யாது மத்யந்ததூர)மான திருவடிகள்கிடீர் என்னளவும் வந்து விஷயீகரித்தது! த்வீபாந்தரத்தில் சரக்குச்சேர வேண்டினால் பாதிப்பாதி வழியாகிலும் வருதல், ஒருதலைப்பற்றுதல் செய்யவேணுமிறே. அங்ஙனன்றியே, † "வந்தனை தடியேன் மனப்புகுந்தாய்" என்கிற படியே வழிவந்தானுந்தானே, பற்றினானுந்தானே யென்கிறது. (என் கண்ணினுள்ளன) எத்தைக்கண்ட கண்களுக்கு இவை விஷயமாகின்றன. (நீதி வானவன்-கமலபாதம் என் கண்ணினுள்ளன) ஸதாதர்ஶநம் பண்ணுகிறவர்களுடைய கண்ணுக்கிலக்கானதுகிடீர் என்கண்ணுக் கிலக்காய்த்து. வல்லதனை நாளும் விரோதம் பண்ணினேன்; போக்கற்றவாறே கண்ணைச் செம்பளித்துக் கண்ணையிறுத்து உள்ளேபுகுந்து நிற்கையாலே என்கண்ணினுள்ளன. அன்றியே

---

§ ஒரு வாக்யம் நழுவிற்று. † பெரியதிரு 3-5-1.

திலும் பழையநிலை குலையாதிருந்ததென்னுதல். ஸம்ஸாரிகளைப்பார்த்து உங்களுக்கு மொக்குமோவென்கிறாராதல்; இந்த லாபம் அத்தலைக்கு மொக்குமோ வென்கிறாராதல்.

(அமலன்) * உயர்வறவுயர் நலமுடையவன், (ஆதி) * யவன். (பிரான்) * மயர்வற மதிநல மருளினன். (அடியார்க்கு) * பயிலுஞ்சுடரொளி. (விண்ணவர்கோன்) * அயர் வறுமமரர்களதிபதி. (வந்து) அவர் * "தொழுதெழு" என்றார்; இவர்க்கு அவைதானேவந்து நின்றன.

---

தம்கண்ணாலே பார்க்கை அவத்யமென்று கண்களைச் செம்பளித்தார்; கண்ணினுள்ளே ப்ரகாசிக்கத் தொடங்கிற்று. (ஒக்கின்ற) ப்ரயோஜநம் இரண்டுக்கும் ஒத்திராநின்றது. அங்குத்தைக்கு சீலஸித்தி; இங்குத்தைக்கு ஸ்வரூபஸித்தி.

(ஒக்கின்ற) என் கண்ணுக்கிலக்கான உங்களுக்கு மொக்கு மென்கிறாராதல். "கண்ணினுள்ளன வொக்கின்றவே" என்று - ஒரு பதமாய் என் கண்ணினுள்ளன வானைப்போலே யிராநின்றதே யென்றபடி.. ஒன்பதுபாட்டு வழியிலேயநுஸந்தித்து, பத்தாம்பாட்டிலே திருவடித்தொழுதாரென்கிற ஐதிஹ்யத்தின்படியே மாநஸ ஸாக்ஷாத்காரந்தான் கண்ணிட்டுக் கண்டாப்போலே யிருக்கை. அங்ஙனன்றிக்கே மாநஸஸாக்ஷாத்காரத்தோடு சேர்ந்திருந்தநீ சக்ஷுர் விஷயமான திருவடிகளென்றுமாம்.

(அமலன்) * உயர்வற வுயர்நலமுடையவன்; (ஆதி) * யவன்; (பிரான்) * மயர்வற மதிநல மருளினன்; (அடியார்) * பயிலுஞ் சுடரொளி; (விண்ணவர்கோன்) * அயர்வறு மமரர்களதிபதி; (வந்து) அவர் "தொழுதெழு" என்றார்; இவர்க்கு அவைதானே வந்தன.

---

அரு:—முதற்பாட்டு, அமலத்வம் முக்தர்க்கும் உண்டேயென்ன, அருளிச்செய்கிறார் (அபஹதபாப்மேத்யாதி) சுத்தனென்று அர்த்தாந்தரம். முந்தின அர்த்தத்திலே அருளிச்செய்கிறார் (ஜந்மவ்ருத்தாதிகளித்யாதி.)

"**आदीयते**" (ஆதீயதே) ஆதாநம் பண்ணப்படுகை. ஸ்வீகரிக்கப்படுகிறானென்றபடி. "பிரான்" என்றது—கீழைப்பற்றவாதல்; மேலைப்பற்றவாதல் (என்னை) தன் ஸத்பாவமறியாதவென்னுதல். தன் கல்யாணகுணமறியாத வென்னையென்னுதல். "ஆட்படுத்த" என்றத்தால் ஆதிக்யமேதென்ன அருளிச்செய்கிறார் (பகவச்சேஷத்வமித்யாதி).

2. உவந்த வுள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற
நிவர்ந்தநீண்முடியன் அன்று நேர்ந்தநிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான் அரைச்
சிவந்தவாடையின்மேல் சென்றதாமெனசிந்தனையே.

பதவுரை:—உவந்த உள்ளத்தன் ஆய் — (*என்னைப்பெற்றதால்*) *மகிழ்ச்சியோடு கூடிய மனத்தையுடையனாய்க்கொண்டு*, உலகம் அளந்து—*மூவுலகங்களையும் அளந்து*, அண்டம் உற—*அண்ட பித்தி வரை சென்று முட்டும்படி*, நிவர்ந்த—*உயர்த்தியை அடைந்த*, நீள் முடியன்—*பெரிய திருமுடியையுடையனாய்*, அன்று—*முற்காலத்தில்*, நேர்ந்த—*எதிர்த்து வந்த*, நிசாசரரை—*ராக்ஷஸர்களை*, கவர்ந்த—*உயிர்வாங்கின*, வெம் கணை—*கொடிய அம்புகளையுடைய*, காகுத்தன்—*இராமபிரானாய்*, கடி ஆர்—*மணம் மிக்க*, பொழில் — *சோலைகளையுடைய*, அரங்கத்து—*ஸ்ரீரங்கத்தில் எழுந்தருளியிருப்பவனான*, அம்மான்—*எம்பிரானுடைய*, அரை — *திருவரையில் (சாத்திய)*, சிவந்த ஆடையின்மேல் — *பீதாம்பரத்தின் மேலே*, என சிந்தனை—*என்னுடைய நினைவானது*, சென்றது ஆம்—*பதிந்ததாம்*.

---

*அவ:—இரண்டாம்பாட்டு. முதற்பாட்டில்—அவன் தொடர்ந்து வந்தபடி சொன்னார்; இப்பாட்டில்—தாம் மேல்விழுந்தபடி சொல்லுகிறார்.*

---

அவ:—*இரண்டாம்பாட்டு* (உவந்த) *கீழ்ப்பாட்டிலே "அரங்கத்தம்மான் திருக்கமல பாதம் வந்தென் கண்ணினுள்ளன வொக்கின்றவே" என்று திருவடிகள் தானே தம்மை விஷயீகரித்துத் தந்திருவுள்ளத்திலே ப்ரகாசித்தபடியைச் சொன்னார்*; இப்பாட்டில்

---

"விண்ணவர் கோன்" என்கையாலே, சேஷித்வத்வத்தினெல்லையென்கை. ஆழங்கால்—வ்யங்க்யம். சீலகுணமிகுதியாலே ஆழங்காலென்றது, இவனுடைய அத்வேஷாதிகளும் பொறுக்க மாட்டானென்னுமத்தை அருளுகிறார் (பத்ப்யாமித்யாதி).

கலக்குகிறது—ப்ரக்ருதி. கலங்குகிறான்—பத்தாத்மா. (திரு) பூஜ்யவாசியாதல், பிராட்டியாதல். "விண்ணவர்கோன்" என்றுத்வீபாந்தரவஸ்து. கண்ணுக்கு விஷயமென்னாமல், உள்ளனவென்பானென்னென்ன அருளிச்செய்கிறார். (வல்லதனைநாளுமித்யாதி). "ஒக்கின்ற" என்கையாலே—நிலைகுலையாதிருக்கை,

திருவடிகளிலே தொடர்ந்த திருவுள்ளம் திருப்பரியட்டத்தின் மேல் சேர்ந்தபடி யெங்ஙனேயென்னில்; தானறிந்து சேரில் விஷயத்தின் போக்யதைக்குக் குற்றமாம், ஆகையாலே போக்யதை அளவுபட்டதுமல்ல, ஆசை தலைமடிந்ததுமல்ல, கடலோதம் கிளர்ந்தலை கப்புக்கால் உள்ளே கிடந்ததொரு துரும்பு கடலை அளவிட்டலல்லவே கரையேறுவது; ஒரு திரை ஒருதிரையிலே ஏற வீசுமத்தனையிறே.

---

"வந்துனதடியேன் மனம்புகுந்தாய் புகுந்ததற்பின் வணங்கும் என் சிந்தனைக் கினியாய்" என்கிறபடியே அவன் விஷயீகரித்துப் புகுந்த பின்பு, திருவடிகளளவன்றியே அத்தோடு சேர்ந்த திருப்பீதாம்பரத்தளவுஞ் செல்லத்தப்சிந்தை நசைபண்ணுகிறபடியைச் சொல்லுகிறார். ஈன்று அணித்தானதாகு, தன் கன்றுக்கு வாஸனையில்லாமையாலே முதலில் தானே தன்முலையை அதின் வாயிலே கொடுக்கும்; பின்பு சுவடறிந்தால் கன்றுதானே இதுகாற்கடைக் கொள்ளிலும் மேல்விழுமிறே. அப்படியே திருவடிகள் தானே வந்து போக்யமானபடி சொன்னார் முதற்பாட்டில்; இதில் - தம்முடைய நெஞ்சு சுவடறிந்து மேல்விழுந்தபடி சொல்லுகிறார். திருவடிகளிலே கிடந்த திருவுள்ளம் திருப்பரியட்டத்தின் மேலே சேர்ந்தபடி யெங்ஙனே யென்னில்; தானறிந்து சேரில் விஷயத்தின் போக்யதைக்குக்குற்றமாய்; ஆகையால் போக்யதை அளவுபட்டதுமல்ல; ஆசை தலைமடிந்ததுமல்ல; கடலோதங் கிளர்ந்தலைக்கப்புக்கால் உள்ளே கிடந்ததொரு துருப்பு கடலையளவிட்டல்லவே கரையிலே யேறுவது; ஒருதிரையிலே ஒருதிரையேற வீசுமத்தனையிறே.

கீழ்ப்பாட்டில் - "நிமலன் நின்மலன்" என்று அபேக்ஷாநிரபேக்ஷமாகவும் ஸ்வயம் ப்ரயோஜநமாகவும் தன் திருவடிகளை யுபகரித்தானென்றிறே இவர் சொல்லிற்று. 32 "रक्ष्यापेक्षां प्रतीक्षते" (ரக்ஷ்யாபேக்ஷாம் ப்ரதீக்ஷதே) என்கிறபடியே ரக்ஷ்பத்தினுடைய அபேக்ஷையைப்பார்த்திருப்பானொருவனன்றோ; ஆகையால் இது உபபந்நமென்று தோற்றியிருந்ததில்லையீ! என்ன; இந்த லோகமாக மஹாபலியபிமாநத்திலேபுக்கு அந்யசேஷமாய்க்கிடக்க, இவர்களுடைய அர்த்தித்வநிரபேக்ஷமாக இவர்கள் தலையிலே தன் திருவடிகளைவைத்து இதுதானே ப்ரயோஜநமாக உகந்து போருமாகாரம் அவனுக்கு அடியே பிடித்து உள்ளதொன்றன்றோ? இன்று புதிதாக வருகிறதொன்றோ வென்கிறார்.

வ்யா:-(உவந்தவுள்ளத்தனாய்.) ஆழ்வாரை அகப்படுத்துகையால் வந்தப்ரீதி, ஸர்வேச்வரனாய்ச்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்த காமனாயிருக்கிறவன் அர்த்தியாய் வந்து, தன் திருவடிகளைத் தலையிலே வையாநின்றால் 18 "**मदीयमूर्धानमलङ्करिष्यति**" (மதீயமூர்த்தாந மலங்கரிஷ்யதி) என்று உகக்க வேண்டியிருக்க, அவையறியாதொழிய ப்ரஜை பால்குடிக்கக்கண்டு உகக்கும் மாதாவைப்போலே உகந்த திருவுள்ளத்தை யுடையவனாய்.

இவற்றைப் பிரிந்தால் வ்யஸநமும் தன்னதேயிறே; 19 "**व्यसनेषु मनुष्याणां भृशं भवति**" (வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி) என்கிறபடியே. (உலகமளந்து) வகுத்த திருவடிகள் தலையிலே வந்திருந்

---

வ்யா:— (உவந்தவுள்ளத்தனாய்.) ஆழ்வாரை அகப்படுத்துகையால் வந்த ப்ரீதி. ஸர்வேச்ரனாய் ச்ரிய:பதியாய் அவாப்தஸமஸ்த காமனாய், 33 "**अवाक्यनादरः**" (அவாக்ய நாதர:) என்கிறபடியே பரிபரிபூர்ணனான தான் 34 "**कदा पुनः शङ्ख रथाङ्ग कल्पकध्वजार विन्दाङ्कुशवज्रलाञ्छनं। त्रिविक्रम त्वच्चरणांबुजद्वयं मदीयमूर्धानमलङ्करिष्यति ॥**" (கதாபுநச்சங்க ரதாங்ககல்பக த்வஜாரவிந்தாங்குச வஜ்ரலாஞ்சநம் । த்ரிவிக்ரம த்வச்சரணம் புஜத்வயம் மதீயமூர்த்தாந மலங்கரிஷ்யதி) என்றும், ||"படிக்களவாக நிமிர்த்த நின்பாத பங்கயமே தலைக்கணியாய்" என்றும்-சிலர் அபேக்ஷியாதிருக்க, 35 "**पादारुन्तुदमेव पङ्कजरजः**" (பாதாருந்துதமேவ பங்கஜரஜ:) என்னும் ஸௌகுமார்யத்தை யுடைத்தாய், பெரிய பிராட்டியார் திருக்கைகளால் வருடவும் பொறாத அந்தத் திருவடிகளைக் காடுமேடுகளென்று பாராதே சேதநாசேதந விபாகம்பாராதே பரப்பினால், "இப்படியுபகரிப்பதே!" என்று இவர்கள் உகக்க ப்ராப்தமாயிருக்க, இவர்களறிவு கேடே ஹேதுவாக விலக்காதொழியப்பெற்றோமே யென்றிரட்டிக்கப் புகுந்த திருவுள்ளத்தை யுடையனாய்.

36 "**कृतकृत्यस्तदा रामो विज्वरः प्रमुमोद ह**" (க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர:ப்ரமுமோத ஹ) என்று — தம்மோடும் தம்பியாரோடு முண்டான வாஸனையாலே முடியை விலக்குகிறானென்று வெறுத்திருந்தபெருமாள், இவன் இசைந்து முடியைவைத்த பின்பு உகந்தாப்போலே, இத்தலையில் அத்வேஷமே ஹேதுவாகத் திருவடி

---

|| திருவாய் 9-2-9.

தாலும் உகக்கவறியாத லோகத்தைக் கிடீர் தானும்விடாதே யளந்தது! உகக்கவறியாமைக்கு *வன்மாவையமிறே. குணகுண நிரூபணம்பண்ணுதே எல்லார் தலையிலும் ஒக்கத் திருவடிகளை வைத்தபடியாலே, பக்திமான்களும் பாதகிகளும் ஒக்க வாழ்ந்து போய்த்து.

(அண்டமுற நிவர்ந்த நீண்முடியன்) அண்டகடாஹத்திலே சென்று சேர்ந்த திருவபிஷேகத்தை யுடையவன். அண்டகடாஹம் வெடித்து அடைகட்டவேண்டும்படியிறே அபேக்ஷிதம் பெற்று வளர்ந்தபடி. (அண்டமுற) I "அண்டம் மோழையெழ"

(நிவர்ந்த) நிமிர்ந்த பூவலர்ந்தாப்போலே. (நீண்முடியன்) உபய விபூதிக்கும் நிர்வாஹகனென்று தோற்றும்படி யிருக்கிற திருவபிஷேகத்தை

---

களை வைக்கப்பெறுகையாலே மிகவும் ப்ரீதனுப். எதிர்த்தலை யறியா திருக்கத் தானேயுகக்கிறது வாத்ஸல்யமிறே; உறங்குகிற ப்ரஜையைத் தாய்கட்டிக்கொண்டு கிடக்கிறது வாத்ஸல்யமன்றே. இவற்றைப் பிரிந்தால் வ்யஸநமும் தன்னதேயிறே. 37 "व्यसनेषु मनुष्याणां" (வ்யஸநேஷு மநுஷ்யாணம்).

(உலகமளந்து) "வஸிஷ்ட சண்டாள விபாகம், ஸ்த்ரீபும் விபாகம், ஜ்ஞாநாஜ்ஞாந விபாகம்" என்றவற்றைப்பாராதே, எல்லார் தலையிலுமொக்கத் திருவடிகளை வைத்தபடி. (உலகமளந்து) வைத்த திருவடிகள் தலையிலே வந்திருந்தாலும் உகக்கவறியாத லோகத்தைக் கிடீர் தான்விடாதே யளந்தது! உகக்கவறியாமைக்கு * வன்மாவைய மிறே. குணகுண நிரூபணம் பண்ணுதே எல்லார் தலையிலுமொக்கத் திருவடிகளை வைத்தபடியாலே, பக்திமான்களும் பாதகருமொக்க வாழ்ந்துபோய்த்து. (அண்டமுற நிவர்ந்த நீண்முடியன்.) அண்டகடாஹத்திலே சென்று சேர்ந்த திருவபிஷேகத்தையுடையவன். அண்டகடாஹம் வெடித்து அடிபிடிக்கவேண்டும்படியிறே அபேக்ஷிதம்பெற்று வளர்ந்தபடி. (அண்டமுற) I "அண்டம் மோழையெழ" "நிவர்ந்த" என்கிற ஶப்தம்-உயர்வென்றும் ஓங்கியென்றுங் காட்டும்; உற வென்கையாலே – ஓங்கியென்றபடி.

(நிவர்ந்த) பூவலர்ந்தாப்போலே. (நீண்முடியன்) முடிக்கு நீட்சியாவது – உபயவிபூதிக்கும் தரித்த முடியென்று தோற்றும்படியா

---

I திருவாய் 7-4-1.

யுடையவன். ரக்ஷ்யவர்க்கத்தை நோக்கிறுலிறே ரக்ஷகன் முடிதரிப்பது. (அன்றித்யாதி) கண்ட காட்சியிலே "ஜிதம்" என்ன வேண்டும்படியிருக்குமவனிறே. எதிரிட்ட பையல்களை முடிக்கைக்கு வெவ்விய சரத்தை யுடைய சக்ரவர்த்தித் திருமகன்.

---

யிருக்கை. 38 "आधिराज्यमधिकं भुवनानामीश ते पिशुनयन् किल मौलिः" (ஆதிராஜ்யமதிகம் புவநாநாமீஶதே பிஶுநயந் கில மௌளி:) என்னுமா போலே ரக்ஷ்யவர்க்கத்தை நோக்கிலிறே ரக்ஷகன் முடிநற்றரிப்பது. || "ஒரு காலுங்காமருசீரவுணனுள்ளத் தெண்மதியுங்கடந்து" என்று திருவடிகளுக்கு வளர்த்தி சொல்லப்ராப்தமாயிருக்கத் திருமுடிக்கு வளர்த்தி சொல்லுகிறது இத்திருவடிகள் அப்ராப்தமான திருவடிகளன்று, ப்ராப்தமான திருவடிகளென்று தோற்றுகைக்காக. தான் அர்த்தியாய்ச்சென்று அர்த்தித்வத்தை மாறுதே அவன் கொடுத்த படியாலே உவந்த உள்ளத்தனாய். அன்றுனறிய வுகக்கவொண்ணுதே. (உலகமித்யாதி) திருக்கையில் நீர்விழுந்த வளவிலே அந்நீரே பற்றுசாகவளர்ந்து அளந்துகொண்டான்.

ஆக இப்படி அர்த்தித்வ நிரபேக்ஷமாக லோகத்தை இருந்ததே குடியாகத் திருவடிகளாலே விஷயீகரித்தாப்போலே, உம்முடைய நிகர்ஷம்பாராதே, † "அரவிந்தப்பாவையுந்தானு மகப்படிவந்து புகுந்து" என்று-நெஞ்சிலேவந்து புகுந்தானேயாகிலும், உம்முடைய சித்தமானது ராகாதி தூஷிதமாயிருக்கையாலே, 39 "नास्पदी" (நாஸ்பதீ) என்கிறபடியே அங்குக் கால்பொருந்தியிருக்கமாட்டானே; ஆகையால் அத்தை நீர்போக்கப்பாரீரென்ன; (அன்றுநேர்ந்த நிசாசரரைக்கவர்ந்த வெங்கணைக்காகுத்தன்)கண்ட காட்சியிலே 40"जितन्ते" (ஜிதந்தே) என்ன வேண்டியிருக்கிறவனிறே. எதிர்த்தபையல்களை முடிக்கைக்கு வெவ்விய சரத்தையுடையவன்.

பெருமாளும், 41"श्रिया सार्धं" (ச்ரியாஸார்த்தம்) என்கிறபடியே பிராட்டியும், நித்யஸூரிகளோபாதி * சுற்றமெல்லாமான இளைய பெருமாளுமாக தண்டகாரண்யத்திலே போய்ப்புக்கு, பரதன் அங்கே வந்து பின்றுட்டுகையாலே அங்கிருக்கமாட்டாதே ஜநஸ்தாநத்திலே போய்ப்புக்கு அங்கு வர்த்திக்கிற ரிஷிகள் பாடேசென்று, 32"आवासं

---

|| திருநெடு-5. † பெரியாழ்திரு 5-2-10.

**त्वहमिच्छामि प्रदिष्टमिह कानने''** (ஆவாஸம் த்வஹமிச்சாமி ப்ரதிஷ்டமிஹ காநநே) என்று உங்கள் ஸகாஶத்திலேயிருக்கப்பாராநின்றோமென்று இடம் தரவேணுமென்ன; அவர்களும் அங்கேயிருக்க அநுமதிபண்ணி, நன்றாகப் பர்ணசாலையைச்சமைத்து வாஸ்துபலிகளுமிட்டு, அங்கே யெழுந்தருளியிருக்க, அவ்விருப்புக்கு விரோதிகளாய்வந்து கரதூஷணாதிகள் எதிர்க்க, அவர்களை நோக்கி அந்த ரிஷிகள் தொடுத்ததோரம்புண்டோ? அவர்கள், 43 **"एहि पश्य शरीराणि"** (ஏஹி பச்ய சரீராணி) என்னும்படி உருமாய்த்த அந்தராக்ஷஸரை, தம்முடைய திருக்கைத் திருச்சார்ங்கங்களாலே * உருக்கெட வாளி பொழிந்த சக்ரவர்த்தித்திருமகன், என்னுடைய ராகாதிதோஷங்களை * விவேகஶரஜாலத்தாலே ஶமிப்பித்து, * அரவத்தமளியினோடும் அரவிந்தப்பாவையினோடும் *பேரெனென்றென்னெஞ்சு நிறையும்படி புகுந்திருக்கிறவனென்கிறார்.

(அன்று) ஜநஸ்தாநத்திலே இருக்கிறவன்று. ரக்ஷகனானவன் ரக்ஷ்யத்தை நோக்கக்கடவதாக வந்து நின்றவன்று. (நேர்ந்தநிசாசரரை) அகவாயிலிருட்சியே யன்றிக்கே, ஸர்ப்பம் உணர்த்தியற்று ராத்ரியிலே புறப்படுமாபோலே பாஹ்யஸைக்கு ஏகாந்தமான காலத்திலே வந்து எதிர்ந்த கரதூஷணாதி ராக்ஷஸரை. "நேர்ந்த நிசாசரர்" என்கையாலே விபீஷணாதிகளை வ்யாவர்த்திக்கிறது. (அன்று நேர்ந்த நிசாசரர்) 44 **"ते तं सोममिवोद्यन्तं दृष्ट्वा वै धर्मचारिणः। मङ्गलानि प्रयुञ्जानाः प्रत्यगृह्णन् दृढव्रताः''** (தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண:। மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா:) 45 **"रामो रामो राम इति प्रजानामभवन् कथाः। रामभूतं जगद्भूत् रामे राज्यं प्रशासति॥** (ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா:। ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி) என்றும், அநுகூலப்ரதிகூல விபாகமற இவனைக்கண்ட மநுஷ்யர் மங்களாஶாஸநம் பண்ணுவார், உடைவுகெடவாய் புலத்துவாராகிற காலத்திலே, இவர்கள் இங்ஙனே சிலரெதிர்த்து நசித்துப் போவதேயென்று வெறுக்கிறார் இவர்.

45 **"रामो रामो राम इति''** (ராமோ ராமோ ராம இதி) பாதம் தலைக்கட்டுகையாலே மீளுகிறதித்தனை யென்றிறே நிர்வஹிப்பது. இத்த்ரைவியத்துக்குப்பொருள் * ரூபௌதார்ய குணங்களை வெளவற வடிவழகும், அத்தை அநுபவிக்கக் கொடுக்கையும், கொடாநின்றால் இற

(அன்று) ரக்ஷகனானவன் ரக்ஷ்யத்தை நோக்கக்கடவதாக வந்து நின்றவன்று. (நேர்ந்த நிசாசரரை) எதிரிட்ட நிசாசரரை. ''நேர்ந்தநிசாசரர்'' என்கிறது–திருப்பல்லாண்டு பாடவேண்டுமழகைக்கண்டும் எதிரம்பு கோப்பதே! என்று. நிசாசரர்–வெளியில் முகங்கண்டறியாத பையல்கள். (கவர்ந்த) புறப்படும்போது விநயத்தோடுபுறப்பட்டு, வேட்டைநாய்கள் ஓடி மேல் விழுமாபோலே விழுகை. (வெங்கணை) விடும்போது அம்பாய், படும்போது காலாக்நிபோலேயிருக்கை. 20 "दीप्तपावकसङ्काशैः शरैः" (தீப்த

---

மாப்பற்றிருக்கையும். 46 "पुंसां तारुण्यञ्च" (பும்ஸாம் தாருண்யஞ்ச) என்று ஸ்த்ரீபும் விபாகமற ப்ரவணராம் ஆகாரமுண்டாயிருக்கையாலே வீதராகரைச் சொல்லுகிறது. ப்ராப்தவிஷய ப்ராவண்யமிறே ஜிதேந்த்ரியத்வமாகிறது.

45 "प्रजानां" (ப்ரஜாநாம்) மாதாபிதாக்களுக்கன்று; வஸிஷ்டாதிகளுக்கன்று; ஜநிதர்மாக்களுக்கு. 45 "कथाः" (கதா:) லோகயாத்ரைக் குறிப்பாம் வார்த்தைகளும் பெருமாளைப்பற்றியல்லதிராது. 45 "राम भूतं जगदभूत्" (ராமபூதம் ஜகதபூத்) ஜகத்தடைய ராமாத்வைதமாய்த்து. 47 "ऐतदात्म्यमिदं सर्वं" (ஐததாத்ம்யமிதம் ஸர்வம்) என்கிற பொதுவல்ல; 45 "रामभूतं" (ராமபூதம்) என்று ராமாத்வைதமாய்த்து. ப்ரஹ்மாத்வைதத்தை வ்யாவர்த்திக்கிறது. பெருமாள் சுண்டுவிரல்கொண்டு லீலாரஸமநுபவிக்கிற காலத்திலேயோவென்னில்; 45 "रामे राज्यं प्रशासति" (ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி) "दह पच" (தஹ பச) என்கிற காலத்திலே.

(அன்று) இப்படி எல்லாருமொக்க ப்ரவணராகிறவன்று. (நேர்ந்தநிசாசரை) இவ்வடிவழகிலே தோற்று விழாதே ஶரஶஸ்த்ரங்களைத் தூவிக்கொண்டு வந்தெதிர்ந்த ராக்ஷஸரை. (கவர்ந்த) மாரீசஸுபாஹுத்வத்துக்கிப்பால் ஓரிரைபெறாதே கிடக்கிறவையாகையாலே, இரைபெறாத ஸர்ப்பம்போலே எதிரிகள் மேலே விழுந்து க்ரஸித்தபடி. (வெங்கணை) அவன் தன்னைப்போலேயாய்த்து அம்புகளுமிருப்பது. 48 "दीप्तपावकसङ्काशैः शितैः काञ्चनभूषणैः" (தீப்தபாவகஸங்காஶை: ஶிதை: காஞ்சநபூஷணை:) என்கிறபடியே–தொடுக்கிறபோது அம்பாய், எதிரிகள் மேலேபோய் விழும்போது எரிகிற காலாக்நிபோலேயாய்த்து விழுவது.

பாலகஸங்காஶைச்சரை:) என்கிறபடியே பெருமாள்கண் பார்க்கிலும் முடித்தல்லதுநில்லாத வெம்மை.

(காகுத்தன்) குடிப்பிறப்பால் தரம் பாராதே விஷயீகரித்தபடியும் வீர வாசியும்.

---

49 **"न त्वामिच्छाम्यहं द्रष्टुं रामेण निहतं शरैः"** (நத்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும் ராமேண நிஹதம் ஶரை:) என்று * தயரதன் பெற்ற மரகத மணித்தடத்திலே புக்கு ச்ரமந்தீரமாட்டாதே சாவைக் காண மாட்டுகிறிலேன்; § "சரங்களாண்ட தண்டாமரைக் கண்ணனுக்கன்றி யென்மனம் தாழ்ந்து நில்லாதே" என்கிறபடியே "நீயும்நானும் கூடி, * இலங்கை பாழாளாகப் படைபொருதானுக்குப்பல்லாண்டு கூறுவாராய் ஆள்படப்போகாதே!" என்றுனிமேற விபீஷணன். (வெங்கணை) வெஞ்சிலேயினின்றும் புறப்படுகிறவையாகையாலே *வெங்கணையாயிருக்குமிறே. அவன் அநுகூலர்க்குப் *புனலுருவாய், ப்ரதிகூலர்க்கு அனலுருவாயிருக்குமாபோலே, பொன்னெழுதின பகழிகளுந் தானுமாயிருக்கையாலே, அநுகூலர்க்கு தர்ஶநீயமாய், அக்நிஶிகோபமங்களாகையாலே ப்ரதிகூலர்க்கு பயங்கரமாயாய்த் திருப்பது இச்சரங்களும்.

ஆக "உவந்த வுள்ளத்தனா யுலகமளந்தண்டமுற நிவர்ந்தநீண் முடியன்" என்று 50 **"को गुणवान्"** (கோகுணவாந்) என்று ப்ரதம ப்ரச்நமாய் ஆச்ரயணீயமான சீலாதிகுணத்தைச் சொன்னாராய், "அன்று நேர்ந்தநிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக்காகுத்தன்" என்று அநந்தரமாக 51 **"कश्च वीर्यवान्"** (கச்ச வீர்யவாந்) என்று சொன்ன விரோதிநிரஸநத்துக் குறப்பான வீரகுணங்களைச் சொல்லுகிறார். ஆக "மாம், அஹம்" என்கிற இரண்டினுடைய அர்த்தமும் அநுஸந்தித்தாராய் விட்டது. "உலகமளந்து" என்று - திருவடிகள் ‡ விக்ரமித்தபடி சொல்லி, "கவர்ந்த வெங்கணைக்காகுத்தன்" என்று திருத்தோள்கள் பராக்ரமித்தபடி சொன்னார். (காகுத்தன்) இந்த இரண்டுகுணமும் உபயவிபூதிநாதத்வப்ரயுக்தமன்று; ககுத்ஸ்தவம்ஶத்திலே பிறந்து படைத்தானகையாலே ஔத்பத்திகமென்றபடி. ஆக, கரதூஷணாதிகளை * சிலையால் வாளிபொழிந்தபடி சொல்லிற்று.

---

§ பெரியதிரு 7-3-4. ‡ (பா) நிமிர்ந்தபடி.

(கடியார்பொழில்) திருவுலகளந்தருளின விடமே பிடித்து அடி யொற்றி, ராவணவதம் பண்ணித்தெற்குத் திருவாசலாலே புகுந்து சாய்ந் தருளினான். இன்னமும் வேர்ப்படங்கிற்றில்லை—திருச்சோலையில் பரிமளம் விடாய்க்கு சிசிரோபசாரமானபடி. (அரங்கத்தம்மான்) அவதாரத்துக்குப் பிற்பாடர்க்கும் இழவுதிரக்கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறபடி. (அம்மான்) இங்கேவந்த பின்பு ஈச்வரத்வம் நிலைநிற்கை.

---

(கடியார் பொழிலரங்கத்தம்மான்) திருவுலகளந்தருளினத்தால் வந்த ச்ரமமும், ஜநஸ்தாநத்தில் ராக்ஷஸவதம் பண்ணின ச்ரமமும் ஆறுகைக்காக, பரிமள பரிதமான சோலையையுடைத்தான கோயி லிலே வந்து, அந்தத்திருவடிகளையும் திருத்தோள்களையும் நீட் டிக்கொண்டுசாய்ந்தான். பரிவராயிருப்பார், §"கொடியார்மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே நீ துயில்மேவி மகிழ்ந்தது தான், அடியாரல்லல் தவிர்த்தவசைவோ வன்றேலிப்படி தான் நீண்டு தாவியவசைவோ பணியாயே" என்று - நீ இங்குவந்து கண்வளர்ந்தருளுகிறது ஹிரண்ய ராவணாதிகளை நிரஸித்தத்தால் வந்த ச்ரமந்தீரவோ? த்ரைலோக்யத்தையு மளந்துகொண்ட ஆயா ஸத்தால் வந்த ச்ரமந்தீரவோ? பணியாய் - உன் ஸ்வரங்கொண்டு நாங்களறியும்படி சொல்லாயென்றார்களிறே. பிள்ளாய்! கிடக்கும் போது ஒருமூலையிலே ஒருவரறியாமற் கண்வளர்ந்தாலாகாதோ? இன்னமும் அவர்கள் மறுகிளைகிளைத்து, அவனெங்கேயென்று தேடிக்கொடுவரிலும் கொடிகட்டிக் கொண்டு கிடக்க வேணுமோ வென்று வயிறுபிடித்தாரிறே; அதுபோலுமல்லகிடீர் இவன் கண் வளர்ந்தருளுகிறபடி யென்கிறாரிவர்.

கொடிகள் த்ருஷ்டிகோசரமானாலிறே அவன் கிடக்கிறபடியறிய லாவது; இது அங்ஙனன்றே;- 52 "दूराद्गन्धो वाति" (தூராத் கந்தோ வாதி) என்கிறபடியே தூரஸ்தரையு மழைக்குமதிறே. * ஸர்வகந்த வஸ்து கண்வளர்ந்தருளுகையாலே * கடியார் பொழிலாயிருக்குமிறே. திருச்சோலையில் பரிமளம் விடாயர்க்கு சிசிரோபசாரமாம்படி. (அரங்கத்தம்மான்) அவதாரத்துக்குப் பிற்பாடரானாரு மிழவாதபடி இங்குவந்து கண்வளர்ந்தருளுகிறது ப்ராப்தியாலேயிறே. ஆக இத்தால் - போக்யதை சொல்லிற்று.

---

§ திருவாய் 8-3-5.

(அரைச்சிவந்தவாடை) ❡ உடையார்ந்தவாடை; § செக்கர்மாமுகில்; * திருமேனிக்குப்பரபாகபான திருப்பீதாம்பரம். (சிவந்தவாடையின் மேல் சென்றதாம்) "சோற்றின்மேலே எனக்குமனஞ்சென்றது" என்னுமா போலே ஆச்சர்யப்படுகிறார். (எனசிந்தனை) ஆருடைய கூறையுடையைக் கண்டு உகக்கக்கடவ நெஞ்சு இதிலேயகப்பட்டது! (எனசிந்தனை) திருவடிகளின் சுவடறிந்தபின்பு புறம்புபோகமாட்டாத நெஞ்சு. தீர்த்தமாடாநிற்கத் துறையிலே பிள்ளையைக் கெடுத்துத் திருவோலக்கத்திலே காண்பாரைப்போலே திருவடிகளில் நின்றும் திருப்பீதாம்பரத்திலே திருவுள்ளத்தைக்கண்டபடி.

---

(அரைச்சிவந்த வாடையின்மேல்) மேகச்யாமமான திருவரைக்குப் பரபாகஸாவஹமான திருப்பீதாம்பரத்தின்பேலே. (சிவந்த வாடையின் மேல் சென்றதாம்.) "சோற்றிலே யெனக்கு மனஞ்சென்றது" என்னுமாபோலே ஆச்சர்யப்படுகிறார். (எனசிந்தனையே) ஆருடைய கூறையுடைகண்டு உகக்கக்கடவ நெஞ்சு இதிலேயகப்பட்டது. த்ருஷ்டத்திலே லோககர்ஹிதமாய் அத்ருஷ்டத்திலே வெந்நரகிலே தள்ளவுங் கடவதான உடைகளிலே ப்ரவணமான என் மநஸ்ஸு, த்ருஷ்டத்தில் ஆகர்ஷகமாய், அத்ருஷ்டத்தில் * ஸதாபச்யந்திக்கு விஷயமான திருப்பீதாம்பரத்திலே விழுந்து நசைபண்ண நின்றது. (எனசிந்தனை) திருவடிகளின் சுவடறிந்து பின்பு புறம்பு போகமாட்டாத நெஞ்சு. தீர்த்தமாடாநிற்கத் துறையிலே பிள்ளையைக் கெடுத்துத் திருவோலக்கத்திலே காண்பாரைப் போலே, திருவடிகளில் நின்றும் திருப்பீதாம்பரத்தே கண்டபடி. மநஸ்ஸு என்னாதே "சிந்தனை" என்றது-சிந்தா விசேஷத்தைப்பற்ற. இத்தால் — திருவுலகளந்தருளினத்தையும் ராமாவதாரத்தையும் பெரியபெருமாள் பக்கலிலே ஓரோவகைகளாலே காண்கிறார்.

ஆக, கீழ் - "கமலபாதம் வந்தென் கண்ணினுள்ளன" என்று தானே முற்பாடனாய்வந்து விஷயீகரித்தபடியாலே - ஸாதநாபாவம் சொல்லிற்று; "சென்றதாம்" என்று - தந்திருவுள்ளம் மேல் விழுந்ததாகச் சொல்லுகையாலே அதிகாரிஸ்வரூபம் சொல்லுகிறது - இங்கு. கீழ் - "நீண்மதிளரங்கம்" என்று - ரக்ஷகத்வம் சொல்லிற்று. "கடியார் பொழிலரங்கம்" என்று - போக்யதை

---

❡ திருவாய் 3-7-4. § திருவாசி-1.

3. மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றானரங்கத்தரவினணையான்
அந்திபோல்நிறத்தாடையு மதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே.

பதவுரை:—மந்தி—ஆண் குரங்குகளானவை, பாய்—(ஒருகிளையில் நின்றும் மற்றொரு கிளையில்) பாயப்பெற்ற, வடவேங்கடம் மாமலை—வடதிசையிலுள்ள திருவேங்கடமென்னும் திருமலையிலே, வானவர்கள்—நித்யஸூரிகள், சந்தி செய்ய நின்றான்— பூக்களைக் கொண்டு ஆராதிக்கும்படி நிற்பவனாய், அரங்கத்து — கோயிலிலே, அரவு இன் அணையான்—திருவனந்தாழ்வானாகிற இனிய படுக்கையையுடையனான அழகிய மணவாளனுடைய, அந்திபோல் நிறத்து ஆடையும்—செவ்வானம் போன்ற நிறத்தையுடைய திருப் பீதாம்பரமும், அதன் மேல்— அப் பீதாம்பரத்தின் மேலே, அயனை படைத்தது ஓர் எழில் உந்தி மேலது அன்றோ—பிரமனைப்படைத்த ஒப்பற்ற அழகையுடைய திருநாபீகமலமும் ஆகிய இவற்றின் மேற்படிந்ததன்றோ அடியேன் உள்ளத்து இன் உயிர்—என்னுடைய உட்புறத்திலிருக்கும் நல்ல மனம்.

---

இத்தால்—திருவுலகளந்தருளினத்தையும் ராமாவதாரத்தையும் பெரிய பெருமாள் பக்கலிலே ஓரோவகைகளாலே காண்கிறார்.

---

சொல்லுகிறது - இங்கு. ஆகவிப்பாட்டால் - முதற்பாட்டிலே, "நிமலன் நின்மலன்" என்று - அபேக்ஷாநிரபேக்ஷமாக உபகரிக்கும் ஸ்வாத்தியையுடையவனென்றதாய்த்துச் சொன்னவர்த்தங் கூடுமோவென்ன; கூடுமென்னு மிடத்திற்கு உதாஹரணஞ் சொன்னாராய் நின்றது.

---

அரு.—இரண்டாம்பாட்டு, (உவந்தவித்யாதி), (தானறிந்துசேரில்) திருவரையில் போக்யதையையறிந்து கிட்டிலென்றபடி. (விஷயத்தின் போக்யதை) திருவடிகளில் போக்யதை உகப்பு—ஆழ்வார் விஷயமாதல். லோகவிஷயமாதல். உகக்க அறியாவிட்டால் வைப்பானென்னென்ன அருளிச்செய்கிறார்(குணுகுணேத்யாதி). (அடைகட்ட)தமரிட.அளப்பதற்கு முன்பு நீண்முடியில்லையோவென்ன அருளிச்செய்கிறார்—(ரக்ஷ்யவர்க்கத்தையித்யாதி). (விஷயீகரிக்கை) வீபீஷணாழ்வானை.

அவ:-மூன்றாம்பாட்டு திருப்பீதாம்பரத்தினழகு திருநாபீகமலத்திலே வீசிற்று.

வ்யா.—(மந்திபாய்) *((திருமலையில் பலாக்கள் வேரே பிடித்துத் தலையளவும் பழுத்துக்கிடக்கையாலே அங்குத்தைக் குரங்குகள் ஜாத்யுசித

---

அவ:-மூன்றாம்பாட்டு. (மந்திபாய்) திருப்பீதாம்பரத்தினழகின் மிகுதி திருநாபீகமலத்திலே வீசிற்று. முதற்பாட்டிலே "ஆதிபிரான்" என்று — ஜகத்காரணபூதனாய் ஸர்வஸ்மாத்பரனாயிருக்குமென்று சொல்லக்கேட்டவர்கள், 53 "ब्रह्मविष्णुशिवात्मिकां" (ப்ரஹ்மவிஷ்ணு ஶிவாத்மிகாம்) என்று மூவர் ஜகத்காரணநா(பூ)தரென்று ப்ரஸித்தமாயிருக்க இவனே ஜகத்காரணபூதனென்றறியும்படியென்னென்ன; ஶாஸ்த்ரமுகத்தாலே நம்முடைய காரணத்வத்தை ப்ரகாஶிப்பிப்புதோமாகில் அது கர்மாதீநமான ருச்யநுகூலமாக கமுகின் நிரைபோலே அயதாவாக ப்ரகாஶிக்குமென்று பார்த்தருளி 54 "त्रयो देवास्तुल्यास्त्रितयमिदमद्वैतमधिकं त्रिकादस्मात्तत्त्वं परमिति वितर्कान् विघटयन्। विभोर्नाभीपद्मो विधिशिवनिदानं भगवतो तदन्यद्भ्रूभङ्गी परवदिति सिद्धान्तयति नः॥" (த்ரயோ தேவாஸ்துல்யாஸ்த்ரிதயமிதமத்வைதமதிகம் த்ரிகாதஸ்மாத் தத்வம் பரமிதி விதர்க்காந் விகடயந்। விபோர்நாபீபத்மோ விதிஶிவநிதாநம் பகவதஸ்ததந்யத் ப்ரூபங்கீபரவதிதி ஸித்தாந்யதி ந:॥) என்றும், §"முதலாந் திருவுருவம் மூன்றென்பரொன்றே, முதலாகு மூன்றுக்கு மென்பர், முதல்வா, நிகரிலகுகாருருவா நின்னகத்ததன்றே, புகரிலகுதாமரையின் பூ" என்றும் சொல்லுகிறபடியே-தன் திருநாபீகமலத்திலே ஜகத்காரணபூதராக ப்ரஸித்தரான ப்ரஹ்மருத்ரர்களை ஸ்ருஷ்டித்துக்காட்ட, அந்த நாபீகமலம் அம்முகத்தாலே தன்னுடைய மேன்மையையும் அழகையுங்காட்டி, திருப்பீதாம்பரத்திலே துவக்குண்கிறவென்னுடைய மநஸ்ஸைத் தன்பக்கலிலே இழுத்துக் கொள்ளாநின்றதென்கிறார். அநுபாவ்யத்தை எல்லைகண்டு மீளுதல் தம்முடைய ஆதரம்மட்டமாய் மீளுதல் செய்கிறாரல்லரே; தம்முடைய சாபலமடியாக இழுப்புண்கிறாரித்தனையிறே.

வ்யா:— (மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள் சந்தி செய்யநின்றா னரங்கத்தரவினணையான்) கீழ்ப்பாட்டிலே-"உலக

---

‡ குண்டலிதம் அதிகமாகவும் மாறுபட்டுமிருக்கிறது. §பெரியதிருவ

சாபலத்தாலே ஒருபழத்தை புஜிக்கப்புக மற்றைமேலில்பழத்திலே கண்ணை யோட்டி இத்தைவிட்டு அதிலே பாய்ந்து தாவாநிற்கு மத்தனையாய்த்து.) பெரியபெருமாளுடைய திவ்யாவயவங்களிலே தாம் ஆழங்கால் படுகிறப் போலேயாய்த்து அவைகளும். *கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடமிறே. (மந்திபாய்) ஒன்றையொன்று பற்றி மாலையாக நாலாநிற்கும். திருச்சின்னக்குரல் கேட்டவாறே பாய்ந்தோடாநிற்கு மென்றுமாம். பரமபதமும் திருமலையும் கோயிலும் திருவயோத்யையும் திருச்சோலையும் ஒரு போகியாயிருக்கிறபடி. எங்கும் மாறி மாறித் தங்குகை. (மந்திபாய்) பலாக்கள் வேரோடு பணையோடு வாசியறப்பழுத்துக் கிடக்கையாலே ஒன்றிலே வாய்வைக்கப் பெறாதேதான் வேண்டினபடியே திரியும்படியாய்த்து.

---

மளந்தண்டமுற நிவர்ந்த நீண்முடியன் - கடியார் பொழிலரங்கத் தம்மான்" என்று - இந்தலோகங்களை யடையத்தன் திருவடிகளாலே யளந்துகொண்டார் பெரியபெருமா ளென்றீரே; அங்ஙனே சொல்லலாமோ? §"அன்று ஞாலமளந்தபிரான் சென்றுசேர் திருவேங்கடம்" என்றன்றோ நம்மாழ்வார் வார்த்தை; திருவேங்கடமுடையான் திருவடிகளைக்காண வேணுமென்று *வழிபாடு செய்த ஸூரிகளும் ||"எந்நாளோ நாம் மண்ணளந்த விணைத்தாமரைகள் காண்பதற்கு" என்றன்றோ ப்ரார்த்தித்தது; ஆகையாலே இந்த பூமியையடையத் திருவடிகளாலே ஆக்ரமித்து, †"அடிக்கீழமர்ந்து புகுந்தடியீர்வாழ்மின்" என்று - தன் திருக்கையாலே, *உலகமளந்த பொன்னடியைக் காட்டிக்கொடு நிற்கிறவனுமாய், ‡"தானோங்கி நிற்கின்றான் தண்ணருவி வேங்கடம்" என்கிறபடியே *அண்டமுற நிவர்ந்த நீண்முடியனுமாய் நிற்கின்றான் திருவேங்கட முடையா னன்றோவென்ன; அந்தத் திருவேங்கடமுடையானாகிறானும் இங்குக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளே என்கிறார்.

(மந்திபாய் வடவேங்கட மாமலை) திருப்பீதாம்பரத்தினழகை யநுபவிக்கச்செய்தே, திருநாபீகமலத்தினழகிலே தாமிழுப்புண்ட சாபலத்துக்குப் போலியா யிருக்கையாலே குரங்குகளை நிதர்ஶநமாகச் சொல்லுகிறார்.

---

§ திருவாய் 3-3. || திருவாய் 4-10. † திருவாய் 4-10-11. ‡ நான்-திருவ.

(வடவேங்கடம்) தமிழ்தேசத்துக்கு எல்லைநிலம். போக்யதை அளவற்றிருக்கை. உபயவிபூதியும் ஒருமூலையிலே அடங்குமென்றுமாம்.

(வானவர்கள் சந்திசெய்ய நின்றான்) எத்தனையேனும் தண்ணியார்க்கும் முகங்கொடுத்து நிற்கிற இந்நீர்மையை யநுஸந்தித்து, நித்யஸூரிகள் வந்து

---

(மந்திபாய்) திருமலையிலே பலாக்கள் வேரே பிடித்துத் தலையளவும் பழுத்துக்கிடக்கையாலே அங்குத்தைக் குரங்குகள் ஜாத்யுசிதசாபலத்தாலே ஒருபழத்தை புஜிக்கப்புகுகிறவை மற்றைக்கொம்பிற் பழத்திலே கண்ணையோட்ட, இத்தைவிட்டு அதிலே தாவப்பாய்ந்து திரியாநிற்குமாய்த்து; பெரியபெருமாளுடைய திவ்யாவயவங்களிலே தாம் ஆழங்காற்படுகிறாப்போலே. * கானமும் வானரமும் வேடுமுடை வேங்கடமிறே. (மந்திபாய்) ஒன்றையொன்று பற்றி மாலையாக நாலாநிற்கும். திருச்சின்னக்கால் கேட்டவாறே பாய்ந்தோடாநிற்கு மென்றுமாம். பரமபதமும் திருமலையும் கோயிலும் திருவயோத்யையும் திருச்சோலையும் ஒரு போகியாயிருக்கிறபடி; எங்கும் மாறிமாறித் தங்குகை.

(வடவேங்கடம்) திருமலை என்னுதே "வடவேங்கடம்" என்கிறது-தமிழர், தமிழுக்கெல்லைநிலம் அதுவாகச் சொல்லுகையாலே. வேதஶப்தோபப்ருஹ்மண ஶப்தங்களாலன்றிக்கே தம்முடைய ஜந்மாநுரூபமாகத்தாம் கவிபாடுகிறஶப்தம் நடையாடுகைக்கு எல்லை அதுவாகையாலே சொல்லுகிறார். (மாமலை) போக்யதையின் மிகுதியைச் சொல்லுகிறதாதல்; † "பரன் சென்று சேர்" என்றும், ‡ "முன்னமடைமினோ" என்றுஞ் சொல்லுகிறபடியே ஶேஷியானவன் தன்னுடைய ரக்ஷகத்வ ஸித்திக்காகவும் ஶேஷபூதரானவர்கள் தங்கள் ஸ்வரூபஸித்திக்காகவும் வந்து சேருகையால் வந்த ச்லாக்யதையைச் சொல்லுகிறதாதல். ஸூரிகள் பரமபதத்தினின்றும் திருவேங்கடமுடையானை அநுபவிக்கவரும்போது தன்ஶிகரத்தில் இளைப்பாறிவரலாம்படியிருக்கிற உயர்த்தியைச் சொல்லுகிறதாதல்; அன்றிக்கே, உபயவிபூதியும் ஒருமூலையிலே அடங்குமென்றுமாம்.

(வானவர்கள் சந்திசெய்ய) நித்யஸூரிகள் * சிந்துபூக்கொண்டு போகரூபமான ஸமாராதநத்தைப்பண்ண, அவன் பரமபதத்தினின்

---

† திருவாய் 3-3-8. ‡ திருவாய் 3-3-10.

படுகாடுகிடப்பது இங்கேயாய்த்து. மேன்மையை அநுபவிக்குமத்தனையிறே அங்கு; சீலாநுபவம் பண்ணலாவது—இங்கேயிறே.

நித்யஸூரிகள் திருமலையிலே நிற்கிற சீலவத்தையிலே ஈடுபட்டு வந்து ஆச்ரயிக்க, குருடர்க்கு வைத்த அறச்சாலையிலே விழிக்கண்ணர்

றும் தன்னீர்மை ப்ரகாசிக்கைக்காக ஆதியான தான் திருமலையிலே வந்தவாறே, *விண்ணவர்கோனான தன்னுடைய மேன்மையை அநுபவித்துக்கொண்டு போந்த ஸூரிகள், *விரையார் பொழில் வேங்கடவனான நீர்மையை அநுபவிக்கைக்காகத் திருமலையிலே வருவர்கள்; அந்நீர்மைக்கடியான மேன்மையை அநுபவிக்கைக்காகத் திருமலையினின்றும் பரமபதத்தேறப்போவர்கள். (நின்றான்) இந்நிலையாலே ஒருத்யோகமுண்டென்று தோற்றும்படி நின்றான். பெருமாள், ருச்யமூகபர்வதத்திலே மஹாராஜர் தொடக்கமான வாநரஸேனைக்கும் இளையபெருமாளுக்கும் ஒக்க முகங்கொடுத்துக்கொண்டு நின்றாப்போலேயாய்த்து - திருவேங்கடமுடையானும், குரங்குகளோடு ஸூரிகளோடு வாசியற அநுபவிக்கும்படி முகங்கொடுத்துக்கொண்டு நிற்கிறநிலையும். 55 "वानराणां नराणाञ्च कथमासीत्समागमः" (வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம:) என்று-திருவடியைப் பிராட்டி, இங்கிதாகாரங்களறியாதே, குரங்குகளுக்கும் விலக்ஷணரான மநுஷ்யர்களுக்கும் கூட்டரவுண்டானபடி எங்ஙனே? 55"कथमासीत्समागमः" (கதமாஸீத் ஸமாகம:) தன் கடாக்ஷபாதமும் ஆபரணபாதமுமுண்டென்றறியாதே நான்சேரவிட, பின்பு ‡"தோழன்நீ" என்ன ப்ராப்தமாயிருக்க, நான்பிரிந்து இங்கேயிருக்கக் கூட்டரவுண்டானபடியென்னென்றுகேட்க; 56 "रामसुग्रीवयोरैक्यं देव्येवं समजायत" (ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத) என்று அவர்கள் சேர்ந்த ப்ரகாரமறிந்திலேன், 57 "अहं सर्वं करिष्यामि" (அஹம் ஸர்வம் கரிஷ்யாமி) என்கிற இளையபெருமாளும் அருகேநிற்க அவர்பரிகரமான நான் இன்றுவந்து அந்த:புர பரிகரமாம்படி கூடினார்கள் என்றானிறே.

(நின்றான்) நித்யஸூரிகள் திருமலையிலே நிற்கிற சீலவத்தையிலே ஈடுபட்டுவந்தாச்ரயிக்க, குருடர்க்குவைத்த அறச்சாலையிலே மிளிர்

‡ பெரியதிரு 5-8-1.

புகுரலாமோவென்று, தான் ‡ ஆனைக்குப்பாடுவாரைப்போலே மந்திகள் பக்கலிலே திருவுள்ளத்தை வைத்தானென்றுமாம்.

(அரங்கத்தரவினணையான்) அங்குநின்றும் இங்கேசாய்ந்தபடி. பரம பதத்தினின்றும் அடியொற்றினான்; திருமலையளவும் பயண முண்டாயிருந் தது; அங்கு நின்றும் வடக்குத் திருவாசலாலே கோயிலிலே சாய்ந்தான்.

---

கண்ணார் புகுரலாமோவென்று, தான் ‡ ஆனைக்குப்பாடுவாரைப் போலே மந்திகள் பக்கலிலே திருவுள்ளத்தை வைத்தானென்றுமாம். /"மங்குல்தோய் சென்னிவட வேங்கடத்தானைக் கங்குல் புகுந்தார்கள் காப்பணிவான், திங்கள், சடையேறவைத்தானும் தாமரை மேலானும், குடையேறத் தாங்குவித்துக் கொண்டு" என்கிறபடியே-ப்ரஹ்ம ருத்ராதிகள் ஸந்த்யாகாலங்களிலே வந்து ஸமாராதநம் பண்ணப் பெரியமேன்மையோடே நின்ற நிலையைச்சொல்லுகிற தாகவுமாம். (நின்றான்) இந்நிலையிலே ஒருத்யோகமுண்டென்று தோற்றும்படிநின்றான். ஸூரிகள் அந்த உத்யோகத்தை அடியொற்றினவாறே, வடக்குத்திருவாசலாலே வந்துபுகுந்து, கோயிலிலே படுக்கையிலே சாய்ந்தவனாயிருந்தான்; இவன் கிடக்கிறபடியைக் கண்டு, ||"நடந்தகால்கள் நொந்தவோ" என்றுவயிறுபிடிக்கவேண்டாதபடி, †"நின்றிருந்துவெஃகணைக் கிடந்ததென்ன நீர்மை" என்கிறதிலே போரப்ரீதராய், இனி ஸம்ஸாரக்கிழங்கெடுத்தாலல்லது கிளம்பானென்று மீண்டுபோனார்கள். 58 "आस्तान्ते गुणराशिवद्गुणपरिवाहात्मनां जन्मनाम् सङ्ख्या भौमनिकेतनेष्वपि कुटीकुञ्जेषु रङ्गेश्वर। अर्च्यः सर्वसहिष्णुरर्चकपराधीनाखिलात्मस्थितिः प्रीणीषे हृदयालुभिस्तव ततः शीलाज्जडीभूयते॥ (ஆஸ்தாந்தே குணராஶிவத் குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம் ஸங்க்யா பௌமநிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு ரங்கேச்வர। அர்ச்ய: ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சகபராதீநாகிலாத்மஸ்திதி: ப்ரீணீஷே ஹ்ருதயாளுபிஸ்தவ தத: ஶீலாஜ்ஜடீபூயதே ||)

(அரவினணையான்)புஷ்பஹாஸஸுகுமாரமான அவ்வடிவுக்குப் பொருதபடி, காடுகளிலும் கரைகளிலும் திருவடிகளைக் கொண்டு உலாவின விடாயெல்லாந்தீரும்படி ஸௌத்யமார்த்தவ ஸௌரப்யங்

---

‡ சதுரங்கமாடுவார். / நான்-திருவ-43. || திருச்சந்த-61. † திருச்-63.

ராமாவதாரத்தேபிடித்து அடியொற்றினுன்; ராவணவதம்பண்ணித் தெற்குத் திருவாசலாலே வந்து சாய்ந்தவித்தனையா யிருந்ததென்றுமாம். (அரவினனையான்) திரிகிறவன் சாய்ந்தருளினுல் உள்ளவழகு. (அரவு) நாற்றம், குளிர்த்தி, மென்மையும்.

(அரங்கத்தரவினணையான்) 21 "शेष्ये पुरस्ताच्छालायां" (ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயாம்) ஸ்ரீபரதாழ்வானை வளைப்புக் கிடக்க விட்டுப்போந்து கடற்கரையிலே வளைப்புக் கிடந்தாப்போலே ஸம்ஸாரிகளைப்பெற்றுலல்லது போகேனென்று வளைப்புக்கிடக்கிறுன். சக்ரவர்த்தித் திருமகனைப்போலே முதலில் சரணம்புக்கு முகங்காட்டாவிட்டவாறே, 22"चापमानय" (சாபமாநய) என்று சீறுமவரல்லர்; ஆற்ருமையைக்காட்டிச் சரணம்புக்குக் கிடக்குமவரிறே இவர். (அந்திபோல் நிறத்தாடையும்) ஸந்த்யாராகம்போலே யிருந்துள்ள திருப்பீதாம்பரமும். "அரைச்சிவந்த வாடை" என்றது பின்ருட்டுகிறபடி.

---

களையுடைய திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளினுன். "அரங்கத்தரவினணையான்" என்று சீலத்தையும் மேன்மையையும் அழகையும் அநுபவிக்கிறுர்.

(அரங்கத்தரவினணையான்). 59 "शेष्ये पुरस्ताच्छालायां यावन्मे न प्रसीदति" (ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயாம் யாவந்மே ந ப்ரஸீததி) என்று — ஸ்ரீபரதாழ்வானை வளைப்புக் கிடக்கவிட்டுப்போந்து கடற்கரையிலே வளைப்புக் கிடந்தாப்போலே, ஸம்ஸாரிகளைப்பெற்றுலல்லது போகேனென்று வளைப்புக்கிடக்கிறுன். சக்ரவர்த்தித் திருமகனைப்போலே முதலில் சரணம்புக்கு முகங்காட்டா விட்டவாறே, 60 "चापमानय" (சாபமாநய) என்று சீறுமவரல்லர்; ஆற்ருமையைக் காட்டி சரணம்புக்குக் கிடக்குமவர் இவர்.

(அந்திபோல் நிறத்தாடையும்) கீழ்ச்சொன்ன சிவந்தவாடை ஆபரணகோடியிலேயாய் கழற்றவுமாயிருக்கும்; இது ஸஹஜமென்கைக் குடலாக, "அந்திபோல் நிறத்தாடையும்" என்கிறுர். ஸந்த்யாராக ரஞ்ஜிதமான மேகம் போலேயாய்த்துத் திருவரையும் திருப்பீதாம்பரமுமிருக்கிறபடி. திருமேனி மயில் கழுத்துச் சாயலாயிறே யிருப்பது. அத்தோடு சேர்ந்த திருப்பீதாம்பரம் ஸந்த்யாராக ரஞ்

(அதன்மேல்) இவ்வழகினின்றும் கால்வாங்கமாட்டுகிறிலர். (அயனித்யாதி) சதுர்த்தசபுவந ஸ்ரஷ்டாவான ப்ரஹ்மாவுக்கு உத்பத்தி ஸ்தாநமான திருநாபீகமலத்தின் மேலதன்றோ. சதுர்முகஸ்ருஷ்டி பூர்வகாலத்திலேயாகிலும் இப்போது ப்ரஹ்மாவுக்கு உத்பத்திஸ்தாநமென்று கோள்சொல்லித்தாராநின்றது. திருநாபீகமலம் (எழிலுந்தி) இளகிப்பதிக்கை 23 "प्रसवान्तञ्च यौवनम्" (ப்ரஸவாந்தஞ்ச யௌவநம்) என்கிறபடியன்றிக்கே யிருக்கை.

(அடியேன்) 24 "पतिं विश्वस्य" (பதிம்விச்வஸ்ய) 25 "यस्यास्मि" (யஸ்யாஸ்மி) என்கிற ப்ரமாணத்தாலே அடியேன் என்கிறாரல்லர்;

---

ஜிதமான காளமேகம்போல ஆகர்ஷகமாயிறே யிருப்பது. *அரைச்சிவந்தவாடை பின்னாட்டுகிறபடி யென்றுமாம்.

(அதன்மேல்) அவ்வழகுக்குமேலே. (அயனையித்யாதி) ஜகத்காரணபூதனாக ப்ரஸித்தனான சதுர்முகனைத் தன்பக்கலிலேயுண்டாக்கி, அதடியாகவந்த மேன்மையாலுண்டான அத்விதீயமான அழகையுடையதாயாய்த்துத் திருநாபீகமலமிருப்பது. லோகத்தில் உத்பாதகருடைய அழகு ப்ரஸவாந்தமாயிருக்கும்; இவனை யுண்டாக்கினபின்பு ஒளியுமழகும் மிக்கதித்தனை 61 "यो ब्रह्माणं विदधाति-तं ह देवं" (யோ ப்ரஹ்மாணம் விததாதி-தம் ஹதேவம்) என்கிறபடியே - இவனை ஸ்ருஷ்டித்தபின்பிறே த்யோதமாநனாயிற்று.

(ஒரெழிலுந்தி) 62 "सौन्दर्याख्या सरिदुरसि विस्तीर्य मध्यावरुद्धा स्थानाल्पत्वाद्विषमगतिजावर्तगर्ताभनाभिः। प्राप्य प्राप्तप्रथिमजघनं विस्तृता हस्तिनाथ स्रोतोभेदं भजति भवतः पाददेशापदेशात्॥ (ஸௌந்தர்யாக்யா ஸரிதுரஸி விஸ்தீர்ய மத்யாவருத்தா ஸ்தாநால்பத்வாத் விஷமகதிஜாவர்த்தகர்த்தாபநாபி:। ப்ராப்ய ப்ராப்த ப்ரதிமஜகநம் விஸ்த்ருதா ஹஸ்திநாத ஸ்ரோதோபேதம் பஜதிபவத: பாததேசாப தேசாத்) என்கிறபடியே, ஸௌந்தர்யமாகிற பெரியவாறானது, திருமுடியாகிற மலைத்தலையினின்றும் அகன்ற திருமார்பாகிற தாழ்வரையிலே வந்து குதிகொண்டு, அங்கே பரந்து கீழ்நோக்கி யிழிந்து, *சிற்றிடையாகையாலே அங்கேயிட்டளப்பட்டு, பின்பு திருநாபியாய்ச் சுழியாறுபட்ட தென்னக்கடவதிறே.

அழகுக்கு ‡த்தோற்று "அடியேன்" என்கிறார். (அடியேனுள்ளத்தின்னுயிரே) என்னுடைய நற்சீவனானது திருநாபீசமலத்ததன்றோவென்கிறார்.

விடாமைக்குப்பற்றாசு; §"மருடியேலும் விடேல்கண்டாய்" என்னுமாபோலே. இப்பாட்டில் பெரியபெருமாள் பக்கலிலே திருவேங்கடமுடையான் தன்மையுமுண்டென்கிறது.

---

(அடியேனுள்ளத்தின்னுயிரே) அடியேனானவென்னுடைய அகவாயில் வர்த்திக்கிற ஹ்ருதயமானது. (உந்திமேலதன்றோ) §"அடியேன்" என்று-இப்போது இவர் ஸ்வரூபஜ்ஞானம் பிறந்து, 63"**पतिं विश्वस्य**" (பதிம்விச்வஸ்ய) 64"**यस्यास्मि**"(யஸ்யாஸ்மி) 65'**परवानस्मि**" (பரவாநஸ்மி) 66 "**दासभूताः स्वतः सर्वे ह्यात्मानः परमात्मनः**" (தாஸபூதாஸ் ஸ்வதஸ்ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:) என்கிற ப்ரமாணங்களாலே "அடியேன்" என்கிறாரல்லர்; 67 "**गुणैर्दास्यमुपागत**" (குணைர்த்தாஸ்ய முபாகத) ராய்ச்சொல்லுகிறாருமன்று; அழகுக்குத்தோற்று, "அடியேன்" என்கிறார். அதிலும் வடிவழகின் ஸாமாந்யத்தைப் பற்றச்சொல்லுகிற வார்த்தையுமன்று; ஓரவயவத்தினழகுக்குத்தோற்றுச் சொல்லுகிற வார்த்தை. "உயிர்" என்கிறது மநஸ்ஸை. ||"ஊனில்வாழுயிர்" என்று கொண்டாடினாப்போலே, வடிவழகு தமக்கு ரஸித்து போக்யமாம்படி இருக்கையாலே "இன்னுயிர்" என்கிறது. சிலரை உண்டாக்குகிறது கிடீர் என்னையழிக்கிறது.

அந்தத்திருநாபீகமலம் அதிகாரி புருஷர்களான ப்ரஹ்மாதிகளை யுண்டாக்கும்; "அடியேன்" என்றிருப்பாரை யழிக்கும். பிள்ளையழகிய மணவாளரரையர், பெருமாள் திருவடிகளிலே புக்கு, "நாயன்றே! அடியேன் திருவேங்கட முடையானைத் திருவடித்தொழுது வரவேணுமென்று நினையாநிற்கிறேன்" என்று விண்ணப்பஞ்செய்ய; "வாரீர்! அமலனாதிபிரானை யொருகால் இசைசொல்லிக்காணீர்" என்று திருவுள்ளமாக; பிள்ளையும் ஒருகால் இசையை விண்ணப்பப்செய்யக் கேட்டருளி, "இனிப்போகிலும் போம், இருக்கிலுமிரும் என்று திருவுள்ளமாயினார். முதலில் கண்படுவது திருநாபீகமலமிறே.

இப்பாட்டில் - பெரியபெருமாள் பக்கலிலே திருவேங்கட முடையானை தன்மையுமுண்டென்கிறது.

---

‡ (பா)ப்புல்கவ்வி. § திருவாய் 2-7-10. || திருவாய் 2-3-1.

4. சதுரமாமதிள் சூழிலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி ஓர்வெங்கணையுய்த்தவனோத வண்ணன்
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் திருவயிற்
றுதர பந்தமென்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே.

பதவுரை:— சதுரம்—நாற்சதுரமாய், மா — உயர்ந்திருக்கிற, மதிள் சூழ்—மதிள்களாலே சூழப்பட்ட, இலங்கைக்கு—லங்கா நகரத்திற்கு, இறைவன்— அரசனான இராவணனை, ஓட்டி—(முதல் நாள் யுத்தத்தில் தோற்று) ஓடும்படி செய்து, தலை பத்து—(அவனது) தலை பத்தும், உதிர—(பனங்காய்போல்) உதிரும்படி, ஓர்—ஒப்பற்ற, வெம் கணை—கூர்மையான ப்ரஹ்மாஸ்திரத்தை, உய்த்தவன்— எய்தவனும், ஓதம் வண்ணன்—கடல்போன்ற (குளிர்ந்த) வடிவை யுடையவனும், வண்டு—வண்டுகளானவை, மதுரமா—இனிதாக, பாட—இசைபாட (அதற்குத் தகுதியாக) மா மயில் ஆடு — சிறந்த மயில்கள் கூத்தாடப்பெற்ற, அரங்கத்து அம்மான்—திருவரங்கத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்வாமியுமான ஸ்ரீரங்கநாதனுடைய, திருவயிறு உதரபந்தம்—திருவயிற்றில் அணிந்திருக்கும் 'உதரபந்த' மென்னும் திருவாபரணமானது, உள்ளத்துள் நின்று—என் நெஞ்சினுள் நிலைத்து நின்று, உலாகின்றது—உலாவுகின்றது.

---

அவ:—நான்காம்பாட்டு. திருநாபீகமலத்தோடே சேர்ந்த திருவுதர பந்தநத்தை அநுபவிக்கிறார்.

---

அவ:—நான்காம்பாட்டு. திருநாபீகமலத்தோடே சேர்ந்த திருவுதரபந்தநத்தை அநுபவிக்கிறார். முதற்பாட்டிலே - ஜகத்காரண பூதனானவன், தம்முடைய அபேக்ஷாநிரபேக்ஷமாகத் தம்மை விஷயீகரித்து, தம்முடைய திருவுள்ளத்திலே திருவடிகள் தானேவந்து ப்ரகாசித்தபடியைச் சொன்னாராய், நிரபேக்ஷமாகச் செய்யக்கூடுமோ

---

அரு.—மூன்றாம்பாட்டு. (மந்திபாயித்யாதி) தாத்பர்யமருளிச்செய்கிறார் (பரமபதமுமித்யாதி) (சந்திசெய்ய) கிட்டும்படி நின்றானென்னுதல், ஆச்ரயியாதிற்கப் பராக்காய் நின்றானென்னுதல். முதற்பாட்டைக் கடாக்ஷித்துப்பரமபதத்தில் நின்றும் அடியொற்றுதல் இரண்டாம்பாட்டைக் கடாக்ஷித்து ராமாவதாரத்திலே அடியொற்றுதல். உந்தியைப்பற்றாகப் பற்றினவிடமுண்டோவென்ன அருளிச்செய்கிறார் (மந்தியேலுமித்யாதி).

வென்கிற அபேக்ஷையிலே ஸோதாஹரணமாகச் சொல்லா நின்று கொண்டு, தந்திருவுள்ளம் திருவரையும் திருப்பீதாம்பரமுமான சேர்த்தியிலே மேல்விழுந்து நசைபண்ணுகிறபடியைச் சொன்னர்- இரண்டாம்பாட்டில்.

அவ்விரண்டாம்பாட்டிற் சொன்ன த்ரைவிக்ரமாபதாநம் ப்ரமாணோபபத்திகளாலே திருவேங்கடமுடையானுக்கே சேருமதன்றோ வென்கிற அபேக்ஷையிலே திருமலையில் நின்றும் திருவுலகளந்தருளினரும் பெரியபெருமாளேயென்று கொண்டு, முதற்பாட்டில் "ஆதி" என்றுசொன்ன அவனுடைய காரணத்வத்தைத் திருநாபீகமலத்திலே ப்ரஹ்மாவையுண்டாக்கி, அபமுகத்தாலே வெளியிடா நின்று கொண்டு, அந்தத் திருநாபீகமலந்தான் திருப்பீதாம்பரத்திலே துவக்குண்கிற தந்திருவுள்ளத்தை ப்ரஹ்மோத்பாதகமான தன்மையையும் அழகையுங்காட்டித் தன்பக்கலிலே இழுத்துக்கொள்ள, அதிலே சுழியாறுபடுகிற படிடையிறே மூன்றாம்பாட்டிற் சொல்லி நின்றது; தந்திருவுள்ளம் திருநாபீகமலத்திலே சுழியாறு படுகிறபடியைக் கண்டு, திருநாபீகமலத்துக்கு ஆச்ரயமான திருவயிறும்-"இந்தத் திருநாபீகமலத்துக்கு வெறும் ப்ரஹ்மா ஒருவனுக்கிருப்பிடமான மேன்மையும் அழகுமன்றோ உள்ளது; இதுக்கு ஆச்ரயமான நம்மைப்பார்த்தால், 68 "त्रिविधचिदचिद्बृन्दं तुन्दावलम्बिवलित्रयं गणयति तवैश्वर्यं व्याख्याति रङ्गमहेशितुः। प्रणतवशतां ब्रूते दामोदरत्वकरः किणः तदुभयगुणाविष्टं पट्टं किलोदरबन्धनम्॥ (த்ரிவிதசிதசித்ப்ருந்தம் துந்தாவலம்பிவலித்ரயம் கணயதி தவைச்வர்யம் வ்யாக்யாதி ரங்கமஹேஶிது: । ப்ரணதவஶதாம் ப்ரூதே தாமோதரத்வகர: கிணஸ்ததுபய குணாவிஷ்டம் பட்டம் கிலோதரபந்தநம்) எனகிறபடியே பத்தமுக்த நித்யரூபமான த்ரிவிதசேதநர்க்கும், த்ரிகுணாத்மகமாயும் ஶுத்த ஸத்வாத்மகமாயும், ஸத்வஶூந்யமாயுமுள்ள அசேதநவர்க்கத்துக்கும் ஆச்ரயமான மேன்மையும், ஆச்ரிதர்க்குக்கட்டவு மடிக்கவுமாம்படி எளியோமான ஸௌலப்ய நீர்மையையு முடையோமான ஏற்றத்தாலே பட்டங்கட்டியன்றோ நாமிருப்பது"-என்று,தனக்குத் திருநாபீகமலத்திலுண்டான ஏற்றத்தைக்காட்டி, திருநாபீகமலத்திலே ஆழங்கால்படுகிற என்னெஞ்சைத் தன்பக்கலிலேவர இசிக்க, அத்திரு

வ்யா:—(சதுரமாமதிளித்யாதி) கட்டளைப்பட்டிருக்கை. (மாமதிள்) துர்க்கத்ரயம். "ஈச்வரன்" என்றறியச்செய்தே எதிர்க்கப்பண்ணின மதிள்.

---

வயிற்றை ஆச்ரயமாகப்பற்றி நிற்கிற திருவுதரபந்தநம் தன்பக்கலிலே வர ஈர்த்து மேலிட்டுநின்று தந்திருவுள்ளத்திலே ஸ்வைரஸஞ்சாரம் பண்ணுகிறபடியைச் சொல்லுகிறார்.

வ்யா:—(சதுரமாமதிள்சூழிலங்கைக் கிறைவன் தலைபத்துதிர வோட்டியோர் வெங்கணையுய்த்தவன்) இரண்டாம்பாட்டில் உக்தமான அபதாநங்களிரண்டில் பூர்வாபதாநத்தைப்பற்ற ஓரபேக்ஷையோடே அதுக்கு உத்தரம் சொல்லிற்றாய்நின்றது மூன்றாம்பாட்டில் முற்கூறு; அதிலே அநந்தராபதாநத்தைப்பற்ற ஓரபேக்ஷையோடே அதுக்கு உத்தரமாயிருக்கிறது இதில் முற்கூறு. "அன்று நேர்ந்த நிசாசரரைக்கவர்ந்த வெங்கணைக்காகுத்தன்" என்று ஜநஸ்தாநத்திலே பெருமாளும் பிராட்டியும் இளையபெருமாளுமாய்ப் போய்ப் புக்கு, அங்குத்தை ரிஷிகளை 69"आवासं त्वहमिच्छामि" (ஆவாஸந்த்வஹமிச்சாமி) என்றபேக்ஷித்து, அவர்களநுமதியோடேயிருக்கிற காலத்திலே அவ்விருப்புக்கு விரோதிகளாய்வந்த ஜநஸ்தாநவாஸிகளான கராதிகளை நிரஸித்தாப்போலே, உம்முடைய ஹ்ருதயத்திலுமிருப்பேனென்று அநுமதிபெற்றுவந்து புகுந்து, அங்கு விரோதிகளான ராகாதிகளை நிரஸித்தானென்று சொன்னீர்; அந்த ராகாதிகளாகிறன—ஶப்தாதிவிஷய ப்ராவண்யமடியாக வருவதொன்று; அந்தப்ராவண்யந்தனக்கடி-அஹங்கார மமகாரங்களாகிற மதிளையிட்டுக்கொண்டு நவத்வாரமான புரத்திலே வர்த்திக்கிற, 70 "इन्द्रियाणां हि चरतां यन्मनोऽनुविधीयते" (இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோநுவிதீயதே) என்கிறபடியே சக்ஷுராதிகரணங்களோடே கூடின மநஸ்ஸன்றோ; இந்தத் * தீமனங் கெட்டாலன்றோ ராகாதிகள் போவது, அவை போனாலன்றோ அவன் "பேரேன்" என்றிருப்பது; அதுகிடக்கிடீர், அவன்றானேவந்து மேல்விழுந்து கிடக்கச்செய்தே, "சென்றதாமென சிந்தனை" என்றும், "உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிர்" என்றும் உம்முடைய திருவுள்ளந்தானே மேல்விழாநின்றதென்று சொன்னீர். இது இப்படி மேல்விழும்போது அவ்வரணழிந்ததாகவேணும்; அழித்தாராரென்ன; அந்தஜநஸ்தாந

(இலங்கைக்கிறைவன்) முழஞ்சிலே ஸிம்ஹங்கிடந்ததென்னுமாபோலே. 26 "लङ्कां रावणपालितां" (லங்காம் ராவணபாலிதாம்).

---

வாஸிகளான காதிகளுக்குக் குடியிருப்பாய் அரணோடேகூடின லங்கையை, ராவணனை அழிப்பதற்குமுன்னே, 71 "नेयमस्तिपुरी लङ्का" (நேயமஸ்தி புரீ லங்கா) என்கிறபடியே அஸத்கல்பமாக்கி இவர்களுக்கதிஷ்டாத பூதனான ராவணனையும் ஸபரிகரமாக ஓரம்பாலே உருட்டின சக்ரவர்த்திதிருமகனேயிவ்வரணையழித்து * மநோரஜநீசரனை * விவேக ஶரஜாலத்தாலே ஶமிப்பித்தானென்கிறார்.

(சதுரமாமதிள்சூழ்) சதுரச்ரமாய்க்கட்டளைப்பட்டு அரணாகப் போரும்படி ஒக்கத்தையுடைத்தான மதிள்களாலே சூழப்பட்டிருக்கும்; கட்டளைப்பட்டிருக்கையாகிறது- † "வேலைசூழ்வெற்பெடுத்த விஞ்சி சூழிலங்கை" என்கிறபடியே கடலை அகழாகவுடைத்தாய், அநந்தரம் காடாய்ப்பர்வதமாய் அதின்மேலே மதிளாயிறேயிருப்பது.

(மாமதிள்) சந்த்ராதித்யர்களும் பின்னாட்டியே வரும்படியான ஒக்கத்தையுடைத்து. 72 "भीषोदेति" (பீஷோதேதி) என்னும்படியிறே யிருப்பது. ஈச்வரன் நேர்நிற்கவுமெதிரிடப்பண்ணின மதிளிறே. இவ்வழகையுமரணையும் விச்வஸித்திறே பையல் பெருமாளோடே எதிரிட்டது. இது தானிட்ட மதிளென்றறிந்திலன். அரணுக்குள்ளேயிருக்கச்செய்தே பெருமாளோடே எதிர்க்கையாலே இது தான் அழிக்கைக்குடலாய்த்து; அவ்வரணைவிட்டுப்பெருமாள் தோளையே அரணாகப்பற்றின ஸ்ரீவிபீஷணாழ்வான் 73 "खस्थ एव व्यतिष्ठत" (கஸ்த ஏவ வ்யதிஷ்டத) என்று ஆகாசத்திலே நிலைபெற்று நின்றானிறே.

(இலங்கை) குளவிக்கூடுபோலே பிறரை நலிந்துபுக்கு ஒதுங்குமிடம், ஶத்ருக்களுக்கு ப்ரவேசிக்கவொண்ணாதபடி இருக்கும் அரணும் மதிளுமென்கை. 74 "इह सन्तो न वा सन्ति सतो वा नानुवर्तसे। तथाहि विपरीता ते बुद्धिराचारवर्जिता॥ (இஹ ஸந்தோ நவா ஸந்தி ஸதோ வா நாநுவர்த்தஸே।. ததாஹி விபரீதா தே புத்திராசாரவர்ஜிதா)

---

† திருச் 39.

(இலங்கைக் கிறைவன்) ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்டத்தைக் ¹கல விருக்கையாகக் கொண்டு வீற்றிருந்தாப்போலேகாணும் இவனும் இலங்கைக்கு ஈச்வரனென்றிருந்தபடி.

விரக்தனுன திருவடியுங்கூட மதித்தஐச்வர்யமிறே. 27 "यद्यधर्मो न बलवान् स्यादयं राक्षसेश्वरः। स्यादयं सुरलोकस्य शक्रस्यापि च रक्षिता॥ (யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர:। ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஶக்ரஸ்யாபி ச ரக்ஷிதா) என்றுனிறே. யாவனொருவ

---

74 "सतो वा नानुवर्तसे" (ஸதோ வா நாநுவர்த்தஸே) என்னவே, 74 "इह सन्तो न वा सन्ति" (இஹஸந்தோ நவாஸந்தி) என்னுமர்த்தம் சொல்லிற்றாயிற்றேயிருப்பது; ஆனால் இது சொல்லிற்றென்னென்னில்; மனைக்கேடரில்லாமையோ? நீ உனக்கில்லாமையோவென்கை. நல்வார்த்தை சொல்லுவானொருவனுண்டாக, 75 "त्वां तु धिक् कुलपांसनं" (த்வாந்துதிக் குலபாம்ஸநம்) என்று புறப்படவிட்டானிறே. * கல்லாதவரிலங்கையிறே.

திருவடிவர, ராக்ஷஸர் வருவதற்குமுன்னே லங்கையிறே கண்டெதிர்த்தது. ஒரு கைப்பெண்டாட்டிக்கும் அடைத்துக் கொண்டிருக்கலாம்படியிறே ஊருமரணுமிருப்பது. (இலங்கைக் கிறைவன்) "முழஞ்சிலே ஸிம்ஹம் கிடந்தது" என்னுமாபோலே. அதுக்குமேலே 76 "लङ्कां रावणपालिताम्" (லங்காம் ராவணபாலிதாம்) என்கிறபடியே புலிகிடந்த தூறென்று அஞ்சுமாபோலே அஞ்சவேண்டும்படியிறே இதுக்கு நிர்வாஹகனான ராவணன்படி. (இறைவன்) ஸர்வேச்வரன் ஸ்ரீவைகுண்டத்தைக் கலவிருக்கையாகக்கொண்டு வீற்றிருந்தாப்போலே காணும் தானும் லங்கைக்கு ஈச்வரனென்றிருந்தபடி.

விரக்தனுன திருவடியுங்கூட மதித்த ஐச்வர்யமிறே. 77 "यद्यधर्मो न बलवान् स्यादयं राक्षसेश्वरः। स्यादयं सुरलोकस्य शक्रस्यापि च रक्षिता॥ (யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர:। ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஶக்ரஸ்யாபிச ரக்ஷிதா) (இறைவன்) துர்வர்க்கங்களுடைய ஒதுங்க நிழலாயிருக்குமவன். ஒருவன் ஸாத்விகனானல் அவன் பக்கலிலே ஶத்துக்களுடைய ஒதுங்குமிறே; அப்படியிறே எதிர்த்தலையும். யாவனொருவனைக்கொலை செய்ய

---

¹ (பா) பகலிருக்கை.

னுக்காக இவனை அழியச்செய்ய நினைக்கிறார், அவன்றன்னையே இவ்வரனுக்குக் காவலாகவைப்பர்கிடீர் அல்பமநுகூலித்தானாகில்.

(தலைபத்துதிர)பனங்குலை I உதிர்ந்தாப்போலேயுதிர. அறுக்க வறுக்க முளைத்தசடக்கு. (ஓட்டி) அநுகூலிக்குமாகில் அழியச்செய்ய வேண்டாவிறேயென்று பூசலிலே இளைப்பித்து விட்டபடி; 28"गच्छानुजानासि" (கச்சாநுஜாநாமி) என்கிறபடியே.

(ஓர் வெங்கணை யுய்த்தவன்)பிற்றைநாளைப்பூசலிலே ஜயாபஜயங்கள் அவ்யவஸ்திதமன்றோவென்று ப்ரஹ்மாதிகள் கருதினவாறே, அத்தலைகளுக்கு வேர்ப்பற்றான நெஞ்சிலே அத்விதீயமான ப்ரஹ்மாஸ்த்ரத்தை

---

நினைக்கிறார், அவன தன்னையே அவ்வரணுக்குக்காவலாக வைப்பர்கிடீர் அல்பமநுகூலித்தானாகில்; தாயையும் தமப்பனையும் சேரவிருக்கவொட்டாதே பிரித்தபையலிறே இவன். 78 "तेन सीता जनस्थानाद्धृता हत्वा जटायुषम्" (தேந ஸீதா ஜநஸ்தாநாத் ஹ்ருதா ஹத்வா ஜடாயுஷம்) ஹரணத்துக்குப் பரிஹாரமுண்டு, ஹநநத்துக்குப் பரிஹாரமில்லையிறே. இவர் திருவுள்ளமும் பரிஹாரமில்லையென்று புண்பட்டிருக்குமிறேயிது. (தலைபத்துதிரவோட்டி) இப்படி பகவதபசாரபாகவதாபசாராஸஹ்யாபசாரங்களுக்கு எல்லை நிலமான பையலுடைய வரபலத்தாலே பூண் கட்டின தலைகளைப் பனம்பழங்களைக் காற்றுதிர்க்குமாபோலே, முளைக்கிறதலைகள் விழுகிற தலைகளைக் காணும்படி நெடும் போது லீலாரஸமநுபவிக்க, இத்தைக்கண்ட தேவர்கள் "இங்ஙனே முடிய நடத்துமாகிற்செய்வதென்" என்று அஞ்ச, இவனைக்கொல்லவென்றுவைத்த அம்புதன்னை வாங்கி உதிரும்படியாக ஓட்டி. அநுகூலிக்குமவன் ப்ரதிகூலித்தாற் சொல்லவேண்டாவிறே. பூசலிலேயிளைப்பித்துவைத்து ஓடவடித்தபடி; 78* "गच्छानुजानासि" (கச்சாநுஜாநாமி) என்கிறபடியே.

(ஓர்வெங்கணையுய்த்தவன்) அமோகமாயிருக்கையும், நிரஸித்தல்லது மீளாதிருக்கையும். (உய்த்தவன்)ப்ரயோகித்தவன். மற்றைநாளைப் பூசலிலே ஜயாபஜயங்கள் அவ்யவஸ்தித மன்றோவென்று ப்ரஹ்மாதிகள் கருதினவாறே, அத்தலைகளுக்கு வேர்ப்பற்றான

---

I (பா) அரிந்தாப்போலே.

விட்டவன். அவன் ப்ராதிகூல்யத்தில் நிலை நின்றானென்று அறிந்தபின்பு ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட்டபடி.

(ஓதவண்ணன்) ராவணவதம்பண்ணி ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு முடி கொடுத்து க்ருதக்ருத்யனாய் ப்ரஹ்மாதிகள் புஷ்பவ்ருஷ்டியும் ஸ்தோத்ரமும் பண்ண வீரஸ்ரீதோற்ற ச்ரமஹரமான வடிவோடே நின்றநிலை.

(மதுரமாவண்டுபாட) வினையற்றவாறே ஆடல் பாடலுக்கு இடங் கொடுத்தபடி. சிலர்பாடினால் ஆடுவாரும் வேணுமே; மயில்கள் ஆடப் புக்கன. (மாமயில்) ஒரு மயில் தோகைவிரித்தால் அத்திருச்சோலைக்கு அணுக்கனிட்டாப்போலிருக்கை. ருஷிகள் கொண்டைக்கோல் கொண்

---

நெஞ்சிலே அத்விதீயமான ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட்டவன். அவன் ப்ராதிகூல்யத்திலே முதிரநின்றானென்றறிந்த பின்பு ப்ரஹ்மாஸ்த்ரத்தை விட்டபடி.

(ஓதவண்ணன்) ராவணவதாநந்தரம் மஹாராஜப்ரப்ருதிகளுடைய யுத்தச்ரமமடையப்போம்படி ஒருகடற்கரையிலே நின்றாப்போலேயிருக்கை. ராவணனை நிரஸித்தானித்தனைபோக்கி, லங்கையிலொன்றும் குறியழியாமல் லங்கைச்வர்யமடையத் தன்னதாக்கினானிறே; அத்தைவிபீஷணவிதேயமாக்கின ஔதார்யத்துக்கு, உதார ஸ்வபாவமான கடல்போலேயிருந்துள்ள ஸ்வபாவத்தை யுடையவனென்று, "ஓதவண்ணன்" என்கிறாராகவுமாம். அன்றிக்கே, "ஓதவண்ணன்" என்று பெரியபெருமாளைச் சொல்லுகிறதாகவுமாம். இத்தால் ப்ரதிகூலரை அம்பாலேயழிக்கும்; அநுகூலரை அழகாலே அழிக்குமென்கை.

(மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத் தம்மான்) வினையற்றவாறே ஆடல்பாடலுக்கிடங்கொடுத்தபடி. சிலர் பாடப்புக்கால் ஆடுவாரும் வேணுமிறே. மயில்களாடப்புக்கன. (மாமயில்) ஒரு மயில் தோகைவிரித்தால் திருச்சோலைக்கு அணுக்கனிட்டாப்போலேயிருக்கை. § "மாதலிதேர்முன்பு கோல்கொள்ள-தொடுத்ததலைவன் வரவெங்குங் காணேன்" என்று என்னோட்டையாளொருத்தியுடைய விரோதியான ராவணனுடைய தாய்தலையற்றற்று விழும்படி ஸரவர்

---

§ நாச்-திரு 5-3.

டாடுகை தவிர்ந்து மயில்கள் ஆடப்புக்கன. குரங்குகள் கூத்தாட்டாதல், இவற்றின் கூத்தாட்டாதல் என்றும் திர்யக்யோநிகளுக்கு நிலமாகை. (வண்டுபாட மாமயிலாடு) ஸ்ரீவைகுண்டநாதன் பெரிய பெருமாளான வாறே நித்யஸூரிகளும் வண்டுகள் மாமயில்களுமானபடி. 29 "सर्वैः परिवृतो देवैर्वानरत्वमुपागतैः" (ஸர்வை: பரிவ்ருதோ தேவைர் வாநரத்வமுபாகதை:) என்னக்கடவதிறே. ராஜா வெள்ளைச்சட்டையிட்டால் அடியார் கறுப்புச்சட்டை யிடுமித்தனையிறே.

---

ஷத்தையுண்டாக்கின அந்த வீரன் என்னுடைய விரோதியையும் போக்கிக்கொடுவரக்காண்கிறிலேனென்று கண்மறையப் பார்த்துக் கொண்டிருந்தாளிறே ஒருத்தி. அப்படியிருக்கவேண்டாதபடி ||"செருவிலே அரக்கர்கோனைச்செற்றநஞ்சேவகனார் மருவிய பெரிய கோயில்" என்கிறபடியே அந்தச்சேவகனார்தாமே ராவணவதாநந்தரம் அந்த யுத்தச்ரமமாறும்படி தெற்குத் திருவாசலாலே புகுந்து கோயிலிலே சாய்ந்தருளினார்.

கோயிலிற் சோலைகள் நித்யவஸந்தமாய் மதுஸ்பீதமாயிருக்கையாலே, அந்தமதுவைக் கழுத்தேகட்டளையாகப் பாநம்பண்ணி, அந்த ஹர்ஷத்துக்குப் போக்குவீடாக வண்டுகளானவை கலவியால்வரும் அருமையில்லாமையாலே பாட்டை மதுரமாம்படியாக †"தென்னா தெனா" என்று முரலாநிற்க, சிந்துக்காடுவாரைப்போலே, ச்லாக்யமான மயில்களானவை, இவ்வூரிற்சோலை *கொண்டல் மீதணவுஞ் சோலையாகையாலே ஆலித்தாடா நிற்கும்; இவ்வூரில் வர்த்திக்குமவர்களுக்கு ஸாரஸ்யமும் செருக்குமேயாயிருக்குமித்தனை. பராவஸ்தனானபோது நித்யமுக்தரும் தன்னையநுபவித்து, 79 "हा वुहा वुहा वु" (ஹாவுஹாவுஹாவு) என்று களிப்பர்கள். அவதீர்ணனானபோது 80 "गायन्ति केचित्–नृत्यन्ति केचित्" (காயந்திகேசித்-ந்ருத்யந்தி கேசித்) என்றுமுதலிகள் ஆடுவதுபாடுவதாவர்கள். அர்ச்சாரூபியாகக் கோயிலிலே கண்வளர்ந்தருளப்புக்கவாறே, வண்டுகளும் மயில்களும் பாடுவதாடுவதாகாநிற்கும். ராஜா வெள்ளைச் சட்டையிட்டால் அடியார் கறுப்புச்சட்டையிடு மித்தனையிறே.

---

|| திருமாலை 11. † திருவாய் 3-6-1.

5. பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி யென்னுள்புகுந்தான்
கோரமாதவம் செய்தனன் கொலறியேனரங்கத்தம்மான் திரு
ஆரமார்பதன்றோ அடியேனை யாட்கொண்டதே.

(அரங்கத்தம்மான்) பெரியகோயிலிலே கண்வளர்கிற பரமசேஷியுடைய (திருவயிற்றுதரபந்தம்) ஆபரணத்துக்காபரணம். பெற்ற வயிற்றுக்குப் பட்டங்கட்டினபடி. (என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே.) என்னெஞ்சினுள்ளே அழகு செண்டேறு நின்றதே; § நெஞ்சப்நாடிறே; அகல நின்றாலும் பசையில்லை. இப்பாட்டில் தசரதாத்மஜன் படியும் இங்கே உண்டென்கிறார்.

(அரங்கத்தம்மான்.) ஸம்ஸாரிகளுக்காகக் கோயிலிலே சாய்ந்தருளி, தன்னுடைய ஸ்வாமித்வத்தை உதறிப்படுத்தவனுடைய. அங்ஙனன்றிக்கே "அம்மான்" என்று ஸௌலப்யகாஷ்டையால் வந்த மஹத்தையைச் சொல்லுகிறாராகவுமாம். (திருவயிற்றுதரபந்தம்) பண்டே திருவயிறுதான், / "சிற்றிடையும்" என்கிறபடியே வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியாய்த்திருப்பது. அதுக்கு மேலேயிறே * ஆபரணஸ்யாபரணமான திருவுதரபந்தநம். பெற்றவயிற்றுக்குப் பட்டங்கட்டினபடி. (என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே) அந்தத்திருப்பீதாம்பரத்திலும் செல்லவொட்டாதே திருநாபீகமலத்தினின்றும் வரவீர்த்து, இதுக்காச்ரயமான திருவயிற்றிலும் போகவொட்டாதேதான் மேல்விழுந்து ரக்ஷித்துத் தன்னேற்றமடையத் தோற்றும்படி, மத்தகஜம்போலே செருக்காலே பிசகிநின்று உலாவாநின்றது.

81 "**विश्वस्यायतनं महत्**" (விச்வஸ்யாயதநம் மஹத்) என்றும், § "நெஞ்சநாடு" என்றுஞ் சொல்லுகிறபடியே என்னுடையபெரிய ஹ்ருதயத்திலேநின்று அழகுசெண்டேறு நின்றது.

அரு:—நாலாம்பாட்டு. (சதுரமித்யாதி) (கட்டளைப்பாடு) துர்க்கசவரணையோடே கூடியிருக்கை. கிரிதுர்க்க வநதுர்க்க ஜலதுர்க்கம்; ஆக துர்க்கத்ரயம். அவன் மநுஷ்யனானால் இவர்கள் திர்யக்காக வேண்டுவானென்னென்ன அருளிச்செய்கிறார் (ராஜேத்யாதி). (பெற்றவயிறு) அயனைப் படைத்தது. (அகலநின்றாலும்) தாம் அகலநின்றாலும் ப்ரயோஜநமில்லை. அங்கும்வந்து ஸஞ்சரிக்குமென்றபடி.

/ திருவாய் 5-5-8. § திருவாய் 8-6 4.

பதவுரை:—பாரம் ஆய—மிகவும் பொறுக்கமுடியாத சுமையாயிராநின்ற, பழ வினை—அநாதியான பாபங்களின், பற்று அறுத்து—சம்பந்தத்தைத் துலைத்து, என்னை—(பாபத்துக்குக் கொள்கலமான) அடியேனை, தன் வாரம் ஆக்கிவைத்தான்—தன்னிடத்தில் அன்பு உடையவனாகப் பண்ணிவைத்தான் (ரங்கநாதன்); வைத்தது அன்றி—இப்படி செய்துவைத்ததுமல்லாமல், என்னுள் புகுந்தான் — என் ஹ்ருதயத்திலும் நுழைந்து விட்டான்; (இப்படிப்பட்ட பாக்கியத்தைப் பெறுதற்கு உறுப்பாக, நான்) கோரம் மா தவம்—உக்ரமான பெரியதொரு தபஸ்ஸை, செய்தனன் கோல்—(முற்பிறவியில்)செய்திருப்பேனோ என்னவோ? அறியேன்—அறிகிறேனில்லை; அரங்கத்து அம்மான்—ஸ்ரீரங்கநாதனுடைய, திரு ஆரம்—பிராட்டியையும் முக்தாஹாரத்தையும் உடைத்தான, மார்பு அது அன்றோ—அத்திருமார்பன்றோ, அடியேனை—தாஸனான என்னை, ஆள் கொண்டது—அடிமைப் படுத்திக்கொண்டது.

அவ:—ஐந்தாம்பாட்டு. எனக்குப் பற்றாசான பெரியபிராட்டியாரிருக்கிற திருமார்புகிடீர் என்னை ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யங்கொண்டதென்கிறார்.

அவ:—ஐந்தாம்பாட்டு. எனக்குப் பற்றாசான பெரியபிராட்டியாருடனே * திருவாரமார்பானது என்னை ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக் கொண்டதென்கிறார். மூன்றாம்பாட்டிலே திருநாபீகமலம் ப்ரஹ்மாவை தரித்துக்கொண்டிருக்கிற தன்மதிப்பையும் அழகையுங்காட்டி, தம்முடைய திருவுள்ளத்தைத் திருப்பீதாம்பரத்தினின்றும் தன்பக்கலிலே இழுத்துக்கொள்ள, அங்கே அது சுழியாறுபட்டபடியிறே சொல்லிற்று; கீழிற்பாட்டில் இத்தைக் கண்ட திருவயிறானது ஸகல சேதநாசேதநங்களையும் தானே தரித்துக்கொண்டிருக்கிற மதிப்பையும், யசோதைப்பிராட்டி கட்டக் கட்டுண்ட தழும்பைக்காட்டி, தன்னுடைய ஸௌலப்யத்தையும் சிற்றிடையான அழகையுங்காட்டி, அத்திருநாபீகமலத்தினின்றும் திருவுள்ளத்தைத் தன்பக்கலிலேயிசிக்க, அங்குப்போக ஒட்டாதே அப்படிக்குப் பட்டங்கட்டியிருக்கிறாப்போலே இருக்கிற திருவுதரபந்தநம் மேலிட்டுநின்று ஸ்வைர ஸஞ்சாரம் பண்ணுகிற படியையிறே சொல்லிற்று.

வ்யா:—(பாரமாய) ஸர்வசக்தியான ஸர்வேச்வரனே தன்னுமிடத்திலும் ஒருநிலைநின்று தள்ளவேண்டும்படி யிருக்கை; ஸம்ஹரிப்பதும் நரகத்திலேயாய் ஸ்ருஷ்டிப்பதும் நரகத்திலே யாயிருக்கை.

---

அந்தத் திருவயிற்றுக்கு ஒரு காலவிசேஷத்திலே காதாசித்கமாக ஸகலாண்டங்களையும் வைத்தத்தாலுண்டான மதிப்பும், ஒருகால் யசோதைப்பிராட்டி கட்ட அத்தால்வந்த ஸௌலப்யமுமிறே யிருப்பது; அப்படியன்றே திருமார்பு; 82 "**श्रीवत्ससंस्थानधरमनन्ते च समाश्रितम्। प्रधानम्**" (ஸ்ரீவத்ஸஸம்ஸ்தாந தரமநந்தேச ஸமாச்ரிதம்--ப்ரதாநம்) என்றும், 83 "**आत्मानमस्य जगतो निर्लेपम- गुणामलम्। बिभर्ति कौस्तुभमणिस्वरूपं भगवान् हरिः॥**" (ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணமலம்। பிபர்த்தி கௌஸ்துபமணி ஸ்வரூபம் பகவாந் ஹரி:) என்றும் சொல்லுகிறபடியே ஸர்வகாலமும் சேதநாசேதநங்களை ஸ்ரீவத்ஸகௌஸ்துப முகத்தாலே தரித்துக்கொண்டிருக்கிற பெரியமதிப்பையும், அவனுடைய ஸ்வரூபாதிகளுக்கு நிரூபகபூதையாய், நீர்மைக்கெல்லை நிலமாயிருக்கிற பெரியபிராட்டியாருக்குக் கோயிற்கட்டணமாயிருக்கிற ஏற்றத்தையும், உபயவிபூதி நாதனென்றிட்ட தனிமாலையை தரித்துக்கொண்டிருக்கிற ஆகாரத்தையு முடைத்தாய், ||"அக்குவடமுடுத் தாமைத்தாலி பூண்ட வனந்தசயனன" என்கிறபடியே யசோதைப்பிராட்டி பூட்டின ஆபரணங்களையும் உடைத்தாயிறேயிருப்பது.

ஆனகையாலே அந்தத் திருமார்பானது "திருவயிற்றிற்காட்டில் தனக்குண்டான ஆதிக்யத்தையும் ஸௌலப்யத்தையும் திருவாரமுள்ளிட்ட ஆபரணச்சேர்த்தியால் வந்தவழகையுமுடையோம் நாமன்றோ? ஆனபின்பு பேர்கலமான நமக்குச் சிற்றிடையானதான் நிகரோ?" என்று தன்னிறுமாப்பைக்காட்டி, அத்திருவுதர பந்தனத்தினின்றும் தன்பக்கலிலே இசித்துக்கொள்ள, தம்முடைய நெஞ்சளவன்றிக்கே காணியானதம்மையும் ஸ்வரூபஜ்ஞாநாதிகளைப் பிறப்பித்து அடிமைகொண்டபடியைச் சொல்லுகிறார்.

வ்யா:—(பாரமாய பழவினைபற்றறுத் தென்னைத் தன்வாரமாக்கி வைத்தான்) கீழ்ப்பாட்டிலே ராகாதிதோஷங்களுக்கு அந்தர்ப்பூத

---

|| பெரியாழ்திரு 1-8-2.

மான *மநோரஜநீசரனைப் பெரியபெருமாள் கொடுத்த *விவேக ஶரஜாலத்தாலே ஶமிப்பித்தபடியிறே சொல்லிற்று; அதிலே ஓர பேக்ஷையோட அதுக்கு உத்தரமாயிருக்கிறது இப்பாட்டு.

அவர்தந்த *விவேகஶரஜாலத்தாலே *மநோரஜநீசரனை வென்றேமென்றீர், அந்த விவேகஜ்ஞாநமாகிறது, 84 "सत्त्वात्सञ्जायते ज्ञानं" (ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்) என்கிறபடியே ஸத்வாபிவ்ருத்தியாலே உண்டாமதன்றே; அந்த ஸத்வந்தான் ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலைசாய்ந்தால் பிறக்குமதிறே; அந்த ரஜஸ்தமஸ்ஸுக்கள்தான் 86 "कर्मवश्या गुणा ह्येते" (கர்மவச்யா குணா ஹ்யேதே) என்கிறபடியே கர்மவச்யங்களாயன்றே இருப்பது; அப்படியிருக்கிற கர்மங்கள்தான், 87 "धर्मेण पापमपनुदति" (தர்மேண பாபமபநுததி) என்கிறபடியே நிவ்ருத்திகர்மாநுஷ்டாநத்தாலே போக்குமவையன்றே; அந்தக் கர்மாநுஷ்டாநத்துக்கு யோக்யமான ஜந்மமே பிடித்தில்லாத உமக்கு அந்த துஷ்கர்மங்கள் போனபடி யென்னென்ன; அநுஷ்டேயமான ஸாத்யகர்மங்களாலே போக்கிலன்றே யோக்யதையே பிடித்தின்றியிலேயொழிவது, 88 "कृष्णं धर्मं सनातनं" (க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்)89 "रामो विग्रहवान् धर्मः" (ராமோ விக்ரஹவாந் தர்ம:) || "அறஞ்சுவராகி நின்றவரங்கனார்" என்கிறபடியே ஸித்தஸ்வரூபனான அவன்றானே கைத்தொடனாய்ப் போக்கினானென்கிறார்.

(பாரமாய) § "வானக்கோனைக் கவிசொல்லவல்லேன்" என்கிறபடியே *மலக்குநாவுடைய நம்மாழ்வாரும் வகைசொல்லமாட்டாதே † "தொன்மாவல் வினைத்தொடர்" என்று திரளச்சொன்னாப்போலே இவரும் "பாரமாய" என்கிறார். கர்மத்தினுடைய கனத்தினாலே அல்பஶக்திகனான தான் ஸம்பாதித்ததாயிருக்கச்செய்தேயும், வகை சொல்லப்போகாதபடியாயிறே இருப்பது. ஸர்வஶக்தியான அவன் போக்கும்போதும் வகையில் போக்கப்போகாது. தொகையில் போக்குமித்தனை. வகையாவன தான் சதுர்விததேஹப்ரவேஶத்துக்கு ஹேதுவாயிருப்பனவும் பரிக்ரஹ தேஹத்திலே பிறக்கிற ருசிக்கு அடியாயிருப்பனவும், விஷயப்ராவண்யத்துக்கு அடியாயிருப்பனவும் தேவதாந்தரங்களுக்கு உத்தேச்யமென்றிருக்கும் புத்திக்கடியா

|| திருமாலை 6. § திருவாய் 4-5-9. † திருவாய் 3-2-2.

(பழவினை) காலமநாதி; ஆத்மாவோ நித்யன்; அசித்ஸம்ஸர்க்கமு மன்றேயுண்டிறே. இக்காலமெல்லாங்கூடக் கூடுபூரித்ததாயிருக்குமிறே. 30 "सर्वपापेभ्यो मोक्षयिष्यामि" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்றவன்றானே தள்ள வேண்டும்படியிருக்கை.

(பற்றறுத்து) விரகராயிருப்பார் அடியறுத்து நெடுஞ்சுவர் தள்ளுமா போலே ஸவாஸநமாகப்போக்கி. நித்யஸூரிகளுக்குப்பாபசங்கை உண்டாகிலும் இவர்க்கில்லாதபடிபண்ணி.

---

யிருப்பனவும், ஈச்வரனைப்பற்றி நிற்க ப்ரயோஜநாந்தரங்களைக் கொண்டு அகலுகைக்கு ஹேதுவாயிருப்பனவுமாக ஒருசுமையாயிறே யிருப்பது.

அதுக்குமேலே, விஹிதாநுஷ்டாநத்தாலும் நிஷித்தாசரணத்தாலும் பாபகர்மாக்களோட்டை ஸஹவாஸத்தாலுமாக த்ரிவிதமாய், அவைதான் மாநஸவாசிககாயிக ரூபேண த்ரிவிதமாயிறேயிருப்பது. 90 "यद्ब्रह्मकल्पनियुतानुभवेऽप्यनाश्यं तत्किल्बिषं सृजति जन्तुरिह क्षणार्धे" (யத்ப்ரஹ்மகல்பநியுதாநுபவேப்யநாச்யம் தத்கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே) என்கிறபடியே பலாநந்த்யத்தை "பாரமாய" என்கிறதாகவுமாம். ஸம்ஹரிப்பதும் நரகத்திலேயாய், ஸ்ருஷ்டிப்பதும் நரகத்திலேயாயிருக்கை. இப்படி பாரமாகைக்கு ஹேதுசொல்லுகிறது மேல்; (பழவினை) காலமோ அநாதி; ஆத்மவஸ்துவோ நித்யம்; அசித்ஸம்ஸர்க்கமும் அன்றேதொடங்கி அநுவர்த்திக்கிறவையிறே. இக்காலமெல்லாம் கூடக்கூடுபூரித்ததாயிருக்குமிறே. 91 "सर्वपापेभ्यो मोक्षयिष्यामि" (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்றவன்றானே தள்ளவேண்டும்படியிருக்கை.

(பற்றறுத்து) விரகரானவர்கள் அடியறுத்து நெடுஞ்சுவர் தள்ளுமாபோலே ஸவாஸநமாகப்போக்கி. நித்யஸூரிகளுக்குப் பாபஶங்கையுண்டாகிலும் இவர்க்கு இல்லாதபடி பண்ணி. அஜ்ஞாநமும், தத்க்ருதமான கர்மமும், அதடியான தேஹஸம்பந்தமுமென்று மூன்றாய், இவற்றை வாஸநாருசியோடே போக்கி. அதாவது அஜ்ஞாநமும் அஜ்ஞாநவாஸனையும் அஜ்ஞாநருசியும், கர்மமும் கர்மவாஸனையும் கர்மருசியும், தேஹமும் தேஹவாஸனையும் தேஹருசி

(என்னை) பாபத்துக்குப்போக்கடியறியாத என்னை. பாபம்படும் ஆகரமான என்னையென்றுமாம். 31 "अघमहोदधि." (அகமஹோததி:) (தன் வாரமாக்கி வைத்தான்) "தான்" என்றால் பக்ஷபதிக்கும்படி பண்ணினான். என் கார்யம் தனக்குக்கூறாக என்பேரிலே தனக்கு இருப்பென்று தன் பேரிலே எனக்கிருப்பாக்கினபடி. அன்றியே, விஷயாந்தரங்களை விட்டுத் தன்னையே கூறாகப்பற்றும்படி பண்ணினான். (வைத்தான்) இச்சந்தாநச்

---

யுமறுத்து. க்ரமத்திலே அநுஷ்டிக்கும் ஸாத்ய கர்மமாகிலிறே அடைவேபோக்குவது; ஸித்தரூபனாகையாலே வாஸனையோடே கடுகப்போக்கினான்.

அநாதிகாலார்ஜிதமான கர்மங்களை ஸவாஸநமாகப்போக விட்டவளவேயோ? (என்னைத் தன் வாரமாக்கி வைத்தான்) 92 "ईश्वरोऽहमहं भोगी" (ஈச்வரோஹமஹம் போகீ) என்றிருக்கிற நான், "தான்" என்றால் பக்ஷபதிக்கும்படி பண்ணினான். (என்னை) 93 "अहमस्म्य-पराधानामालयः" (அஹமஸ்ம்யபராதாநாமாலய:) என்றும், ‡ "பாவமே செய்து பாவியானேன்" என்றும் சொல்லுகிறபடியே அபராதமே நிரூபகமாம்படி இருக்கிற என்னை. இப்பாபத்துக்குப் போக்கடியறியாத என்னை. பாபம்படும் ஆகரமென்றுமாம். 94 "अघ महोदधिः" (அகமஹோததி:). இப்படி நோவுபட்டோமென்கிற அநுதாபமுமின்றிக்கேயிருக்கிற என்னை.

(தன் வாரமாக்கி வைத்தான்) என்பாபம் தனக்குக்கூறாக என்பேரிலே அவனுக்கிருப்பென்று தன்பேரில் எனக்கிருப்பாக்கின படி; அன்றியிலே, விஷயாந்தரங்களைவிட்டுத் தன்னைக்கூறாகப்பற்றும் படி பண்ணினான். (வைத்தான்) தம்முடைய நினைவன்றியிலே அத்தலையாலே வந்ததென்று தோற்றவைத்தானென்கிறார். / [மாறு செய்தவாளரக்கன் நாளுலப்ப—இறந்தகுற்றம் எண்ணவல்லனே.] ராவணனை ஸபரிகரமாகக்கொன்று வெற்றிகொண்டபின்னை, என்னைத் தம்மோடே ஒருபோராகக் கூட்டுகையாலே யமாதிகளால் நினைக்கவொண்ணாதபடியானேன். (வைத்தான்) இச்சந்தாநச்சாபம் வைத்தான்.

---

‡ பெரியதிரு 1-9-9. / திருச்சந்த 114.

சாபம்வைத்தான். (வைத்ததன்றி) ‡ இந்த நன்மைகளுக்குமேலே. (என்னுள் புகுந்தான்) பின்னையும் தன்னுற்றாமையாலே, விடாய்த்தவன் தடாகத்தை நீக்கி உள்ளே முழுகுமாபோலே, என்னுள்ளம் புகுந்தான். வாலி புக்கவிடத்தே மலையிட்டடைத்து, மஹாராஜரிருந்து குறும்பு செலுத் திருப்போலேயாக வொண்ணாதென்று என்ஸ்வரூபஜ்ஞாநம் குலையாதபடி என்னெஞ்சிலேவந்துபுகுந்தான். 10 "**अनन्यः**" (அநந்ந்ய:) என்கிற படியே இத்தோடொட்டற்றிருக்குமவனுக்கும் இத்தாலல்லது செல்லுகிற தில்லை என்கிறது.

(கோரமாதவமித்யாதி) இப்பேற்றுக்கடி என்னென்று பார்த்தார்; இந்த்ரியங்களையொறுத்து மஹாதபஸ்ஸைப்பண்ணினேனோ அறிகிறிலேன்;

---

(வைத்ததன்றியென்னுள் புகுந்தான்) என்னுடைய துஷ்கர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி, தானறிந்த * மதிநலத்துக்குத் தன்னையே விஷயமாக்கி வைத்ததுக்குமேலே, நாம் ஸந்நிஹிதராவுதோமாகில் முன்புத்தை ருசிவாஸநைகள் மேலிட்டு, பழையபடியே துஷ்கர்மங்களைப்பண்ணி நானகலக்கூடுமென்று பார்த்து, அவைமேலிடாதபடி என்னெஞ்சிற் புகுந்து, தன்னுடைய வாஸநாபலத்தாலே அவை தேய்ந்தறும்படி பண்ணியிருந்தான். (என்னுள் புகுந்தான்) † "அடியேனுள்ளானுடலுள்ளான்" என்றும், ‡ "பேரேனென்றென்னெஞ்சு நிறையப்புகுந்தான்" என்றுஞ்சொல்லுகிறபடியே - எத்தனையேனுமளவுடையவர்களளவிற் செய்யுமத்தை என் நிகர்ஷம்பாராதே வஸிஷ்டன் சண்டாள க்ருஹத்திலே புகுமாபோலே புகுந்தான். (என்னுள்புகுந்தான்) 95 "**अनन्यः**" (அநந்ந்ய:) என்கிறபடியே இத்தோடொட்டற்றிருக்கும் அவனுக்கு இத்தாலல்லது செல்லுகிறதில்லை என்கிறது.

(கோரமாதவஞ் செய்தனன்கொல்) முன்பே கனத்திருந்தது; இப்பேறு ஸித்திக்கும்போது, 96 "**तपसा विन्दते महत्**" (தபஸா விந்ததே மஹத்) என்கிறபடியே நெடுங்காலம் அதிகோரமான பெரிய தபஸ்ஸுக்களைப்பண்ணினேனோ? 97 "**महता तपसा राम महता चापि कर्मणा**" (மஹதா தபஸா ராம மஹதா சாபி கர்மணா) 98 "**ते तं सोमसिवोद्यन्तं**" (தே தம் ஸோமமிவோத்யந்தம்) என்னுமவனைப்பெறும்போது அதிகோரமான தபஸ்ஸைப்பண்ணவேணுமிறே. (அறியேன்)

---

‡ (பா) ஸந்தாந பரம்பரையின் † திருவாய் 8-8-2. ‡ திருவாய் 10-8-2.

நானறியவொன்றுமில்லை. இப்படி சங்கிப்பானென்னென்னில்; பெற்ற பேறுஅப்படிப்பட்டார்க்குக் கிடைக்குமதாகையாலே. அவன்றானே நதீதீரத்திலே கிடந்து தபஸ்ஸு பண்ணினானோ அறிகிறிலேன். கோரமான தபஸ்ஸாகிறது—அத்தலையாகத்தம்மையழிய மாறின பெரியவுடையாரைப்போலே இருக்கை. §"எந்நன்றிசெய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" என்னுமா போலே.

(அரங்கத்தம்மான்) இப்பேற்றுக்கு ஆற்றங்கரையைப் பற்றிக்கிடந்து தபஸ்ஸு பண்ணினானும் அவனாயிருந்தது. ‡இச்சீரிய பேற்றுக்கு வேறு உபாயமுண்டாக மாட்டாதே.

---

அறிகிறிலேன். நானறியவொன்றுமில்லை. இப்படி ஶங்கிப்பானென்னென்னில்; பெற்றபேறு அப்படிப்பட்டார்க்குக் கிடைக்குமதாகையாலே, அவன்றான் நதீதீரத்திலே கிடந்து தபஸ்ஸைப்பண்ணினானோ அறிகிறிலேன். கோரமான யுத்தத்திலே தம்மையழிய மாறின பெரியவுடையாரைப்போலேயிருக்கை. §"எந்நன்றி செய்தேனா என்னெஞ்சிற்றிகழ்வதுவே" என்று தம்பக்கல் ஒருநன்மை காணாமையாலே ஸம்ஶயிக்கிறார். "நிர்ஹேதுகமாக இப்படி உபகரிப்பதே!" என்றிறே இவர்வித்தராகிறது. இத்தால் - நிர்ஹேதுகமாக விஷயீகரித்தானென்றபடி. தம்மையும் தம்முடைமையையும் நமக்காக்கினவர்க்கு நம்மையும் நம்முடைமையையும் அவர்க்காக்கின முறை முதுகு தேய்த்தோமித்தனையன்றோ என்று, எல்லாஞ்செய்தும் தான் ஒன்றுஞ்செய்திலனாயிறே அவனிருப்பது; /"அடியார்க்கென்செய்வனென்றே இருத்தி நீ" என்னக்கடவதிறே.

"அறியேன்" என்றவர்தாமே ஸர்வதா இக்கனத்தபேற்றுக்கு ஒரு ஹேதுவுண்டாக வேணுமென்று விசாரித்து, அறிந்தேனென்கிறார் மேல்; (அரங்கத்தம்மான் திருவாரமார்பதன்றோ வடியேனையாட்கொண்டதே)இவருடைய *கோரமாதவம் இருக்கிறபடி. (அரங்கத்தம்மான்) இவருடைய விரோதியைப்போக்கி உஜ்ஜீவிப்பிக்கைக்காகவாய்த்து இங்குவந்து சாய்ந்தருளிற்று. இவருடைய பேறு தன்னதாம்படி தாம்பண்ணுகைக்குண்டான ப்ராப்தியைச் சொல்லுகிறது. இப்பேற்றுக்கு ஆற்றங்கரையைப் பற்றிக்கிடந்து தபஸ்ஸு பண்ணினானும் அவனாயிருந்தது; இல்லையாகில் எனக்கு இக்கனவிய பேற்றுக்கு வேறு உபாயம் உண்டாகமாட்டாதே.

---

§ திருவாய் 10-6-8. ‡ (பா) இக்கனவிய. / பெரியதிருவ 5-3.

(திருவாரமார்பதன்றோ) பெரிய பிராட்டியாரையும் ஹாரத்தையு முடைத்தான மார்வன்றோ. தமக்குப் பற்றாசாகத் தாய்நிழலிலே ஒதுங்கு கிறார். இவனைக்குறித்து 32"तेन मैत्री भवतु"(தேந மைத்ரீ பவது) என்றும், அவனைக்குறித்து, 33"न कश्चिन्नापराध्यति"(ந கச்சிந்நாபராத்யதி) என்றும் சிறையிலேயிருந்தே சேரவிடப்பார்க்கிறவள், மார்பிலே இருந்தால் சேர விடச் சொல்லவேணுமோ? அழகிய மார்விலாரம்; ஆரத்துக்கு அழகு கொடுக்கவற்றாயிருக்கை. ஆரம் அழகை மறைக்கைக் குடலாமித்தனையிறே. 34 "सर्वभूषणभूषार्हाः" (ஸர்வபூஷணபூஷார்ஹா:) என்னுமாபோலே.

(அடியேனை) முன்பெல்லாம் கூலிச்சேவகரைப்போலே அழகுக்குத் தோற்ற அடிமை; இது பிறந்துடையவடிமை. முந்துற 35 "दूतो रामस्य" (தூதோ ராமஸ்ய) என்றவன், பிராட்டி கடாக்ஷம் பெற்றவாறே

---

(திருவாரமார்பதன்றோ) பெரியபிராட்டியாரையும் ஆரத்தையு முடைத்தான திருமார்பன்றோ. பெரியபெருமாள் தாமன்றோ 99 "हिरण्यवर्णा" (ஹிரண்யவர்ணாம்) 100 "हिरण्यप्राकारां" (ஹிரண்யப்ராகாராம்) என்கிற பெரியபிராட்டியாருக்குக் கோயிற் கட்டணமாய், அதுக்கு ஹிரண்யமயமான திருமதிள்போலே இருக் கிற திருவாரத்தை உடைத்தாயிறே திருமார்பிருப்பது. அந்தத் திருமார்பன்றோ. இத்தால் தமக்குப்பற்றாசாகத் தாய் நிழலிலே ஒதுங்குகிறார். இவனைக்குறித்து, 101 "तेन मैत्री भवतु"(தேநமைத்ரீ பவது)என்றும், அவனைக்குறித்து, 102"न कश्चिन्नापराध्यति"(நகச்சிந்நா பராத்யதி) என்றும் சிறையிலேயிருந்தே சேரவிடப்பார்க்குமவள் மார்பிலேயிருந்தாள் சேரவிடச்சொல்லவேணுமோ. அழகியமார்பி லாரம். ஆரத்துக்கு அழகு கொடுக்கவற்றாயிருக்கை. ஆரம் அழகை மறைக்கைக்குடலாயிருக்குமித்தனை. 103 "सर्वभूषणभूषार्हाः" (ஸர்வ பூஷணபூஷார்ஹா:) என்னுமாபோலே.

(அடியேன்) முன்பெல்லாம் கூலிச்சேவகரைப்போலே அழகுக் குத் தோற்றவடிமை; இது பிறந்துடைய வடிமை. முந்துற 104 "दूतो रामस्य"(தூதோ ராமஸ்ய) என்றவன் பிராட்டி கடாக்ஷம் பெற்ற வாறே, 105 "दासोऽहं कोसलेन्द्रस्य" (தாஸோஹம் கோஸலேந்த் ரஸ்ய) என்றானிறே. (அடியேனை) ஜ்ஞாநாநந்தங்களுக்கு முன்னே

36 "दासोऽहं कोसलेन्द्रस्य" (தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய) என்று னிறே. (ஆள்கொண்டது) இழந்தசேஷத்வத்தைத்தந்தது.

(அடியேனையாட்கொண்டதே) ராஜ்யமிழந்த ராஜபுத்ரனையழைத்து முடிசூட்டுமாபோலே, அழகிலே அழுந்தின என்னை அவன் குணங்கிடீர் பிழைப்பித்ததென்கிறார். அழகிலே அழுந்தினாரை குணத்தைக்காட்டிப்

---

ஶேஷத்வம் ப்ரதமநிரூபகமான என்னையன்றோ. (ஆட்கொண்டது)' இழந்த ஶேஷத்வத்தைத் தந்தது.

முடிக்குரியவனை முடிசூட்டுமாபோலே, என்னுடைய ஸ்வரூப விரோதியையும் ஆச்ரயணவிரோதியையும், உபாயவிரோதியையும், உபேயவிரோதியையும், போகவிரோதியையும் போக்கி, ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக் கொண்டது; தன்னுடைய மேன்மையையும் அழகையுங்காட்டி என்னை அநர்ஹமாம்படிபண்ணி, பெரியபிராட்டியாரையிடுவித்து, 102 "न कश्चिन्नापराध्यति" (ந கச்சிந்நாபராத்யதி) என்னப்பண்ணி, பெரியபெருமாளையிடுவித்து என்னுடைய விரோதி பாபங்களை ஸவாஸநமாகப் போக்குவித்து, அவர் தம்முடைய போக்யதையை என்னெஞ்சிலே ப்ரகாஶிப்பித்துக்கொண்டு புகுரும்படிபண்ணி, என்னுடைய ஸ்வரூபாநுரூபமான கைங்கர்யத்தைக் கொண்டது அந்தத் திருமார்பன்றோ.

(அடியேனையாட் கொண்டது அந்தத் திருமார்பன்றோ) என்னைப்போலே இருப்பார், வேறே சிலரைத் திருத்தி அடிமைகொள்ளுகைக்கு, § "பாயுநீரரங்கந்தன்னுள் பாம்பணைப்பள்ளிகொண்ட மாயனார் திருநன்மார்வும் மரகதவுருவுந்தோளும் தூயதாமரைக்கண்களுந் துவரிதழ்ப்பவளவாயும், ஆயசீர் முடியுந்தேசும்" என்று தாம் கிடக்கிற ஊருக்கு அலங்காரமான ஆற்றழகு தொடங்கிக் காட்டவேண்டிற்று. எனக்கு மார்பொன்றுமேயமைந்தது. அழகிலே அழுந்தின என்னை அவன் குணங்கிடீர் பிழைப்பித்ததென்கிறார். அழகிலேயழுந்தினாரை குணத்தைக்காட்டிப் பிழைப்பிக்கலாம்; குணத்திலே அழுந்தினார்க்கு குணமேவேணும். நீரிலேயழுந்தினார்க்கு நீரையிட்டுத்தெளிவிக்கும் இத்தனையிறே.

---

§ திருமாலை-20.

6. துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில் சூழரங்கநகர்மேயவப்பன்
அண்டரண்டபகிரண்டத் தொருமாநிலமெழுமால்வரைமுற்றும்
உண்டகண்டங்கண்டீரடியேனை யுய்யக்கொண்டதே.

பதவுரை:—துண்டம்—ஒரு துண்டாயிருக்கிற [கலாமாத்ரமான] வெண் பிறையன்—வெளுத்த சந்திரனை (சடையிலே) உடையனான சிவனுடைய, துயர் — (பிச்சையெடுத்துத் திரிந்த) பாவத்தை, தீர்த்தவன்—போக்கினவனும், அம் சிறைய வண்டு—அழகிய சிறகை யுடைய வண்டுகள், வாழ்-வாழ்தற்கிடமான, பொழில் சூழ்—சோலைகள் சூழப்பெற்ற, அரங்கம் நகர்—திருவரங்கப்பெருநகரிலே, மேய—பொருந்தியிரா நின்ற, அப்பன்—ஸ்வாமியுமான ஸ்ரீரங்கநாதனுடைய, அண்டர்—அண்டத்துக்குட்பட்ட சேதனரையுடைய, அண்டம்—இவ்வண்

---

பிழைப்பிக்கலாம்; குணத்திலே அழுந்தினார்க்கு குணமேவேணும். நீரிலே அழுந்தினார்க்கு I நீரையிட்டுப்பிழைப்பிக்க விடுமித்தனையன்றோ உள்ளது.

இப்பாட்டால் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொல்லுகிறபடியே ஸர்வ வ்யாபகத்வசக்தியும் இங்கே உண்டென்கிறார்.

---

இப்பாட்டில் அந்தர்யாமி ப்ராஹ்மணத்தில் சொல்லுகிறபடியே ஸர்வவ்யாபி ஶக்தியும் இங்கேயுண்டென்கிறார்.

---

அரு:—அஞ்சாம்பாட்டு. (பாரமாயவித்யாதி) (பாரமாய) வினையினுடைய பாஹுள்யமாதல்; க்ரௌர்யமாதல். இவற்றை வாக்ய த்வயத்தாலே அருளிச்செய்கிறார் (ஸர்வசக்தித்யாதி). பழமையேதென்ன அருளிச்செய்கிறார் (ஆத்மாவித்யாதி) வாரம்—ஸ்நேஹமாதல், கடமையாதல். இவனிறுக்கு மிறையைத் தான் இறுக்கிறேனென்று தன்பேரிலே ஏறிட்டுக் கொள்ளுகை. (சாபம்)குட்டி. சத்ருக்கள், விரோதிகளை அறுக்குமென்று ஸந்தாநத்துக்கு ஒருகுட்டிவைக்குமாபோலே என் விரோதியைப்போக்கி ஸ்வரூபம் நசியாதபடி வைத்தானென்றபடி. திரு—அழகாகவுமாம்.

"ஸௌந்தர்யம் அந்தராயம்" என்கிறபடியே கைங்கர்ய விருத்தமான அழகிலே ஈடுபட்ட என்னை, ச்ரிய: பதித்வகுணத்தைக் காட்டிமீட்டாப் போலே, ச்ரிய: பதித்வகுணத்திலே அகப்பட்டாரை ஸௌந்தர்யமாகிற அழகைக்காட்டி மீட்கலாகாதோவென்ன "மார்பதன்றோ" என்ற உறைப்பைப்பற்ற அருளிச்செய்கிறார் (அழகிலே அழுந்தினாரித்யாதி)

டத்தையும், பகிரண்டம்—வெளியண்டங்களையும் (இவற்றை தரிக்கையாலே,) ஒருமாநிலம்—ஒப்பற்ற மஹாப்ருதிவியையும், எழு மால் வரை—ஏழு குலபர்வதங்களையும், முற்றும் — சொல்லிச் சொல்லாத மற்றெல்லாவற்றையும், உண்ட — அமுதுசெய்த, கண்டம் கண்டீர்—திருக்கழுத்துக்கிடீர், அடியேனை — தாஸனை என்னை, உய்யக்கொண்டது—உஜ்ஜீவிப்பித்தது.

---

அவ.—ஆறும்பாட்டு. ஸர்வலோகத்தையும் அமுதுசெய்தருளின கண்டத்தினழகு என்னையுண்டாக்கிற்றென்கிறார். திருமார்பினழகு திருக்கழுத்திலே ஏறிட்டதென்னவுமாம்.

---

அவ:—ஆறும்பாட்டு. ஸர்வலோகத்தையுமமுது செய்தருளின கண்டத்தினழகு என்னையுண்டாக்கிற்றென்கிறார். திருமார்பினழகு திருக்கழுத்தில் ஏறிட்டதென்றுமாம். கீழ்ப்பாட்டில் - திருமார்பானது ஹாராத்யாபரண ஶோபையையும் பெரிய பிராட்டியாருக்குக் கோயில் கட்டணமாயிருக்கிற மேன்மையையுங்காட்டி, தம்மைத் திருவயிற்றினின்றும் வரவீர்த்து எழுதிக்கொண்டபடியிறே சொல்லிற்று; இதில்- அந்தத் திருமார்புக்குமேலாய் 106 "रमयतु स मां कण्ठः श्रीरङ्गनेतुरुदञ्चितक्रमुकतरुणग्रीवाकम्बुप्रलम्बमलिम्लुचः। प्रणयविलगल्लक्ष्मीविश्वम्भराकरकन्दलीकनकवलयक्रीडासङ्क्रान्तरेख इवोल्ल - सन्॥" (ரமயது ஸ மாம் கண்ட: ஸ்ரீரங்கநேதுருதஞ்சிதக்ரமுக தருணக்ரீவாகம்புப்ரலம்பமலிம்லுச: । ப்ரணயவிலகல்லக்ஷ்மீ விச்வம்பராகரகந்தளீகநகவலயக்ரீடாஸங்க்ராந்தரேக இவோல்ல — ஸந்) என்கிறபடியே — கமுகக்கன்றின் கழுத்துப்போலே பசுகுபசுகென்றிருப்பதாய் ரேகாத்ரயாங்கிதமாய், இரண்டருகும் நெருங்கி நடுவு பெருத்திருக்கையாலும், மொசுகுமொசுகென்றிருக்கிற நாதத்தை உடைத்தாயிருக்கையாலும் ஸ்ரீபாஞ்சஜந்யம்போலேயிருக்கிற திருக்கழுத்தானது; இந்தத் திருமார்புக்குள்ளது, ||"அலர்மேல்மங்கையுறைமார்பா" என்கிறபடியே பெரிய பிராட்டியாருக்குக்கோயில் கட்டணமாயிருக்கிற ஆகாரமும், திருவாரத்தாலே அலங்க்ருதமான வாகாரமுமேயன்றோ; இவளைப்போலே * சங்குதங்குமுன்கை நங்கையாயிருப்பார் அநேகம் நாய்ச்சிமார்

---

|| திருவாய் 6-10-10.

வ்யா:-(துண்டமித்யாதி)கலாமாத்ரமாய் வெளுத்திருந்துள்ளபிறையை ஜடையிலேயுடையனான ருத்ரன் தனக்குப் பிதாவுமாய் லோககுருவுமாயிருந் துள்ள ப்ரஹ்மாவினுடைய தலையையறுக்கையால்வந்த பாபத்தைப் போக்

---

ஸாபரணமான தங்கள் கைகளாலே அணைக்கையாலே அவ்வாபரணங் களழுத்த அவற்றாலே முத்ரிதராயிருப்போமும் நாமல்லோமோ? ப்ரளயாபத்துவர ஸகலாண்டங்களையும் ததந்தர்வர்த்திகளையும் ரக்ஷித் தோமும் நாமல்லோமோ? அதுகிடக்க அவள்தான் மார்பிலேயிருந் தணைப்பதும் நம்மையன்றோ? அதுவுங்கிடக்க பாண்டவர்கள் தூது விடுகிறபோது கட்டிவிட்ட படக்கோலை இன்றும் நம்பக்கலிலே யன்றோகிடக்கிறது. அந்த ஹாரந்தனக்கும் தாரகம் நாமல்லோமோ" என்றாப்போலே தன்னுடைய ஆபரணசோபையையும் யௌவநத் தையும் ஆபந்நிவாரகத்வத்தையுங்காட்டி என்னை ஸம்ஸாரமாகிற ப்ரளயத்தினின்றும் எடுத்து உஜ்ஜீவிப்பித்ததென்கிறார்.

வ்யா:— (துண்டவெண்பிறையன்றுயர்தீர்த்தவன்) கீழ்ப்பாட் டிலே என்னுடைய அஜ்ஞாநத்தாலே என்னாலும் பிறராலும் பரி ஹரிக்கவொண்ணாதபடி அநாதிகாலார்ஜிதமாய் * அவச்யமநுபோக் தவ்யமாய், பிடரியைப் பிடித்துக்கொடுநிற்கிற துஷ்கர்மங்களை, பெரியபிராட்டியார் புருஷகாரமாக, 107 "तत्क्षणादेव नश्यति" (தத்க்ஷணாதேவ நச்யதி) என்கிறபடியே பெரியபெருமாள் நசிப்பித்தா ரென்றிறேசொல்லிற்று; இத்தைக்கேட்டவர்கள், * பாரமாயபழவினை யடைய அவள் புருஷகாரமாகப் போக்கினாரென்னுமிடம் ஆச்சர்யமா யிருந்ததீ! இது உபபந்நமென்று நாங்களறியும்படி என்னென்ன; என்னைப்போலே தன்னுடைய அஜ்ஞாநத்தாலே ஈச்வராபிமாநியான ருத்ரனானவன், லோககுருவுமாய்த் தனக்குப் பிதாவுமான ப்ரஹ்மா வினுடைய ஶிரஸ்ஸை நகத்தாலேயறுத்து, இப்படித்தன்னாலும் பிறராலும் பரிஹரிக்கவொண்ணாதபடியான துயரை ஸம்பாதித்து, அதுபோகைக்காக க்ஷீராப்திநாதன் பாடேறவர, அவ்விடத்தே தானும் பெரியபிராட்டியாருமாய்த்தோன்றி, 108 "श्रीमान् मया भिक्षां प्रयाचितः" (ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:) என்கிறபடியே அபே க்ஷாநுகுணமாக அவள் புருஷகாரமாக அவனுடைய ப்ரஹ்மஹத் யையால் வந்த துயரைத்தீர்த்தாப்போலே, 109 "स खलु ब्रह्महा

கினவன். சுமையராயிருப்பார் சும்மாட்டுக்குள்ளே தாழைமடலைச் சொருகுமாபோலே, ஸாதகனாயிருக்கச்செய்தே ஸுகப்ரதானாக அபிமாநித்திருக்குமாய்த்து. ஆனாலும் ஆபத்துவந்தால் அவனல்லது புகலில்லையே. சந்த்ரனுடைய க்ஷயத்தைப் போக்கினானென்றுமாம். அவனுடைய துரிதத்தைப்போக்கினாப்போலே தம்முடைய துரிதத்தையும் போக்குமென்று கருத்து.

---

भवेत्"(ஸ கலு ப்ரஹ்மஹா பவேத்) என்கிற என்னுடைய ப்ரஹ்மஹத்யையையும் போக்கினானென்கிறார்.

இந்தச் சேதநன் மஹாபாதகாதி பாபங்களைப்பண்ணி மஹாரௌரவாதி நரகங்களிலே யமபடர் கையிலேத்துவிடுமளவும் அசித்கல்பனாய்க் கிடந்தநுபவித்து, அவர்கள் விட்டடித்தவாறே, முற்பட 110 "स्थावरक्रिमयोऽब्जाश्च पक्षिणश्च सरीसृपाः" (ஸ்தாவரக்ரிமயோப்-ஜாச்ச பக்ஷிணச்ச ஸரீஸ்ருபா:) என்கிறபடியே முற்பட ஸ்தாவராதி யோநிகளிலே பிறந்து, 109 "मानुष्यं प्राप्य लोकेऽस्मिन् न मूको बधिरोऽपि वा। नापक्रामति संसारात् स खलु ब्रह्महा भवेत्॥ (மாநுஷ்யம் ப்ராப்ய லோகேஸ்மிந் ந மூகோ பதிரோபி வா। நாபக்ராமதி ஸம்ஸாராத் ஸ கலு ப்ரஹ்மஹா பவேத்) என்கிறபடியே மநுஷ்யஜந்மத்திலே பிறக்கவும்பெற்று, ச்ரோத்ராதிகரணங்களும் விதேயமாகப் பெற்று வைத்து, இவற்றைக்கொண்டு ஈச்வரனைப்பற்றித் திருநாம ஸங்கீர்த்தந முகத்தாலே இந்த ஸம்ஸாரத்தைக் கடவானாகில் அவனை "ப்ரஹ்மஹா" என்றதிறே. புழுநெருடுகிறவனுக்கும் ப்ராஹ்மணசரீரத்தை வதிக்கிறவனுக்கும் ஹிம்ஸையொத்திருக்கச்செய்தே ப்ராஹ்மணவதம் ப்ரஹ்மஹத்யையென்கிறது- அவனுடைய ஜந்ம வ்ருத்தஜ்ஞாநங்களால் வந்த கௌரவத்தைப் பற்றவிறே அப்படியே, 112 "यस्यात्मा शरीरं" (யஸ்யாத்மா சரீரம்) என்கிற படியே பகவச்சரீரபூதமான ஆத்மாவை அபஹரித்து நாராயணத்வத்தை ஒருவாய்ப்போக்குகிறவனை ப்ரஹ்மஹாவென்னத் தட்டில்லையிறே.

(துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன்) § "சலங்கலந்த செஞ்சடைக்கறுத்தகண்டன் வாசநீர் கொடுத்தவன்" என்கிறபடியே

---

§ திருச்சந்த-113.

தீர்த்தஸேவையாலும் தன் தபஸ்ஸாலும் தன் ஶக்திமத்தையாலும் போக்கவொண்ணாத வலியதுயரை, பிராட்டி புருஷகாரமாகத் தன் மார்பில் வாசநீராலே போக்கினது, தம்முடைய துயரைப்போக்கினதுக்கு நிதர்ஶநமாயிருக்கையாலே அவனை உதாஹரணமாக்குகிறார். தாழைமடலைச்சூடி வருவாரைப்போலே ஒரு கலாமாத்ரமான வெளுத்த சந்த்ரனை ஜடையிலேயுடையனான ருத்ரனுடைய பாபத்தைப்போக்கினவன். கலாமாத்ரமான சந்த்ரனை ஜடையிலே சூடி வந்தானென்கையாலே இப்படி ஆபந்நனாய் வருகிறவிடத்திலும் அலங்காரத்தோடே த்ரு(ஹ)ப்தனாய் வந்தானென்கை. வெண்மையாலே சிவந்த ஜடைக்குப்பரபாகமாயிருக்கிறபடி. சுமையராயிருப்பார் சும்மாட்டுக்குள்ளே தாழைமடல் சொருகுமாபோலே, ஸாதகனாயிருக்கச்செய்தே ஸாதகப்ரதாநனாய் அபிமாநித்திருக்குமாய்த்து. ஆனாலும் ஆபத்துவந்தால் அவனல்லது புகலில்லையிறே. இத்தால் ஒருதேவதையை ஆபரணமாக உடையனாகையால் வந்த மதிப்பும், போகப்ரதாநனென்னுமிடமும், முமுக்ஷுவல்லனென்னுமிடமும் சொல்லுகிறது.

(வெண்பிறையன் துயர்) தனக்குத்தக்க வாதமிறே. லோகத்துக்கு ஶங்கரனாயிருக்கிறவனுக்கு வந்த து:க்கமிறே. இவன் தன்னுடைய கர்வத்தாலே ப்ரஹ்மஶிர:க்ருந்தநம் பண்ணினவநந்தரம் இவன் புத்ரத்வம் குலைந்தாலும் தான் பிதாவானபடியாலே இவனை அழியாதே செருக்குவாட்டுகைக்காக, 113 "कपाली त्वं भविष्यसि" (கபாலீ த்வம் பவிஷ்யஸி) என்று ப்ரஹ்மா ஶபிக்க, இவன்கையிலே, ‡"முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன்" என்கிறபடியே—கபாலத்தைக்கொண்டு பலிபுக்கான ஜயந்தனைப்போலே, 114 "त्रीन् लोकान् संपरिक्रम्य" (த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய) பண்ணிக்கொண்டு, திருப்பாற்கடலிலே சென்றவளவிலே, ‡"இடர்கெடுத்த திருவாளன்" என்கிறபடியே - பிராட்டியும் தானுமாய்வந்து துயரைத் தீர்த்தானிறே. 114"स पित्रा च परित्यक्तः सुरैश्च समहर्षिभिः। त्रीन् लोकान् संपरिक्रम्य तमेव शरणं गतः॥ (ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி: । த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத: ॥) 114 "स:" (ஸ:) பெருமாள் திருவுள்ளத்திலே தீரக்கழிய அபரா

‡ பெரியதிரு 6-9-1.

தத்தைப்பண்ண, அவர் குபிதராய் ப்ரஹ்மாஸ்த்ரத்தைவிட, அது பின்தொடர்ந்துகொடு திரிய, /"ஆவாரார் துணை" என்கிற படியே ரக்ஷகாபேக்ஷையுடைய காகமானது; 114 "पित्रा च परित्यक्तः" (பித்ரா ச பரித்யக்த:) பெற்றவர்களுக்கு பரமன்றோ ரக்ஷிக்கை என்றுபார்த்து, இந்த்ரன்பாடே சென்றான்; 115 "इन्द्रो महेन्द्रस्सुरनायको वा त्रातुं न शक्या युधि रामवध्यम्" (இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா த்ராதும் ந ஶக்யா யுதி ராமவத்யம்) என்கிறபடியே எட்டுக்கதிரும் விட்டெரிகிற பெரிய மதிப்புந்தானுமானாலும் ராமவத்யனை ரக்ஷிக்கை அரிதாகையாலே, 116"भूतानां योऽव्ययः पिता" (பூதாநாம் யோவ்யய: பிதா)என்கிறபடியே-நிருபாதிகரான தாய்க்கும் தமப்பனுக்குமாகாதே,ஸர்வபூதஸுஹ்ருத்தான அவரளவிலே ப்ராதிகூல்யம் பண்ணி அவர்க்குவத்யனானவனன்றோ; இவன் இங்குப்புகுருகையாவதென்?. 117 "सेन्द्राय" (ஸேந்த்ராய) என்னிலோவென்று பயப்பட்டுப் புத்ரமித்ரகளத்ரங்களோடேகூட எல்லாருங்காண நாற்சந்தியிலே குடநீர் வழித்துவிட்டான். 114"सुरैश्च" (ஸுரைச்ச) மாதா:பிதாக்கள் கைவிட்டவளவிலும் இவர்களுக்கு உபாத்யர்த்தமாக பந்துவர்க்கமான தேவதைகள் கொடுபோய்ச் சீராட்டக்கண்டு போருமே; அந்த வாஸனையாலே அவர்கள்பாடே சென்றான்; 118 "कस्य बिभ्यति देवाश्च जातरोषस्य संयुगे" (கஸ்ய பிப்யதி தேவாச்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே) என்கிறபடியே அபராதம் அதுவாகையாலும் பெருமாளுக்கு அஞ்சுகையாலும் மாதாபிதாக்கள் நேராகக்கைவிட்டார்களென்றறிகையாலும் அவர்களும் தள்ளிக் கதவடைத்தார்கள். 114 "समहर्षिभिः" (ஸமஹர்ஷிபி:) இந்த்ரன் கைவிட்ட த்ரிஶங்குவையுமகப்படத் தங்கள் தபஸ்ஸையழியமாறி ரக்ஷித்து, * ஆந்ருஶம்ஸ்யப்ரதாநராயிருக்கும் ருஷிகள்பாடே சென்றான்; அவர்களும், வத்யஹிம்ஸையிலே பண்ணுவதோராந்ருஶம்ஸ்ய முண்டோவென்று கைவிட்டார்கள். 114 "त्रीन् लोकान् संपरिक्रम्य" (த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய) தமப்பனுக்குச்செல்லும் தேசமாகையாலே ஆரேனுமொருத்தர் ஒருகால

/ திருவாய் 5-1-9.

கிலும் புத்திபேதம்பிறந்து பரிக்ரஹிக்கக்கூடுமோவென்று த்ரை லோக்யத்திலும் தச்சன் கூட்டின வாசல்கள்தோறும் ஒருகால் புக்காப்போலே ஒன்பதின்கால் புகுந்து திரிந்தான்; அங்கு ரக்ஷகரா வாரைப்பெற்றிலன். 114 **"तमेव शरणं गतः"** (தமேவ ஶரணம் கத:) கோபித்தாரேயாகிலும் நாராயணத்வப்ரயுக்தமான குடற்றொடக்குண்டாகையாலே அவர்கள் முகத்திற்காட்டில் அப்பு விட்டவர் முகமே குளிர்ந்திருக்கையாலும், 119 **"सकृदेव प्रपन्नाय एतद्व्रतं मम"** (ஸக்ருதேவ ப்ரபந்நாய-ஏதத் வ்ரதம் மம) என்றருளிச்செய்து வைக்கையாலும் அந்தச் சீறினபெருமாளேயமையுமென்று அவரையே தனக்கு உபாயமாகப் பற்றினன். 119 **"सर्वभूतेभ्यः"** (ஸர்வ பூதேப்ய:) என்கிறவிடத்திலே, ஸர்வஶப்தம் அஸங்குசிதோக்தியாகையாலே—பிறரால்வரும் பயத்தையும், தன்னால்வரும் பயத்தையும், ரக்ஷகனனென்னால் வரும் பயத்தையும்போக்கி ரக்ஷிக்கக்கடவேனென்றபடி. இப்படி இக்காகம் பட்டதுபட்டு, 114 **"त्रीन् लोकान् संपरिक्रम्य"** (த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய) பண்ணித்திரிந்தானிறே. லோகத்துக்காக ஸம்ஹர்த்தாவாய்ப் பெரியமதிப்போடே கும்பீடு கொண்டு திரிந்து, ததாதர்ஶிதபந்தாவாய்க்கொண்டு, தன் புத்யா ஒருவனை ஸம்ஹரிக்கப்புக்குப்பட்டபாடிறே இது. 108 **"तत्र नारायणः श्रीमान् मया भिक्षां प्रयाचितः। विष्णुप्रसादात् सुश्रोणि कपालं तत्सहस्रधा। स्फुटितं बहुधा यातं स्वप्नलब्धधनं यथा॥"** (தத்ர நாராயணச் ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:। விஷ்ணுப்ரஸாதாத் ஸுச்ரோணி கபாலம் தத்ஸஹஸ்ரதா। ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்ததநம் யதா) என்று தர்மாதியானவன் தானே தன்னபிமத விஷயத்தைப்பார்த்துச்சொல்லும்படியிறே அவனுடைய துயரைப் போக்கினபடி. 108 **"तत्र"** (தத்ர) அந்தப்பரமபதத்திலே. 108 **"नारायणः"** (நாராயண:) அபராதம் பாராமல் ரக்ஷிக்கைக்கடியான பந்தவிசேஷத்தைச்சொல்லுகிறது. 108 **"श्रीमान्"** (ஸ்ரீமாந்) அந்த பந்தவிசேஷம் கிடக்கச்செய்தேயும், 120 **"क्षिपामि"** (க்ஷிபாமி) என்றால் பொறுப்பிக்குமவள். 108 **"मया भिक्षां प्रयाचितः"** (மயா பிக்ஷாம் ப்ரயாசித:) நாட்டையடையக் கும்பீடுகொண்டு அபேக்ஷித பலப்ரதனை நான் இரந்தேன். 108 **"विष्णुप्रसादात्"** (விஷ்ணுப்ரஸாதாத்) அகவாயிலிருந்து என் அலமாப்பையடைய அநுஸந்தித்துக் கொண்டு போருகிறவனுடைய

(அஞ்சிறையவண்டு வாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேயவப்பன்) லோகத்தில் ப்ரதாநரானவர்கள் ப்ரஹ்மஹத்யையைப்பண்ணி அலைந்து கொடுகிடக்கப்புக்கவாறே தான் கடக்கநிற்கவொண்ணுதென்று இவர்களுடைய ரக்ஷணார்த்தமாகக் கிட்டவந்து கண்வளர்ந்தருளுகிற உபகாரகன். அழகிய சிறகை உடைத்தான வண்டுகள் வாழாநின்ற சோலைசூழ்ந்த பெரியகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பிதாவானவன்.

---

ப்ரஸாதமடியாக. 108 "सुश्रोणि" (ஸுச்ரோணி) உன்னுடைய ஸௌபாக்யவிசேஷமிறே. 108 "तत्कपालं" (தத்-கபாலம்) ஒருகாலும் நிரம்பாதே விடாதே கிடந்தது. 108 "सहस्रधा" (ஸஹஸ்ரதா) காணவொண்ணுதபடியாய்த்துக்காண்! விரோதி போக்குமிடத்தில் புகுந்து போய்த்தென்று தெரியாதபடி வாஸனையோடே போக்குமிடத்துக்கு நிதர்ஶநமிறே.

(துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன்) சந்த்ரனுடைய க்ஷயத்தைப்போக்கினனென்றுமாம். அவனுடைய துயரத்தைப் போக்கினப்போலே என்னுடைய துரிதத்தையும் போக்குமென்று கருத்து.

(அஞ்சிறையவித்யாதி) லோகத்தில் ப்ரதாநரானவர்கள் ப்ரஹ்மஹத்யை பண்ணி அலைந்து கொடுகிடக்கப்புக்கவாறே, "நாம் கடக்க நிற்கவொண்ணுது" என்று, அவர்களுடைய ரக்ஷணார்த்தமாக, கிட்டவந்து கண்வளர்ந்தருளுகிற உபகாரகன். அழகிய சிறகை உடைத்தான வண்டுவாழா நின்றுள்ள சோலைசூழ்ந்த பெரியகோயிலிலே கண்வளர்ந்தருளுகிற பிதாவானவன். அந்தருத்ரன் * அலங்கல்மார்பில் வாசநீர்பெற்றுக் களித்தாப்போலேயாய்த்து, இந்த வண்டுகளும் அந்தச்சோலையிலே மதுபாநம்பண்ணினத்தால் பிறந்த ஹர்ஷம் சிறகிலே தொடைகொள்ளலாம்படி களித்துவாழுகிறபடி.

(வண்டுவாழ்பொழில்) வண்டுகள் அவன்பக்கல் §செல்லாதே திருச்சோலையின் போக்யதையிலே இளமணல்பாய்ந்து கால்வாங்கமாட்டாதே நிற்கும். அவ்வண்டுகளைப்போலே, தம்மையும் அநுபவிப்பித்து விடாய்கெடுத்தானென்கிறார். அங்ஙனன்றிக்கே,

§ (பா) செல்லத்

(வண்டுவாழ்பொழில்) வண்டுகள் அவன்பக்கல் செல்லாது, திருச்சோலையின் போக்யதையிலே இளமணல் பாய்ந்து கால்வாங்கமாட்டாதே நிற்கும்; அவ்வண்டுகளைப்போலே தம்மையநுபவிப்பித்து விடாய் கெடுத்தானென்கிறார்.

(அண்டரண்டமித்யாதி)அண்டாந்தர்வர்த்திகளுடைய அண்டம், பகிரண்டப்–புறவண்டம், அத்விதீயமானமஹாப்ருதிவி, பூமிக்கு ஆணியடித்தாப்போலேயிருக்கிற ஏழுவகைப்பட்ட குலகிரிகள், ஒன்றொழியாமே ஆடிக்காற்றில் பூளைபோலே பறந்து திருவயிற்றிலே புகும்படியுண்ட கழுத்துக்கிடீர். இவற்றைத்தனித்தனியே சொல்லுவானென்னென்னில்;

---

121 "**उभाभ्यामेव पक्षाभ्यामाकाशे पक्षिणां गतिः। तथैव ज्ञान कर्मभ्यां प्राप्यते पुरुषोत्तमः॥**" (உபாப்யாமேவ பக்ஷாப்யாமாகாசே பக்ஷிணாங்கதி: । ததைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம:) என்கிறபடியே. §"வண்டுகளோவம்மின்" என்கிற முமுக்ஷுக்களான ஸாத்விகர், ஸம்யக்ஜ்ஞாந ஸத்கர்மங்களாகிற மோக்ஷபரிகரங்களைக்கொண்டு வாழுகிறபடியைச் சொல்லிற்றாகவுமாம். பெரியபெருமாளுக்கு ஆபரணமாய், ஊருக்கும் ஆபரணமாயிருக்குஞ்சோலை; சோலைக்கு ஆபரணமாயிருக்கும் வண்டுகள்; வண்டுகளுக்கு ஆபரணமாயிருக்கும் அழகிய சிறகென்கை.

ருத்ரனானவன் வந்தபேக்ஷிக்க அவனொருவனுக்கு உதவினபடியைச் சொல்லிற்று-கீழ்; அபேக்ஷாநிரபேக்ஷமாக அநேகஜகத்தினுடைய ஆபத்தைப்போக்கிற்றன்றோ திருக்கழுத்தென்கிறார் மேல்; (அண்டரண்டப்) அண்டாந்தர்வர்த்திகளான சேதநரையுடைத்தான இந்த அண்டம். (பகிரண்டத்து) பஹி:உண்டான அண்டங்கள், சத்ருஸங்களான புறப்பிலுண்டான அண்டங்கள். (ஒருமாநிலம்) சத்ருஶமான அண்டங்களை தரித்துக்கொண்டிருக்கையாலே அத்விதீயமான மஹாப்ருதிவி. (எழுமால்வரை) இவ்வண்டங்களும் பூமியும் பாதாளத்தில் விழாதபடி சங்குஸ்தாபநம் பண்ணினாப்போலே இந்த பூமியை ஊடுருவிநிற்கிற குலபர்வதங்களேழும்.

(முற்றுமுண்டகண்டங்கண்டீர்) இவற்றைத் தனித்தனியே சொல்லுவானென்னென்னில்; தனித்தனியே சொல்லுகைதான்

---

§ திருவிரு (55).

7\. கையினார்சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யினார் துளபவிரையார் கமழ்நீண்முடியெம்
ஐயனார் அணியரங்கனாரரவினணைமிசை மேயமாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச்சிந்தை கவர்ந்ததுவே.

---

தனியே சொல்லுகை போக்யமாயிருக்கையாலே. பெரியபெருமாள் திருக்கழுத்தைக்கண்டால் ப்ரளயாபத்திலே ஜகத்தை எடுத்துத் திருவயிற்றிலே வைத்தமை தோற்றுநின்றதாய்த்து. விடுகாது தோடிட்டு வளர்ந்ததென்று தெரியுமாபோலே.

(அடியேனை உய்யக்கொண்டதே) முன்புபெற்ற கைங்கர்யத்துக்கு விச்சேதம் பிறவாதபடி நோக்கிற்று; என்னை ஸம்ஸாரத்தில் ஒருநாளும் அகப்படாதபடி பண்ணிற்று.

இப்பாட்டால் ஆபத்ஸகனுன ஸர்வேச்வரன்படியும் இங்கே உண்டென்கிறார்.

---

போக்யமாயிருக்கையாலே. பெரியபெருமாள் திருக்கழுத்தைக் கண்டவாறே ஜகத்தையெடுத்துத் திருவயிற்றிலே வைத்தமை தோன்றுநின்றதாய்த்து. (உண்டகண்டம்) விடுகாது தோடிட்டு வளர்ந்ததென்று தெரியுமாபோலே, (முற்றுமுண்டகண்டம்) பஹிரண்டாந்தர்வர்த்திசேதநரும் பாதாளாதிகளும். (உண்டகண்டம்) ஶேஷபூதனுக்கு கைங்கர்யம் தாரகமாயிருக்குமாபோலே, இவற்றினுடைய ரக்ஷணம் தனக்கு தாரகமாயிருக்கிறபடி. 122 **"अत्ता चराचरग्रहणात्"** (அத்தா சராசரக்ரஹணாத்) 123 **"यस्य ब्रह्म च क्षत्रं चोभे भवत ओदनः"** (யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரஞ்ச உபேபவத ஓதநம்) என்னக்கடவதிறே. (அடியேனை உய்யக்கொண்டதே) ஸ்வரூபஜ்ஞானத்தையும் பிறப்பித்து ஸம்ஸாரார்ணவத்தினின்றுமெடுத்து அக்கரையேற்றி 124 **"सन्तमेनं"** (ஸந்தமேநம்) என்னும்படி பண்ணிற்று இப்படிப்பட்ட திருக்கழுத்தன்றோ.

இப்பாட்டில் - ஆபத்ஸகனுன ஸர்வேச்வரன் படியும் இங்கே உண்டென்கிறார்.

---

அரு.—ஆறும்பாட்டு. (துண்டவித்யாதி) ஸாதகவேஷம் தோற்ற ஜடையை தரிக்கிறவனுக்கு சந்த்ரன்வேணுமோ வென்னவருளிச்செய்கிறார் (சுமையராயிருப்பாரித்யாதி).

பதவுரை:—கையின்—திருக்கைகளில், ஆர்—பொருந்தியிருக்கிற, சுரி சங்கு—சுரியையுடைய திருச்சங்கையும், அனல் ஆழியர்—தீவீசுகின்ற திருவாழியையும் உடையராய், நீள் வரை ரபோல்-பெரிய தொரு மலைபோன்ற, மெய்யனார்—திருமேனியையுடையராய், துளபம் விரை ஆர்—திருத்துழாயின் பரிமளம் மிகப்பெற்று (அதனால்) கமழ்—பரிமளியாநின்றுள்ள, நீள் முடி—உயர்ந்த திருமுடியுடையராய், எம் ஐயனார்-எமக்கு ஸ்வாமியாய், அணி அரங்கனார்-ஆபரணம்போன்ற திருவரங்கத்திற் கண்வளர்ந்தருள்பவராய், அரவு இன் அணைமிசை மேய-திருவனந்தாழ்வானாகிற இனிய திருப்பள்ளியின் மீது பொருந்திய, மாயனார்-ஆச்சரியச் செய்கைகளையுடையரான பெரியபெருமானுடைய, செய்ய வாய்-சிவந்த திருப்பவளமானது, என்னை-என்னுடைய, சிந்தை—நெஞ்சை, கவர்ந்தது—கொள்ளைகொண்டது; ஐயோ—(ஆநந்தாதிசயக் குறிப்பு)

---

அவ:—ஏழாம்பாட்டு. திருவதரத்திலே அகப்பட்டபடி சொல்லுகிறார்; ‡நீஞ்சப்புக்குத் தெப்பத்தையிழந்தேனென்னுமாபோலே.

---

அவ:—ஏழாம்பாட்டில், திருவதரத்திலகப்பட்டபடி சொல்லுகிறார். நீஞ்சப்புக்குத் தெப்பமிழந்தேனென்னுமாபோலே. கீழ்ப் பாட்டில் - “முற்றுமுண்டகண்டங் கண்டீராடியேனை உய்யக்கொண்டது” என்று திருக்கழுத்தானது தன்னுடைய ஆபத்ஸகத்வாதிகளைக்காட்டித் தம்மையெழுதிக்கொண்டபடியையிறே சொல்லிற்று; இதுக்குமேலான * திருப்பவளச்செவ்வாயானது ||“உலகமுண்ட பெருவாயன்” என்கிறபடியே ஆபத்ஸகத்வத்திலும் முற்பாடர் நாமல்லோமோ; ஆச்ரித ரக்ஷணத்துக்குமுற்பாக, 119 “सर्वभूतेभ्यो ददाम्येतद्व्रतं मम” (ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம) 125 “मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथञ्चन” (மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந) 91 “सर्वपापेभ्यो मोक्षयिष्यामि” (ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி) என்றும்போலே சொல்லுகிற *மெய்மைப்பெருவார்த்தைக்கெல்லாம் ப்ரதாநகாரணம் நாமல்லோமோ, ஓராபரணத்தால் இடுசிவப்பன்றிக்கே ஸ்வாபாவிக ஸௌந்தர்யமுடையோமும் நாமல்லோமோ, †“கருப்பூரம்நாறுமோ

---

‡ (பா) நீந்தப்புக்குத் தெப்பமிழந்தேன். || திருவாய் 6-10-1.
† நாச்-திரு 7-1.

கமலப்பூநாறுமோ திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ" என்று — தேசிகரைக் கேட்கும்படியான ஸௌகந்த்ய ஸாரஸ்ய முள்ளிட்ட போக்யதையை உடையோமும் நாமல்லோமோ என்றாப்போலே, தன்னுடைய ஏற்றத்தைக்காட்டி தம்முடைய திருவுள்ளத்தை அந்தக்கழுத்தினின்றும் தன்பக்கலிலேவர இசித்துத் துவக்க, ‡"செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த, அவ்வாயன்றியானறியேன்" என்கிறபடியே-அத்தத் *திருப்பவளச்செவ்வாயிலே தாம் அபஹ்ருதஹ்ருதயராயகப்பட்டபடியைச் சொல்லுகிறார். ஆனால் "செய்யவாயையோ என்னைச்சிந்தை கவர்ந்தது" என்னவமைந்திருக்க, கீழில் விசேஷணங்களால் செய்கிறதென்னென்புதென்னில்; கீழ் அஞ்சாம்பாட்டில்-"பாரமாய பழவினை பற்றறுத்தென்னைத் தன்வாரமாக்கிவைத்தான்" என்று - அநேக ஜந்மார்ஜிதமான பாபராசியை அடைய, இத்தலையில் ஒரு ஹேது இன்றிக்கே இருக்கச்செய்தே என்னுடைய நிகர்ஷம் பாராதே ஸவாஸநமாகப்போக்கினனென்று சொல்லி, அது கூடுமோ என்கிற அபேக்ஷையிலே, ஈச்வராபிமாநியாய் தூர்மாநியான ருத்ரனுடைய துயரை அவன் தண்மைபாராதே போக்கினாப்போலே, என்னுடைய நிகர்ஷம் பாராதே பாபங்களையும் போக்கினனென்று ருத்ரனை த்ருஷ்டாந்தமாகச் சொன்னாராயிறே கீழ்ப்பாட்டில் நின்றது; இத்தைக் கேட்டவர்கள் இது விஷமோதாஹரணங்காணும்; அந்தருத்ரனாகிறான் 126 "**तदादर्शितपन्थानौ सृष्टिसंहारकारकौ**" (ததாதர்ஶித பந்தாநௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ) என்கிறபடியே - ஸம்ஹாரமாகிற தொழிலிலே புருஷோத்தமனாலே நியுக்தனாகையாலே அதிகாரி புருஷனுமாய் அவனுக்கு ப்ரஹ்மஶிர:க்ருந்தநத்தாலே வந்த ஆபத்துத்தானும் ப்ராமாதிகமாக ஒருகால் பிறந்ததாகையாலே *தன்னலங்கல்மார்பில் வாசநீர் மாத்ரத்தாலே போக்கலாம்; நீராகிறீர், 127 "**श्रुतिः स्मृतिर्ममैवाज्ञा**" (ச்ருதிஸ் ஸ்மருதிர்மமைவாஜ்ஞா) என்கிறபடியே பகவதாஜ்ஞாரூபமான வேதவைதிக மர்யாதையை அதிக்ரமித்தவருமாய், அதுக்குமேலே, அக்ருத்யகரண க்ருத்யாகரணரூபமான பாபங்களை அநாதிகாலம் கூடுபூரித்தவருமா

‡ திருவாய் 8-7-7.

வ்யா –(கையிஞரித்யாதி)வெறும்புறத்திலே ‡ பட வடிக்கவல்ல கையிலே அழகு நிறைந்து சுரியையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யம், ப்ரதிபக்ஷத்தின் மேலே அனலையுமிழாநின்றுள்ள திருவாழி, இவற்றையுடையராயிருக்கை.

ஸ்ரீபாஞ்சஜந்யத்துக்குச்சுரி ஸ்வபாவமானாப்போலே திருவாழியாழ் வானுக்கும் ப்ரதிபக்ஷத்தின்மேலே அனலுமிழ்கை ஸ்வபாவம். திருக்கோட்டியூரிலே அனந்தாழ்வான், பட்டரை, “ஸ்ரீவைகுண்டநாதன் த்விபுஜனே,

---

யன்றோவிருப்பது; ஆனபின்பு உம்முடையபக்கல் ஒரு வைம்முதலின்றிக்கே இருக்க உம்முடைய பாபங்களை அப்படிப்போக்கப் போமோ; அது கிடக்க அந்த ருத்ரன்தான் தேவர்களுக்குமேலாயிருக்கையாலே, ஆனைமேலேயிருந்தார் ஆனைமேலேயிருந்தார்க்குச் சுண்ணம்பிடுமோபாதி அவன் கார்யம்செய்யக்கூடும், மநுஷ்யர்களுக்கும் கீழாயிருக்கிற உம்முடைய பாபங்களைப்போக்கக்கூடுமோ?; அது கிடக்க 128 “ब्रह्मणः पुत्राय ज्येष्ठाय” (ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய)என்கிறபடியே ப்ரஹ்மாவுக்கு ஜ்யேஷ்ட புத்ரனானபடியாலே தனக்குப் பௌத்ரனென்றிட்டு அவன் கார்யம்செய்யலாம், அப்படியிருப்பதொரு பந்தவிசேஷம் உமக்கில்லையே; அதுவுங்கிடக்க அந்த ருத்ரன்றான் ‖ “மூவுலகும் பலிதிரிவோன்” என்கிறபடியே திருப்பாற்கடலிலே செல்ல, பின்பன்றோ அவனுடைய துயரைப்போக்கிற்று, நீரும் அப்படி போனீரோவென்ன; அவற்றுக்கு அடைவே உத்தரமாயிருக்கிறது.

வ்யா:— (கையினார் சுரிசங்கனலாழியர்) § “கரிமுனிந்த கைத்தலம்” என்றும், 103 “परिघोपमाः” (பரிகோபமா:) என்றும் வெறும்புறத்திலே விரோதிகளை நிரஸிக்கவற்றாயிருக்கச்செய்தே அசிந்த்யசக்திகளான திவ்யாயுதங்களை தரித்துக்கொண்டு, * எப்போதும் கைகழலாநேமியானாயிருக்கிறது * நம்மேல்வினைகடிகைக் கன்றோ என்கிறார்.

ஸ்ரீபாஞ்சஜந்யத்துக்குச் சுரி ஸ்வபாவமானாப்போலே திருவாழிக்கு ப்ரதிபக்ஷிகள்மேலே அனலுமிழ்கையும் ஸ்வபாவமிறே. வெறும்புறத்திலே படவடிக்கவல்ல கையிலே அழகு நிறைந்து சுரியையுடைத்தான பாஞ்சஜந்யம், ப்ரதிபக்ஷத்தின்மேலே நெருப்பை

---

‡ (பா) ஆலத்திவழிக்க. ‖ திருநெடு-25.

சதுர்ப்புஜனோ" என்ன; இருபடிகளுமடுக்குமென்ன, இரண்டிலுமழகிதே தென்ன, த்விபுஜனாகில் பெரியபெருமாளைப்போலே இருக்கிறது, சதுர்ப் புஜனாகில் பெருமாளைப்போலே இருக்கிறது" என்றார்.

(நீள்வரை) மலையைக்கடலை ஒப்பாகச்சொல்லு மித்தனையிறே. நீட்சி போக்யதாப்ரகர்ஷம். §பச்சைமாமலை போல்மேனி; அதுக்குமேலே ஒப்பனையழகு.

---

உமிழாநின்றுள்ள திருவாழி இவற்றையுடையராயிருக்கை. 129 "स घोषो धार्तराष्ट्राणां हृदयानि व्यदारयत्" (ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயாநிவ்யதாரயத்) என்றும் †"தீயவசுரர் நடலைப்பட முழங்கும்" என்றுஞ்சொல்லுகிறபடியே விரோதிவர்க்கத்தைத் தன் த்வநியாலே தானே நிரஸிக்கவல்ல ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ‡"கருதுமிடம் பொருது" என்கிறபடியே விரோதிவர்க்கத்தை, /"கூறாய் நீறாய் நிலனாகி" என்கிறபடியே அழியச்செய்யுந் திருவாழியையும் தரித்துக்கொண்டிருக்கிறது என்னுடைய * அறுக்கலறாப் பாபங்களைப்போக்குகைக்கன்றோ. பட்டர் திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்கிறகாலத்திலே ஒருவிசேஷ திவஸத்தினன்று கோளரியாழ்வானைப்பார்த்துத்தெற்காழ்வார் சொன்னவார்த்தையை ஸ்மரிப்பது. திருக்கோட்டியூரிலே எழுந்தருளியிருக்க அனந்தாழ்வான், பட்டரை, ஸ்ரீவைகுண்டநாதன் த்விபுஜனோ சதுர்ப்புஜனோ வென்றுகேட்க; இருபடியாயிருக்கவுமடுக்குமென்ன; இரண்டிலும் அழகியதேதென்ன; த்விபுஜனாகில் பெரியபெருமாளைப்போலே யிருக்கிறது, சதுர்ப்புஜனாகில் பெருமாளைப்போலே யிருக்கிறதென்றார். (கையினார் சுரிசங்கனலாழியர்) நம்மைப்போலன்றிக்கே தெளியக்கண்டவர்கள் பெரியபெருமாளையும் சதுர்ப்புஜராயிறே அநுபவிப்பது.

(நீள்வரைபோல் மெய்யினார்) திவ்யாயுதங்கள் தானும் மிகையென்னும்படி மேருமந்தரமாத்ரமான என்னுடைய பாபராசிகளை, மலையையிட்டு மலையை நெரித்தாப்போலே நெரிக்கவற்றான பெரிய மலைபோலே திண்ணிதான வடிவையுடையவர். மலையைக் கடலை ஒப்பாகச்சொல்லுமித்தனை. நீட்சி-போக்யதாப்ரகர்ஷம். ‡"பச்சை

---

§திருமாலை-2. †நாச்-திரு8-2. ‡திருவாய்-10-6-8. /திருவாய்6-10-2

(துளபவிரையார் கமழ்நீண்முடி) பரிமளம் மிக்கிருந்துள்ள திருத்துழாய்மாலையாலே அலங்க்ருதமாய் ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை உடையருமாய். (எம்மையனார்) உறவுதோற்றுகை. எனக்கு ஜநகரானவர்.

(அணியரங்கனார்) ப்ராப்தவிஷயமாயிருக்கக் கடக்கவிராதே ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலிலேவந்து அண்ணியருமாயிருக்கிறபடி.

---

மாமலைபோல்மேனி" இந்த வடிவை அநுபவிப்பார்க்கு ப்ரகாசரூபமாயாய்த்து இவர்களிருப்பது; அதுக்குமேலே ஒப்பனையழகு.

(துளபவிரையார் கமழ்நீண்முடி)பெரியவர்கள் காரியஞ்செய்தவன் உம்முடைய காரியஞ்செய்யப் புகுகிறானேயென்ன; வெறும் ப்ரஹ்மருத்ராதிகளுக்கே சேஷியென்றன்றே அவன் முடிகவித்திருக்கிறது. 130 "पिशुनयन् किल मौलिः" (பிசுநயங் கில மௌளி:) 63 "पतिं विश्वस्य" (பதிம் விச்வஸ்ய) என்றுஞ்சொல்லுகிறபடியே உபயவிபூதிநாதனென்றன்றே. (துளபவிரையார்கமழ்) * ஸர்வகந்தவஸ்துவுக்குத் தன் கந்தத்தாலே மணங்கொடுக்கவற்றாய் மேன்மைக்குடலாயிருக்கிறபடி. (நீண்முடி)என்னளவும் வந்து என்னை விஷயீகரித்த முடி. (எம்மையனார்) ருத்ரனுக்குப் பௌத்ரனாயிருப்பதொரு பந்தவிசேஷமுண்டே, உமக்கு அதில்லையேயென்று சொன்னதுக்கு உத்தரஞ்சொல்லுகிறார்; அவனுக்கு பௌத்ரத்வநிபந்தநமொன்றுமேயன்றோவுள்ளது. 131 "माता पिता भ्राता"(மாதாபிதாப்ராதா) இத்யாதிப்படியே ஸர்வவிதபந்துத்வமுமுள்ளது எனக்கேயன்றோ. (எம்மையனார்) என்னைப்பெற்ற தமப்பனார். 132 "पितेव पुत्रस्य" (பிதேவபுத்ரஸ்ய) இத்யாதியிற்படியே இத்தலையிற் குற்றங்களைப் பொறுக்கவேண்டும்படியான பந்தமுடையவனன்றோ.

(அணியரங்கனார்) அந்த ருத்ரன் க்ஷீராப்தியளவும்போயன்றோ காரியங்கொண்டது, நீர் அவ்வளவும்போகிறிலீரேயென்ன; அதுக்கு உத்தரமாக அவன் *மூவுலகும் பலிதிரிவோனாகையாலே போய்க் காரியங்கொள்ளசக்தனானான், * அழுங்குழவியாயிருக்கிற வென்போல்வாரை ரக்ஷிக்கைக்கன்றோ, ப்ரஜைகிணற்றிலே விழுந்தால் கூடக் குதிக்குந்தாயைப்போலே இங்குவந்து சாய்ந்தருளிற்று. (அணியரங்கனார்) 131 "माता पिता भ्राता निवासः शरणसुहृद्

(அரவினணைமிசை) ரத்நங்களையெல்லாம் தங்கத்திலே புதைத்துக் காட்டுமாபோலே தன்னழகுதெரியத் திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்து காட்டுகிறபடி. (மேயமாயனார்)மின்மினி பறக்கிறபடி. 37"स मया बोधितः श्रीमान्" (ஸ மயா போதித: ஸ்ரீமாந்) எல்லார்க்கும் ஒன்றிலே சாய்ந்த வாறே பொல்லாங்குகள் தெரியும்; இங்குப் பழையவழகுகளும் நிறம்பெறும்.

---

त्विन्नारायणः"(மாதா பிதா ப்ராதா நிவாஸச்சரணம் ஸுஹ்ருத்கதிர் நாராயண:)என்கிறபொதுவன்று, ‡"திருவரங்கத்துளோங்கும்" இத்யாதிப்படியே பெரியபெருமாள் தாமேயென்கிறார். (அணியரங்கனார்) அலங்காரமான கோயிலிலேவந்து சாய்ந்தவர். ஆபரணமானது பூண்டவனுக்கு நிறங்கொடுக்கிறது; இவ்வூரும் ரக்ஷகனுக்கு நிறங் கொடுக்கிறதாகையாலே சொல்லுகிறது. (அணியரங்கனார்)ப்ராப்தி விஷயமாயிருக்கக்கடக்கவிராதே ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலிலேவந்து அண்ணியருமாயிருக்கிறபடி.

(அரவினணைமிசைமேயமாயனார்) இவ்வளவேயோவுள்ளது? 133"यत्र रामः सलक्ष्मणः" (யத்ர ராம: ஸலக்ஷ்மண:) என்றும், ||"நாகணைமிசைநம்பிரான்சரணேசரண்நமக்கு" என்றுஞ்சொல்லுகிறபடியே புருஷகாரபலமுமுண்டென்கிறார். (அரவினணைமிசைமேய) ரத்நங்களையெல்லாம் சாடியிலே பதித்துக்காட்டுமாபோலே தன்னழகு தெரியாதார்க்குத் திருவனந்தாழ்வான்மேலே சாய்ந்து காட்டினபடி. (அரவினணைமிசைமேய) தான்புருஷகாரமாகச் சிலரைக்காட்டிக்கொடுத்தால் அவர்களை அவன் ரக்ஷியாதேவிடில் தானும் அவனையெடுத்து உதறிப்போக்கும். (அரவினணைமிசைமேய மாயனார்) 134"स मया बोधितः श्रीमान् सुखसुप्तः परन्तपः"(ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:)என்கிறபடியே தானெழுந்திருந்து ஒரு வ்யாபாரம்பண்ணவேணுமோ, புலிகிடந்த தூறென்றால் மிருகங்களெல்லாம் காடுபாய்ந்து போமாபோலே ஆச்ரிதருடைய விரோதிவர்க்கமடையத் தான்கிடக்கிறபடியைக் கண்டபோதே §"காணேவொருங்கிற்றுக்கண்டிலமால்" என்னும்படி கிடக்கிற ஆச்சர்யபூதன். (மாயனார்) மின்மினிபறக்கிறபடி. 134 "स मया बोधितः श्रीमान्" (ஸ மயா போதித: ஸ்ரீமாந்) எல்லார்க்கும் ஒன்றிலே சாய்ந்தபோதே பொல்லாங்குகள் தெரியும்; இங்குப் பழையவழகும் நிறம்பெறும்.

---

‡ திருமாலை 37. || திருவாய் 5-10-11. § பெரி-திருவ 54.

(செய்யவாய்) ஸ்த்ரீகளுடைய பொய்ச்சிரிப்பிலே துவக்குண்டார்க்கு இச்சிரிப்புக் கண்டால் பொறுக்கவொண்ணுமோ.

(ஐயோ) திருவதரமும் சிவப்பும் அநுபவிக்க அரிதாய் "ஐயோ!" என்கிறார். (என்னை) பண்டே நெஞ்சு பறிகொடுத்த என்னை அந்யாயம் செய்வதே! என்று கூப்பிடுகிறார். (என்னை) கல்லைநீராக்கி, நீரையும் தானே கொண்டது.

இப்பாட்டில் ஸ்ரீவைகுண்டநாதன்படியும் இங்கே காணலாமென்கிறார்.

---

(மாயனார்) அங்ஙனன்றிக்கே, †"கிடந்ததோர் கிடக்கைகண்டும்" என்கிறபடியே இன்று நாமுஞ்சென்றநுபவிக்கப் பார்த்தாலும் ஒருக்கடித்தென்னவொண்ணாதே மல்லாந்தென்னவொண்ணாதே யிருக்கிற ஆச்சர்யத்தைச் சொல்லிற்றாகவுமாம். (மாயனார் செய்ய வாயையோ என்னைச்சிந்தை கவர்ந்ததுவே) ஸ்வநிகர்ஷாநுஸந்தாநத்தாலே பிற்காலிக்கிறவென்னை, ஸ்வாபாவிகஸௌந்தர்யத்தையும் போக்யதையையுமுடைய திருப்பவளமானது தன்னுடைய ஸ்மிதத்தைக்காட்டி, அருகே சேர்த்துக்கொண்டு என்னுடைய மநஸ்ஸை அபஹரித்தது. (என்னைச் சிந்தைகவர்ந்தது) உழக்கைக்கொண்டு கடலின் நீரை யளக்கப்புக்கு, அது தன்னையும் பறிகொடுத்தேன். (என்னைச் சிந்தைகவர்ந்தது) * துவர்த்தசெவ்வாயினார்க்கே துவக்கறத்துரிசனனை வென்னைக்கிடீர்! இப்படி அகப்படுத்திற்றென்கிறார். (செய்யவாய்) ஸ்த்ரீகளுடைய பொய்ச்சிரிப்பிலே துவக்குண்டார்க்கு இச்சிரிப்புக்கண்டால் பொறுக்கவொண்ணுமோ. (ஐயோ) திருவதரமும் சிவப்பும் அநுபவிக்க அரிதாய் "ஐயோ" என்கிறார்.

(ஐயோ) அவரும் தம்மை முழுக்கவநுபவிப்பிக்கப்பார்த்தார், நானும் முழுக்கவநுபவிப்பேனாகப் பாரித்தேன், இத்தை, திருவதரம் ஒட்டாதே இடையிலே இறுஞ்சிக்கொள்வதே! ஐயோ என்கிறார். (என்னை) கல்லை நீராக்கி நீரையுந்தானே கொண்டது. சித்தாபஹாரத்தைப்பண்ணி ஆத்மாபஹாரத்தை அழித்தது ப்ரதாநஶேஷியைக் கண்டவாறே த்வாரஶேஷியளவில் நில்லாதிறே.

இப்பாட்டில் ஸ்ரீவைகுண்டநாதன் படியும் இங்கே காணலாமென்கிறார்.

---

† திருமாலை-23.

8. பரியனாகிவந்த வவுணனுடல்கீண்ட அமரர்க்
கரியவாதிப்பிரா னரங்கத்தமலன் முகத்துக்
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப்
பெரியவாயகண்களென்னைப் பேதைமைசெய்தனவே.

பதவுரை:— பரியன் ஆகி—மிகவும் பருத்த வடிவையுடையனாய்க் கொண்டு, வந்த—(ப்ரஹ்லாதனை நலிய) வந்த, அவுணன்—அஸுரனை இரணியனுடைய, உடல்—சரீரத்தை, கீண்ட — கிழித்துப் பொகட்டவனும், அமரர்க்கு—பிரமன் முதலிய தேவர்கட்கும், அரிய—அணுகமுடியாதவனும், ஆதி-ஜகத்காரணபூதனும், பிரான்-மஹோபகாரகனும், அரங்கத்து—கோயிலில் எழுந்தருளியிருக்கிற, அமலன்—பரமபாவநனுமாகிய எம்பெருமானுடைய, முகத்து—திருமுகமண்டலத்தில், கரிய ஆகி—கறுத்த நிறமுடையவையாய், புடை பரந்து—விசாலங்களாய், மிளிர்ந்து—அலைமெறியுமவையாய், செவ்வரிஓடி—செவ்வரிபடர்ந்திருப்பனவாய், நீண்ட—(காதுவரை) நீண்டிருப்பனவாய், பெரிய ஆய—பெருமைபொருந்தியவையுமான, அக்கண்கள்—அந்தத் திருக்கண்களானவை, என்னை—அடியேனை, பேதைமை செய்தன—உந்மத்தனாகச் செய்துவிட்டன.

---

அவ:-எட்டாம்பாட்டு. திருக்கண்கள் என்னை அறிவுகெடுத்ததென்கிறார்.

---

அவ:—எட்டாம்பாட்டில், திருக்கண்கள் என்னை அறிவுகெடுத்த தென்கிறார். கீழ்ப்பாட்டிலே "செய்யவாயையோ என்னைச் சிந்தை

---

அரு.—ஏழாம்பாட்டு. (கையினாரித்யாதி) இங்குத்தெப்பம் அநுபவ பரிகரமான நெஞ்சு. (படவடிக்கை) ஈடுபடுத்துகை. "சுரி" என்று ஸுஷிரமாய், அத்தால் துளையென்றபடி. "சங்கு" என்றவிடத்தில் கடைக் குறைத்தலாய் "சங்கனல்" என்றாய், "கனலாழி" என்று-நெருப்பையுமிழ் கிற திருவாழியென்றபடி. பெரியபெருமாள் சதுர்ப்புஜராயிருக்கச்செய்தே யும் ஆபாதத: மேலெழ த்விபுஜராய்த் தோற்றுகிறாப்போலே, பரமபத நாதனும் சதுர்ப்புஜனாயிருக்கச்செய்தேயும் ப்ரமாணாந்தரங்களாலே த்விபுஜ னாய்த்தோற்றினானாகில் பெரியபெருமாள் மறைத்துக்காட்டுகிறாப்போலே ப்ரமாணங்களும் மறைத்துச்சொல்லுகிறதென்று பட்டருக்குக்கருத்து. இடையழகு வாசாமகோசரமாய் ஆச்சர்யமாயிருக்கையாலே.

**(இதம், இதம்)** என்னப்போகாமல் மின்மினிபறக்கிற தென்றபடி. நெஞ்சு பறிகொடுக்கை இரண்டாம்பாட்டிலே; அங்கேகல்லான நெஞ்சை நீராக்கி இங்கே அந்த நீரையும் அபஹரித்ததென்றபடி.

கவர்ந்தது" என்று திருப்பவளத்திலே இவர் அபஹ்ருதஹ்ருதயர் ஆகிறபடியைக் கடைக்கணித்துக்கொண்டுகிடக்கிற திருக்கண்களானவை, "செய்யவாயையோ" என்று இவர்தாமே சொன்னார், அப்படியே சிவப்பாலுங்க அழகொன்றுமேயன்றோ அந்தத் திருவதரத்துக்குள்ளது, சிவப்பும் கருப்பும் வெளுப்புமான பரபாகத்தாலுள்ள அழகுடையோமாயிருப்போமும் நாமல்லோமோ, 125 "मित्रभावेन संप्राप्तं न त्यजेयं" (மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம்) என்னுப்போலே சொல்லுகிறவார்த்தைகளுமெல்லாம் ஜீவிக்கையாகிறது 135 "जायमानं हि पुरुषं यं पश्येत्" (ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேத்) என்று-ஜாயமாநதசையில் நம்கடாக்ஷித்தபின்பு ஸாத்விகனாய் முமுக்ஷுவான வளவிலேயன்றோ, அதுகிடக்க அந்தவார்த்தைதான் "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தாப்போலே அன்றிக்கே, ||"மெய்ம்மைப்பெருவார்த்தை" என்று விச்வஸித்திருக்கலாம்படி வாத்ஸல்யமடியாகப் பிறந்தவார்த்தையென்று அந்த அகவாயில் வாத்ஸல்யத்துக்கு ப்ரகாசகமாய் இருப்போமும் நாமல்லோமோ, அதுகிடக்க, 136 "यथा कप्यासं पुण्डरीकमेवमक्षिणी" (யதாகப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ) என்றும் ‡"அனைத்துலகுமுடையவரவிந்தலோசனன்" என்றும் சொல்லுகிறபடியே மேன்மைக்கு ப்ரகாசகமாயிருப்போமும் நாமல்லோமோ; அதுக்குமேலே 137 "पुण्डरीकाक्ष रक्ष मां" (புண்டரீகாக்ஷ ரக்ஷ மாம்) என்றும் 138 "पुण्डरीकाक्ष न जाने शरणं परं" (புண்டரீகாக்ஷ! ந ஜாநே சரணம் பரம்) என்றும் சொல்லுகிறபடியே தந்தாமுடைய ஆபந்நிவாரணத்துக்கு உபாயமாகப்பற்றுவதும் நம்மைப் புரஸ்கரிக்கையாலே உபாயபாவத்தைப் பூரிக்கிறோமும் நாமன்றோ, †"தாமரைக்கண்ணனை விண்ணோர் பரவும் தலைமகனை" என்று அவனுக்கு போக்யதா ப்ரகர்ஷமுண்டாகிறது நம்மோட்டைச் சேர்த்தியாலன்றோ என்னுப்போலே தங்களுடைய ஏற்றத்தைக்காட்டி, "அவ்வாயன்றியானறியேன்" என்றிருக்கிற தம்மை, §"தாமரைக்கண்களுக்கு அற்றுத்தீர்ந்து" என்னும்படி பண்ணிக்கொண்டபடியைச் சொல்லு

|| நாச்-திரு 11-10. ‡ திருவாய் 6-7-10. † திருவாய் 2-6-3.
§ திருவாய் 7-3-3.

கிறார். § "செங்கனிவாயின் திறத்ததாயும் செஞ்சுடர் நீண்முடித் தாழ்ந்ததாயும் சங்கொடுசக்கரம் கண்டுகந்தும்" என்றவளவும் சொன்னார் கீழ்; * தாமரைக்கண்களுக்கு அற்றுத்தீர்ந்தபடி சொல்லு கிறார் இதில்.

"பாரமாய பழவினை பற்றறுத்து" என்று - தம்முடைய அஜ்ஞாநாஸத்கர்மாதி நிகர்ஷம்பாராதே, பெரியபெருமாள், பெரிய பிராட்டியார் புருஷகாரமாக, தாம் அநாதி காலமார்ஜித்த பாபங்களை அடையப்போக்கினபடியைச் சொன்னாராய், அது கூடுமோவென் கிற அபேக்ஷையிலே கூடுமென்னுமிடத்துக்கு ருத்ரனை த்ருஷ்டாந்த மாகச் சொன்னாராய், அநந்தரம் விஷமத்ருஷ்டாந்தமென்று சில ஹேதுக்களைச் சொல்ல, அவற்றுக்கு அடைவே உத்தரஞ் சொன் னார் - கீழிற்பாட்டில்; இதில் - அந்த "பாரமாய" என்கிற பாட்டைப் பற்ற ஓரபேக்ஷை எழும்ப அதுக்கு உத்தரமாயிருக்கிறது. அதா கிறது - அநாதி காலார்ஜிதமான உம்முடைய பாபங்களை அடையப் போக்கினனென்றீர், அது மறுகிளையெழாதபடி போய்த்ததாவது - அவித்யாஸஞ்சித கர்மமென்றும், அநாத்யவித்யாஸஞ்சித புண்ய பாபகர்ம ப்ரவாஹப்ரவ்ருத்தமென்றும் சொல்லுகிறபடியே அந்த கர்மத்துக்கு ஹேதுபூதையான அவித்யை போனாலன்றோ அதுபோய்த்ததாவது; அதுபோய்த்ததோ என்கிற அபேக்ஷையிலே அந்த அவித்யையாவது தன்னோடு அநுபந்தித்தாரை பகவத்ப்ரவண ராக வொட்டாதே விபரீதங்களை அநுஷ்டிப்பிக்குமதிறே; அப்படியே தன்னோடநுபந்தித்த ப்ரஹ்லாதனை பகவத்ப்ரவணராக வொட்டாதே விபரீதங்களை அநுஷ்டிப்பிக்கத் தேடின ஹிரண்யனை, 139 **"तमो हिरण्यरूपेण परिणाममुपागतम्"** (தமோ ஹிரண்யரூபேண பரிணாம முபாகதம்) என்கிறபடியே தமோகுணம் ஹிரண்யனென்று ஒரு வடிவுகொண்டதாயிறே இருப்பது; அப்படியே இருக்கிறவனை, † "அங்கப்பொழுதே அவன் வீயத்தோன்றிய" என்கிறபடியே ந்ருஸிம்ஹரூபியாய் வந்து தன் திருக்கையிலுகிராலே கிழித்துப் பொகட்டாப்போலே, * ஞானக்கையாலே என்னுடைய அவித்யையை கிழித்துப்பொகட்டானென்கிறார்.

§ திருவாய் 7-3-3. † திருவாய் 2-8-9.

வ்யா:—(பரியஞுகிவந்த) பகவத்குணங்களை அநுஸந்தித்து நைந்திராமே, சேஷத்வத்தையறிந்து மெலிந்திராமே, ஸர்வேச்வரனை ஆசைப்பட்டுத் தளர்ந்தவுடம்பா யொசிந்திராமே. (பரிய) நரஸிம்ஹத்துக்கும் பிற்காலிக்க வேண்டும்படி இருக்கை. ஊட்டியிட்டு வளர்த்தபன்றிபோலே உடம்பை வளர்த்தானித்தனை. (வந்த) இப்போது தாம் வயிறுபிடிக்கிறார்

---

வ்யா:—(பரியனுகி) பகவத்குணத்தை அநுஸந்தித்து நைந்திராமே, ஶேஷத்வத்தையறிந்து மெலிந்திராமே, ஸர்வேச்வரனை ஆசைப்பட்டுத் தளர்ந்தவுடம்பா யொசிந்திராமே, நாஸிம்ஹத்துக்கும் பிற்காலிக்கவேண்டும்படி இருக்கை. ஆத்மவஸ்துவென்று ஒன்றுளது, அதுக்கு அவனே ஶேஷியாயிருக்கையாலே அந்தஶேஷியானவனை நம்முடைய ஶேஷத்வமாகிறஸ்வரூபத்தின் ஸித்திக்காகப் பெறவேணுமென்று, *நினைந்து நைந்துள்கரைந்துருகி உடம்பை யிளைக்கப் பண்ணுகிறானன்றே. அங்ஙனன்றியிலே பரமாத்மாவை யநுபவிக்க ஆசைப்பட்டுப் பெறாமையாலே பக்தி தலைமண்டையிட்டு ‡"நின்பாலன்பாயே அடியேனுடலம் நீராயலைந்து கரையவுருக்குகின்ற நெடுமாலே" என்கிறபடியே ஶரீரத்தை இளைப்பித்து மெலிந்திருக்கிறானன்றே; 140 "परमेश्वरसंज्ञोऽज्ञ किमन्यो मय्यवस्थिते" (பரமேச்வரஸம்ஜ்ஞோऽஜ்ஞ கிமந்யோ மய்யவஸ்திதே) என்கிறபடியே தன்னுடைய அஹங்காரமமகாரங்களாலே பூண்கட்டி, 141 "बलवान् ब्रह्मराक्षसः" (பல்வாந் ப்ரஹ்மராக்ஷஸ:) என்னுமாபோலே பருக்கப்பண்ணின ஶரீரமிறே. ராஜாக்களுக்குச் சிலர் ஊட்டியிட்டுச் சிலகாவற்பன்றி வளர்த்துவைக்குமாபோலே, நரஸிம்ஹத்தினுக்கு இரைபோரும்படி தேவர்கள் வரங்களாலே யூட்டியிட்டு வளர்த்துவைத்தார்கள்; மேல் இத்தால்வரும் அநர்த்தமு மறியாமையாலே வரங்கொடுத்துப் பருக்க வளர்த்தார்கள்; இதுதானே தாம் களிக்கைக்கு உறுப்பாய்த்து. (வந்த) இப்போது தாம் வயிறுபிடிக்கிறார். இன்றும் வருகிறானைக் காணும் இவருக்குத் தோற்றுகிறது அநுகூலனாய் வருகையன்றிக்கே பகவத் தத்வமில்லையென்றும், உண்டென்கிறவனை நலிகைக்கென்றும்வந்த க்ரௌர்யத்தை நினைத்து பயப்படுகிறார்.

---

‡ திருவாய் 5-8-1.

(அவுணனுடல்கீண்ட) நரஸிம்ஹத்தினுடைய மொருந்த முகமும், நாமடிக்கொண்ட உதடும், செறுத்து நோக்கின நோக்கும், குத்தமுறுக்கின கையும் கண்டபோதே பொசுக்கின பன்றிபோலே ‖ மங்குநாரைக் கிழிக்குமாபோலே கிழித்தபடி.

(அமரர்க்கரிய ஆதிப்பிரான்) தேவர்களுக்கு உத்பாதகனுன மாத்ரமே; கையாளனுய்நிற்பது ஆச்ரிதர்க்கு. சிறிக்கனுக்கு உதவிநிற்கிற நிலைதன்னிலே ப்ரஹ்மாதிகளுக்குப் பரிச்சேதிக்கவொண்ணுதபடி நிற்கிறப்ரதாநன் 38 "क्वाहं रजःप्रकृतिरीश तमोधिकेऽस्मिन् जातस्सुरेतरकुले क्व तवानुकम्पा। न ब्रह्मणो न च भवस्य न वै रमाया यो मेर्पितः शिरसि

(அவுணன்) இப்படி பகவத்பாகவத விஷயமென்றால் அவன் சிவட்கென்கைக்கு ஹேதுவென்னென்னில்; * ஆஸுரீம்யோநிமாபந்நனுய் மூடனுகையாலே என்கிறுர் (உடல்கீண்ட) திருவாழியாழ்வானுக்கும் பிற்காலிக்க வேண்டும்படியிறே * ஊண்மல்கிமோடு பருத்திருக்கிறபடி. அப்படியிருக்கிற ஹிரண்யமரீமானது நரஸிம்ஹத்தினுடைய மொருந்தமுகமும் நாமடிக்கொண்டவுதடும், இறுத்து நோக்கின நோக்கும் குத்தமுறுக்கினகையும் கண்டபோதே பொசுக்கென பன்றிபோலே உலர்ந்த தாழைநாரைக் கிழித்தாப்போலே கிழித்தபடி. (உடல்கீண்ட) தன்னதான ஆத்மவஸ்துவுக்கு அழிவுவாராமல் † "கிள்ளிக்களைந்தானை" என்னுமாபோலே, அஹங்கார ஹேதுவான தேஹத்தைக் கிழித்துப்பொகட்டான்.

(அமரர்க்கரிய) இப்படி ப்ரஹ்லாதனுக்கு எளியனுய்நிற்கிற அவ்வளவுதன்னிலே ப்ரஹ்மருத்ராதிகளுக்குக்கிட்டவரியனுயிருக்கும் 142 "क्वाहं रजःप्रकृतिरीश तमोऽधिकेऽस्मिन् जातस्सुरेतरकुले क्व तवानुकम्पा। न ब्रह्मणे न च भवस्य न वै रमाया यो मेर्पितः शिरसि पद्मकर प्रसादः" (க்வாஹம் ரஜ:ப்ரக்ருதிரீஶ தமோதிகேऽஸ்மிந் ஜாதஸ்ஸுரேதர குலேக்வ தாவாநுகம்பா। ந ப்ரஹ்மணோ ந ச பவஸ்ய ந வை ரமாயா யோ மேர்பித: ஶிரஸி பத்மகரப்ரஸாத:) ஸ்வஸாமர்த்யங்கொண்டு கிட்ட நினைப்பார்க்குதயை பண்ணுமளவிலும் கிட்டவரிதாயிருக்கும்; அநந்ய ப்ரயோஜநர்க்குச் சீற்றத்திலும் கிட்டலாயிருக்கும். அங்ஙனன்றியிலே, தேவர்களுக்கு அரியனுயிருக்கிறவன் தமக்கு எளியனுயிருக்

‖ (பா) மங்கின. † திருப்பாவை-13.

पद्मकरप्रसादः ॥" (க்வாஹம் ரஜ:ப்ரக்ருதிரீஶ தமோதிகேஸ்மிந் ஜாதஸ்ஸுரேதரகுலே க்வ தவாநுகம்பா। ந ப்ரஹ்மணோ ந ச பவஸ்ய ந வை ரமாயா யோ மேர்ப்பிதச்ஶிரஸி பத்மகரப்ரஸாத:)

(ஆதிப்பிரான்) தான் முற்கோலி உபகரிக்குமவன். (பிரான்) ப்ரஹ்லாதனுக்கு எளியனான நிலையும் ப்ரஹ்மாதிகளுக்கு அரியனான நிலையும் இரண்டும் தமக்கு உபகாரமாயிருக்கிறது.

---

கிறபடியைச்சொல்லுகிறார். அதாவது தம்முடைய நிகர்ஷம் பாராதே தம்மையே விஷயீகரித்துத் தம்முடைய துஷ்கர்மங்களை யடைய ஸவாஸநமாகப்போக்கி, தம்மை முழுக்கவநுபவிப்பித்துக் கொண்டிருக்கிறபடியைச் சொல்லுகிறார்.

இப்படி தேவர்களுக்கரியனாயிருக்கிறவன் உமக்கு எளியனா யிருக்கைக்கடி என்னென்னில்; (ஆதி) காரணபூதன். பஹுபுத்ர வானானவன் விகலகரணனான புத்ரன் பக்கலிலே போர வத்ஸலனா யிருக்குமாபோலே, இவனும் ஜகத்காரணபூதனாயிருக்கச் செய்தே யும் என்னுடைய அஜ்ஞாநாஶக்திகளைத் திருவுள்ளம்பற்றி என்னளவிலே போர வத்ஸலனாயிருக்கும். (ஆதி) தான் முற்கோலி உபகரிக்குமவன்.

(அமரர்க்கரிய வாதிப்பிரான்) தமக்கு உபகரித்தபடியை நினைத்து "பிரான்" என்கிறாரல்லர், தேவர்களுக்கு கிட்டவரியனாய் இருக்கச்செய்தே ப்ரஹ்லாதனுடைய விரோதியை, முற்பாடனாய்ச் சென்று போக்கின உபகாரத்தை நினைத்துச் சொல்லுகிறார். (ஆதிப் பிரான்) ப்ரஹ்லாதன் "ஸர்வகாரணம்" என்ன; ஹிரண்யன் அதுக்குப்பொறுமல் "இந்தத்தூணிலுண்டோ அந்தக்காரண பூதன்" என்று தூணைத்தட்டிக் கேட்க, ப்ரஹ்லாதனும் ஸர்வாந்த ராத்மாகாண் அவன், ஆகையாலே இதிலுமுண்டு" என்ன; §"அங்கப் பொழுதே" என்கிறபடியே – அவன் தட்டின தூணிலேவந்து நரஸிம்ஹரூபமாய்த் தோன்றி அவன் தட்டின கையைப்பிடித்து, ||"பொன்பெயரோன் வாய்தகர்த்து மார்பிடந்தான்" என்கிறபடியே அவனைக்கதுப்பிலே அடித்து அவன்மார்பைக் கிழித்து ப்ரஹ்லாத

(அரங்கத்தமலன்) எல்லார்க்குமுதவும்படி கோயிலிலேவந்து கண் வளர்ந்தருளுகையாலே வந்தசுத்தி ஒருகால் தோற்றிப்போதல், அவதாரம் போலே தீர்த்தம்ப்ரஸாதித்துப்போதல் செய்யாமையாலே வந்த சுத்தி யாகவுமாம்.

---

னுடைய ப்ரதிஜ்ஞா வாக்யத்தை க்ரபஞ்செலுத்தி, தன்னுடைய காரணத்வத்தையும் ஈச்வரத்வத்தையும் நிலைநிறுத்தின உபகாரத்தைப் பற்றச் சொல்லுகிறாராகவுமாம்.

(அரங்கத்தமலன்) நரஸிம்ஹ வ்யாவ்ருத்தி. அதாவது ஒரு காலவிஶேஷத்திலே ஒருதூணின் நடுவேவந்துதோன்றி, ப்ரஹ்லாத னொருவனுக்கு வந்தவிரோதியைப்போக்கின வளவிறே அங்குள்ளது; இங்குக் கிடக்கிறகிடை எல்லாக்காலத்திலும் எல்லாருடைய விரோதி களையும் போக்குகைக்கு அணித்தாகவந்து இரண்டு தூணுக்கும் நடுவேகிடக்கிறகிடையாகையாலே வ்யாவ்ருத்தமாயிருக்குமிறே. (அரங்கத்தமலன்) ப்ரஹ்லாதனுகிறான் பகவத்ஸந்நிதி உண்டான வளவிலே, 143 "या प्रीतिरविवेकानां" (யா ப்ரீதிரவிவேகாநாம்) என்று பகவத்விஷயப்ரேமத்தை யபேக்ஷிக்கையாலும், மலைகளாலே கடலிலே யமுக்குண்டபோது ஸ்தோத்ரங்களைப் பண்ணுகையாலும், 144 "मयि भक्तिस्तवास्त्येव" (மயி பக்திஸ்தவாஸ்த்யேவ) என்கிற வநந்தரமே ஜ்ஞாநபக்திகளையுடையனுகையாலே அவனளவிற்பண்ணின உபகாரம் அப்படியாகையாலே வருவதொரு மாலிந்யமுண்டு அங்கு; இங்கு || "ஏழையேதலன்கீழ் மகனென்னுதிரங்கி" என்கிறபடியே நிகர் ஷாநுஸந்தாநம்பண்ணிப் பிற்காலிப் பாரளவிலும் அந்த நிகர்ஷம் பாராதே மேல்விழுந்து விஷயீகரித்து விரோதிகளையும்போக்கிப் பரமபுருஷார்த்தத்தைக் கொடுக்கையாலே கீழ்ச்சொன்னமாலிந்யம் பெரியபெருமாளுக்கில்லையென்றிட்டு, "அரங்கத்தமலன்" என்கிறார்.

அஸ்மதாதிகளும் திருமுகத்திலே விழித்து அவித்யாஶௌசம் போய்ஶுத்தராம்படியான அமலத்வம்; என்னையுமாளாம்படிலோக ஸாரங்க மஹாமுநிகளோடே கூட்டின அமலத்வம். எல்லார்க்கு முதவும்படிக்கோயிலிலே கண்வளர்ந்தருளுகையால் வந்தஶுத்தி.

---

|| பெரிய-திருமொ 5-8-1.

(முகத்து) அவனுடைய முகத்து (கரியவாகி) விடாய்த்தார் முகத்திலே நீர்வெள்ளத்தை வெட்டிவிட்டாப் போலேயிருக்கை.

† "சிட்டனே செழுநீர்த்திருவரங்கத்தாய்" என்னக்கடவதிறே ஒருகால் தோற்றிப்போதல், அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதித்தல் செய்யாமையால்வந்த ஸக்தியாகவுமாம். விரோத்யஸப்கழிந்து ஸக்தரானால் அநுபவவிஷயம் சொல்லுகிறதுமேல்; (அரங்கத்தமலனித்பாதி) இவைபோலொன்றேயமையும் என்னைப் பேதைமை செய்யவென்கிறார். || "வண்டினமுரலும்" இத்யாதிப்படியே * அண்டர்கோனும், பரமபதம் முதலான வாஸஸ்தானங்களையும் விட்டுப் படுகாடுகிடக்கும்படியாயாய்த்து இவ்வூரின் போக்யதையிருப்பது; அதுக்குமேலே கண்வளருகிறவருடைய அமலத்வம் 125 "मित्रभावेन संप्राप्तं न त्यजेयं कथञ्चन" (மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந) என்ற விபீஷணவிஷயமான வார்த்தையை க்ரயஞ்செலுத்துகைக்காக * செல்வவிபீடணற்கு வேறாகநல்லானாய், * தென்றிசை இலங்கைநோக்கிக் கண்வளர்ந்தருளுகிறானத்தனை. ஸர்வப்ரகாரநிக்ருஷ்டனான என்போல்வாரையும் ஸக்தராக்குகைக்காகவாகையால் கிடக்கிற ஸௌலப்யம்; அதுக்குமேலே ஒன்றிறே முகம்.

(முகத்து) 145 "सख्यः पश्यत कृष्णस्य मुखं" (ஸக்ய: பச்யத க்ருஷ்ணஸ்யமுகம்) என்றும், / "உன்முகம் மாயமந்திரந்தான்கொலோ" என்றுஞ் சொல்லுகிறபடியே - வெறும் முகந்தானே ஆகர்ஷகமாயிறே இருப்பது. கீழ் - தாமநுபவித்த திருப்பவளத்தின வைலக்ஷண்யம் பின்னாட்டுகையாலே அந்தத் திருவதரத்தை உடைத்தான திருமுகத்தைப்பிரித்துச் சொல்கிறார். அதுக்குமேலே, 145 "अत्यरुणेक्षणं" (அத்யருணேக்ஷணம்) என்கிறபடியே இரண்டாழங்காலாய்த்து, சந்த்ரமண்டலத்திலே இரண்டு தாமரை பூத்தாப்போலேயும் ஒரு தாமரையிலே இரண்டுதாமரை பூத்தாப் போலேயுமிருக்கிற திருக்கண்கள்.

(கரியவாகி) புண்டரீகப்போலே வெளுத்திருக்கிற திருக்கண்களுக்குப்பரபாகமாம்படி இரண்டு கருவிழியையுடைத்தாய் உங்

† திருவாய் 7-2-4. || திருமாலை-15. / நாச்-திரு 2-4.

(புடைபரந்து) கடலைத் தடாகமாக்கினாப்போலே இடமுடைத்தாயிருக்கை. (மிளிர்ந்து) திரைவீசிக் கரையாலும் வழிபோக வொண்ணாதிருக்கை. (செவ்வரியோடி) ச்ரியபதித்வத்தாலும் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கை. (நீண்ட) செவியளவும் அலையெறிகை.

---

ஞனன்றிக்கே, அஞ்ஜாநத்தாலே கறுத்திருத்தல்; கண்களைக் கண்டபோதே தாபத்ரயதப்தனுடைய ஸகலதாபங்களும் போம்படி குளிர்ந்திருக்குமென்னுதல் விடாய்த்தார் முகத்திலே நீர்வெள்ளத்தை வெட்டிவிட்டாப்போலே இருக்கை.

(புடைபரந்து) கடலைத்தடாகமாக்கினாப்போலே இடமுடைத்தாயிருக்கை ஸ்வத: காண்கிற அளவுக்கவ்வருகே இரண்டு பார்ச்வமும் இடுங்கியிராதே, (பரந்து) இடமுடைத்தாய் அவித்யாதிகளைப் போக்கி அநுபவிப்பிக்கும் காரியங்களைப்பற்ற வருகிற பரப்பு.

(மிளிர்ந்து) க்ருபாபரிதமாயிருக்கையாலே கரையருகும் வழி போகவொண்ணாதபடி அலையெறிந்து திரைவீசுகை. காணவேணு மென்கிற இவருடைய த்வரையிற் காட்டிலும் இவரை விஷயீகரிக்கையிலுண்டான கண்களின் த்வரையைச் சொல்லுகிறது. (செவ்வரியோடி) ச்ரிய:பதித்வத்தாலும் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கை. ஐச்வர்யத்தாலும் வாத்ஸல்யத்தாலும் சிவந்திருக்கும் என்னவுமாம். (நீண்ட) ஒழுகுநீண்டிருக்கையும், தம்மளவும் கடாக்ஷம் வந்து விஷயீகரித்தபடியும். 146 "**कृपया परया करिष्यमाणे सकलाङ्ग किल सर्वतोक्षिनेत्रे। प्रथमं श्रवसी समास्तृणाते इति दैर्घ्येण विदन्ति रङ्गनेतुः।**" (க்ருபயா பரயா கரிஷ்யமாணே ஸகலாங்கம் கில ஸர்வதோக்ஷிநேத்ரே। ப்ரதமம் ச்ரவஸீ ஸமாஸ்த்ருணுதே இதி தைர்க்யேண விதந்தி ரங்கநேது:) பெரியபெருமாளுடைய திருக்கண்களானவை திருச்செவியளவுஞ் செல்ல நீண்டிருக்கிறபடிக்கு ஒரு நினைவுண்டென்கிறார் பட்டர். அதாவது - பெரியபெருமாளுடைய திருக்கண்களானவை மீனுக்குத் தண்ணீர் வார்ப்பாரைப்போலே நித்யஸூரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கிற ஸ்ரீவைகுண்டநாதனுக்கும் கண்களிரண்டாய், ராம க்ருஷ்ணாத்யவதாரம்பண்ணி குஹாதிகள் விதுராதிகள் தொடக்க மானார் சிலர்க்கு அல்பகாலம் முகங்கொடுத்து விஷயீகரித்து வந்தாப்

(அப்பெரியவாயகண்கள்) பின்னையும் போக்தாவினளவன்றிக்கே இருக்கையாலே "அப்பெரியவாயகண்கள்" என்கிறார். "இது" என்ன வொண்ணாதே பரோக்ஷ நிர்தேசம் பண்ண வேண்டும்படியிருக்கை. (என்னை) பெரியமனிச்சன்கிடீர் நான். என்வைதக்த்யத்தைப் பறித்துப் பொகட்டு மௌக்த்யத்தைத்தந்தன. ஒருவன் எய்தத்தை மற்றவனும் எய்யுமாபோலே.

---

போலே, வெறுங்கையோடே போனவர்களுக்குங் கண்ணிரண்டாய், ஸம்ஸாரம் கிழங்கெடுத்தாலல்லது எழுந்திரேனென்று கோயிலிலே அர்ச்சாரூபியாய் அவ்வவர் நிகர்ஷங்களைப்பாராதே முகங்கொடுத்துக் கொண்டு கிடக்கிற பெரியபெருமாளுக்கும் கண்ணிரண்டாயிருக்கவோ; இவருடைய க்ருபையைப்பார்த்தால் உடம்பெல்லாம் கண்ணாக வேண்டாவோவென்று பார்த்து, எல்லாமண்டலங்களும் தங்களுக்கே ஆகவேணுமென்றிருக்கும் ராஜாக்கள், முற்படத் தங்களுக்கு ப்ரத்யாஸந்நரான வன்னியரை அழியச் செய்யுமாபோலே பெரியபெருமாளுடைய அவயவாந்தரங்களடைய நாமேயாகவேணும் என்று, பார்ச்வஸ்தங்களாயிருக்கிறன திருச்செவிகளாகையாலே அவற்றை வென்று அவ்வருகே போவதாகமுற்பட, அவற்றுடனே அலையெறிகிறாப்போலேயாய்த்துத் திருக்கண்கள் செவிகளளவும் நீண்டிருக்கிறபடி.

(அப்பெரியவாயகண்கள்) பின்னையும் போக்தாவினளவன்றிக்கே இருக்கையாலே "அப்பெரியவாயகண்கள்" என்கிறார். "இது" என்னவொண்ணாதே பரோக்ஷநிர்த்தேசம் பண்ண வேண்டும்படியிருக்கை. கீழ் "பரந்து நீண்டு" என்று ஆயாம விஸ்தாரங்களைச்சொல்லுகையாலே, இங்கு போக்யதாப்ரகர்ஷத்தைச் சொல்லுகிறது. போக்யதாதிசயத்தாலே, † "அப்பாஞ்ச சன்னியம்" என்னுமாபோலே முகத்தைத் திரியவைத்துச் சொல்லுகிறார். (என்னை) அறப்பெரியமனிச்சன்கிடீர் நான், என்வைதக்த்யத்தைப் பறித்துப் பொகட்டு மௌக்த்யத்தைத் தந்தன. ஒருவனெய்ய அவனை மற்றையவனு மெய்யுமாபோலே.

(பேதைமை செய்தனவே) ராமசரம்போலே முடிந்து பிழைக்கவொட்டுகிறனவில்லை. (என்னைப்பேதைமை செய்தனவே) கீழ்ப்

---

† திருப்பல்லா-2.

9. ஆலமாமரத்தினிலை மேலொருபாலகனாய்
ஞாலமேழுமுண்டா னரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரேழில்
நீலமேனிஐயோ! நிறைகொண்ட தென்நெஞ்சினையே.

பதவுரை:— மா — பெரியதான, ஆலமரத்தின் — ஆலமரத்தினுடைய, இலை மேல்—(சிறிய) இலையிலே, ஒரு பாலகன் ஆய்—ஒரு சிறு பிள்ளையாகி, ஞாலம் ஏழும் உண்டான்—ஏழுலகங்களையும் திருவயிற்றிலேவைத்து ரக்ஷித்தவனும், அரங்கத்து—கோயிலிலே, அரவு இன் அணையான்— திருவனந்தாழ்வானாகிற இனிய திருப்பள்ளியின் மீது கண்வளர்ந்தருள்பவனுமான ஸ்ரீரங்கநாதனுடைய, கோலம்—

---

(பேதைமை செய்தனவே) ராமசரப்போலே முடிந்து பிழைக்கவொட்டுகிறனவில்லை. இத்தால் நரஸிம்ஹாவதாரத்தின்படியும் இங்கேயுண்டென்கிறார்.

---

பாட்டிலே "என்னைச்சிந்தை கவர்ந்ததுவே" என்று ஜ்ஞாநப்ரஸரத்வாரத்தை அபஹரித்தபடியைச் சொல்லிற்று; இந்து, ஞானத்தை அபகரித்தபடியைச் சொல்லுகிறது. ஜ்ஞாநாபஹாரமாவது— அழகிலே அலமருகை. * மாதரார்கயற்கணென்னும் வலையுள் பட்டழுந்துவேனை தன்பக்கலிலே ஆதாரத்தைப் பிறப்பித்து, * மதியெல்லாமுள் கலங்கும்படி பண்ணிற்று. (என்னைப்பேதைமை செய்தனவே) அவன் அக்கண்களாலே ‡ "அமலங்களாக விழிக்கும்" என்றிருந்த கடாக்ஷங்களுக்கு இலக்கானார்க்குத் தெளிவைப் பிறப்பிக்கக் கடவதாயிருக்க, எனக்குள்ள அறிவுதன்னையுமழித்தது. இனி /"தாமரைக்கண்களால் நோக்காய்" என்பார்க்கெல்லாம் அழகிதாக ப்ரார்த்திக்கலாம்.

இப்பாட்டில் நரஸிம்ஹாவதாரத்தின்படியும் இங்கேயுண்டென்கிறார்.

---

அரு:—எட்டாம்பாட்டு. (பரியனாகியித்யாதி) (ஆதி) காரணபூதனாதல், ப்ரதாநனாதல், முந்துறவாதல், ஆக்மூன்றர்த்தம். (பெரியமாரீச்சன்) ஒன்றுக்கும் கலங்காத கல்நெஞ்சன், "கண்கள்" என்கிறத்விவசநத்தைப் பற்றவருளிச்செய்கிறார் (ஒருவனெய்யவித்யாதி)

‡ திருவாய் 1-9-9. / திருவாய் 9-2-1.

அழகிய, மா-சிறந்த, மணி ஆரமும் — ரத்நங்களாற் செய்யப்பட்ட ஹாரமும், முத்து தாமமும்—முத்துவடமும், ஓர் எழில்—ஒப்பற்றதான அழகையுடையதும், நீலம்-கருநெய்தல் மலர்போன்றதுமான, மேனி—திருமேனியானது, என் நெஞ்சினை—எனது நெஞ்சினுடைய, நிறை—அடக்கத்தை, கொண்டது—கொள்ளைகொண்டு போயிற்று, ஐயோ!—(இதற்கென்செய்வேன்?).

---

அவ:— ஒன்பதாம்பாட்டு. ஊரழிபூசல்போலே திருமேனியின் நிறமானது எல்லாவற்றையுங்கூடக் கொண்டுவந்து என்னெஞ்சைக் கொள்ளைகொண்டதென்கிறார்.

---

அவ:— ஒன்பதாம்பாட்டில் — † ஊழிபூசல்போலே நிறமானது எல்லாரையுங் கூட்டிக்கொண்டு வந்து என்னெஞ்சைக் கொள்ளைகொண்டதென்கிறார். கீழ்ப்பாட்டில் - "கண்களென்னைப்பேதமை செய்தனவே" என்று 147 "ब्रह्मदण्डप्रकाशानां विद्युत्सदृशवर्चसां। स्मरन् राघवबाणानां विव्यथे राक्षसेश्वरः॥" (ப்ரஹ்மதண்ட ப்ரகாஶாநாம் வித்யுத்ஸத்ருஶவர்ச்சஸாம்! ஸ்மரந் ராகவ - பாணாநாம் வ்வ்யதே ராக்ஷஸேச்வர:) என்கிறபடியே - ராமஶரம் போலே இருக்கிற அந்தக்கடாக்ஷ பாதங்களாலே, § "கடைக்கண்ணென்னுஞ் சிறைக்கோலால் நெஞ்சூடுருவவேவுண்டு நிலையுந்தளர்ந்துநைவேனை" என்றாப்போலே இவர் படுகிறபாட்டைக்கண்ட திருமேனியானது, தனிப்பூச்சூடுவாரைப்போலே நம்முடைய அவயவஸௌந்தர்யத்தைத் தனித்தனியே அநுபவித்தாரித்தனையன்றோ, இவர் கலம்பகன்மாலை சூடுவாரைப்போலே இந்த அவயவங்களுக்கு ஆச்ரயமான நம்மை அவற்றோடேகூட அநுபவிக்கப்பெற்றிலரே; இனி மற்றையாழ்வார்கள்போலே பரக்கப்பேசிநின்று அநுபவிக்கவும் வல்லரல்லர், ஆனபின்பு இந்த அவயவங்களோடும் ஆபரணங்களோடுமாகச்சேர்ந்த சேர்த்தியால் வந்தவழகும் ஸ்வாபாவிக ஸௌந்தர்யத்தால் வந்த அழகுமான நம்முடைய ஸமுதாய ஶோபையை இவரை அநுபவிப்பிக்க வேணுமென்று பார்த்து, ராஜாக்களூறு பூசலாய்க் கொலையிலே பரந்து தங்களுடைய சதுரங்க பலத்தையும் சேர்த்துக்கொண்டு அணியணியாகச் சிலர்மேலே

---

† ஊரழிபூசல் § நாச்-திரு 13-3.

வ்யா:—(ஆலமாமரத்தினித்யாதி) பெரிய ஆலமரத்தினுடைய சிற்றிலையிலே யசோதாஸ்தநந்தயமும் பெரியதென்னும்படி அத்விதீயனான பாலனாய்

---

யேறுமாபோலே, இந்தத் திருமேனியானது அவயவங்களையும் ஆபரணங்களையுஞ் சேர்த்துக்கொண்டு, தன்னுடைய ஸமுதாய சோபையைக்காட்டி, ‡"உய்விட மேழையர்க்குமசுரர்க்கு மரக்கர்கட்கும் எவ்விடம்" என்று கொண்டு மேல்விழுந்து தம்முடைய திருவுள்ளத்தைத் தன்பக்கலிலே இழுத்துக்கொள்ள, தாம் அதிலே யகப்பட்டு நெஞ்சழிந்தபடியைச் சொல்லுகிறார்.

வ்யா:— (ஆலமாமரமித்யாதி) கீழைந்தாம்பாட்டாலே – தம்முடைய துஷ்கர்மங்களை ஸவாஸநமாகப்போக்கினபடியைச் சொல்லி, எட்டாம்பாட்டாலே "பரியனாகிவந்தவவுணனுடல்கீண்ட" என்று பிறந்த கர்மங்களுக்கடியான அவித்யையை, தமோரூபமான ஹிரண்யனைக் கிழித்துப் பொகட்டாப்போலே *ஞானக்கையாலே நிரவசித்தானென்றமிறே இவர் சொல்லிகின்றது; இத்தைக் கேட்டவர்கள், இந்ததேசமாகிறது *இருள்தருமாஞாலமாகையாலே *தெளிவிசும்பினின்றும் ஸர்வேச்வரன் தானே அவதரிக்கிலும் அவனுக்கும் சோகமோஹங்களை உண்டாக்குமதாயிருக்கும். காலத்தைப்பார்த்தவாறே, 148 "अप्रज्ञादण्डलिङ्गानि" (அப்ரஜ்ஞா தண்டலிங்காநி) என்கிறபடியே - உள்ளவறிவையுமழித்து விபரீதாநுஷ்டாநத்துக்குக் குடலான லிங்கங்களையுமுடைத்தாய் இருக்கும்; தேஹத்தைப்பார்த்தால் 149 "भगवत्स्वरूपतिरोधानकरीं" (பகவத்ஸ்வரூபதிரோதாநகரீம்) என்கிறபடியே – பகவத் ஸ்வரூபத்தை மறைத்து விபரீதஜ்ஞாநத்தைப்பிறப்பிக்குமதாயிருக்கும். வேதாந்த ஜ்ஞாநத்தாலல்லது அஜ்ஞாநம் போகாது; உமக்கு அந்த வேதாந்த ச்ரவணத்துக்கு அதிகாரமே பிடித்தில்லை, 150 "वेदान्तविज्ञान सुनिश्चितार्थाः" (வேதாந்த விஜ்ஞாநஸுநிச்சிதார்த்தா:) என்றாப்போலே சொல்லுகிற வேதாந்தஜ்ஞாநமுடைய பெரியவர்கள்பாடே சென்று உபஸத்திபண்ணி, அவர்களுக்கு அந்தேவாஸியாயிருந்து இவ்வர்த்தங்களைக் கேட்டறியவொண்ணாதபடி நிஹீநஜந்மத்திலே பிறந்தவராயிருந்தீர்; ஆகதேசமிது, காலமிது, தேஹமிது, உம்

---

‡ திருவாய் 7-7-6.

(ஒருபாலகனாய்)யசோதாஸ்தநந்தயனான க்ருஷ்ணனும் முரணித்திருக்கும்படி இவனுடைய பால்யம் செம்பால் பாயாநிற்கும்.

(ஞாலமித்யாதி) சிறுப்ரஜைகள் புரோவர்த்தி பதார்த்தங்களை எடுத்து வாயிலிடுமாபோலே பூமிப்பரப்படைய ¶ வாயிலே வைத்தானாய்த்து,

முடைய ஜந்மமிது, இப்படியிருக்க ‡பக்வனான கீதோபநிஷதாசார்யன் கீதை பதினெட்டோத்திலும் *நெறியெல்லாமெடுத்து உரைக்க, * தைவீம்ஸம்பதமபிஜாதனான அர்ஜுநன் இத்தைக் கேட்டு, 151 "नष्टो मोहः स्मृतिर्लब्धा" (நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர்லப்தா) என்றுஞ் சொன்னாப்போலே நீர் உம்முடைய அஜ்ஞாநாதிகளடையப்போய் ஜ்ஞாநம் பிறந்ததாகச் சொல்லாநின்றீர்; இது அகடிதமாயிருந்ததீ! என்ன; ப்ரளயகாலத்திலே இந்த ஜகத்தாக நோவுபடப்புக, இத்தையடையத் தான் அதிசிசுவாயிருக்கத்தன் சிறிய வயிற்றிலே வைத்து, § ஆலன்று வேலைநீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ சோலைசூழ்குன்றெடுத்தாய் சொல்லு" என்னும்படியிருக்கிற ஓராலிலைலொட்டைக் கொட்டை போராதாயிருப்பதோராலந்தளிரிலே கண்வளர்ந்து இந்த ஜகத்தை அடைய ரக்ஷித்தருளின அந்த அகடிதகடநாஸாமர்த்யமுடையவனுக்கு என்னுடைய விரோதியைப்போக்கி எனக்கு ஜ்ஞாநத்தைப் பிறப்பித்தவிது சால அகடிதமாயிருந்ததோ என்கிறார்.

(ஆலமாமரத்தினிலைமேல்) †"பாலாலிலை" என்கிறபடியே ஆலமாமரத்திலே நெரியில் பால்பாயும்படியிருக்கிற இளந்தளிரிலே. "மாமரம்" என்று விபரீதலக்ஷணையாய்ச்சிறியமரமென்றபடி. "இலைமேல்" என்கையாலே இந்த இலைக்குள்ளே அடங்கும்படியாய்த்து வடிவின் சிறுமையிருப்பது. (ஒருபாலகனாய்) யசோதாஸ்தநந்தயம் ப்ரௌடதமம் என்னும்படி அத்விதீயனான பாலனாய். யசோதாஸ்தநந்தயமான க்ருஷ்ணனும் முரணித்திருக்கும்படி இவனுடைய பால்யம் செம்பால் பாயாநிற்கும்.

இந்தபால்யத்தை உபபாதிக்கிறார்மேல்; (ஞாலமேழு முண்டான்) சிறுப்பிள்ளைகளாயிருப்பார், புரோவர்த்தி பதார்த்தங்களையடைய

¶ வயிற்றிலே. ‡ பகவானான முதல்திருவ-69.

பிள்ளைத்தனம். ப்ரளயத்தில் தன்னகடித கடநத்தோடொக்கும் – என்னை அகப்படித்தினபடியும்.

(அரங்கத்தரவினணையான்) ஸம்ஸார ப்ரளயத்தினின்றும் எடுக்கக் கிடக்கிறபடி; அந்த ஆலினிலையில் நின்றும் இங்கேவரச்சருக்கினவித்தனை காணும். § (அந்தவுறவொன்றுமே இவரச்சங்கெடுக்கிற வித்தனைகாணும்) இப்ப்ரமாதத்தோடே கூடின செயலைச் செய்தானென்று பயப்படுமவர்கள் அச்சம்கெடும்படி கிடக்கிறவிடம்.

(அரவினணையான்) ப்ரளயத்தில் தன்வயிற்றிலே புகாவிடில் ஜகத்து ஜீவியாதாப்போலே, ஸம்ஸாரிகள் தன்முகத்தே விழியாவிடில் தனக்குச் செல்லாதானபடி.

---

எடுத்து வாயிலிடுமாபோலே, ||"மஞ்சாடுவரையேழும் ஈசன்" என்கிறபடியே ஸப்தலோகங்களையும் இவற்றைச் சூழ்ந்த கடல்களேழையும் குலபர்வதங்களேழையும் மற்றுமுள்ளவையுமடையவெடுத்து அமுதுசெய்தான். தேவதிர்யங்மநுஷ்யஸ்தாவரரூபமான ஜகத்தையடைய வமுது செய்யாநிற்க, ஒருஸ்தாவரமுண்டாய் அதின்தளிரிலே இடம்வலங்கொண்டு கண்வளர்ந்தருளுகையாகிறவிந்த அகடிதங்களைச்செய்தவனுக்கு அந்ததேசகாலதேஹஜந்மங்களாலுண்டான நிகர்ஷம்பாராதே எனக்கு ஜ்ஞாநத்தைப் பிறப்பித்து, இதுக்கு விரோதிகளான அஜ்ஞாநாதிகளைப் போக்குகை சால அகடிதமாயிருந்ததோ, என்னாற்போக்கிக் கொள்வதன்றோ அரிது, அவனுக்கரியது உண்டோ. ப்ரளயத்தில் அகடிதகடநத்தோடொக்கும் என்னையகப்படுத்தினபடி. (அரங்கத்தரவினணையான்) ஸம்ஸார ப்ரளயத்தினின்றுமெடுக்கக் கிடக்கிறபடி. அவ்வாலினின்றும் இங்கேவரச் சருக்கினவித்தனை. இப்ரமாதத்தோடேகூடின செயலைச் செய்தானென்று பயப்படுமவர்கள் அச்சங்கெடும்படி கிடக்கிறஇடம்.

(அரவினணையான்) அந்தப்ரளயஜலதியிலே இந்த ஜகத்தையடையத் தன் திருவயிற்றுக்குள்ளே வைத்து, தான் அத்யந்தம் சிசுவாய், ஆலிலையென்று பேர்மாத்ரமானதோரிளந்தளிரிலே இடம்வலங்கொண்டு கண்வளராநின்றான். "இப்படிப்பெரிய ஜகத்தையெல்லாம் அமுதுசெய்தால் அருதொழிதல், அமுதுசெய்த அண்டத்தின் பெருமையாலும் இவற்றின் சிறுமையாலும் வயிறுவிரிதல்,

---

§ குண்டலிதமகிகம். || பெரிய-திரு 2-10-1.

(கோலமாமணியாரமும்) அழகியதாய்ப் பெருவிலையனுயிருந்துள்ள ரத்நங்களாலே செய்யப்பட்ட ஆரமும். (முத்துத்தாமமும்) முத்துமாலையும். (கோலம்) இது பெருமாளைச்சொல்லுகிறது.

---

ஆலமிளந்தளிரிலே இடம் வலங்கொள்ளப்புக்கால் கடலிலே புக்குப்போதல் செய்யிற்செய்வதென்?" என்று வயிறுபிடிக்கவேண்டாதபடியிறே *திருவரங்கப் பெருநகராகிற பெரியகோயிலிலே, *இருளிரியச்சுடர்-அனந்தனென்னுமணையென்கிற பெரிய படுக்கையிலே மொசுமொசென்று வளர்ந்த பெரியவடிவும் தாமுமாய்ப் பெரியபெருமாள் கண்வளர்ந்தருளினபடி. அங்குப்பரிவரில்லையென்கிறகுறையுமில்லையிறே. படுக்கையான இவன்றான், 151* "चिन्तामणिमिवोद्वान्तमुत्सङ्गेऽनन्तभोगिनः" (சிந்தாமணிமிவோத்வாந்தமுத்ஸங்கேநந்தபோகிந:) என்கிறபடியே ஜகதுபாதாநமாய் இருப்பதொரு சிந்தாமணியையுமிழ்ந்து இத்தையாரேனுமொருவர் இருய்ஞ்சிக்கொள்ளில் செய்வதென்னென்று தன் †மடியிலே வைத்துக் கரண்டகமிட்டுக்கொண்டு கிடக்கிறாப்போலேயிருக்க, ||"தீமுகத்துநாகணை" என்றும், ‡"ஆங்காரவாரமதுகேட்டழலுமிழும் பூங்காரரவணை" என்றுஞ் சொல்லுகிறபடியே இவ்வஸ்துவுக்கு என்வருகிறதோவென்று தன்னுடைய பணாமண்டலங்களாலே விஷாக்நியையுமிழ்ந்துகொடு நோக்கிக்கொண்டு போருகையாலே அவாந்தரப்ரளயத்திலே அகப்பட்டவர்களை, தன் திருவயிற்றில் வைத்து ரக்ஷித்தான்; ஸம்ஸாரமாகிற மஹாப்ரளயத்திலே புக்கவர்களை, 151/ "श्रीमान् सुखसुप्तः" (ஸ்ரீமாந்ஸுகஸுப்த:) என்றும், /"கிடந்ததோர் கிடக்கை" என்றுஞ்சொல்லுகிற தன் கிடையழகைக்காட்டி ரக்ஷித்தான்.

இப்படிக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாள் வடிவிருக்கிறபடியைச் சொல்லுகிறார் மேல்; (கோலமாமணியாரமும்) ஸ்ரீகௌஸ்துபம்போலே மஹார்க்கமாய்ப் பெருவிலையனான மாணிக்கங்களாலே அழுத்தப்பட்டுத் திருமேனிக்கு அலங்காரமான ஹாரத்தையும், (முத்துத்தாமமும்) த்ரிஸரம் பஞ்சஸரம் ஸப்தஸரம் என்றாப்போலே சொல்லுகிற திருமேனியின் மார்த்தவத்துக்கு அநுரூபமான குளிர்த்தியையுடைய முத்துவடங்களையும்.

---

†படியிலே. ||நாச்-திரு 19-1. ‡நாலா-திருவ-10. /திருமாலை-23.

(முடிவில்லாதோ ரெழில்நீலமேனி) அவதி காண வொண்ணுத அழகையுடைய நெய்த்த திருமேனி. (ஐயோ) பச்சைச்சட்டை † உடுத்துத் தனக்குள்ளத்தையடையக்காட்டி எனக்குள்ளத்தையடையக் கொண்டான். (நிறைகொண்ட தென்னெஞ்சினையே) எனக்கு அகவாயில் காம்பீர்யத்தைப் போகவடித்தது.

இப்பாட்டால் வடதளசயநமும் பெரியபெருமாள் பக்கலிலே உண்டென்கிறது.

---

(முடிவில்லதோரெழில்நீலமேனி) அவதிகாணவொண்ணுத அழகையுடைய நெய்த்ததிருமேனி. அபரிச்சேத்யமாய் அத்விதீயமான ஸமுதாயசோபையை உடையதுமாய். (நீலமேனி) இந்த ஆபரணங்களாலும் ஸமுதாயசோபையாலும் ஓரழகு வேண்டாதபடி இவை தனக்கு நிறங்கொடுக்கும்படி, §"மல்குநீலச்சுடர்தழைப்ப" என்கிறபடியே "नीलतोयदमध्यस्थविद्युल्लेखा" (நீலதோயதமத்யஸ்தவித்யுல்லேகா) கல்பமானவடிவு. 152"द्रुतकनकजगिरिपरिमिलदुदधि प्रचलितलहरिवत्"(த்ருதகநகஜகிரி பரிமிளதுததி ப்ரசலிதலஹரிவத்) என்கிறபடியே அந்தத்திருமேனிதன்னைப் பார்த்தாலும் அறப்பளபளத்து அத்தைநீக்கி உள்வாயிலே கண்ணையோட்டிப் பார்த்தால் காண்கிறவன்கண்களிலே குளிர அஞ்ஜநத்தை எழுதினுப்போலேயிறேயிருப்பது. அவனுக்கு ஆநந்தத்துக்கவதியின்றிக்கேயொழிகிறதும் வடிவின்வைலக்ஷண்யத்தாலேயிறே.

(நிறைகொண்டதென்னெஞ்சினையே) என்னுடைய ஹ்ருதயத்திலுண்டான பூர்த்தியை அபஹரித்தது; என்னகவாயில் காம்பீர்யத்தையும் போகவடித்தது. இந்தஜகத்து கரணகளேபரங்களை இழவாமல் தன் திருவயிற்றிலே வைத்துக் காத்தவனுயிருக்க அவனுக்கபிமதமான அவ்வடிவு என்னுடைய கரணத்தையழித்தது.

(ஐயோ) பச்சைச்சட்டையிட்டுத் தனக்குள்ளத்தைக் காட்டி எனக்குள்ளத்தை அடையக்கொண்டான். நான் எல்லாவற்றையுமநுபவிக்கவேணுமென்றிருக்க எனக்கு அநுபவபரிகரமான என்னெஞ்சைத் தன்பக்கலிலே இழுத்துக்கொள்வதே!ஐயோ! என்கிறுர்.

---

† இட்டு. § திருவாய் 7-4-4.

10. கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம் கவர்ந்தானை
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே.

பதவுரை:—கொண்டல்வண்ணனை—நீருண்ட மேகம்போன்ற வடிவையுடையவனும், கோவலன் ஆய் வெண்ணெய் உண்டவாயன்—இடைப்பிள்ளையாகப்பிறந்து வெண்ணெயமுதுசெய்த திருவாயை யுடையவனும், என் உள்ளம்—என்னுடைய நெஞ்சை, கவர்ந்தானை—கொள்ளைகொண்டவனும், அண்டர் கோன்—நித்யஸூரிகட்குத் தலைவனும், அணி அரங்கன்-(பூமண்டலத்துக்கு) அலங்காரமான திருவரங்கத்தில் கண்வளர்ந்தருள்பவனும், அமுதினை-(எனக்குப் பரமபோக்யமான) அம்ருதமாயிருப்பவனுமான அழகியமணவாளனை, கண்ட கண்கள்-ஸேவிக்கப்பெற்ற(எனது)கண்களானவை, மற்று ஒன்றினை-வேறொன்றையும் (பரமபதநாதனையும்) காணா—காணமாட்டா.

---

அவ:—நிகமத்தில், இவ்வளவும் ஜ்ஞாநஸாக்ஷாத்காரம்; மேல் லோகஸாரங்க மஹாமுனிகள்தோளில் வந்துபுகுந்து விண்ணப்பஞ்செய்கிறார்; பெரியபெருமாளழகைக்கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவென்கிறார்.

---

அவ:—நிகமத்தில்; இவ்வாழ்வார், இவ்வூருக்குப் புறம்புள்ள தேசங்களிலுள்ளாரடைய ரஜஸ்தம:ப்ரசுரராய் ஶப்தாதிவிஷயப்ரவணராய் அதுதானும் நேர்கொடுநேர் கிடையாமையாலே அர்த்தார்ஜநாதிகளிலே இழிந்து *பெரியதோரிடும்பை பூண்டிருக்கிற படியையும், இவ்வூரிலுள்ளார் பரமஸாத்விகராய் நிரதிஶயபோக்யபூதராயிருக்கிற பெரியபெருமாளை அநுபவித்துக்கொண்டு *தொண்டுபூண்டமுதமுண்டுகளித்திருக்கிற படியையுங்கண்டு,

---

அரு:—ஒன்பதாம்பாட்டு. (ஆலமரமித்யாதி) (செம்பால் பாய்கை) கேவல ரக்தப்பசையாயிருக்கை. பதச்சேர்த்திக்குத் தாத்பர்யத்வயமருளிச் செய்கிறார் (ஸம்ஸாரப்ரளயேத்யாதி வாக்யத்வயத்தாலே). (அச்சம் கெடுகை) கீழே ஸமுத்ரமாய், ஆலிலையாயிருக்கையன்றிக்கே கோயிலிலே திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுகை. (ஆரம்)பதகம்."கோலம்" என்றது—ஆபரணச்சேர்த்தி அழகியமணவாளப்பெருமாளுக்கு. நிறை—நிறைவெல்லாமென்னுதல்; அடக்கமென்னுதல்.

153 "**वरं हुतवहज्वालापञ्जरान्तर्व्यवस्थितिः। न शौरिचिन्ताविमुखजन-संवासवैशसम्॥**" (வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர் வ்யவஸ்திதி:। நஶௌரிசிந்தாவிமுகஜநஸம்வாஸவைஶஸம்) என்று புறம்புள்ளாரோடு பொருத்தமின்றிக்கே, இவ்வூரைப்பார்த்தால் 154 "**सर्वपुण्यमयो देशः**" (ஸர்வபுண்யமயோ தேஶ:) என்கிறபடியே 155 "**पवित्राणां हि गोविन्दः पवित्रं परं**" (பவித்ராணாம் ஹி கோவிந்த: பவித்ரம்பரம்) என்னும் பரமபாவநரான பெரியபெருமாள் தாமும், †"சிட்டனே செழுநீர்த்திருவரங்கத்தாய்" என்று இவ்வூரோட்டை ஸம்பந்தத்தாலே பாவநபூதரென்னும்படியான வைலக்ஷண்யத்தை யுடைத்தாயிருக்கையாலே, நாம் இவ்வூரிலே புகுருகை இவ்வூருக்கு மாலிந்யாவஹமென்றுபார்த்து, §"அங்குற்றேனல்லே இங்குற்றேனல்லேன்" என்கிறபடியே பிறருடைய நைச்யத்தாலே அங்குப் போகவும் மாட்டாதே தம்முடைய நைச்யத்தாலே இங்குப்புகவும் மாட்டாதே ஆந்தராளிகராய், 73 "**उत्तरं तीरमासाद्य खस्थ एव व्यतिष्ठत**" (உத்தரம் தீரமாஸாத்ய கஸ்த ஏவ வ்யதிஷ்டத) என்ற ஸ்ரீவிபீஷணாழ்வானைப்போலே * அகமகிழுந் தொண்டர் வாழும்படி * அன்பொடுதென்றிசை நோக்கிக்கொண்டு கண்வளருகிற பெரிய பெருமாளுடைய த்ருஷ்டிபாதமான தென்னாற்றங்கரையைப் பற்றி நின்றார்.

பெரியபெருமாளும் 92 "**ईश्वरोऽहमहं भोगी-नान्योऽस्ति सदृशो मया**" (ஈச்வரோஹமஹம் போகீ-நாந்யோஸ்தி ஸத்ருஶோ மயா) என்று தேஶமாக அஹங்கார க்ரஸ்தமாய் ஶப்தாதிவிஷய ப்ரவணமாய் நோவுபடாநிற்க, இவர் இப்படியாவதே! என்று மநஸ்விலே போரவுகந்து ‖ 156 "**निमग्न आपः प्रणवः**" (நிமக்ந ஆப:ப்ரணவ:) என்கிறபடியே இவரளவிலே திருவுள்ளம் போரமண்டி, * நிஹீநாநாம் முக்யம் ஶரணமான திருவடிகளைக் கொடுவந்து இவருடைய திருவுள்ளத்திலே "என் கண்ணினுள்ளன வொக்கின்றவே" என்று ப்ரத்யக்ஷஸமாநாகாரமாக ப்ரகாஶிக்கும்படி வைக்க, அந்தத்திருவடிகளை அநுஸந்தித்து, தம்முடைய மநஸ்ஸானது ஜ்ஞாநாஸ்பதமாகையாலே அந்தத் திருவடிகளுக்கு மேலான திருப்பீதாம்பரமும் திரு

† திருவாய் 7-2-4. § திருவாய் 5-7-2. ‖ ஸந்திக்தம்.

வரையுமான சேர்த்தியை மடிபிடித்தநுபவித்து, இப்படி கரணமும் காமும் அநுபவிக்கும்படி நம்மையுண்டாக்கிற்றுத் திருநாபீகமல மன்றோவென்று அத்தை அநுபவித்து, மேன்மைக்கும் ஸௌலப்யத்துக்கும் பட்டங்கட்டியிருக்கிறோம் நாமல்லோமோ என்று திருவுதரபந்தநம் தன்பக்கலிலே வரவிசிக்க அத்தை அநுபவித்து;

அதுக்குமேலேயிருக்கிற திருமார்பானது தன்னுடைய ஹாராத்யாபரணங்களையும் பெரியபிராட்டியாருக்குக் சேர்பிற்கட்டணமான மேன்மையையுங்காட்டி இசித்துக்கொள்ள அந்தத்திருமார்பை அநுபவித்து, அந்தப்பிராட்டிக்கும் ஹாராத்யாபரணங்களுக்கு மாச்ரயமான திருக்கழுத்தை அநுபவித்து, அதுக்குமேல், வாயில், 119 "सर्वभूतेभ्यो अभयं ददामि" (ஸர்வபூதேப்யோ அபயம் ததாமி) என்றாப்போலே சொல்லாநிற்கச்செய்தே அநுபவிக்கிற நாய்ச்சிமார்க்கு அகப்பட, /"வாயழகர் தம்மையஞ்சுதும்" என்று கண்களைச் செம்பிளித் தநுபவிக்கும்படி ஸ்வாபாவிக ஸௌந்தர்யத்தை யுடைத்தான திருவதரத்தை அநுபவித்து, இப்படி அவயவங்களை அநுபவியா நிற்கச்செய்தே இடையில் திவ்யாயுதங்களும் இறாய்ஞ்சிக்கொள்ள அவற்றை அநுபவித்து, "अभयं ददामि" (அபயம்-ததாமி) என்றாப்போலே சொல்லுகிற வார்த்தைகளை மேலெழுத்திட்டுக் கொடுக்கிற குளிர்ந்த கடாக்ஷங்களை உடைத்தான திருக்கண்களை அநுபவித்து, பாலும் பழமும் கண்டசர்க்கரையுமான ரஸவஸ்துக்களைச் சேர்த்து புஜிப்பாரைப்போலே இந்த அவயவங்களோடுண்டான சேர்த்தியால்வந்த அழகையும் ஸ்வாபாவிகமான அழகையுமுடைத்தான திருமேனியின் பசுங்கூட்டான ஸமுதாயஶோபையையும் அநுபவித்தாராயிறே கீழ் நின்றது.

இவருடைய இப்படிப்பட்ட மாநஸாநுபவத்தையும் மந:பூர்வகமான வாசிகாநுபவத்தையுங்கண்ட பெரியபெருமாள், இப்படி, குணவிஷ்டராய் அநுபவிக்கிறபடியைக்கண்டு, 157 "द्रष्टव्यः सर्वदेहिभिः" (த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி:) என்கிறபடியே அவரையழைத்துக் கொண்டிருக்கவேண்டும்படி அவராளவிலே அபிநிவிஷ்டராகையாலும்,

/ நாச்-திரு 10-3.

158 "**क्षणेपि ते यद्विरहोऽतिदुस्सहः**" (க்ஷணேபி தே யத்விரஹோऽதி-துஸ்ஸஹ:) என்கிறபடியே தம்மையொருகால் காணவேணுமென்னும் ஆசையுடையாரை க்ஷணகாலமும் பிரிந்திருக்க மாட்டாமையாலும் அவரை அழைப்பித்துக்கொள்ள வேணுமென்று பார்த்தார்; இனி, நாம்போய்க் கொடுவரவென்றால் 159 "**असङ्केतमनालापं**" (அஸங்கேதமநாலாபம்) என்றாப்போலே சொல்லுகிற ஸங்கல்பத்தைக் குலைக்கவேண்டுகையாலே அதுசெய்ய ஒண்ணாதாயிருந்தது; இனி இவர்தாமே வரவென்றால் அதுவும் தமக்கு ஸ்வரூபஹாநியாய் இருந்தது; ஆனபின்பு விபீஷணாழ்வானை மஹாராஜரையிட்டு, 13"**आनयैनं**" (ஆநயைநம்) என்றாப்போலே இவரையும் ஒருவரையிட்டழைப்பிக்க வேணுமென்று பார்த்தார்;

அந்தவிபீஷணன் ராஜ்யகாங்க்ஷியாய் இருக்கையாலே அருகு நிற்கிற இளையபெருமாள் நிற்க, ராஜ்யகாங்க்ஷியாய் ஹரிச்ரேஷ்டரான மஹாராஜரை இட்டழைத்துக்கொண்டாப்போலே, "சென்றதாமென சிந்தனையே" "அடியேனுள்ளத்தின்னுயிரே" "என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே" "நிறைகொண்டதென்னெஞ்சினையே" என்றாப்போலே இவர் மநநபரராயிருக்கையாலே மநநபரராய் ச்ரேஷ்டராயிருப்பாரொருவரையிட்டழைப்பித்துக் கொள்ளவேணுமென்று பார்த்து, அருகே ஸேவித்திருக்கிற லோகஸாரங்க மஹாமுநிகளைப்பார்த்து, 13"**आनयैनं**"(ஆநயைநம்) என்று திருவுள்ளமாக;

அவரும் எப்போதும் பெரியபெருமாளை ஸேவித்திருக்கையாலே, பெரியபெருமாள் அபிஜநவித்யா வ்ருத்தங்களால் பூர்ணராயிருப்பாரைப் பார்த்தருளி, ஏகாந்தங்களிலே ‡"இழிகுலத்தவர்களேலு மெம்மடியார்களாகில் தொழுமினீர் கொடுமின் கொண்மின்" என்று உபதேசிக்கக் கேட்டிருக்கையாலும், ||"நின்றிருவெட்டெழுத்துங் கற்றுநான் உற்றது முன்னடியார்க்கடிமை" என்றும், †"ஆரெண்ணும் நெஞ்சுடையாரவரெம்மையாள்வாரே" என்றும், §"பங்கயக்கண்ணனைப் பயிலுந் திருவுடையார்யவரேலுமவர் கண்டீர், பயிலும் பிறப்பிடைதோறெம்மையாளும் பரமரே" என்றாப்போலே

‡ திருமாலை-42. || பெரியதிரு 8-10-3. † பெரியதிரு 2-6-2.
§ திருவாய் 3-7-1.

ஆழ்வார்களருளிச் செய்யக்கேட்டிருக்குமவராகையாலே கடுகப் போய் அவரை அருள்பாடிட்டுத் தாம் ப்ரஸாவஹித்துக் கொண்டுவர;

இவரும் பெரியபெருமாளுடைய கௌரவத்தைக் குலைக்க வொண்ணாதென்று முநிவாஹநராய் வந்துபுகுந்து பெரியபெருமாளைத் திருவடித்தொழ, பெரியபெருமாளும் 160 **"आविर्बभूव भगवान् पीताम्बरधरो हरिः"** (ஆவிர்ப்பபூவ பகவாந் பீதாம்பரதரோ ஹரி:) என்று ஸ்தோத்ரபரனை ப்ரஹ்லாதனுக்கு வந்து ஆவிர்ப்பவித்து அபேக்ஷிதங்களைக்கொடுத்து, அவன் ராஜ்யாதிகளிலே போதுபோக்க வல்லனாகையாலே அவன் பார்த்துக்கொடு நிற்கச்செய்தே 161 **"तत्रैवान्तरधीयत"** (தத்ரைவாந்தரதீயத) என்றுபோக, பின்பு அந்தராஜ்யாதிகளாலே ப்ரஹ்லாதனும் போதுபோக்கி இருந்தானிறே; இவர் அவனைப்போலே அன்றிக்கே, அநந்யஸாதநராய் அநந்ய ப்ரயோஜநராயிருக்கையாலே நம்விச்லேஷம் பொறுக்கவல்லவரல்லரென்று பார்த்தருளி, தம்முடைய ஸ்வரூபாதிகளைக்காட்ட, இவரும் ப்ரீதரான வளவிலே இவர் மாநஸாநுஸந்தாநம்பண்ணுகிற தசையிலே, "ஆதி" "விண்ணவர்கோன்" "நீதிவானவன்" "அரங்கத்தம்மான்" என்றும், "உலகமளந்தண்டமுற நிவர்ந்த நீண்முடியனன்று நேர்ந்த நிசாசரைக் கவர்ந்தவெங்கணைக்காகுத்தன்" என்றும், "விரையார் பொழில் வேங்கடவன்" என்றுப்போலே தம்முடைய பரவ்யூஹ விபவார்ச்சாவதாரங்களையும் தம்பக்கலிலே அநுஸந்திக்கையாலே இவற்றைத் தனித்தனியே அநுபவிக்கவேணுமென்கிற அபேக்ஷை இவர்க்கில்லையென்கிற விடம் ஹ்ருதயஸ்தனாய்க் கொண்டு;

* உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறியா நிற்கச் செய்தேயும் இவரைச் சோதிக்கைக்காக இவற்றையும் இவர்க்குத் தனித்தனியேகாட்டி இவரநுபவிக்கும்படி பண்ணுவோமென்று பார்த்தருளி, அது செய்யுமிடத்துப் புருஷார்த்தமாக வேண்டுகையாலே இவருடைய அபேக்ஷையறிந்து செய்யவேணும், இல்லையாகில் இவர், நாம் அத்தை ப்ரகாசிப்பிக்கக்கொள்ள, † "ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே" என்னும் திருமங்கையாழ்வாரைப்

† சிறியதிருமடல்.

வ்யா:—(கொண்டல்வண்ணனை) தாபத்ரயத்தாலே விடாய்த்த தம் விடாய் தீரும்படியாய் 39 "अद्रौ शयालुरिव शीतलकालमेघः" (அத்ரௌ ஶயாளுரிவ ஶீதளகாளமேக:) என்கிறபடியே வர்ஷுகமான காளமேகம் போலேயிருக்கிற திருநிறத்தையுடையவனை. ¶பன்னீர்க்குப்பிபோலே உள்ளுள்ளவையெல்லாம் புறம்பேசிழலிட்டபடி.

---

போலே நிந்தித்தல், தொண்டரடிப்பொடி ஆழ்வாரைப்போலே, ‡"அச்சுவைபெறினும் வேண்டேன்" என்று காற்கடைக் கொள்ளு தல் செய்வரோ, அறியவேணுமென்று தந்திருவுள்ளத்திலே முன்னோடிக் கொண்டத்தை அறிந்து, இவர், "கடலிலே குளப்படி உண்டாமாபோலே 1 "பூர்ண" (பூர்ணம்) என்கிறபடியே பெரிய பெருமாள்பாடே எல்லாமில்லையோ, ஆனபின்பு எனக்குப்பெரிய பெருமாளையொழிய வேறொருவரை அநுபவிக்க ச்ரத்தையில்லை, எனக்குண்டானும் அவரையநுபவித்த என்கண்கள் மற்றொன்றினைக்காணாவே" என்கிறார்.

வ்யா:—(கொண்டல்வண்ணனை) கண்களுக்கு விஷயமிருந்த படி. 162"न मांसचक्षुरभिवीक्षते तम्"(ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்) 163 "न चक्षुषा पश्यति कश्चनैनम्"(ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம்) என்கிற இலச்சினையை அழித்துத் தன்வடிவைக்காணும்படி பண்ணின உபகாரத்தை அநுஸந்தித்துச்சொல்லுகிறார். அங்ஙனன்றிக்கே, தம்முடைய பரவ்யூஹவிபவார்ச்சாவதாரங்களை இவரநுபவிப்பிப்பதாகத் திருவுள்ளத்திலே பாரிக்கிறபடியை அநுஸந்தித்து இதென்ன ஔதார்யமென்று அந்த ஔதார்யகுணத்தை நினைத்து "கொண்டல் வண்ணன்" என்கிறார். அன்றிக்கே, ஸாம்ஸாரிகமான தாபத்ரயத்தாலே விடாய்த்தவிடாய் தீரும்படியாய், 164"अद्रौ शयालुरिव शीतलकालमेघः"(அத்ரௌ ஶயாளுரிவஶீதளகாளமேக:)என்கிறபடியே வர்ஷுகமான காளமேகம் போலேயிருக்கிற நிறத்தையுடையவன் என்கிறாராதல். ச்ரமஹரமான வடிவைநினைத்து, "கொண்டல் வண்ணன்" என்கிறாராதல். "வண்ணம்" என்று ஸ்வபாவமாதல்; நிறமாதல். நம்மாழ்வாரும், †"முகில்வண்ணனடியை அடைந்தருள் சூடியுய்ந்தவன்" என்றாரிறே.

---

¶ பனிநீர். ‡ திருமாலை-2. † திருவாய் 7-2-4.

(கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்) இடையனாய் வெண்ணெய் உண்ட திருப்பவளத்தை உடையவனை. சக்ரவர்த்தித் திருமகனாகில் வெண்ணெயுண்ண வொட்டார்களென்று [I] கருத்து. (கோவலன்) ஆபிஜாத்யம்; பெருமாளுக்குக் கட்டுண்பது அடியுண்பதாகக் கிடைக்குமோ?

(வெண்ணெயுண்டவாயன்) களவு கண்டு ஒளித்துவந்து கிடக்கிறவன்; பெரியபெருமாள் கொறுட்டை மோந்துபார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறாநிற்கும்.

---

(கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்) அந்த மேகமானால் ஆகாசத்தே கடக்கநின்று நீரை வர்ஷித்துப்போமித்தனையிறே; அங்ஙனன்றிக்கே இடையரோடு இடைச்சியரோடு வாசியற ஒரு நீராகக் கலந்து தன்வடிவழகை அவர்களுக்கு ஸர்வஸ்வதாநம் பண்ணினபடி. (கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்) பராவஸ்தனாய்வந்து வெண்ணெயமுது செய்யில் மாளிகைச்சாந்து நாறுமே; சக்ரவர்த்தித் திருமகனாய் வந்தவதரித்த அவஸ்தையில் மேன்மையாலே ராஜாவாக்கிச்சிலர் சீராட்டுகையாலே, வந்து வெண்ணெய் களவு காணவொண்ணாதே; அதுக்காக; (கோவலனாய் வெண்ணெய் உண்டவாயன்) சக்ரவர்த்தி, தன்னுடைய ராஜ்யைச்வர்யத்தை புஜிக்கைக்கு "எனக்கொரு பிள்ளைவேணும்" என்று, 164* "**महता तपसा**" (மஹதா தபஸா) என்கிறபடியே நோற்றுப்பெருமாளைப் பெற்றாப்போலே, ஸ்ரீநந்தகோபரும் ||"காளையர்கடிமனையில் தயிர் உண்டு நெய்பருகநந்தன் பெற்றவாளையன்" என்கிறபடியே திருவாய்ப்பாடியில் கவ்யஸம்ருத்தியடையப்பாழ்போகவொண்ணாதென்று இத்தை புஜிக்கைக்காக நோன்புநோற்றுப்பெற்ற பிள்ளையாய்த்துக்ருஷ்ணன்.

(வெண்ணெயுண்டவாயன்) பெரியபெருமாள் கொறுட்டை மோந்துபார்த்தால் இப்போதும் வெண்ணெய் நாறாநிற்கும். (வெண்ணெய்உண்டவாயன்) ஆச்ரிதருடைமையாகையாலே தத்ஸ்பர்சமாகாதேயென்று இன்றுமகப்பட அந்தக்குணுங்குநாற்றம் வாயிலே தோன்றும்படியிறே பெரியபெருமாள் கண்வளர்ந்தருளுவது.

---

[I] (பா) அறிந்து. || பெரியதிரு 5-5-3.

(என்னுள்ளங் கவர்ந்தானை)என்னெஞ்சை அபஹரித்தவனை. கோவலனாய் வெண்ணெயுண்டாப்போலே கொண்டல்வண்ணனாய் என்னுள்ளங் கவர்ந்தவனை. யசோதைப்பிராட்டியுடைய வெண்ணெயிலே பண்ணின ச்ரத்தையை என்னெஞ்சிலே பண்ணிபுஜித்தவனை. வைத்த குறியழியாதிருக்க வெண்ணெய் குடிபோனாப்போலேயாய்த்து இவருடம்பிருக்க அகவாய் குடிபோனபடி.

/"கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ" என்று ஸந்தேஹிக்க வேண்டாதபடியாய்த்து இன்று மகப்பட வாய் குணுங்கு நாறும்படி.

(வெண்ணெயுண்டவாயனென்னுள்ளங் கவர்ந்தானை) கோவலனாய் வெண்ணெயுண்டாப்போலே கொண்டல்வண்ணனாய் என்னுள்ளங் கவர்ந்தவனை. யசோதைப்பிராட்டியுடைய நெஞ்சிலே பண்ணின ச்ரத்தையை என்னெஞ்சிலே பண்ணி புஜித்தவனை. அந்தத்திருவாய்ப்பாடியிற் பெண்கள் உறிகளிலே வெண்ணெயைவைத்துக் கள்ளக்கயிறுருவியிட்டு வைத்துப்போவர்கள்; அந்த உறிகளின் குறியழியாதிருக்க அந்தவெண்ணெய்களை வெறுந்தரையாக்கினாப்போலேயாய்த்து * அரங்கந்தன்னுள்கள்வனார், நான்குறியழியாதிருக்க என்னுடைய சிந்தையையபஹரித்தபடி. (என்னுள்ளங்கவர்ந்தானை) வைத்தகுறி அழியாதிருக்க *வெண்ணெய் விழுங்கி வெறுங்கலமாக்கினாப்போலே, என்னுடைய ஶரீரங்குறியழியாதிருக்க என்னுடைய மநஸ்ஸை அபஹரித்தான். கலமிருக்க வெண்ணெய் குடிபோனாப்போலேயாய்த்து இவருடம்பிருக்க அகவாய் குடிபோனபடி. (என்னுள்ளங்கவர்ந்தானை) 165"दैवीं संपदमभिजात"(தைவீம்ஸம்பதமபிஜாத)ரான பெரியவர்களகப்படத் தந்தாமுடைய மநஸ்ஸை இவன் பக்கலிலே வைக்கவேணுமென்று பார்த்து, அது செய்யப்போகாமல், 166 "चञ्चलं हि मनः कृष्ण" (சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண) என்றாப்போலே - பெருங்காற்றைத் தாம்பிட்டுப்பிடிக்கலாம், என் மநஸ்ஸை ஒரு அளவாக்கப்போகிறதில்லை- என்னும்படியிறே மநஸ்ஸினுடைய சஞ்சலத்வமும் திமிறும்படியானமிடுக்கும்; அப்படி * நின்றவா நில்லாத மநஸ்ஸை என்பக்கல் அபேக்ஷையின்றிக்கே இருக்க நானும் அறியாதபடி அபஹரித்துத் தன்பக்கலிலே சேர்த்துக் கொண்டான்.

/ நாச்-திரு 7-1.

(அண்டர்கோன்) திருவாய்ப்பாடியிலிடைக்குலத்துக்கு நிர்வாஹக னென்னுதல்; அண்டாந்தர்வர்த்திகளான ஆத்மவர்க்கத்துக்கு நிர்வாஹக னென்னுதல். (அணியரங்கனென்னமுதினை) தேவர்களுடைய உப்புச்சாறு போலன்று இவருடைய அம்ருதம்.

(என்னமுதினை) ப்ரஹ்மாதிகளுக்கு முதலியாயிருக்கும்; எனக்குச் சாகாமல்காக்கும் அம்ருதமாயிருக்கும். (கண்டகண்கள்) சுவையறிந்த கண்கள். ச்ரவணேந்த்ரிய மாத்ரமன்றியே விடாய்தீரக்கண்ட கண்கள்.

(மற்றொன்றினைக்காணாவே) 3 "भावो नान्यत्र गच्छति" (பாவோ நாந்யத்ர கச்சதி) போலே கண்களுக்குப்பச்சையிட்டாலும் வேறொரு

---

(அண்டர்கோன்) இப்படி இடையரோடுமிடைச்சிகளோடும் தண்ணியரான உம்மோடும் வாசியறவந்து கலந்து வெண்ணெயையும் மநஸ்ஸையும் அவன் களவுகண்டது - புறம்பு ஆளில்லாமையாலும் தன் குறையாலுமோவென்ன; * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி விண்ணோர்கள் நன்னீராட்டியந்தூபந்தரா நிற்கச்செய்தேகிடீர், ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப்போந்தவதரித்ததென்கிறார். அன்றியிலே, "அண்டர்" என்று இடையரென்னுதல்; அண்டாந்தர் வர்த்திகளென்னுதல். (அணியரங்கன்) என்னெஞ்சை அபஹரித்து * சேணுயர்வானத்திலே போயிருக்கையன்றிக்கே, கண்ணிட்டுக் காணலாம்படி ஸம்ஸாரத்துக்கு ஆபரணமான கோயிலிலே வந்து கண்வளர்ந்தருளுகிறவன். ஸம்ஸாரிகளறவைத்தனப்படாதபடி யாலேயிறே இக்கிடை கிடக்கிறது. (அணியரங்கனென்னமுதினை) தேவர்களம்ருதம்போலே உப்புச்சாறாய் எட்டாநிலத்திலே இருக்கு மதன்றிறே இவருடைய அம்ருதம்.

(அண்டர்கோனணியரங்னென்னமுதினை) § "அளப்பரிய வாரமுதை அரங்கமேயவந்தணனை" என்கிறவம்ருதமிறே. (அமுதினைக்கண்ட கண்கள்) இந்தக்கண்கள் இவரைக் காணுதொழியப் பெற்றதாகிலும் புறம்பே போகலாய்த்து; காட்சிதான் அரை வயிறாய்த்ததாகிலும் புறம்பு போகலாய்த்து; அங்ஙனன்றிக்கே, பூர்ணாநுபவம் பண்ணின கண்கள்.

---

§ திருநெடு - 14.

அர்ச்சாவதாரம் அவதார விசேஷம் இவற்றை இப்படி விரும்பி போக்ய மென்றுகருதாது. காட்சியொழிய வேறொருபலம் சொல்லாவிட்டது பலமும் காட்சியேயாகையாலே. முக்தப்ராப்யமென்று ஒருதேசவிஷத்திலேபோரு லும் 40 "सदा पश्यन्ति" (ஸதாபச்யந்தி) யிறே.

தம்மைச் சொல்லுதல், பாட்டுக்கு ஸங்க்யை சொல்லுதல் செய்யில் கரைமேலே நின்ற அல்லாத ஆழ்வார்களோபாதியாவர். * அஸ்தமிதாந்ய பாவமாம்படி அழகிலே ஈடுபட்டுத் தம்மை மறந்தார். 41 "नोपजनं स्मरन्निदं शरीरं" (நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்) என்கிற படியே முக்தப்ராப்யமான புருஷார்த்தத்தை அநுபவித்தாரென்கையாலே எல்லாம் அவன் சொல்லேயாய்விட்டது.

---

(கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே) அம்ருதபாநம் பண்ணினாரைப் பாலையுஞ் சோற்றையுந் தீற்றப்போமோ? (மற்றொன் றினைக் காணாவே) 5 "भावो नान्यत्र गच्छति" (பாவோ நாந்யத்ர கச்சதி) போலே, இந்தப் பெரியபெருமாள் தம்மை கேசாதி பாதாந்தமாக அநுபவிக்க வேணுமென்று பார்த்தாலும் ஶக்தனல்லேன்.

"என்னுள்ளங் கவர்ந்தான்" என்கையாலே சித்தாபஹாரம் பண்ணினபடியைச்சொன்னார்; "கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே" என்கையாலே த்ருஷ்ட்யபஹாரம் பண்ணினபடியைச் சொல்லுகிறார். அல்லாதார் திருநாமப் பாட்டுப்போலே தம்மைச் சொல்லிற்றிலர்; 167 "विसस्मार तदात्मानं" (விஸஸ்மார ததாத்மாநம்)என்கிறபடியே தாம் போக ப்ரவணராய்த் தம்மைமறக்கையாலே- பலம் 168 "सदा पश्यन्ति"(ஸதாபச்யந்தி) யாகையாகில் அது இங்கே ஸித்திக்கையாலே பலத்துக்குப்பலம் வேணுமோவென்று சொல்லிற் றிலர். இந்தக்கண்கள் புறம்பே சிலவற்றைக்காணவேண்டுவது இங்கே சில குறையுண்டாகிலன்றோ.

இவர்பக்கல் ஔதார்ய மில்லையென்று போகவோ? வடிவிற் பசையில்லையென்று போகவோ? ஸௌஶீல்யமில்லையென்று போகவோ? நெஞ்சுக்குப்பிடித்திருந்த தில்லையென்று போகவோ? மேன்மையில்லையென்று போகவோ? ஸௌலப்ய மில்லையென்று

இப்பாட்டில் க்ருஷ்ணனுடைய படியும் இங்கே உண்டென்கிறார்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

திருப்பாணாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய
அமலனாதி பிரானுக்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்த
வ்யாக்யாநம் முற்றிற்று.

---

போகவோ? போக்யதையில்லையென்று போகவோ? அநுபவத்தில் குறையுண்டென்று போகவோ?

அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

அழகியமணவாளப்பெருமாள் நாயனாரருளிச்செய்த
அமலனாதிபிரான் வ்யாக்யாநம் முற்றிற்று.

---

நிகமத்தில்(கொண்டலித்யாதி) வண்ணம் நிறமாதல், ஸ்வபாவமாதல், ஔதார்யகுணமாதல். இத்தையருளிச்செய்கிறார் (பனிநீரித்யாதி). பதாந்வயத்தோடேயாதல், இருந்தபடியேயாதல் இவற்றைவாக்யத்வயத்தாலே அருளிச்செய்கிறார் (கோவலனாயித்யாதி). (பச்சையிடுகை) இவரையொழிந்தவர்கள் ஸ்வஸ்வகுணங்களைக்காட்டி வசீகரிக்கப் பார்த்தாலுமென்றபடி. ஸங்க்யைசொல்லாமைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் (நோபஜநம்ஸ்மரந்நித்யாதி)

ஜீயர் திருவடிகளே சரணம்.
அமலனாதிபிரான் வ்யாக்யாநாரும்பதம் முற்றிற்று.



ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீ வேதாந்ததேசிகர் அருளிச்செய்த

# முநிவாஹன போகம்

[அமலனாதிபிரான் வ்யாக்யானம்]

தனியன்கள்

श्रीमान् वेङ्कटनाथार्यः कवितार्किककेसरी ।
वेदान्ताचार्यवर्यो मे सन्निधत्तां सदा हृदि ॥

ஸ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

रामानुजदयापात्रं ज्ञानवैराग्यभूषणम् ।
श्रीमद्वेङ्कटनाथार्यं वन्दे वेदान्तदेशिकम् ॥

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாநவைராக்யபூஷணம் ।
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம் ॥

ப்ரவேசம்

† व्याचिख्यासति भक्त्या विरक्ततोषाय वेङ्कटेशकविः ।
§ मुकुन्दविलोकनमुदितमुनिवाहनसूक्तिपङ्क्तिमिमां ॥

† வ்யாசிக்யாஸதி பக்த்யா விரக்ததோஷாய வேங்கடேசகவி: ।
§ முகுந்தவிலோகநமுதித முநிவாஹந ஸூக்திபங்க்திமிமாம் ॥

‡ பாவருளுந் தமிழ்மறையின் பயனே கொண்ட
பாண்பெருமாள் பாடியதோர் பாடல் பத்தில்
காவலனும் கணவனுமாய்க் கலந்துநின்ற
காரணனைக் கருத்துற நான் கண்டபின்பு

---

† இதன்பொருள்:—முகுந்தனை (அடி தொடங்கி முடியளவும்) கண்டுகந்த முனிவாஹனரான திருப்பாணாழ்வாரின் திவ்ய ஸூக்தியான இவ்வமலனாதிபிரானை, வைராக்யம் நிரம்பிய மஹான் ஒருவரின் —(அல்லது மஹான்களின்)— உகப்பின் பொருட்டு வேங்கடேச கவியானவர் பக்தியோடு வியாக்கியானம் செய்ய விரும்புகிறார்.

§ (பா) முதிதமுகுந்தவிலோகந முநிவாஹந ஸூகவிஸூக்திமிமாம்

‡ (பா) பாவளரும்.

கோவலனும் கோமானு மானவந்நாள்
குரவைபுணர் கோவியர்தம் குறிப்பே கொண்டு
சேவலுடன் பிரியாத பெடைபோற்சேர்ந்து
தீவினையோர் தனிமையெலாம் தீர்ந்தோ(ம்) நாமே.

காரணவிசேஷம் இன்னதென்று அறுதியிட அரிதாயிருப்பதொரு பகவத்கடாக்ஷத்தாலே அயத்நலப்தமான பரதத்வ பரமஹித பரமபுருஷார்த்த விவேகத்தையுடையராய், அநாதிகால ப்ரவ்ருத்தங்களான க்ஷுத்ரபுருஷார்த்தராகாதிகளையும், க்ஷுத்ரபுருஷ ஸ்தோத்ராதிகளையும், க்ஷுத்ரபுருஷார்த்தப்ரவ்ருத்திகளையும் தப்பின தம்முடைய கரணத்ரயமும் இப்போது ப்ராப்தமான ஏகவிஷயத்திலே அநந்யப்ரயோஜநாநுகூலவ்ருத்தியை உடைத்தான படியைக்கண்டு ஸந்தோஷயுக்தரான திருப்பாணாழ்வார், பின்பு பரமபதத்திலே பெறும்பேற்றை இங்கே பெரியபெருமாள் ‡ திருவருளாலே பெற்று, இப்பேற்றை அடிதொடங்கி "அமலனாதிபிரான்" முதலான பத்துப் பாட்டாலே அநுபவ பரீவாஹமாக அருளிச்செய்கிறார்.

இப்ரபந்தம் அதிவிஸ்தரம் அதிஸங்கோசம் அதிக்ருதாதிகாரத்வம் துர்க்ரஹத்வம் துரவபோதார்த்தத்வம் ஸம்சயாதி ஜநகத்வம் விரஹக்லேசம் தூதப்ரேஷணம் பரோபதேசம் பரமதநிரஸநம் என்றாற்போலே மற்றுள்ள அத்யாத்மப்ரபந்தங்களிலுள்ளவை ஒன்றுமின்றிக்கே அநுபவகநரஸமாயிருக்கிறது முதற் பாட்டான "அமலனாதிபிரான்" தொடங்கி, "கொண்டல் வண்ணனை" என்கிற தலைக்கட்டுப் பாட்டளவும்.

இதில் முதற்பட்ட மூன்று பாட்டுக்கு முதலான அக்ஷரம் † மூலமாகிய ஒற்றையெழுத்தின் முதல் நடுவிறுதியானவை.

அவதாரிகை—முதற்பாட்டு:— இதில் முதற்பாட்டு திருமந்த்ரத்திலும் த்வயத்திலும் முமுக்ஷுவுக்கு அவச்யாநுஸந்தேயங்களான அர்த்தங்களை ஸூசிப்பிக்கிறது.

வ்யா:—(அமலன்) என்கிறது —மலப்ரதிபடன் என்றபடி. இத்தால் மோக்ஷப்ரதத்வம் சொல்லிற்றாயிற்று. இது ப்ரதானமான

† பெரியாழ்-திரு 4-5-4. ‡ (பா) திருவடிகளிலே.

திருப்பாணாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

# ★ அமலனாதிபிரான் ★

1. அமலனாதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீண்மதிளரங்கத்தம்மான் திருக்
கமலபாதம்வந்து என்கண்ணினுள்ளன ஒக்கின்றதே.

---

ரக்ஷகத்வமாகையாலே பிரியப்பேசப்படுகிறது. (ஆதி) 1 "एष कर्ता न क्रियते" (ஏஷ கர்த்தா ந க்ரியதே) இத்யாதிகளிற்படியே ஸர்வஜக தேககாரணபூதன். இத்தால் "காரணமே ஶரண்யம்" என்கிறபடியே முமுக்ஷுவுக்கு ஶரணமாகப் பற்றப்படுமவன் என்று பலிதம். இக் காரணத்வமும் மோக்ஷப்ரதத்வமும் சத்ரசாமரங்கள்போலே ஸர்வ லோகஶரண்யனுக்கு விஶேஷசிஹ்நங்கள். (பிரான்) 2 "करुणा क्वापि पुरुषे" (கருணா க்வாபி புருஷே) இத்யாதிகளிற்படியே ஸர்வோப காரகன். இங்கு ஆத்மாக்களுடைய ஸத்தாதி ஸ்தாபநம் முதலாக பரிபூர்ணகைங்கர்ய ப்ரதான பர்யந்தமாக ப்ரத்யுபகாராதி நிரபேக்ஷ னானவனுடைய அநுகம்பாக்ருத்யங்களெல்லாம் ஸாமாந்யேந சொல் லப்படுகிறது. இதெல்லாம் ப்ரதமாக்ஷரார்த்தமான ரக்ஷணபேதம். இவை தம்மளவில் பர்யவஸித்தபடியிலே இம்மூன்று பதத்துக்கும் தாத்பர்யம். இது மேல் பாசுரங்களிலும் காணலாம்.

(அடியார்க் கென்னையாட்படுத்த)என்கிற விடத்தில் 'அடியார்' என்கிற வித்தாலே த்ருதீயாக்ஷரத்திலே சொன்ன ஜீவவர்க்கமும், ஜீவர்களுக்கு ஈச்வரனைக்காட்டில் வேறுபாடும் அந்யோந்யம் பிரிவும் காட்டப்படுகிறது. 'அடியார்' என்றால் ஸர்வஸாதாரணமாகச் சதுர்த்தியில் சொன்ன தாதர்த்யவான்களையெல்லாம் காட்டிற்றே யாகிலும், இங்கு அடியாரென்கிறது 3 "यो ह्येनं पुरुषं वेद देवा अपि न तं विदुः" (யோ ஹ்யேநம் புருஷம் வேத தேவா அபி ந தம் விது:) என்னும்படி அபரிச்சேத்ய மாஹாத்ம்யரான ஶேஷத்வஜ்ஞாநரஸி கரை. இப்படி 'அடியார்க்கு' என்று விஶேஷோபாதானம் பண்ணு கையாலே மத்யமாக்ஷரத்தின்படியே நிருபாதிகஶேஷிகள் வேறில் லாதபடியும் கர்மோபாதிகஶேஷிகளோடு தமக்குத் துவக்கற்றபடியும் சொல்லிற்றாயிற்று. ஸர்வஶேஷியாகையாலே ஸர்வத்தையும் யதேஷ்டமாக விநியோகிக்க ப்ராப்தனாய், நிரங்குஶஸ்வதந்த்ரனாகை

பாலே ஸர்வத்தையும் யதேஷ்டமாக விநியோகிக்க ஶக்தனுமான ஸர்வேச்வரன் 'அநந்ய ப்ரயோஜநரான ஆஸ்ரிதர்க்கு ஸர்வமும் ஶேஷமாகக்கடவது' என்கிறவிநியோக விஶேஷத்தாலே ஸர்வருக்கும் பாகவத ஶேஷத்வம் நித்யஸித்தமானால், அநந்ய ப்ரயோஜனரான ஆஸ்ரிதர்க்கு பாகவதஶேஷத்வம் ஈச்வரன்தன்னையும் பாகவதரையுமொழிந்த அந்யரைப்பற்றஶேஷத்வமில்லாதபடி வருகிறதாய் இதின் பலமான கைங்கர்யமும் இப்படி வருகிறதாகையாலே, "என்னை அடியார்க்கே ஆட்படுத்தினான்" என்ற அவதாரணம் இங்கே விவக்ஷிதம். § "மற்றுமோர்தெய்வமுளதென்றிருப்பாரோடுஉற்றிலேன்" என்றிறே இவர்களுடைய பாசுரம். (என்னையாட்படுத்த) 4 "यूयमिन्द्रियकिङ्कराः" (யூயமிந்த்ரியகிங்கரா:) என்னும்படி இந்த்ரிய கிங்கரனாய்வைத்து, அதுக்குமேலே 5 "ईश्वरोऽहं" (ஈச்வரோஹம்) என்று இருக்கக்கடவ என்னை 6 "अतोऽहमपि ते दासः" (அதோ஽ஹமபி தே தாஸ:) என்னப்பண்ணின உபகாரத்திற்காட்டிலும் § "உற்றதும் உன்னடியார்க்கடிமை" என்னப்பண்ணின இதுக்குமேல் ஒருபகாரமுண்டோ என்று இப்பரமோபகாரத்தையும் பிரிபப்பேசுகிறார். இது நமஸ்ஸில் தாத்பர்யார்த்தம். கீழ்ச்சொன்ன கர்த்ருத்வாதிகளிலே ‡ "எருத்துக் கொடியுடையான்" முதலான ஆத்மாந்தரங்களுக்குப் போலே அஜ்ஞாநாதிதோஷங்கள் இவனுக்கு உண்டாகில் இவன் முன்பு சொன்ன ஸாக்ஷாந்மோக்ஷப்ரதாநம் பண்ண வல்லனோ? என்ன,— (விமலன்) நித்யநிர்தோஷன். இத்தால் பத்தமுக்த விலக்ஷணன் என்றதாயிற்று.

'இவ்வளவு ஸூரிகளுக்கும் இல்லையோ?' என்ன,- (விண்ணவர் கோன்) பராதீந ஶக்தியோகத்தை உடையரான ஸூரிகளைக் காட்டில் வேறுபட்டவன். இத்தாலே ஸூரிஸேவ்யமான பரரூபமும் தோன்றுகிறது. 'இப்படி எட்டாநிலத்திலே இருக்குமிருப்பு இங்குள்ளார்க்கு நிலமன்றே' என்ன,- (விரையார்பொழில் வேங்கடவன்) பரிமளம் வடிவுகொண்டாற்போலேயிருக்கிற திருச்சோலைகளையுடைய திருமலையிலே † "கண்ணாவானென்றும் மண்ணோர் விண்

§ பெரியதிருமொழி 8-10-3. ‡ பெரியாழ்திரு 5-3-6.
† திருவாய் 1-8-3.

ணோர்க்கு" என்கிறபடியே எல்லாருக்கும் ஆச்ரயிக்கவும் அநுபவிக்கவுமாம்படி * இருள்தருமா ஞாலத்துள் குன்றத்திட்ட விளக்காய் நிற்கிறவன். * அந்தமில் பேரின்பத்துள்ளாருடைய ஆமோதத்தைக் காட்டில் /"எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே" என்னும்படி பிறந்த ஸ்தாவரங்களுடைய ஆமோதம் அதிஶயிதமாயிருக்கும்.

"இப்படி ஸர்வஸுலபனானாலும் §'அவ்வண்ணத்தவர் நிலைமை கண்டும் தோழீ! அவரை நாம் தேவரென்றஞ்சினோமே' என்னும்படி நிற்குமோ?" என்ன,—(நிமலன்) ப்ரஹ்மருத்ராதிகளும் அஞ்சி அருளப்பாடு முன்னாக அணுகவேண்டும்படியான ஐச்வர்யத்திலே † குறும்பற்ற நம்பிக்குக் கூசாதே நிரந்தரஸம்ச்லேஷம் பண்ணலாம்படி தன் ஈச்வரச்சுணையாகிற ஆச்ரயணவிரோதிதோஷத்தை மறைத்து 7 "अर्चकपराधीनाखिलात्मस्थितिः" (அர்ச்சக பராதீநாகிலாத்மஸ்திதி:) என்கிறபடியே ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்தை வெளியிட்டு நிற்குமவன். 'இப்படி ஸௌலப்ய ஸௌஶீல்யங்களுண்டானாலும் ஆஶ்ரித தோஷத்தைக் காணுமாகில் அணுகக்கூசார்களோ?' என்னில்,— (நின்மலன்) 8 "अविज्ञाता" (அவிஜ்ஞாதா) என்றும் ‡"என்னடியார் அது செய்யார்" என்றும் சொல்லுகிறபடியே ஆஶ்ரிதருடைய தோஷ தர்ஶநமாகிற ஶரண்யதோஷமில்லாதவன். ஸர்வஜ்ஞனாயிருக்கச் செய்தே ஆஶ்ரிததோஷத்தை காணான் (என்றது காணும்!) என்றதுவும் இவர்களுடைய தோஷத்தைக் கழிக்கைக்குறுப்பாம் என்றபடி. (விமலன்) என்று தொடங்கி இவ்வஞ்சு பதங்களாலே நாராயண ஶப்தத்தில் உபாயத்வப்ராப்யத்வங்களுக்கு உபயுக்தமான உபயலிங்

† திருமலையில் 'குறும்பற்ற நம்பி' என்கிற குயவன் ஸமர்ப்பித்த மண்மயமான பூமாலையை உகந்து தரித்தருளினான் திருவேங்கடமுடையான் என்னும் இதிஹாஸத்தை நினைக்கிறார். "தத்தாம் கோபி ஸுமநாவளிமதிமகுடம் ம்ருண்மயீமேவ தத்தே" [(குறும்பற்ற நம்பியென்னும்) தாழ்குலத்தவராலே ஸமர்ப்பிக்கப்பட்ட மண் மாலையை முடிமேல் தரித்தான் திருமலையப்பன்] என்னும் விச்வ குணாதர்சச்லோகம் காண்க. 'குறும்பறுத்தநம்பி' என்றும் பாடம்.

/ பெரு-திரு 4-10. § திருநெடு-21. ‡ பெரியாழ்திரு 4-9-2.

கத்வமும் உபயவிபூதிநிர்வாஹகத்வமும் சொல்லிற்றாயிற்று. மேல் இவன் ஸ்வரூபப்ராப்த கைங்கர்யரூபமான நீதியிலே நிரதரான நித்ய ஸூரிகளுக்கு ஸேவ்யனுமாப்போலே நமக்கும் ஸேவ்யனுமென்று சதுர்த்தியில் கருத்தான கைங்கர்ய ப்ரதிஸம்பந்தித்வத்தை அநுஸந்திக்கிறார்,—(நீதிவானவன்) இங்கு 'வான்' என்கிற ஶப்தம் ஸூரி ஸஹிதமான பரமபதத்தைச் சொல்லுகிறது. நீதியை நடத்துவிக்கும் வானிலே வர்த்திக்குமவன் என்னவுமாம். 9 "तेन वञ्चयते लोकान् मायायोगेन केशवः" (தேந வஞ்சயதே லோகாந் மாயா யோகேந கேஶவ:) என்கிறபடியே கலக்குவாரும், 10 "अवजानन्ति मां मूढाः" (அவஜாநந்தி மாம் மூடா:) என்கிறபடியே கலங்குவாருமில்லாத தேசமாகையாலே 11 "दास्यमैश्वर्ययोगेन ज्ञातीनाञ्च करोम्यहं" (தாஸ்யமைச்வர்ய யோகேந ஜ்ஞாதீநாஞ்ச கரோம்யஹம்) என்றும், 12 "परमेश्वरसंज्ञोऽज्ञ किमन्यो मय्यवस्थिते" (பரமேச்வரஸம்ஜ்ஞோऽஜ்ஞ கிமந்யோ மய்ய வஸ்திதே) என்றும் இங்கு பிறக்கும் ஈஶ்வரத்வபத்தின் மாறாட்டமில்லாத பரமபதத்திலே நித்யவாஸம் பண்ணுகிறவன் என்றதாயிற்று.

இப்படி ஸர்வஸேவ்யனான ஸர்வஶேஷி †"விபீடணற்கு வேறாக நல்லான்" என்கிறபடியே தமக்கு இப்போது விஶேஷித்து அனுபவிக்கலான படியைப் பேசுகிறார், —(நீள்மதிளரங்கத்தம்மான்) "அயோத்யை" என்றும், "அபராஜிதை" என்றும் சொல்லுகிற *கலங்காப் பெருநகரத்தின் படியைக் *கொடியணிநெடு மதிள்களாலே ஸுரக்ஷிதமான ஸ்தலவிஶேஷத்தாலே காட்டி, *அயர்வறு மமரர்களுக்கும் அதிபதியான (தன்) படியைச் *செங்கோலுடைய திருவரங்கச் செல்வனாரான ஆகாரவிஶேஷத்தாலே அறிவித்துக் கொண்டு, ஶேஷித்வத்தின் எல்லையிலே தான் நின்றாப்போலே ஶேஷத்வத்தின் எல்லையிலே என்னை நிறுத்தின ஸ்வதந்த்ர ஸ்வாமி. (அரங்கத்தம்மான்) நீர்மைக்கும் மேன்மைக்கும் எல்லையானவன். இவனுடைய உபாயத்வப்ராப்யத்வங்களில் உறைப்புண்டான திருவடிகளை அநுபவிக்கிறார்,— (திருக்கமலபாதம்) பாவநத்வ போக்யத்வங்களாலே சுபாச்ரயங்களான திருவடிகள். திருவுக்கு

† பெரியதிரு 6-8-5.

லீலாகமலம் போலேயிருக்கிற பாதம் என்னவுமாம். (வந்து)'வந்து' என்கிற இத்தாலே ஓடிவந்து தம்மைத் துடர்ந்தபடியும் அயத்நலப் தங்களானபடியும் தோன்றுகிறது. இத்திருவடிகளில் வைத்த கண் வாங்கவொண்ணாதபடியான போக்யதாதிஶயத்தை ஓர் உத்ப்ரேக்ஷையாலே அருளிச்செய்கிறார்,— (என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே) தேவாதிகளில் தலைவரான ப்ரஹ்மாதிகளுடையவும் ஸநகாதிகளான யோகிகளுடையவும் திவ்யசக்ஷுஸ்ஸுக்களுக்குங்கூட தூரமாயிருக்கக்கடவ அவை மநுஷ்யமாத்ரனான என்னுடைய மாம்ஸசக்ஷுஸ்ஸுக்களுக்கும் அத்யாஸந்நமாயிராநின்றன என்று ஆச்சர்யப்படுகிறார். "நீள்மதிளரங்கத்தம்மான் திருக்கமலபாதம்" என்று த்வயத்தில் பூர்வோத்தரநாராயணஶப்தார்த்தத்தையும், சரணஶப்தார்த்தத்தையும் அநுஸந்தித்தபடி.

இப்பாட்டால் மோக்ஷப்ரதத்வத்தையும், ஜகத்காரணத்வத்தையும், மற்றும் ஸர்வப்ரகாரோபகாரகத்வத்தையும், அவற்றில் ஸாரதமமான உபகாரவிஶேஷத்தையும், நித்யநிர்த்தோஷத்வத்தையும், நித்ய ஸூரிநிர்வாஹகத்வத்தையும், நித்யவிக்ரஹவத்வத்தையும், ஸர்வ ஸுலபத்வத்தையும், ஸௌஶீல்யத்தையும், வாத்ஸல்யத்தையும், கைங்கர்யோத்தேச்யத்வத்தையும், கைங்கர்யஸ்தாநவிஶேஷத்தையும், ஸர்வஸ்வாமித்வத்தையும், திருவடிகளினுடைய பாவநத்வத்தையும், போக்யத்வத்தையும், அவற்றைத்தான் அநாயாஸமாக அநந்யத்ருஷ்டிகளாகக்கொண்டு அநுபவிக்கப்பெற்றபடியையும் முன்னிட்டு, ஶ்ரிய: பதியினுடைய பராகாஷ்டாப்ராப்த குணப்ரகர்ஷங்களை அநுஸந்தித்தார்.

அவற்றில் ஸம்ஸாரநிவர்த்தகத்வ காஷ்டையாவது—களையற்ற கைங்கர்யத்தைக் கொடுக்கை. காரணகாஷ்ட்டையாவது—காரணாந்தரங்களெல்லாம் தானிட்ட வழக்காய், தனக்காதல் தன்னுடைய ஜ்ஞாநஶக்த்யாதிகளுக்காதல் ஒரு காரண ஸம்பாவனையின்றிக்கேயிருக்கை. ஶரண்யத்வகாஷ்டையாவது—தன்னை ரக்ஷகனாகப் பற்றினார்க்குத் தன்னையொழிய மற்றொருவரை ரக்ஷகராகப் பற்றவேண்டாதபடியிருக்கை. உபகாரகத்வகாஷ்டையாவது—ஒரு க்ஷுத்ரவ்யாஜத்தை அவலம்பித்து உபயவிபூதிவிஶிஷ்டனான தன்னை அநுபாவ்ய

னுக்குக்கொடுத்தும், அதுக்குமேல் கொடுக்கலாவதில்லாமையாலே நித்யருணியாயிருக்கை. க்ருபாகாஷ்டையாவது—ஶத்ருவினுடைய ஸம்பந்திகளுங்கூட த்யாஜ்யரென்ற பரிவர் முன்னே 'சத்ருதானும் இசையில் ஸ்வீகரிப்பேன்' என்று எதிர்பேசும்படியான இரக்கத்தையுடையனாய், அவர்கள் தாங்களும் இவனைக்கைக்கொள்ளும்படி பண்ணுகை. ஸ்வாதந்த்ர்யகாஷ்டையாவது—தன்னையும் பிறரையும் தான் நினைத்த நிலைகளிலே நிறுத்தும்போது விலக்கவல்லாரின்றிக்கேயிருக்கை. நிர்த்தோஷத்வகாஷ்டையாவது—தோஷயுக்தங்களான பதார்த்தங்களோடுண்டான ஸம்ஸர்க்கத்தாலும், பிறர்க்கு அஜ்ஞாந து:க்கஹேதுக்களானவற்றைத்தான் அநுஷ்டித்தாலும் தனக்கு அஜ்ஞாந து:க்கங்கள் வாராதிருக்கை. ஸ்வாமித்வகாஷ்டையாவது—விபூதிமான்களையெல்லாம் தனக்கு விபூதியாக உடையனாயிருக்கை. ஸௌலப்யகாஷ்டையாவது— அகல நினைப்பார்க்கும் அகலவொண்ணாதபடி அணுகநிற்கை. ஸௌசீல்யகாஷ்டையாவது— தன்பக்கல் ஈச்வரத்வத்தை ஶங்கிப்பார்க்கும் வெளியிடுவார்க்கும் தானே மறுமாற்றஞ் சொல்லி மேலும் தன்னைத் தாழவிட்டுப்பரிமாறுகை. வாத்ஸல்யகாஷ்டையாவது—அந்தரங்கராயிருப்பாரும் ஆஶ்ரித விஷயத்தில் ஆயிரங்கோடி குற்றம் காட்டிலும் அநாதரம் பிறப்பிக்கவொண்ணாதிருக்கை. ப்ராப்யத்வ காஷ்டையாவது— தன் விஶேஷணமாகவல்லது மற்றொரு ப்ராப்யமில்லாதிருக்கை. ஆஶ்ரித பக்ஷபாதித்வ காஷ்டையாவது— ஸர்வ (வர்ண) ஸமனான தான் ஆஶ்ரித ஸங்கல்பத்தோடே விரோதித்து தன் ஸாமாந்யஸங்கல்பத்தை அஸத்கல்பமாக்கி, அநிதரஸாலப்யமான ஆபிமுக்யத்தைப்பண்ணுகை. போக்யத்வ காஷ்டையாவது— தன் ஸ்வரூபத்தை அநுபவித்தால் தன் விஶேஷணமாக ஸர்வத்தையும் அநுபவிக்குமது அதின் திவலையோடு ஒத்திருக்கை. அயத்ந போக்யத்வகாஷ்டையாவது— போகார்த்தமாகக் கரணப்ரேரணமும் வேண்டாதபடி தென்றலும் பரிமளமும் வந்தாப்போலே, வந்தது விலக்கவொண்ணாதபடி அநுபாவ்யனாயிருக்கை. இவையெல்லாம் இப்பதங்களிலடைவே ஆழ்வார் அநுபவித்தபடியை அநுஸந்திப்பது.

அவ:— இரண்டாம்பாட்டு. இவன் திருவடிகளில் சிவப்புக்கு நிகரான திருப்பீதாம்பரம் தன் சிந்தைக்கு விஷயமாகிறது என்கிறார்.

2. உவந்த வுள்ளத்தனாய் உலகமளந்து அண்டமுற
நிவரந்த நீண்முடியன் அன்று நேர்ந்தநிசாசரரைக்
கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் கடியார்பொழிலரங்கத்தம்மான்அரைச்
சிவந்த வாடையின்மேல் சென்றதாமெனசிந்தனையே.

---

வ்யா:— (உவந்தவுள்ளத்தனாய்) மஹாபலியாலே அபஹ்ருத மான ராஜ்யத்தை மீட்டுத்தரவேண்டுமென்று இந்த்ராதிகள் இரக்க, 13 "उदाराः सर्वे एवैते" (உதாரா: ஸர்வ ஏவைதே) என்கிறபடி இவர்கள் பக்கலிலே ப்ரீதமான திருவுள்ளத்தையுடையனாய், அஸுரனேயாகிலும் ப்ரஹ்லாதனோடுண்டான குடல்துவக்குப் பாவி(லி)த்து, ஆநுகூல்ய மிச்ரனான மஹாபலியை அழியச்செய்ய நினையாதே, அவனுடைய ஔதார்யத்துக்கு அநுகூலமாகத்தான் இரப்பாளனாய்ச்சென்று, அவன் கொடுக்க வாங்குகையாலே அவனள விலும் அநுக்ரஹயுக்தனாய், அபேக்ஷாநிரபேக்ஷமாக எல்லார் தலை யிலும் தன் திருவடிகளை வைக்க விலக்காதவளவாலும் ஸர்வவிஷயத் திலும் உக(வ)ந்த உள்ளத்தனாய். (உலகமளந்து) ‡ அளவுபட்டுக் கொடுத்தோம் என்றிருக்கிற அஸுரன்முன்னே எல்லா லோகங் களையும் தன் திருவடிகளாலே அளவுபடுத்தி. (அண்டமுற நிவர்ந்த நீண்முடியன்) மேலே கவித்த கநகச்சத்ரம் போலேயிருக்கிற ப்ரஹ் மாண்டத்திலே கிட்டும்படி விஜ்ருப்பித்த பெரிய திருவபிஷே கத்தையுடையவன். அவன் தன்னைப்போலே திருவபிஷேகத்துக் கும் அவனோடொக்க வளருகைக்கீடான மஹிமாவுண்டு. கர்மவச் யதை தோற்றும்படி பிறவி தொடக்கமாகச் சடையும் குண்டிகையும் சுமந்துதிரிகிற பரிச்சிந்நேச்வரர் பார்த்துநிற்க இப்படி முடிசூடி நிற்கையாலே உபயவிபூதி நிர்வாஹகத்வமும் அபிவ்யக்தமாகிறது. இத்ரிவிக்ரமாபதாநம் சொன்ன இத்தாலே ஈச்வரத்வ சங்காவிஷய மான இந்த்ராதிகள் இரப்பாளரானபடியும், †"குறைகொண்டு நான் முகன்" இத்யாதிகளிற்படியே ப்ரஹ்மா திருவடிவிளக்கி ஆராத கனானபடியும், ருத்ரன் தீர்த்த ப்ரஸாதம் பெற்றுப் பூதனானபடியும் சொல்லிற்றாயிற்று.

---

† நான்-திருவ-9. ‡ (பா) அளவுபடக்

இத்தால் முன் பாட்டில் சொன்ன இஷ்டப்ராபகத்வத்தையும் உதாஹரித்ததாய், இனி அநிஷ்டநிவர்த்தகத்வத்தையும் உதாஹரிக்கிறார்,- (அன்று நேர்ந்த நிசாசரரைக் கவர்ந்த வெங்கணைக் காகுத்தன்) தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் குடியிருக்கவொண்ணாதபடி த்ரைலோக்ய க்ஷோபம் பிறந்து, தேவர்கள் ஶரணாகதரானவன்று சக்ரவர்த்தித் திருமகனாய் அவதரித்துத் தாடகா தாடகேய விராத கபந்த கரதூஷணாதிகளை நிராகரித்து லங்கைக்குப் பரிகை (परिघै) யான லவணார்ணவத்தைப் பர்வதங்களாலே பண்புசெய்து, கொம்பிலே தத்தித்திரியும் குரங்குப்படையைக்கொண்டு லங்கையை அடைமதிட்படுத்தினவன்றும், பெருமாளுடைய ப்ரபாவமறியாதே விளக்கு விட்டிற்போலே வந்தெதிர்ந்த பகற்போரறியாத கூடயோதிகளையெல்லாம் 'எனக்கு எனக்கு' என்று இரையாகக் கைக்கொண்ட *தீப்தபாவக ஸங்காஶங்களான திருச்சரங்களையுடையனாய், *வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய் நின்றவன். (காகுத்தன்) மாயாவிகளான ராக்ஷஸருங்கூட மோஹிக்கும்படி மநுஷ்யபாவத்தை முன்னிட்டு நின்றவன் காகுத்தன். (கடியார் பொழிலரங்கத்தம்மான்) ஸூரிகள் முதலாக ஸ்தாவரரூபங்களைக் கொண்டு நித்யாமோதராய் நிற்கிற *ஆராமங்களாலே சூழப்பட்ட கோயிலாழ்வாருக்குள்ளே ப்ரஹ்மாதிகள் ஆராதிக்க ஸர்வஸ்வாமித்வம் தோற்றக் கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய. (அரைச்சிவந்த வாடையின்மேல்) ‡"படிச்சோதியாடையொடும் பல்கலனாய் நின் பைம்பொற்கடிச் சோதி கலந்ததுவோ" என்னும்படி திகழாநின்ற திருவரையிலே, மதுகைடபருதிரபடலத்தாலே போல பாடலமாய் மரதககிரிமேகலையிலே பாலாதபம் பரந்தாப்போலேயிருக்கிற திருப்பீதாம்பர விஷயமாக. (சென்றதாமென சிந்தனையே) அநாதிகாலம் அநுசித விஷயங்களிலே ஓடி, அவர்கள் ஆடையிலே கட்டுண்ட என் சிந்தை, இவன் திருவடிகளைப் பற்றின என்னாலும் மீட்கவொண்ணாதபடி திருப்பீதாம்பரத்திலே சென்று துவக்குண்டது. (என் சிந்தனை சென்றதாம்) என்கையாலே ஆச்சர்யம் தோற்றுகிறது. (சென்றது) நாம் ப்ரேரிக்கப் போந்ததன்று; விஷயவைலக்ஷண்யத்தாலே ஆக்ருஷ்டமாயிற்று.

‡ திருவாய் 3-1-1.

3. மந்திபாய் வடவேங்கடமாமலை வானவர்கள்
சந்திசெய்ய நின்றானரங்கத்தரவினணையான்
அந்திபோல்நிறத்தாடையு மதன்மேலயனைப்படைத்ததோரெழில்
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே.

---

அவ:-மூன்றாம் பாட்டு— இப்படி இரண்டு பாட்டாலே பகவச்சேஷத்வபர்யவஸாநத்தையும், அந்யஶேஷத்வ நிவ்ருத்தியையும் அநுஸந்தித்து, அநந்தரம் ஶேஷபூதமான சேதநாசேதநவர்க்க ப்ரதிபாதகமான த்ருதீயாக்ஷரம் முதலான த்ருதீயகாதையாலே ஶேஷத்வ ஜ்ஞாநஹீனராயும், விச்சேதமில்லாத ஶேஷத்வஜ்ஞானமுடையராயும், காதாசித்கஶேஷத்வஜ்ஞானவான்களாயுமுள்ள ஜீவர்களெல்லாம் தந்தாமுடைய ஜ்ஞாநாநுரூபமாக ப்ரதிகூலாநுகூலோபயவித ப்ரவ்ருத்திகளிலே நிற்கிற நிலையை உதாஹரித்துக் கொண்டு பகவதநுபவத்திலே தமக்கு இடையிலே பெற்றதொரு ப்ராவண்யத்தை அநுஸந்தித்து ப்ரீதராகிறார்.

வ்யா:—(மந்திபாய் வடவேங்கடமாமலை) சபலரான ஸம்ஸாரிகளுக்கு நிதர்ஶனமான வாநரவர்க்கம் †நாநாஶாகைகளிலுள்ள க்ஷுத்ரபலங்களை புஜிப்பதாக 14"गतागतं कामकामा लभन्ते"(கதாகதம் காமகாமா லபந்தே)என்கிறபடியே ஒன்றைவிட்டு ஒன்றிலே பாய்ந்து திரிகைக்கு நிலமாய், கலியுகத்தில் பாகவதஸம்பாவனையுடைத்தாகப் புராணஸித்தமாகையாலே ஆழ்வார்கள் அவதரிக்கப்பெற்ற அகஸ்த்ய பாஷாதேஶத்துக்கு உத்தராவதியாயிருந்துள்ளதாய், புராணஸித்தமாய், ஈச்வரன் தன்னைப்போலே ஸ்வரூபரூபகுணவிபூதிப்ரபாவங்களானுண்டான மஹத்த்வத்தை யுடைத்தான திருமலையிலே. (வானவர்கள் சந்திசெய்ய நின்றான்)பரமபதத்திலே கைங்கர்ய ஸாம்ராஜ்யத்துக்கு அதிக்ருதரான முக்தரும் நித்யரும் தேஶோசிதமான தேஹங்களைக்கொண்டு உசிதமான கைங்கர்யத்தைப் பண்ணி இவர்கள் ஆச்ரயிக்கைக்கு உத்தேச்யனாய் நின்றான். (அரங்கத்தரவினணையான்) ஏற்றமுள்ளவளவும் ஏறவேண்டும்படியான திருமலையாழ்வாரும் பரமபதஸ்தாநீயமென்னும்படி எளிதாகக் கிட்டலாம்படியான கோயிலாழ்வார்க்குள்ளே, § ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி வழு

---

† (பா) நாநாஶாகியிலுள்ள. § திருவாய் 3-3-1.

யிலா அடிமை செய்யும் வானவர்களுக்குப் படிமாவாய், நிச்சேஷ ஜகதாதாரகுருவான தன்னை தரிக்கைக்கீடான ஜ்ஞாநபல ப்ரகர்ஷத்தையுடையனாய், ஸூரிஸூகுமாரஸ்ரீதளமான திருவரவணையிலே கண்வளர்ந்தருளுகிற பெரியபெருமாளுடைய.

(அந்திபோல் நிறத்தாடையும்) ஆஸ்ரிதருடைய அஜ்ஞாநாந்தகாரத்தைக் கழிக்கவல்ல ஸம்யக்ஜ்ஞாந ஸூர்யோதயத்துக்குப் பூர்வஸந்த்யை போலவும், அவர்களுடைய தாபத்ரயங்களைக் கழிக்கைக்குப் பச்சிமஸந்த்யை போலவும் புகர்த்த நிறத்தையுடைத்தான *செவ்வாரத்தவுடையாடையும். இது மேலில் அநுபாவ்யத்தை அவலம்பிக்கைக்கு அநுபூதாம்ஸத்தை † அநுவதித்தபடி. 'மேல் அநுபாவ்யம் ஏது?' என்ன,—(அதன்மேல் அயனைப் படைத்ததோரெழிலுந்தி) அநுபூதமான திருப்பீதாம்பரத்துக்கு மேலாய் இதின் நிறத்துக்கு நிகரான சிவந்த தாமரைப்பூவையுடைத்தாய், அதின்மேலே வ்யஷ்டி ஸ்ருஷ்டி ஸமயத்திலே முற்பட அயோநிஜனான ப்ரஹ்மாவை ஸ்ருஷ்டித்த அத்விதீயமான அழகையுடைத்தான திருவுந்தி. ப்ரஹ்மாவினுடைய ஸ்ருஜ்யத்வம் சொல்ல, கைமுதிகந்யாயத்தாலே ருத்ரேந்த்ராதிகளுடைய ஸ்ருஜ்யத்வம் சொல்லிற்றாம். இத்தால் *ப்ரதிபுத்தர்க்கு ஸ்ரிய:பதியையொழிய ஸரண்யாந்தரமும் ப்ராப்யாந்தரமும் இல்லையென்றதாயிற்று. இங்கு ப்ரஹ்மாவைச் சொன்னது முமுக்ஷுக்களை ஸ்ருஷ்டித்த உபகாரத்துக்கு உதாஹரணமுமாகிறது. (மேலதன்றோ) என்றது இத்திருவுந்தியையே அநுபாவ்யமாகக்கொண்டன்றோ இருக்கிறது என்னவுமாம். இதினுடைய ‡ அநுபவமிட்ட வழக்காயிருக்கிறதென்னவுமாம்.

(அடியேனுள்ளத்தின்னுயிரே) 15 **"आत्मदास्यं हरेः स्वाम्यं स्वभावञ्च सदा स्मर"** (ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர) என்கிறபடியே பரமகாருணிககடாக்ஷத்தாலே ஸ்வபாவதாஸ்ய ப்ரதிபோதமுடையேனான என்னுடைய ஸத்வோத்தரமான மநஸ்ஸிலே ப்ரகாசிக்கிற ஸ்வாதுதமமான என் ஆத்மஸ்வரூபம். 'உள்ளம்' என்று ஹ்ருதயப்ரதேசத்தைச் சொல்லவுமாம். 'இன்னு

---

† (பா) அநுபவித்தபடி. ‡ (பா) அநுபவம் இதிட்ட.

யிர்' என்று பகவதநுபவத்துக்கு அநுரூபமாகையாலே இனிதான ப்ராணுதிகளைச் சொல்லவுமாம். 16 "ज्ञानी तु परमैकान्ती परायत्तात्मजीवनः" (ஜ்ஞாநீ து பரமைகாந்தீ பராயத்தாத்மஜீவந:) 17 "मच्चित्ता मद्गतप्राणाः" (மச்சித்தா மத்கதப்ராணு:) இத்யாதிகளை இங்கே அநுஸந்திப்பது.

அவ:—நாலாம்பாட்டு—இரண்டாம்பாட்டாலும் மூன்றும்பாட்டாலும் ப்ரஹ்மருத்ராதிகளுடைய கர்மாதிகார(ரி)த்வமும்,கர்மமூல ஜந்மாதிகளும் சொல்லிற்றாயிற்று. நாலாம்பாட்டாலே ப்ரஹ்ம ருத்ராதிகள் வரங்கொடுத்து வாழ்வித்த ராவணனை நிராகரித்த வ்ருத்தாந்தத்தாலும் தேவதாந்தரங்களுடைய க்ஷுத்ரத்வத்தையும் 18 "ब्रह्मा स्वयंभूश्चतुराननो वा रुद्रस्त्रिनेत्रः" (ப்ரஹ்மா ஸ்வயம்பூச் சதுராநநோ வா ருத்ரஸ் த்ரிநேத்ர:) இத்யாதிகளிற்படியே அவர்களுடைய அல்பசக்தித்வத்தையும் அநுஸந்தித்துக்கொண்டு ப்ரஹ்மாதிகளையெல்லாம் அகப்படியிலே ஏகதேசத்திலே வைத்து உய்யக் கொண்ட ஸ்ரீமத்தையை உடைத்தான திருவயிற்றினுடைய சிறுமை பெருமைகளு(ளா லு)ண்டான அகடிதகடநாசக்தி(களு)க்கு அடைய வளைந்தான்போலே யிருக்கிற உதரபந்தம் தம்முடைய சிறிய திருவுள்ளத்துக்குள்ளே வெளியிற்போலே இடங்கொண்டு உலாவா நின்றது. இது ஒரு ஆச்சர்யமென்கிறார்.

கீழ் மூன்று பாட்டாலும் ப்ரதமபதார்த்தம் ப்ரதிஷ்டிதமாய், நாலாம் பாட்டாலே 19 "न नमेयं तु कस्यचित्" (ந நமேயம் து கஸ்யசித்) என்ற * வணங்கலிலரக்கனைத் தலைசாய்த்து, 20 "दशेन्द्रियाननं घोरं" (தசேந்த்ரியாநநம் கோரம்) என்கிறபடியே முமுக்ஷுக்களுடைய மநஸ்ஸை அஹங்காரமமகாரதூஷிதமாகாதபடி பண்ணிக்கொடுக்கிற சக்ரவர்த்தித்திருமகனுடைய சரித்ரத்தை முன்னிட்டு 'நானும் என்னுடையதன்று; மற்றும் என்னுடையதாவன ஒன்றுமில்லை' என்கிற நமஸ்ஸில் அர்த்தத்தை மறைபொருளாக அநுஸந்திக்கிறாராகவுமாம்.

வ்யா:—(சதிரமாமதிள் சூழிலங்கைக்கிறைவன் தலைபத்துதிர) குலபர்வதங்களைச் சேர்த்து இசைத்தாப்போலே செறிவும் திண்மையும் உயர்த்தியுமுடைத்தாய், எட்டு திக்குகளிலுள்ள திக்பாலகர்

4. சது(தி)ரமாமதிள் சூழிலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி ஓர்வெங்கணையுய்த்தவனோதவண்ணன்
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான் திருவயிற்
றுதர பந்தமென்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே.

---

களுக்கும் எட்டிப்பார்க்க வொண்ணாதிருக்கிற மதிள்களாலே இற்ற விடம் முறிந்தவிடமில்லாதபடி எங்குமொக்கச் சூழப்பட்டு ஜல துர்க்க கிரிதுர்க்க வநதுர்க்கங்களாலே துர்க்கங்களுக்கெல்லாம் உப மானமாம்படி ப்ரஸித்தமான லங்கைக்கு ஈச்வரனாய், துர்க்கபல வரபல புஜபல ஸைந்ய பலங்களாலே செருக்கனாய், மால்யவான், அகம்பனன், மாரீசன் முதலான ராக்ஷஸரோடு, ஹநுமான், விபீஷ ணன் முதலான ஸத்வப்ரக்ருதிகளோடு வாசியற அவிகீதமாகப் பேசப்பட்ட பெருமாள் பெருமையை அறிந்துவைத்தும், கண்டும் மதிகெட்டான்படியே 21 "तेन मैत्री भवतु ते यदि जीवितुमिच्छसि" (தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி) என்ற தாய்வாய்ச்சொல்லும் கேளாதே, 22 "अराक्षसमिमं लोकं कर्तास्मि निशितैः शरैः । न चेच्छरणमभ्येषि मामुपादाय मैथिलीम्॥" (அராக்ஷஸமிமம் லோகம் கர்த்தாஸ்மி நிஶிதை: ஶரை: । ந சேச்சரணமப்யேஷி மாமுபாதாய மைதிலீம்॥) என்று பெருமாள் அருளிச்செய்துவிட்ட பரமஹிதமான பாசுரத் தையும் அநாதரித்து, அடைகோட்டைப்பட்டவளவிலும் பூசலுக் குப் புறப்படவிட்ட மஹாபலரான படைமுதலிகள் எல்லாரையும் படக்கொடுத்து, தானே றிப்பொருதவன்று, * ரிபூணாமபிவத்ஸல ரான பெருமாள் சரச்செருக்கு வாட்டி, 'நம்முடனே பொரும்படி இளைப்பாறி நாளைவா' என்றுவிட, நாணாதே போய் மண்டோதரி முதலான பெண்டுகள் முகத்திலே விழித்து, தன்னிற்பெரிய தம் பியையும் மகனையும் படக்கொடுத்துத் தான் சாவேறாகவந்து ப்ரதிஹதஸர்வாஸ்த்ரனானபின்பும் சினந்தீராதே சேவகப் பிச்சேறிநின்ற ராவணனை, இனித் தலையறுக்குமதொழிய வேறொரு பரிஹாரமில்லையென்று திருவுள்ளம்பற்றி, ஒருதலை விழ வேறொரு தலை கிளைக்க முன்பு பண்ணின சித்ரவதப்ரகாரமன்றிக்கே, ஒரு காலே பத்துத்தலையும் உதிரும்படியாக.

(ஓட்டியோர் வெங்கணையுய்த்தவன்) 'தானே போய் ராவணன் தலை பத்தும் கைக்கொள்ளவேணும்' என்று சினமுடைத்தாய், அத்விதீயமாயிருப்பதொரு திருச்சரத்தைத் தகையாதே ஓடவிட்டு, இரைபோந்த இலக்குப்பெறுகையாலே அத்திருச்சரத்தை உய்யப் பண்ணினவன். சரத்தினுடைய ஆஜ்ஞாகாரித்வத்தாலும், ராவணனுடைய தைர்யத்தாலும் தலைபத்து உதிர்ந்தபின்னும் அவனுடல் கட்டைப்பனைபோலே சிறிதுபோதிருந்து நிற்கும்படியாயிருந்தது. (தலை பத்துதிரவோட்டி) என்றது முன்னிற் பூசலிலே ராவணனைத் தலைசாய்த்து 23 "**गच्छानुजानामि**" (கச்சாநுஜாநாமி) என்று துரத்திவிட்டபடியாய், (ஓர்வெங்கணையுய்த்தவன்) என்றது பின்பு அவனுடைய வதார்த்தமாக அத்விதீயமான அஸ்த்ரத்தை விட்டவன் என்னவுமாம். (ஓதவண்ணன்) கண்டவர்களுடைய பாபத்தையும் தாபத்தையும் கழிக்கவற்றாம் ஸமுத்ரம்போலே ச்யாமளமான திருமேனியையுடையவன்.

(மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான்) ராவணவதம் பண்ணின வீரலக்ஷ்மியுடனே நின்ற அழகைக் கண்டு ப்ரஹ்மாதிகள் ஸ்தோத்ரம்பண்ண அப்ஸரஸ்ஸுக்கள் மங்களந்ருத்தம் பண்ணினாப்போலே 24 "**आत्मानं मानुषं मन्ये**" (ஆத்மாநம் மாநுஷம் மந்யே) என்கிற பெருமாளுடைய பூமிகைக்கு அநுரூபமாக முக்தரும் நித்யரும் கூடி (ரூபாந்தரங்கொண்டு) வந்தார்கள் என்னலாம்படி அதிமதுரங்களாய், ஜ்ஞாநாதிகுணமஹத்தையுமுடையவையான வண்டுகள் காலப்பண்கள் பாட, பாட்டுக்கு அநுகுணமாக குணாதிகங்களான நீலகண்டங்கள் ந்ருத்தம்பண்ண, இக்கீதந்ருத்தங்களாலே மங்களோத்தரமான கோயிலாழ்வார்க்குள்ளே ஸர்வாதிபதியானபடி தோற்றக் கண்வளருகிற பெரியபெருமாளுடைய.

(திருவயிற்றுதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே) 24 "**दामोदरं बन्धगतं**" (தாமோதரம் பந்தகதம்) என்கிறபடியே பந்தகதருக்கு மோக்ஷஹேதுவான தாமோதரத்வத்தை வெளியிடாநின்ற திருவயிற்றில் 'திருவுதரபந்தம்' என்று திருநாமத்தையுடைத்தான திருவாபரணம் அதிக்ஷுத்ரனான என்னுடைய அதிராகதூஷிதமான ஹ்ருதயத்தினுள்ளே அதுவே நிவாஸபூமியென்னும்படி நின்று, அளவற்ற போக்யதாப்ரகாசக வ்யாபாரங்களைப் பண்ணு

5. பாரமாய பழவினை பற்றறுத்து என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றி யென்னுள் புகுந்தான்
கோரமாதவம் செய்தனன் கொலறியேனரங்கத்தம்மான் திரு
ஆரமார்பதன்றோ அடியேனை யாட்கொண்டதே.

---

நின்றது. இது திருமந்த்ரத்திலும், திருமேனியிலும் மத்யத்திலே வரும் அநுபவம்.

அவ:—அஞ்சாம்பாட்டு. மேல் இரண்டு பாட்டில் நாராயண ஶப்தார்த்தமுள்ளீடாகப் பெரியபிராட்டியாருடைய நிவாஸத்தால் நிகரில்லாத திருமார்பையும், திருக்கழுத்தையும் அநுபவிக்கிறார்.

வ்யா:—(பாரமாய பழவினை பற்றறுத்து) காலதத்வமுள்ளதனையும் ப்ராயச்சித்தம்பண்ணினாலும் கழிக்கவொண்ணாதபடி உபசிதமாய்க்கொண்டு அநாதிகாலம் நடக்கிற ஸாம்ஸாரிககர்மகலாபத்தை ஸவாஸநமாக என்னுடன் துவக்கறுத்து. (என்னைத் தன் வாரமாக்கிவைத்தான்) இப்படிக் கர்மபரவசனாய், இந்த்ரியகிங்கரனாய் தாத்ருஶரான இந்த்ராதிகளை எடுத்துச் சுமந்து தனிசு தீராதே பொலிசையிறுத்துத்திரிகிற என்னை அபஹதபாப்மாவாய், ஸ்வாமிபாவத்துக்கு எல்லைநிலமாய் ஸர்வரிபோக்யனான தன்னுடைய அந்த:புரஸ்த்ரீகளைப்போலே அந்யர்க்குக் கூறில்லாதபடி பண்ணி அஸாதாரண கைங்கர்யரஸத்தைத் தந்து, இது மேலொருகாலத்திலும் மாறாதபடி வைத்தான். (வைத்ததன்றி என்னுள் புகுந்தான்) அநந்யனாக்கி வைத்தவளவன்றிக்கே, முன்பு ப்ரயோஜநாந்தரப்ரவணனான என்னுடைய ஹ்ருதயத்திலே அநந்யப்ரயோஜநாநுபவ விஷயமாய்க்கொண்டு, தஸ்யுபரிக்ருஹீதமான தன் படைவீட்டிலே தஸ்யுக்களையோட்டிப் புகுருமாப்போலே புகுந்தான்.

(கோரமாதவம் செய்தனன் கொல் அறியேன்) அநாதிகாலம் இழந்த வஸ்துவைப் பெறுகைக்கு அகர்மவச்யனான ஈச்வரன் தானே அவதாரக்ஷேத்ரமான அயோத்யையையும் விட்டு ஆஶ்ரிதனிருப்பிடமான லங்கையிலும் போகாதே, * கங்கையிற் புனிதமாய காவிரி நடுவுபாட்டிலே அதிகோரமாய், அதிமஹத்தாயிருப்பதொரு தபஸ்ஸைப்பண்ணினானோவறிகிலேன். இது அதிவாதகர்ப்பமாக உத்ப்ரே

க்ஷித்தபடி. ஸர்வஸம்ஸாரநிவர்த்தகமாய், அமோகமாயிருப்பதொரு 25 **"मोक्षयिष्यामि"** (மோக்ஷயிஷ்யாமி) என்கிற ஸங்கல்பரூபமான தபஸ்ஸைப்பண்ணினான் என்று தாத்பர்யம். அங்ஙனன்றிக்கே, இப்பெரிய பேறு பெறுகைக்கு அயோக்யனான நான் இதுக்கு அநுரூபமாய் அமோகமாயிருப்பதொரு மஹா தபஸ்ஸைப் பண்ணிப் பெற்றேனல்லேன். இதுக்கு 26 **"त्वयि निहितभरोऽस्मि सोऽहं यतः"** (த்வயி நிஹிதபரோऽஸ்மி ஸோऽஹம் யத:) என்றும், 27 **"तव भरोऽहमकारिषि धार्मिकैः"** (தவ பரோऽஹமகாரிஷி தார்மிகை:) என்றும் சொல்லுகிறபடியே, 'இப்போது நானும் பிறரும் அறியலாவது எனக்கொரு தபஸ்ஸு காண்கிறிலேன்' என்று ஈச்வரனுடைய இரக்கத்தின் ப்ராதாந்யத்திலே தாத்பர்யமாகவுமாம்.

'இப்படி க்ஷுத்ரனான என் திறத்தில் இறங்கினவன்தான் *தேறவொண்ணாத *திருவில்லாத் தேவரில் ஒருவனல்லன்; *அகலகில்லேனிறையுமென்றலர்மேல் மங்கையுறைமார்பன்' என்னுமிடத்தையும், சேஷபூதரான தமக்கு ஸ்ரீதரனே கைங்கர்யப்ரதிஸம்பந்தியென்னுமிடத்தையும், திறம்பாத சிந்தைக்குச் சிக்கெனக் காட்டிக்கொடுக்கிறார்,—(அரங்கத்தம்மான் திருவாரமார்பதன்றோ அடியேனையாட்கொண்டதே) ஸர்வருக்கும் அநுபவிக்கலாம்படி ஸர்வஸஹிஷ்ணுவாய்க்கொண்டு கோயிலாழ்வார்க்குள்ளே ஸௌலப்யகாஷ்டையோடு விரோதியாத ஸ்வாமித்வகாஷ்டையையுடையரான பெருமாளுடைய சேஷித்வபூர்த்திக்கு லக்ஷணமான திருவையும் அழகுவெள்ளத்துக்கு அணைகோலினாப்போலேயிருக்கிற ஹாரத்தையும் உடைத்தான திருமார்வன்றோ ஸ்வாபாவிகசேஷ(ஷி)த்வாநுபவ ரஸிகனாய்,*அதுக்குமேலே குணைர்தாஸ்யமுபாகதனுமான என்னை ஸ்வரூபாநுரூபமான ஸ்தோத்ராதி சேஷவ்ருத்தியிலே மூட்டி அதுக்கு இலக்காய் நின்றது.

இப்பாட்டில் பதங்களினடைவே நாராயணசப்தத்தில் விவக்ஷிதமான அநிஷ்டநிவர்த்தகத்வமும், இஷ்டப்ராபகத்வமும், உள்ளும் புறம்பும் வ்யாபித்து நிற்கும்படியும், நித்யக்ருபையும், உபாயத்துக்கு ப்ரதாநமான ஸௌலப்யமும், ப்ராப்யத்துக்கு ப்ரதாநமான ஸ்வாமித்வமும், ஸர்வாநுகுணமான ஸ்ரிய:பதித்வமும், பூஷணாஸ்த்ரரூபங்களாக புவநங்களை தரிக்கிற போக்யதமமான விக்ரஹயோகமும், நாரசப்தார்த்தமான தாஸ

6. துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன் அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில் சூழரங்கநகர் மேயவப்பன்
அண்டரண்டபகிரண்டத் தொருமாநில மெழுமால்வரைமுற்றும்
உண்டகண்டங் கண்டீரடியேனை யுய்யக்கொண்டதே.

---

பூதன் ஸ்வரூபமும் தாஸ்யபலமாக ப்ரார்த்திக்கப்படும் கைங்கர்யமும் அநுஸந்தேயம்.

அவ:—ஆறும்பாட்டு – (துண்டவெண்பிறையனித்யாதி) கீழ்ப் பாட்டில் கைங்கர்யார்த்தியான தம்முடைய கைங்கர்யவிரோதிகளான நிருபாதிக ஸ்வாமித்வாபிமாந மூலங்களையெல்லாம் நிராகரித்தபடியை அருளிச்செய்தார். இப்பாட்டில் ஐச்வர்யார்த்திகளானருடைய ஐச்வர்யவிரோதியான பிக்ஷாதசையைக் கழிக்கும் படியை உதாஹரிக்கிறார்.

வ்யா:—(துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன்) ஈச்வரனென்று பேரைச்சுமந்த தனக்கும் பூர்ணத்வமில்லை என்கைக்கு ஜ்ஞாபகம்போலே ஏகலமாத்ரமாய்க்கொண்டு ப்ரகாசிக்கிற சந்த்ர கலையை தரிக்கிற ருத்ரன். ப்ரஹ்மாவினுடைய புத்ரனாய்வைத்து, பிதாவின் திறத்திலே அபராதம் பண்ணி, அத்தாலே மஹாபாதகாக்ராந்தனாய், 'இப்பாதகத்தைத் தீர்க்கவல்லார் ஆர்?' என்று கரகலித கபாலனாய்க்கொண்டு திரிந்து, ஓரளவிலே கெடுமரக்கலம் கரைசேர்ந்தாப்போலே காருணிகனான ஸர்வேச்வரனை வந்து † கண்டு ‡ "என்னெந்தாய் சாபம் தீர்" என்ன, இவனுடைய சாபத்தைத்தீர்க்க வல்லவன். இத்தால் ஈச்வரனென்று பேருடைய ருத்ரன் கர்மவச்யனென்னுமிடமும், தன்னைத்தான் ரக்ஷித்துக்கொள்ளமாட்டாத இவன் வேறொருத்தர்க்கு நிரபேக்ஷ ரக்ஷகனாகமாட்டான் என்னுமிடமும், ஸர்வேச்வரனே ஸர்வாநிஷ்ட நிவர்த்தகனென்னுமிடமும் சொல்லிற்றாயிற்று.

(அஞ்சிறைய வண்டுவாழ் பொழில்சூழ் அரங்கநகர் மேயவப்பன்) ஆர்த்தியுடையார் அபேக்ஷித்தால் அவர்களுக்கு தூதக்ருத்யம் பண்ணுகைக்கும் § மாசில் மலரடிக்கீழ் அவர்களைச் சேர்க்கைக்கும்

---

† (பா)கிட்டி. ‡ பெரியதிரு 1-5-8. § திருவிருத்தம்-54.

ஹேதுவான கதிக்கு ஸாதநங்களாய், அபிரூபங்களான சிறகுகளை யுடைத்தான வண்டுகள் அபிமதபோகத்தோடே வாழுகிற திவ்யோத்யானங்களாலே சூழப்பட்ட ஸ்ரீரங்க நகரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற ஸர்வலோக பிதாவானவன். இத்தால், காரணபூதனாய், கரணகளேபரங்களைக்கொடுத்து உபகரித்தவன் கண்ணுக்கிலக்காய் வந்து கண்வளர்ந்து, கரணங்கள் பட்டிபுகுராதபடி காக்கிற உபகாராதிஶயத்தை உதாஹரிக்கிறதாகிறது. 28 "नराज्जातानि तत्त्वानि" (நராஜ்ஜாதாநி தத்வாநி) இத்யாதிகளின் அர்த்தமும் இங்கே அநுஸந்தேயம்.

காரணாவஸ்தையில் எல்லாக் கார்யங்களையும் தன் பக்கலிலே உபஸம்ஹரித்துப் பின்பு ஸ்ருஷ்டிக்கும்படிக்கு உதாஹரணமாக ||வெற்றிப்போர்க்கடலரையன் விழுங்காமல் தான் விழுங்கி உய்யக் கொண்ட உபகாரத்தைக் காட்டி, ||"நெற்றிமேற் கண்ணானும் நான்முகனும்" முதலாக ||"எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார் தாமுளரே" என்னுமர்த்தத்தைப் பேசிக்கொண்டு தம்மை இப்போது ஸம்ஸாரார்ணவம் விழுங்காதபடி உய்யக்கொண்ட படியை உபலாளிக்கிறார்,— (அண்டரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால்வரை முற்றுமுண்ட கண்டங்கண்டீர் அடியேனை உய்யக்கொண்டதே) அண்டாந்தர்வர்த்திகளான தேவாதிவர்க்கங்களையும், அண்டங்கள் தன்னையும், அண்டாவரணங்களையும், அண்டங்களுக்குள்ளே பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான மஹாப்ருதிவியாலும் குலபர்வதங்களாலும் உபலக்ஷிதங்களான ஸர்வகார்யங்களையும் எல்லாம் திருவயிற்றிலே வைத்து ரக்ஷிக்கைக்காக விழுங்கின திருக்கழுத்துக் கண்டீர் ஸ்வரூபத்தை †உணர்த்தி என்னை ஸ்வாநுபவத்தாலே உஜ்ஜீவிப்பித்தது. அண்டாதிகளைப்பற்ற சிறியவான குலபர்வதாதிகளைப் பிரியப் பேசுகையாலே அவ்வளவு விழுங்குகையும் § ஆச்சர்யமென்று தோன்றுகிறது.

அவ:—ஏழாம்பாட்டு—மேல் நாலுபாட்டாலே ப்ரார்த்தநீயமான கைங்கர்யத்துக்கு /ப்ரஸாதகமான அநுபவம் தம்மை இப்போது

---

|| பெரியதிரு 11-6. † (பா) உணர்ந்த

§ (பா) ஆச்சர்ய மன்றென்று. / (பா) ப்ரஸ்தாபகமான.

7. கையினார்சுரிசங்கனலாழியர் நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீண்முடியெம்
ஐயனார் அணியரங்கனாரரவினணைமிசை மேயமாயனார்
செய்யவாய் ஐயோ! என்னைச்சிந்தை கவர்ந்ததுவே.

---

பரவசமாக்கினபடியைப் பேசுகிறார். அதில், "கையினார்" என்கிற பாட்டில், ஆழ்வார்களோடு பொருந்தின திருக்கையை அவலம்பந மாகக்கொண்டு திருமுடியளவும் சென்று மீண்ட சிந்தையைத் ‡ தூமுறுவல் தொண்டைவாய்ப் பிரானுடைய § "கோலம்திரள் பவளக்கொழுந்துண்டங்கொல்" என்னும்படியான திருப்பவளத்தி லழகு தன்வசமாக்கிற்று என்கிறார்.

வ்யா:—(கையினார் சுரிசங்கனலாழியர்) திருக்கைக்கு ஆயுத மாகைக்கும், ஆபரணமாகைக்கும் போரும் என்னும்படி ஆர்ந்த ஸந்நிவேசத்தை உடைத்தாய், அவ்வலம்புரியான வடிவாலே ப்ரணவஸந்நிவேசமாய், சப்தப்ரஹ்மமயமாய், நிரதிசயாநந்த ஹேதுவான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், தாநவவநதாவாக்னியாய், மநஸ்தத்வாபிமானியான திருவாழியாழ்வானையுமுடையராய். இத்தால், மந்த்ரத்தையும் மநஸ்ஸையும் அநுகூல சிந்தைக்கு அநுகுண மாக்கவல்ல உபகரணங்களை உடையவர் என்றதாயிற்று. திவ்யாயு தாழ்வார்கள் பெரியபெருமாளுடைய திருக்கைகளில் ரேகையில் ஒதுங்கிக்கிடந்து, பெருமாள் திருமேனியிலே தோன்றி நிற்பர்கள். (நீள்வரைபோல் மெய்யனார்)ஸ்வரூபம்போலே ஸௌக்ஷ்ம த்ருஷ்டிகள் காணுமளவன்றிக்கே, மாம்ஸசக்ஷஸ்ஸுக்களும் காணலாம்படி மலையிலக்கான திருமேனியையுடையவர்.

(துளவவிரையார்கமழ் நீண்முடியெம் ஐயனார்) ஸர்வாதிகத்வ ஸூசகமான திருத்துழாயின் பரிமளத்தைப் பரிபூர்ணமாக்கும்படி கமழ்ந்து, விபூதித்வயஸாம்ராஜ்ய வ்யஞ்ஜகமான திவ்யகிரீடத்தை யுடைய ஸர்வலோகபிதாவானவர். (அணியரங்கனார்) பரமவ்யோம க்ஷீரார்ணவாதிகளைக் காட்டில் குணாதிசயத்தாலே ஆஸ்ரிதர்க்கு ஹ்ருத்யதமமானபடியாலே, விபூதியிரண்டுக்கும் ஏகாபரணமென்ன

---

‡ திருவாய் 5-3-8. § திருவாய் 7-7-3.

8. பரியனாகிவந்த வவுணனுடல்கீண்ட அமரர்க்
கரியவாதிப்பிரா னரங்கத்தமலன் முகத்துக்
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடிநீண்டவப்
பெரியவாய கண்களென்னைப் பேதமைசெய்தனவே.

---

லாய், ஸௌலப்யாதிஸய முண்டாம்படியான ஸ்ரீரங்கவிமானத்தை ஸயநஸ்தாநமாகவுடையவர். அணிமையாலே 'அணியரங்கனார்' என்கிறதாகவுமாம்.

(அரவினணைமிசை மேய மாயனார்) தம்முடைய ஜ்ஞாநபலங்கள் வடிவுகொண்டாப்போலேயிருக்கிற திருவநந்தாழ்வானாகிற அநுகூல திவ்யபர்யங்கத்தின்மேலே அளவறததேங்கின அம்ருத தடாகம் போலே ஆஸ்ரிதர்க்கு அநுபவிக்கலாய், 29"चिन्तामणिमिवोद्वान्तमुत्सङ्गेऽनन्तभोगिनः" (சிந்தாமணிமிவோத்வாந்தமுத்ஸங்கேऽநந்தபோகிந:) என்னும்படி அத்யாச்சர்ய பூதரானவருடைய, (செய்யவாயையோ என்னைச் சிந்தை கவர்ந்ததுவே) §"வாலியதோர் கனிகொல்" என்னலாம்படியான வர்ணமாதுர்யாதிகளையுடைத்தாய், வையமேழுமுள்ளே காணலாம்படியான செய்யவாய் என் சிந்தையைப் பறித்துக்கொண்டது. 'ஐயோ' என்றது ஆச்சர்யத்தையாதல், அநுபவித்து ஆற்றவரிதானபடியையாதல், அநுபவரஸத்தையாதல் காட்டுகிறது.

அவ:—எட்டாம்பாட்டு. (பரியனாகியித்யாதி) தன்னை, 30"जितन्ते पुण्डरीकाक्ष" (ஜிதந்தே புண்டரீகாக்ஷ) இத்யாதிகளிற்படியே தோற்பித்து, திருவடிகளிலே விழப்பண்ணி மேன்மேலே அநுபவத்தையுண்டாக்கின ||தாமரைக்கண்களுக்குத் தாம் || அற்றுத்தீர்ந்தபடியை, ஆஸ்ரிதவிரோதி நிராகரண வ்ருத்தாந்தபூர்வகமாக அநுபவிக்கிறார்.

வ்யா:— (பரியனாகி வந்த அவுணனுடல் கீண்ட) ஸர்வலோகத்திலுமுள்ள தமஸ்ஸெல்லாம் திரண்டு ஒரு வடிவுகொண்டாப்போலே அதிஸ்தூலனாய், மஹாமேரு நடந்தாப்போலே எதிர்த்துவந்த

---

§ திருவாய் 7-3-3. || திருவாய் 7-3-3.

†திரண்டதோளிரணியன் சினங்கொளாகமொன்றையும், ஒரு வாழை மடலைக் கிழிக்குமாபோலே † இரண்டு கூறு செய்தவனாய். (அமரர்க்கரியவாதிப்பிரான்) தன்னாலே ஸ்ருஷ்டருமாய் உபக்ருதருமான தேவர்கள், தான் காரணபூதனாய், உபகாரகனாய் நிற்கிற நிலையறியமாட்டாமையாலே, அவர்களுக்கு ப்ரஹ்லாதன் அநுபவித்தாப்போலே அணுகவும் அநுபவிக்கவும் அரியனாயிருக்கிற. (அரங்கத்தமலன் முகத்து) ஹேய(ர)கரமான ஸம்ஸாரத்துக்குள்ளே கோயிலாழ்வாருடன் எழுந்தருளிவந்து, ||"அணியார்பொழில் சூழரங்கநகரப்பா, துணியேனினி நின்னருளல்லதெனக்கு" என்றிருப்பார் தம்முடைய திருவடிகளையடைந்து அடிசூடியுய்யும்படி, அவர்களுடைய / ஐயப்பாடு முதலான ஹேயங்களை / அறுத்துத்தோன்றும் அழகையுடையரான பெரிய பெருமாளுடைய §"கோளிழைத்தாமரை" இத்யாதிகளாலே பேசப்பட்ட பேரழகையுடைத்தாய், சந்த்ரனும், தாமரையும் ஒன்றினைப்போலேயிருக்கிற திருமுகத்தில்.

(கரியவாகிப் புடைபடர்ந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாயகண்கள்) நிகரில்லாத நீலரத்நம்போலேயிருக்கிற தாரகையின் நிறத்தாலே நீலோத்பலவர்ணங்களாய், ஆஸ்ரிததர்சந ப்ரீதியாலே அன்றலர்ந்த தாமரைப்பூப்போலே அதிவிகஸிதங்களாய், ஆஸந்நரெல்லார்பக்கலிலும் ஆதரம் தோன்றும்படியான உல்லாஸத்தையுடையவையாய், அநந்யர்பக்கல் அநுராகத்துக்குக் கீற்றெடுக்கலாம்படியான சிவந்த வரிகளாலே வ்யாப்தங்களாய், ஸ்வபாவஸித்தங்களான ஆயாம விஸ்தாரங்களையுடையவான திருக்கண்கள். (அப்பெரிய) என்றதுக்கு, இப்போது காண்கிறவளவன்றிக்கே ஶாஸ்த்ரவேத்யமாய், அநவச்சிந்நமான போக்யதாப்ரகர்ஷத்தையும் மாஹாத்ம்யத்தையுமுடைய என்று தாத்பர்யமாகவுமாம். (என்னைப் பேதமை செய்தனவே) இவ்வநுபவரஸத்திலே அமிழ்ந்த என்னை அல்லாததொரு ஜ்ஞாநாநுஷ்டாநங்களுக்கு அநர்ஹனாம்படி பண்ணிற்றன.

அவ:—ஒன்பதாம்பாட்டு. (ஆலமாரத்திலித்யாதி) அவயவ ஶோபைகளிலே ஆழங்காற்பட்ட தம்முடைய நெஞ்சு வருந்தி

† திருச்சந்த-62. || பெரியதிரு 11-8-8. / திருமாலை-15.
§ திருவாய் 7-7-8.

9. ஆலமாமரத்தினிலை மேலொருபாலகனாய்
ஞாலமேழுமுண்டா னரங்கத்தரவினணையான்
கோலமாமணியாரமும் முத்துத்தாமமும் முடிவில்லதோரெழில்
நீலமேனிஐயோ! நிறைகொண்ட தென்நெஞ்சினையே.

---

எங்கும் வ்யாபித்து, ஸர்வாவயவஶோபைகளோடுங்கூடின ஸமுதாய ஶோபையாலே பூர்ணமாய், நித்யாநுபவ ச்ரத்தையாலே முன் பெற்ற தாய் நினைத்திருந்த பூர்த்தியை இழந்தது என்கிறார்.

வ்யா:–(ஆலமாமரத்தினிலைமேலொரு பாலகனாய்)ஓர் அவாந்தர ப்ரளயத்திலே †"ஆலன்று வேலை நீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ" என்று அறியவரிதாய், அநந்தஶாகமாயிருப்பதொரு வட வ்ருக்ஷத்தில் ஓரிலையிலே தாயும் தந்தையுமில்லாததொரு தனிக் குழவியாய். (ஞாலமேழுமுண்டான்) அடுக்குக்குலையாமல் மார்க்கண்டேயன் காணும்படி ஸர்வலோகங்களையும் திருவயிற்றிலே வைத்தவன். (அரங்கத்தரவினணையான்) ப்ரளயகாலத்திலே பாலனாய்க்கொண்டு ஆலிலைமேலே கண்வளர்ந்தருளுகிறபோதோடு, ஸர்வகாலத்திலும் கோயிலாழ்வார்க்குள்ளே ஸூரிகளுக்கெல்லாம் தலைவரான திருவனந்தாழ்வான்மேலே, §"உலகுக்கோர் தனியப்பன்" என்னும்படி தன் ப்ரஜைகளான ப்ரஹ்மாதிகள் ஆராதிக்கக் கண் வளர்ந்தருளுகிறபோதோடு வாசியறக் காரணத்வ ரக்ஷகத்வாதிகள் காணலாம்படியாயிருக்கிற பெரியபெருமாளுடைய.

(கோலமாமணியாரமும்) நாய்ச்சியாருக்குக் கோயிற்கட்டணமாயிருக்கிற திருமார்வுக்கு ஒரு ரத்நப்ராகாரம்போலே அபிரூபமாய், அதிமஹத்தாய், மஹார்க்கரத்நமான திருவாரமும். (முத்துத்தாமமும்) ஸங்கவீரமாயும், ஏகாவளியாயும், த்ரிஸரமாயும், பஞ்சஸரமாயுமுள்ள திருமுத்துவடங்களும். (முடிவில்லதோரெழில் நீலமேனி) இவைதனக்கும் அதிஶயகரமாய், அநந்தமாய், அத்விதீயமான ஆபிரூப்யத்தையுடைத்தாய், காளமேகம்போலே ச்ரமஹரமான திருமேனியும்; ஆபரணங்களுக்கு முடிவில்லதோரெழிலை உண்டாக்கும்படியான நீலமேனியென்னவுமாம்.

---

† முதல்திருவ 69. § திருவாய் 8-1-11.

10. கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெய்
உண்டவாயன் என்னுள்ளம்கவர்ந்தானை
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள் மற்றொன்றினைக்காணாவே.

(ஐயோ நிறைகொண்டதென் நெஞ்சினையே)தனித்தனியே திவ்யாவயவங்களை அநுபவித்த என் நெஞ்சை, ஸமுதாயாநுபவத்தாலே முன்புற்ற பூர்ணத்வாபிமான கர்ப்பமான காம்பீர்யத்தைக் கழித்து, 'இப்பூர்ணாநுபவத்துக்கு விச்சேதம் வரில் செய்வதென்?' என்கிற அதிஶங்கையாலே, ‡''பிரிவின்றி ஆயிரம்பல்லாண்டு" என்று நித்யஸாபேக்ஷமாம்படி பண்ணிற்று.

அவ:—பத்தாம்பாட்டு—(கொண்டல் வண்ணனையித்யாதி) இவ்வாழ்வார் 'அடியேன்' என்னுமதொழிய இப்ரபந்தம் தலைக்கட்டுகிறவளவிலும் தம்முடைய பேருமூரும் பேச மறக்கும்படி தாய்பெற்ற அநுபவத்துக்குப் பெரியபெருமாள் இனி ஒரு விச்சேதம் வாராதபடி பண்ணினபடியைக்கண்டு தம்முடைய ஆத்மாவதியான அநந்யாநுபவரஸத்தை முக்தனுடைய ஸாமகானத்தின்படியிலே பாடி அநாதிகாலம் பாஹ்யாநுபவம் பண்ணின க்லேஶம் தீர்ந்து க்ருதார்த்தராகிறார்.

வ்யா:— (கொண்டல் வண்ணனை) கடலிலுள்ள நீரெல்லாம் வாங்கிக் காவேரீமத்யத்திலே படிந்ததொரு காளமேகம்போலே கண்டார்க்கு ச்ரமஹரமான திருமேனியையுடையவனை. அங்ஙனன்றிக்கே, ஜங்கமஸ்தாவரங்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி ஜலஸ்தலவிபாகமறக் காருண்யரஸத்தை வர்ஷிப்பதொரு காளமேகத்தின் ஸ்வபாவத்தையுடையவனை என்னவுமாம். (கோவலனாய் வெண்ணெயுண்டவாயன்) எட்டுமிரண்டுமறியாத இடையரையும் இடைச்சிகளையும் ரக்ஷிக்கையாலே தன்னுடைய ஸர்வலோகரக்ஷகத்வம் வெளிப்படும்படி இடையரில் ஒரு ரூபத்தைக்கொண்டு, ஆஶ்ரிதருகந்த த்ரவ்யமெல்லாம் தனக்கு உகப்பென்னும்படிதோற்ற அவர்கள் †ஈட்டிய வெண்ணெய் †'சூட்டுநன்மாலை' யிற்படியே அப்ராக்ருத

‡ திருப்பல்-2. † திருவிருத்தம்-21.

போகம்போலே அநுபவித்து, அத்தாலே இப்போதும் குணுங்கு நாறும்படியான திருமுகத்தையுடையவனை. (என்னுள்ளங்கவர்ந்தானை) இடைச்சிகள் வைத்த வெண்ணெய்போலே இவருடைய திருவுள்ளம் பெரியபெருமாளுக்கு நவநீதமாயிற்று. ஜ்ஞாநம் பிறந்தபின்பும் என்னதென்னும்படி அஹங்காரமமகாரங்கள் வடிம்பிடுகிற என்னுடைய மநஸ்ஸை, வடிவழகாலும், ஸௌலப்ய ஸௌஶீல்ய வாத்ஸல்யாதிகளாலும் வஶீகரித்து, இனி என்னதென்னவொண்ணாதபடி கைக்கொண்டவனை.

(அண்டர்கோன்) இடையர்க்கும் நியாம்யனாய் நின்ற எளிமை குணமாம்படி, அண்டாதிபதியான ப்ரஹ்மா முதலாக மற்றும் அண்டாந்தர்வர்த்திகளான தேவாதிகளையெல்லாம் ஸ்வாதீநராக்கி வைத்திருக்கிற ஸ்வாமித்வ ஸ்வாதந்த்ர்யாதிகளை உடையவன். ‡"கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும் எண்ணற்கரிய னிமையோர்க்கும்" என்கிறாராகவுமாம். (அணியரங்கன்) ஸூரிகளும் ஸ்வதேசத்தை விட்டு இங்கே வந்து ஸேவிக்கும்படி ஆகர்ஷகமான அழகையுடைத்தான ஸ்தாநவிஶேஷத்திலே அடியேனை அநுபவரஸபரவஶமாக்கினவனை. (என்னமுதினை) பரமபதத்திலும், க்ஷீரார்ணவத்திலும், ஆதித்யமண்டலாதிகளிலும் அவ்வோ நிலங்களுக்கு நிலவரானார் அநுபவிக்கும்படியான அம்ருதமாய் நின்றாப்போலன்றிக்கே, § "நீசனேன் நிறைவொன்றுமிலேன்" என்கிற நானும் அனுபவிக்கும்படி எனக்கு அஸாதாரணமாய் ஜராமரணாதி ப்ரவாஹத்தை நிச்சேஷமாகக் கழிக்கவல்ல நிரதிஶயபோக்யமானவனை. ப்ராக்ருதபோக ப்ரவணரான தேவர்கள் அநேகப்ரயாஸத்தோடே பெற்று அநுபவிக்கும் அம்ருதம் போலன்றிக்கே அநந்யப்ரயோஜநனான நான் அயத்நமாகப்பெற்று அநுபவிக்கும் படியான அம்ருதமானவனை என்னவுமாம். (கண்டகண்கள்) என்கிற இதிலே 'என் கண்கள்' என்னாமையாலே நிர்மமத்வம் தோற்றுகிறது. இப்படி பாதிதாநுவ்ருத்தியில்லாதபடியான தத்வ ஜ்ஞாநம் பிறந்து ஸர்வத்திலும் நிர்மமராயிருக்கிற இவர் முன்பு 'என் கண்' என்றும், 'என சிந்தனை' என்றும், 'அடியேனுள்ளம்'

‡ பெரியதிரு 11-5-5. § திருவாய் 3-3-4.

என்றும், 'என்னுள்ளம்' என்றும் மமகாரம் பின்தொடர்ந்தது தோன்றப்பேசுவானென்னென்னில்: ஸ்வதந்த்ர ஸ்வாமியான ஈச்வரன் ஸ்வசேஷபூதமான சேதநாசேதநங்களிலே ஸ்வார்த்தமாக ஒன்றை ஒன்றுக்கு சேஷமாக அடைத்துவைத்தால், அவன் அடைத்தபடியறிந்து பேசுவார்க்கு, நிர்மமத்வத்தோடே சேர்ந்த இம்மமகாரம் அநபிஜ்ஞர் மமகாரம்போலே தோஷமாகாது.

(மற்றொன்றினைக்காணாவே) இதுக்கு முன்பெல்லாம் பாஹ்ய விஷயங்களிலே ப்ரவணங்களாய், அவற்றைக்கண்டபோது ப்ரீதியும், காணாதபோது விஷாதமுமாய்ச் சென்று இப்போது நித்ய தரித்ரனானவன் நிதியைக்கண்டாப்போலே அநந்தகுண விபூதிவிசிஷ்டமாக இம்மஹாநிதியை அநுபவிக்கப்பெற்ற கண்கள் (மற்றொன்றினைக்காணாவே) ப்ராப்த விஷயத்திலே ப்ரதிஷ்டிதமான ஸங்கத்தையுடைத்தானபடியாலே பரிசர்யார்த்தமாக வந்து பார்ச்வவர்த்திகளாய் நிற்கும் பத்மயோநி முதலானோரையும் பாராது. 31 **"पुरुषाणां सहस्रेषु येषु वै शुद्धयोनिषु। अस्मान्न कश्चिन्मनसा चक्षुषा वाप्यपूजयत्॥"** (புருஷாணாம் ஸஹஸ்ரேஷு யேஷுவை சுத்தயோநிஷு। அஸ்மாந்ந கச்சிந்மநஸா சக்ஷுஷா வாப்யபூஜயத்॥) என்கிறபடியே ப்ரஹ்மபுத்ரர்களாய், 32 **"यूयं जिज्ञासवो भक्ताः"** (யூயம் ஜிஜ்ஞாஸவோ பக்தா:) என்னுமவரான ஏகதர், த்விதர், த்ரிதர் திறத்தில் ஜ்ஞாநிகளான ச்வேதத்வீபவாஸிகளுடைய அநாதரத்தை இங்கே அநுஸந்திப்பது. 33 **"प्राप्य श्वेतं महाद्वीपं नारदो भगवानृषिः। ददर्श तानेव नरान् श्वेतांश्चन्द्रप्रभान् शुभान्॥ पूजयामास शिरसा मनसा तैः सुपूजितः॥** (ப்ராப்ய ச்வேதம் மஹாத்வீபம் நாரதோ பகவாந்ருஷி:। ததர்ச தாநேவ நராந் ச்வேதாம்ச் சந்த்ரப்ரபாந் சுபாந்॥ பூஜயாமாஸ சிரஸா மநஸா தைஸ்ஸுபூஜித:॥) என்று ஸ்ரீநாரதபகவானளவிலும் அவர்கள் பரிமாற்றம் சொல்லப்பட்டது. 34 **"उवाच मधुरं भूयो गच्छ नारद माचिरम्। इमे ह्यनिन्द्रियाहाराः मद्भक्ताश्चन्द्रवर्चसः॥ एकाग्राश्चिन्तयेयुर्मां नैषां विघ्नो भवेदिति॥"** (உவாச மதுரம் பூயோ கச்ச நாரத மாசிரம்। இமே ஹ்யநிந்த்ரியாஹாரா: மத்பக்தாச்சந்த்ரவர்ச்சஸ:॥ ஏகாக்ராச்சிந்தயேயுர் மாம் நைஷாம் விக்நோ பவேதிதி॥) என்று பகவான் அருளிச்செய்த வார்த்தையையும் இங்கே அநுஸந்திப்பது.

†"கண்டுகேட்டுற்று மோந்துண்டுழலுமைங்கருவி கண்டவின்பம்" என்கிற ஐச்வர்யாநுபவத்திலும், †"தெரிவரிய அளவில்லாச் சிற்றின்பம்" என்கிற ஆத்மமாத்ராநுபவரஸத்திலும் தமக்கு நிஸ்ப்ருஹதை பிறந்தபடியிலே இங்கு தாத்பர்யம்.

அங்ஙனன்றிக்கே ப்ரதாநமான அநுபவத்திலே இழிந்தபடியினுலே, ஸ்ரிய:பதிக்கு ப்ரகாரமாகவல்லது மற்றொன்றையும் தாம் அநுபவியாதபடியிலே தாத்பர்யமாகவுமாம். பெரியபெருமாள் திருமேனியிலே திருமலை முதலாகக் கோயில்கொண்ட அர்ச்சாவதாரங்களிலும், ராமக்ருஷ்ண வாமந வடபத்ரஶயநாதிகளிலும் உள்ள போக்யதையெல்லாம் சேர அநுபவித்து இவ்வாபிரூப்யத்திலே ஈடுபட்ட என்கண்கள் மற்றும் பரவ்யூஹ விபவாதிகளான திருமேனிகளையெல்லாம் சேரக்காட்டினுலும் ஸ்தநந்தயத்துக்கு போக்யாந்தரங்கள் ருசியாதாப்போலே 35 "भावो नान्यत्र गच्छति" (பாவோ நாந்யத்ர கச்சதி) என்கிறபடியே அவையொன்றும் ருசியாதென்கிறாராகவுமாம்.

இது இவருடைய அநந்ய ப்ரயோஜநத்வகாஷ்டையிருக்கிறபடி.

ஆதிமறை யெனவோங்கு மரங்கத்துள்ளே
யருளாருங் கடலைக்கண் டவன் என்பாணன்
ஓதியதோ ரிருநான்கு மிரண்டுமான
வோருபத்தும் பத்தாக வுணர்ந்துரைத்தோம்
நீதியறி யாதநிலை யறிவார்க்கெல்லா(ம்)
நிலையிதுவே யென்றுநிலை நாடிநின்றேம்
வேதியர்தாம் விரித்துரைக்கும் விளைவுக்கெல்லாம்
விதையாகு மிதுவென்று விளம்பினேமே.

காண்பனவு முரைப்பனவு மற்றொன்றின்றிக்
கண்ணனையே கண்டுரைத்த கடியகாதல்
பாண்பெருமா ளருள்செய்த பாடல்பத்தும்
பழமறையின் பொருளென்று பரவுகின்றேம்
வே(வீ)ண்பெரிய விரிதிரைநீர் வையத்துள்ளே
வேதாந்த வாரியனேன் றியம்பநின்றே(ம்)
நாண்பெரியோ மல்லோம்நா(ம்) நன்றுந்தீது(ம்)
நமக்குரைப்பா ருளரேன்று நாடுவோமே.

---

† திருவாய் 4-9-10.

† इति कवितार्किकसिंहः सम्यग्व्याचष्ट सात्त्विकप्रीत्यै।
मुनिमहितसुकविगाथादशकमिदं देशिकोपज्ञम्॥

† இதி கவிதார்க்கிகஸிம்ஹ: ஸம்யக்வ்யாநுஷ்ட ஸாத்விகப்ரீத்யை ।
முநிமஹிதஸுகவிகாதாதசகமிதம் தேசிகோபஜ்ஞம் ॥

§ मुनिवाहनभोगोऽयं मुक्तैश्वर्यरसोपमः।
कृपया रङ्गनाथस्य कृतार्थयतु नस्सदा॥

§ முநிவாஹநபோகோயம் முக்தைச்வர்யரஸோபம: ।
க்ருபயா ரங்கநாதஸ்ய க்ருதார்த்தயது நஸ்ஸதா ॥

இதி கவிதார்க்கிகஸிம்ஹஸ்ய ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரஸ்ய
ஸ்ரீமத் வேங்கடநாதஸ்ய வேதாந்தாசார்யஸ்ய க்ருதிஷு
முநிவாந போகஸ் ஸம்பூர்ண:

திருப்பாணாழ்வார் திருவடிகளே சரணம்
தூப்புற்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

† இதன் பொருள்:—ஸாத்விகரான பெரியார் ஒருவரின்—(அல்லது ஸாத்விகர்களின்)— உகப்பின்பொருட்டு கவிதார்க்கிக சிங்கமானவர் முனிவாஹனரான திருப்பாணாழ்வாரால் அருளப்பெற்றதும், ஆசார்யோபதேச ப்ராப்தமானதுமான இப்பதிகத்தை நன்கு வியாக்கியானம் செய்தார்.

§ இதன் பொருள்:—முக்தர்களின் செல்வமாகிற பகவதநுபவமாகிற ரஸத்தைபொத்த இம்முனிவாஹனபோஹம், ரங்கநாதனுடைய கிருபையாலே நம்மை எப்போதும் ஸாபல்யமடையச் செய்யட்டும்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அமலனாதிபிரான்
# ❋தனியன் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு❋

1. வாயஸேந ததஸ்தேந பலவத்க்லிச்யமாநயா।
ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப:॥

[பிறகு, அந்தக் காகாஸுரனால் பலாத்காரமாகத் துன்புறுத்தப்பட்ட என்னால், ஸுகமாகக் கண்வளர்ந்தருளியவரும், (அத்தாலே) அழகாயிருப்பவரும், எதிரிகளைத் தபிப்பவருமான ஸ்ரீராமபிரான் எழுப்பப் பட்டார்.]

2. நாச்நந்தி ந பிபந்தி ஏததேவாம்ருதம் த்ருஷ்ட்வா த்ருப்யந்தி

[பரமாத்மாவாகிற இந்த மதுவை உண்பதுமில்லை; குடிப்பதுமில்லை. அமுதமான இவனைக் கண்டு களிக்கிறார்கள்.]

3. ராமம் மேऽநுகதா த்ருஷ்டிரத்யாபி ந நிவர்த்ததே।
ந த்வா பச்யாமி கௌஸல்யே ஸாது மா பாணிநா ஸ்ப்ருஶ॥

[ராமனை என் கண் பின்தொடர்ந்தது; இன்றளவும் திரும்பவில்லை; கௌஸல்யே! உன்னைக் காண்கிறேனல்லேன்; என்னை நன்றாகக் கையால் தொடு.]

4. ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித:।
பக்திச்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி॥

[ஸ்வாமியே! தேவரீடத்தில் எனக்கு மேலான அன்பானது எப்போதும் நிலைநிற்கிறது; வீரரே! (உம்மிடத்தில்) பக்தியும் நித்யமாயிராநின்றது. என் நினைவு ஸ்ரீவைகுண்டநாதனிடத்திலும் செல்லுகின்றதில்லை.]

5. கிரீடஹேயூரகரத்ந குண்டலம்
ப்ரலம்ப முக்தாமணி ஹேமபூஷிதம்।
விஶாலவக்ஷ:ஸ்தலஶோபி கௌஸ்துபம்
ஶ்ரியா ச தேவ்யாத்யுஷிதோரு விக்ரஹம்॥
ப்ரதப்தசாமீகரசாரு வாஸஸம்
ஸுமேகலாநூபுர ஶோபிதாங்க்ரிகம்।

---

1. ரா-யு 38-25. 2. சாந் 3-6. 3. ரா-அ 42-34.
4. ரா-உத் 40-15. 5. ஸ்ரீஹஸ்திகிரி மஹாத்ம்யம்.

ஸுபந்துநீஜாதம்ருணாள கோமளம்
 ததாநமச்சச்சவியஜ்ஞ ஸூத்ரகம் ॥
புஜோபதாநம் ப்ரஸ்ருதாந்யஹஸ்தம்
 நிகுஞ்சிதோத்தாநித பாதயுக்மம் ।
ஸுதீர்க்கமுர்வம்ஸமுதக்ரவேஷம்
 புஜங்கதல்பம் புருஷம் ததர்ஶ ॥

[கிரீடம், தோள்வளைகள், ரத்தினகுண்டலங்கள் ஆகியவற்றை உடையவனும், தொங்கும் முத்துமாலையாலும், ரத்தினங்களாலும், பொன்னாலும் அலங்கரிக்கப்பெற்றவனும், விசாலமான திருமார்பில் விளங்கும் கௌஸ்துபமணியை உடையவனும், ஸ்ரீதேவியாலே நித்யவாஸம் செய்யப்பெற்ற பெரிய திருமேனியையுடையவனும், உருக்கின தங்கம்போன்று அழகிய திருப்பீதாம்பரத்தையுடையவனும், அழகிய மேகலையாலும் சிலம்பாலும் விளங்கும் அடிகளையுடையவனும், தாமரைத்தண்டுபோல் அழகியதும், தெளிந்த ஒளியையுடையதுமான திருயஜ்ஞோபவீதத்தை உடையவனும், ஒரு கையைத் தலையணையாகக் கொண்டவனும், மற்றொரு கையை நீட்டி நிற்பவனும், ஒருக்கடித்து விரித்திருக்கும் திருவடியிணையையுடையவனும், நீள் தடந்தோளனும், உயர்ந்த அலங்காரத்தையுடையவனும், ஆதிசேஷனைப்படுக்கையாக உடையவனுமான புருஷனைக் கண்டார்.]

6. ஶிஞ்ஜாநச்ருதிஶிஞ்ஜிநீமணிரவைர் வஜ்ராரவிந்தத்வஜ
 சத்ரீகல்பகசங்கசக்ரமுகுரைஸ் தைஸ் தைச்ச ரேகாமயை: ।
 ஐச்வர்யேண ஜயம் த்ரிவிக்ரமமுகம் குஷ்யத்பிராம்ரேடிதம்
 ஸ்ரீரங்கேசயபாதபங்கஜயுகம் வந்தாமஹே ஸுந்தரம் ॥

[ஸர்வேச்வரத்வத்தோடு கூட, மூவடியிட்டளந்தது முதலான விஜயசேஷ்டிதங்களைப் பலகாலும் ப்ரஸித்தப்படுத்துகிற ஒலிக்கின்ற வேதரூபியான திருவடிச் சதங்கை மணிகளின் ஓசைகளாலும், ரேகைவடிவமான அப்படிப்பட்ட வஜ்ரமென்ன, தாமரையென்ன, கொடியென்ன, குடையென்ன, கல்பவ்ருக்ஷமென்ன, சங்கமென்ன, சக்கரமென்ன, கண்ணாடியென்ன ஆகிய இவற்

6 ர-ஸ்த 1-125.

ரூஹும் அழகியதான பெரியபெருமாளுடைய திருவடித் தாமரை யிணையை வணங்குகிறோம்.]

7. த்ரிவிதசிதசித்ப்ரூந்தம் துந்தாவலம்பிவலித்ரயம்,
விகணயதிவைச்வர்யம் வ்யாக்யாதி ரங்கமஹேசிது: ।
ப்ரணதவசதாம் ப்ரூதே தாமோதரத்வகர: கிண:
ததுபயகுணக்ருஷ்டம் பட்டம் கிலோதரபந்தநம் ॥

[பெரிய பெருமாளுடைய திருவயிற்றைப்பற்றியிருக்கிற த்ரிவலி யானது, மூவகைப்பட்ட சேதநாசேதந ஸமூஹத்தை எண்ணு நின்றது போன்று (ஸகல சேதநா சேதநநியாமகத்வமாகிற) ஐச்வர் யத்தை வியாக்யானம் பண்ணுகிறது; தாமோதரனென்னும் திரு நாமத்துக்கு அடியான தாம்புத்தழும்பானது ஆச்ரிதபாரதீநனென் பதைச் சொல்லா நின்றது; உதரபந்தன மென்கிற ஆபரண விசேஷ மானது மேற்சொன்ன பாரத்வஸௌலப்ய குணங்களிரண்டுக்கு மாகக் கட்டின பட்டம் போலும்.]

8. அதரமதுராம்போஜம் தத்கர்ணபாசம்ருணளிகா
வலயமபி மாமாஸ்தாம் ரங்கேந்துவக்த்ரஸரச் சிரம் ।
நயநசபரம் நாஸாசைவாலவல்லரி கர்ணிகா
மகரம் அலகச்ரேணீபர்யந்தநீலவநாவலி ॥

[திருப்பவளமாகிற போக்யமான தாமரைப்பூவையுடைத்தாயும், திருச்செவிமடல்களாகிற தாமரைக்கொடி வளையங்களையுடைத் தாயும், திருக்கண்களாகிற மீன்களையுடைத்தாயும், திருமூக்காகிற பாசிக்கொடியை யுடைத்தாயும், கர்ண பூஷணங்களாகிற மகரங் களை யுடைத்தாயும், திருக்குழல் கற்றையாகிற அருகிலிருக்கக் கூடிய கறுத்த சோலைகளை யுடைத்தாயுமிருக்கிற பரம விலக்ஷண மான பெரியபெருமாளுடைய திருமுகமண்டலமாகிற தடாக மானது, நெடுநாளளவும் என்னை நோக்கி இருக்கவேணும்.]

தனியன் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.

---

7. ர-ஸ்த 1-115. 8. ர-ஸ்த 1-103.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான
# ப்ரமாணத்திரட்டு

1. ஸ து மேதாவிநௌ த்ருஷ்ட்வா வேதேஷு பரிநிஷ்டிதௌ ।
வேதோபப்ரும்ஹணார்த்தாய தாவக்ராஹயத ப்ரபு: ॥

[வேதங்களில் நிலைநின்றவர்களாய், மஹா‍புத்திமான்களான அவ் விருவரையும் கண்டு அவ்வால்மீகி அவர்களை வேதத்தை (ஸ்ரீராமாயணத்தின் மூலம்) விவரிக்கும்பொருட்டு ஏற்றுக்கொண்டார்.]

2. வேதாநத்யாபயாமாஸ மஹாபாரதபஞ்சமாந் ।
ஸுமந்தும் ஜைமிநிம் பைலம் ஶுகம் சைவ ஸ்வமாத்மஜம் ॥

[வேதவியாஸபகவான், ஐந்தாவது வேதமான மஹாபாரதத்தோடு கூடிய நான்கு வேதங்களையும், ஸுமந்தர், ஜைமினி, பைலர், தன் பிள்ளையான சுகர் ஆகிய நால்வருக்கும் அத்யயனம் செய்வித்தார்.]

3. நமோ பகவதே தஸ்மை வ்யாஸாயாமிததேஜஸே ।
யஸ்ய ப்ரஸாதாத் வக்ஷ்யாமி நாராயணகதாமிமாம் ॥

[எவருடைய அருளினால் இந்த நாராயணகதையைச் சொல்லுகிறேனோ, அளவற்ற தேஜஸ்ஸையுடைய அந்த பகவான் வியாஸருக்கு நமஸ்காரம்.]

4. தர்மே சார்த்தே ச காமே ச மோக்ஷே ச பரதர்ஷப ।
யதிஹாஸ்தி ததந்யத்ர யந்நேஹாஸ்தி ந தத் க்வசித் ॥

[பரதச்ரேஷ்டனே! தர்மார்த்தகாமமோக்ஷங்களாகிற நானு புருஷார்த்தங்களைப் பற்றியும் இந்நூலில் சொல்லப்பட்டவையே மற்ற நூல்களிலும் உள்ளன. இதிலில்லாதவை எங்குமேயில்லை.]

5. தனியன் வ்யா-ப்ர-தி-4.

6. குருஷ்வ மாமநுசரம் வைதர்ம்யம் நேஹ வித்யதே ।
க்ருதார்த்தோऽஹம் பவிஷ்யாமி தவ சார்த்த: ப்ரகல்பதே ॥

[என்னைக் கைங்கர்யபரனாக வைத்துக்கொள்ளும். இதில் தவறொன்றுமில்லை. (இதனால்) நானும் தன்யனாவேன். உம்முடைய காரியமும் நடைபெறும்.]

---

1. ரா-பா 4-6. 2. பார-ஆதி 64-131. 3. பார-ஆதி 1-27.
4. பார-ஆதி 62-26. 6. ரா-அ 31-24.

7. யதோ வாசோ நிவர்த்தந்தே। அப்ராப்ய மநஸா ஸஹ।
ஆநந்தம் ப்ரஹ்மணோ வித்வாந்। ந பிபேதி குதச்சநேதி॥

[*எந்த ப்ரஹ்மத்தினிடமிருந்து, மனத்துடன் கூடிய வாக்குக்கள், (அதை) அளவிட்டறியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரமாத்மாவின் ஆநந்தத்தை அறிந்தவன் எதனிடமும் பயப்படமாட்டான்.*]

8. ஆநையைநம் ஹரிச்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா।
விபீஷணோ வா ஸுக்ரீவ! யதி வா ராவண: ஸ்வயம்॥

[*வானரர்களுள் சிறந்தவனான ஸுக்ரீவனே! இவனை அழைத்துவா; விபீஷணனாயிருந்தாலும், ராவணன் தானேயாயிருந்தாலும், இவனுக்கு என்னால் அபயமளிக்கப்பட்டது.*]

9. பாவநஸ் ஸர்வலோகாநாம் த்வமேவ ரகுநந்தந

[*ரகுநந்தனா! நீயே எல்லா உலகங்களையும் பரிசுத்தப்படுத்துபவன்.*]

10. த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா
ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே।
தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்தி
அநச்நந்நந்யோ அபிசாகசீதி॥

[*(ஞானமாகிற) அழகிய இறக்கையை உடையவையும், ஸமானமான குணங்களை உடையவையும், (எப்போதும்) கூடியிருப்பவையுமான இரு பக்ஷிகள் (ஜீவனும் ஈச்வரனும்) ஒரே மரத்தை (தேஹத்தை)ப் பற்றி நிற்கின்றன. அவைகளில் ஒன்று (ஜீவன்) பழுத்த கனியை (பக்வமான கர்மபலத்தை)ப் புசிக்கிறது.* மற்றொன்று (பரமாத்மா)அக்கனியை உண்ணாமலேயே பிரகாசிக்கிறது.]

11. கவாம் சதஸஹஸ்ரேண தீயதாம் சபலா மம।
ரத்நம் ஹி பகவந்நேதத் ரத்நஹாரீ ச பார்த்திவ:॥

[*நூறாயிரம் பசுக்களைப் பெற்றுக்கொண்டு இக்காமதேனுக்கன்றை எனக்குக் கொடும். வசிஷ்டபகவானே! இது ரத்தினம் –(மிகச்சிறந்தது)– அன்றோ.* ரத்தினங்களை (உரிமையுடனே) எடுத்துச் செல்லுமவனன்றோ அரசன்.]

---

7. *தை-ஆந* 9-1. 8. *ரா-யு* 18-34. 9. *ரா-உத்* 82-9.
10. *முண்ட* 3-1-1. *ச்வே* 4-6. 11. *ரா-பா* 53-9.

12. ஆதீயதே இதி ஆதி:
[(அனைவராலும்) கைக்கொள்ளப்படுமவன் ஆதி]

13. தம் மேருஶிகராகாரம் தீப்தாமிவ ஶதஹ்ரதாம் ।
ககநஸ்தம் மஹீஸ்தாஸ்தே தத்ருஶுர் வாநராதிபா: ॥
[மேருசிகரம்போன்ற மேனியுடையவனாய், ஆகாயத்திலிருக்கும் அவ்விபீஷணனை பூமியிலிருக்கும் வானரர் தலைவர்கள் ஒளிவிடும் மின்னலைப்போலே கண்டனர்]

14. 8-வது இலக்கமிட்ட ப்ரமாணம் காண்க.

15. தஸ்மாத் க்ஷிப்ரம் ஸஹாஸ்மாபிஸ் துல்யோ பவது ராகவ ।
விபீஷணோ மஹாப்ராஜ்ஞ: ஸகித்வம் சாப்யுபைது ந: ॥
[ராகவரே! ஆகையால் மஹாபுத்திமானான விபீஷணன் வெகு சீக்கிரம் நம்மோடு ஒருவனாக ஆகட்டும்; நம்முடன் நண்பனாயிருக்கும் தன்மையையும் அடையட்டும்.]

16. அர்ச்சிதாச்சைவ ஹ்ருஷ்டாச்ச பவதா ஸர்வதா வயம் ।
பத்ப்யாமபிகமாச்சைவ ஸ்நேஹஸந்தர்ஶநேந ச ॥
[காலால் நடந்துவந்தமையாலும், அன்பு காட்டியதாலும் உன்னால் நாம் எல்லாவிதத்திலும் பூஜிக்கப்பட்டோம்; ஆநந்தமடைந்தோம்.]

17. அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் ।
க்ருதக்ருத்யஸ்ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ ॥
[லங்கையில் ராக்ஷஸராஜாவாக விபீஷணனை அபிஷேகம் செய்து தன் காரியத்தைச் செய்துமுடித்தவனான ராமன், கவலை நீங்கப்பெற்று ஸந்தோஷித்தான்.]

18. கதா புந: ஶங்கரதாங்க கல்பக
த்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் ।
த்ரிவிக்ரம த்வச்சரணம்புஜத்வயம்
மதீயமூர்த்தாநமலங்கரிஷ்யதி ॥

13. ரா-யு 17-2. 15. ரா-யு 18-38. 16. ரா-அ 50-41.
17. ரா-பா 1-85. 18. ஸ்தோ-ர-31.

[திரிவிக்கிரமனே! சங்கு, சக்கரம், கல்பகவ்ருக்ஷம், கொடி, தாமரை, அங்குசம், வஜ்ராயுதம் இவைகளை அடையாளமாகவுடைய உன் திருவடித்தாமரையிணை என் தலையை எப்போது தான் அலங்கரிக்கப்போகிறது?]

19. வ்யஸநேஷு மநுஷ்யாணாம் ப்ருசம் பவதி துக்கித: ।
உத்ஸவேஷு ச ஸர்வேஷு பிதேவ பரிதுஷ்யதி ॥

[(ராமன்) மனுஷ்யர்களுடைய துக்கங்களில், (அவர்களைக்காட்டிலும்) அதிகமாக துக்கிக்கிருன். (அவர்களுடைய) எல்லா உத்ஸவங்களிலும் தந்தையைப்போல் ஆனந்தப்படுகிருன்.]

20. தீப்தபாவகஸங்காசை: சிதை: காஞ்சந பூஷணை: ।
ந த்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும் ராமேண நிஹதம் சரை: ॥

[எரியும் நெருப்புப்போன்றவையும், கூர்மையானவையும், பொன்னுல் அலங்கரிக்கப்பட்டவையுமான அம்புகளைக்கொண்டு ராமனுலே நீ கொல்லப்படுவதை நான் காணவிரும்பவில்லை.]

21. அநாஹாரோ நிராலோகோ தநஹீநோ யதா த்விஜ: ।
சேஷ்யே புரஸ்தாச்சாலாயாம் யாவந்மே ந ப்ரஸீததி ॥

[என்னிடம் ராமபிரான் அருள்புரியாதவரையில் உணவற்றவனுய், பார்வையில்லாதவனுய், பணமற்றவனுன ப்ராஹ்மணனைப்போலே பர்ணசாலையின் முன் சயனித்திருப்பேன்.]

22. சாபமாநய ஸௌமித்ரே சராம்ச்சாசீவிஷோபமாந் ।
ஸாகரம் சோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா: ॥

[லக்ஷ்மணு! வில்லையும் பாம்பின் விஷத்தையொத்த அம்புகளையும் எடுத்து வா; கடலை வற்றச்செய்கிறேன். வானரர்கள் காலாலே நடந்து (லங்கைக்குச்) செல்லட்டும்.]

23. மரணாந்தாணி வைராணி ப்ரஸவாந்தஞ்ச யௌவநம் ।
குபிதம் ப்ரணிபாதாந்தஞ்ச யாசநாந்தஞ்ச கௌரவம் ॥

---

19. ரா-அ 2-40. 20. ரா-யு 16-32. 21. ரா-அ 111-14.
22. ரா-யு 21-22.

[மரணத்துடன் முடிவது விரோதம். ப்ரஸவத்துடன் முடிவது யௌவனம். ஊடலுடன் முடிவது கோபம். யாசிப்பதுடன் முடிவது கௌரவம்.]

24. பதிம் விச்வஸ்யாத்மேச்வரம்

[உலகிற்குப்பதியாய், தனக்குத்தானே ஈச்வரனுயிருப்பவன் நாராயணன்.]

25. யஸ்யாஸ்மி ந தமந்தரேமி

[எவனுக்கு நான் தாஸனுயிருக்கிறேனே, அவனை விட்டு வேறொருவனிடம் செல்லமாட்டேன்]

26. யதா ராகவநிர்முக்த: ஶர: ச்வஸநவிக்ரம: ।
கச்சேத் தத்வத் கமிஷ்யாமி லங்காம் ராவணபாலிதாம் ॥

[ராமனுல் விடப்பட்டதும் மூச்சுக்காற்றுப்போல் (ஒருவருமறியாமல்) பரவியோடுவதுமான அம்பானது எப்படிச் செல்லுமோ, ராவணனுல் காக்கப்படும் லங்கையை அப்படியே நான் அடைவேன்.]

27. யத்யதர்மோ ந பலவாந் ஸ்யாதயம் ராக்ஷஸேச்வர: ।
ஸ்யாதயம் ஸுரலோகஸ்ய ஸஶக்ரஸ்யாபி ரக்ஷிதா ॥

[பலவானுன இவன் அதர்மிஷ்டனுக இல்லாவிடில், அரக்கர் தலைவனுகவுமிருக்கலாம்; இந்திரனேடு கூடிய தேவலோகத்துக்குத் தலைவனுகவுங்கூட இருக்கலாம்.]

28. கச்சாநுஜாநாமி ரணார்த்திதஸ் த்வம்
ப்ரவிச்ய ராத்ரிஞ்சரராஜ லங்காம் ।
ஆச்வாஸ்ய நிர்யாஹி ரதீ ச தந்வீ
ததா பலம் த்ரக்ஷ்யஸி மே ரதஸ்த: ॥

[ராக்ஷஸராஜனே! நீ யுத்தத்தில் களைப்படைந்துவிட்டாய்; திரும்பிப்போ; நானே அனுமதிக்கிறேன். லங்கையில் நுழைந்து, களைப்

24. தை-நா 11. 25. யஜுர்-ப்ரா 3-7. 26. ரா-ஸு 1-39.
27. ரா-ஸு 49-17. 28. ரா-யு 59-144.

பாற்றிக்கொண்டு, ரதத்தையும் வில்லையும் கொண்டு திரும்பிவா; ரதத்திலிருந்துகொண்டு அப்போது என் பலத்தைப் பார்ப்பாய் ]

29. மாநுஷம் வபுராஸ்தாய விஷ்ணுஸ் ஸத்ய பராக்ரம: ।
ஸர்வை: பரிவ்ருதோ தேவைர் வாநரத்வமுபாகதை: ॥

[உண்மையான பராக்கிரமத்தையுடைய விஷ்ணுவானவர் மனிதவுருவைக் கொண்டவராய், வானரவுருக்கொண்ட எல்லா தேவர்களாலும் சூழப்பட்டவராய் (உன்னைக் கொன்றார்)]

30. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மா ஶுச: ॥

[(பலஸாதனமான) எல்லா தர்மங்களையும் வாஸனையுடன் விட்டு, என்னை ஒருவனையே உபாயமாக அடை; நான் உன்னை எல்லாப் பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; துக்கிக்காதே.]

31. அகமஹோததி:

[பாவப்பெருங்கடல்]

32. விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞச் ஶரணாகதவத்ஸல: ।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥

[(ராவணா!) ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவராகவும், சரணமடைந்தவரிடம் வாத்ஸல்யமுடையவராகவும் பிரஸித்தமானவர். நீ உயிர்வாழ விரும்பினையாகில் அவருடன் உனக்கு நட்பு உண்டாகட்டும்.]

33. பாபாநாம் வா ஶுபாநாம் வா வதார்ஹாணும் ப்லவங்கம ।
கார்யம் கருணமார்யேண ந கச்சிந் நாபராத்யதி

[வானர! பாபிகளாயினும், புண்ணியமுள்ளவராயினும், கொல்லத் தகுந்தவர்களாயிருந்தாலும் குணவானாயிருப்பவனால் அவன் விஷயத்தில் கருணை காட்டப்படவேண்டும். அபராதம் செய்யாதவன் ஒருவனுமில்லையே.]

---

29. ரா-யு 114-17. 30. கீதை 18-66. 32. ரா-ஸு 21-20.
33. ரா-யு 116-44.

34. ஆயதாச்ச ஸுவ்ருத்தாச்ச பாஹவ: பரிகோபமா: ।
ஸர்வபூஷணபூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா: ॥

[நீண்டவையும், உருண்டிருப்பவையும், இரும்புலக்கைபோல் விளங்குபவையும், எல்லா ஆபரணங்களையும் அலங்கரிக்கத்தக்கவையுமான (ஸ்ரீராமனுடைய) திருக்கைகள் ஏன் அலங்கரித்து (மறைத்து) வைக்கப்படவில்லை?]

35. வாநரோஹம் மஹாபாகே தூதோ ராமஸ்ய தீமத: ।
ராமநாமாங்கிதம் சேதம் பச்ய தேவ்யங்குளீயகம் ॥

[மங்களகரையானவளே! புத்திமானான ராமபிரானுடைய தூதனாயிருக்கும் குரங்கு நான். ராமபிரானின் பெயர் பொறிக்கப் பெற்ற இம்மோதிரத்தைப் பார்.]

36. தாஸோऽஹம் கோஸலேந்த்ரஸ்ய ராமஸ்யாக்லிஷ்டகர்மண: ।
ஹநுமாந் சத்ருஸைந்யாநாம் நிஹந்தா மாருதாத்மஜ: ॥

[விளையாட்டாகச் செயல்புரியும் கோசலர் தலைவனான ராமனுக்கு தாஸனாய், சத்ருஸைந்யங்களை அழிப்பவனாய், வாயுவின் பிள்ளையான ஹனுமான் நானே.]

37. வாயஸேந தத்ஸ்தேந பலவத்க்லிச்யமாநயா ।
ஸ மயா போதித: ஸ்ரீமாந் ஸுகஸுப்த: பரந்தப: ॥

[பிறகு, அந்தக் காகாஸுரனால் பலாத்காரமாகத் துன்புறுத்தப்பட்ட என்னால், ஸுகமாகக் கண்வளர்ந்தருளியவரும், (அத்தாலே) அழகாயிருப்பவரும், எதிரிகளைத் தபிப்பவருமான ஸ்ரீராமபிரான் எழுப்பப்பட்டார்.]

38. க்வாஹம் ரஜ:ப்ரக்ருதிரீச தமோதிகேऽஸ்மிந்
ஜாத: ஸுரேதரகுலே க்வ தவாநுகம்பா ।
ந ப்ரஹ்மணோ ந ச பவஸ்ய ந வை ரமாயா:
யோ மேऽர்ப்பித: சிரஸி பத்மகரப்ரஸாத: ॥

[ஈசனே! தமோகுணம் நிறைந்த இவ்வஸுரகுலத்தில் பிறந்த ரஜோகுணம்மிக்க நானெங்கே? உன் கருணையெங்கே? என் தலை

34. ரா-கி 3-15. 35. ரா-ஸு 36-2. 36. ரா-ஸு 42-34.
37. ரா-யு 38-25. 38. பாகவதம் 7-9-26.

மேல் வைக்கப்பட்ட அத்தாமரைக்கை பிரமனுடையதுமன்று; சிவனுடையதுமன்று; லக்ஷ்மீதேவியுடையதுமன்று. (அவர்களில் மிகச்சிறந்த உன்னுடையதன்றோ)]

39. ஸிஞ்சேதிமம் ச ஜநமிந்திரயா தடித்வாந்
பூஷாமணித்யுதிபிரிந்த்ரதநுர் ததாந: ।
ஸ்ரீரங்கதாமநி தயாரஸநிர்ப்பரத்வாத்
அத்ரௌ ஶயாளுரிவ ஶீதலகாளமேக: ॥

[பிராட்டியாகிய மின்னலையுடையதாய், திருவாபரணமணிகளின் ஒளிகளாகிற இந்திரன் வில்லை தரித்துக்கொண்டிருப்பதாய், க்ருபையாகிற ஜலத்தினால் பூர்ணமாயிருக்கையால் திருவரங்கம் பெரிய கோயிலாகிற மலையில் சாய்ந்து கொண்டிருப்பதான, குளிர்ந்த நீலமேகம் போன்றுள்ள ஸ்ரீரங்கநாதன் அடியேனையும் நீராட்டியருளட்டும்.]

40. தத் விஷ்ணோ: பரமம் பதம் ஸதா பச்யந்தி ஸூரய: ।
திவீவ சக்ஷுராததம் ॥
தத் விப்ராஸோ விபந்யவோ ஜாக்ருவாம்ஸஸ் ஸமிந்ததே ।
விஷ்ணோர்யத் பரமம் பதம் ॥

[விஷ்ணுவினுடைய அந்தப் பரமபதத்தை நித்ய ஸூரிகள் எப்போதும் பார்க்கிறார்கள். அப்பரமபதம், எல்லாவற்றையும் பிரகாசிப்பிப்பவனும், ஆகாயத்திலிருப்பவனும், உலகிற்கெல்லாம் கண்ணாயிருப்பவனுமான ஸூர்யன் போல் ப்ரகாசமுள்ளது. விஷ்ணுவினுடைய யாதொரு பரமபதமிருக்கிறதோ, அதில் மேதாவிகளும், துதிப்பதையே ஸ்வபாவமாக உடையவர்களும், ஜாகரூகர்களாயிருப்பவர்களுமான நித்ய ஸூரிகள் பிரகாசிக்கின்றனர்.]

41. நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்

[ஜனங்களுக்கு அருகிலிருக்கும் தன் பூர்வசரீரத்தை முக்தன் நினைப்பதுமில்லை.]

பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்:

---

39. ரஸ்த 1-82. 40. ருக்வேதம்; ஸாமவேதம் 3-18-2-4.
41. சாந் 8-12-3.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு

1. பூர்ணமத: பூர்ணமிதம் பூர்ணாத் பூர்ணமுதச்யதே।
பூர்ணஸ்ய பூர்ணமாதாய பூர்ணமேவாவஶிஷ்யதே ॥
ஸர்வம் பூர்ணம் ஸஹோம்

[*பரவாஸுதேவமூர்த்தி ஸர்வ குணங்களாலும் பூர்ணராயிருப்பவர்; இங்கிருக்கும் அர்ச்சாவதாரமூர்த்தியும் ஸர்வ குணங்களாலும் நிறைந்திருப்பவர். பூர்ணரான பரமூர்த்தியிடமிருந்து பூர்ணரான அர்ச்சாமூர்த்தி உதிக்கிறார். பூர்ணரான பரமூர்த்தியிலிருந்து பூர்ணரான அர்ச்சாமூர்த்தி பிரிந்த பின்பும் பரமூர்த்தி பூர்ணராகவேயிருக்கிறார். அர்ச்சாமூர்த்தியும், பரத்வஸௌலப்யாதி ஸகல குணங்களோடு கூடியவராய் பூர்ணராயிருக்கிறார்.*]

2. ஏகைகஸ்மிந் பரமவயவேऽநந்தஸௌந்தர்யமக்நம்
ஸர்வம் த்ரக்ஷ்யே கதமிதி முதா மாமதா மந்தசக்ஷு:।
த்வாம் ஸௌப்ராத்ர வ்யதிகரகரம் ரங்கராஜாங்ககாநாம்
தல்லாவண்யம் பரிணமயிதா விச்வபாரீணவ்ருத்தி ॥

[*மிகத்தாழ்ந்த கண்ணே! 'ஒவ்வொரு அவயவத்திலே எல்லையற்றதான அழகிலே மூழ்கியிருக்கிற நான் எல்லா அவயவத்தையும் எப்படி அனுபவிக்கப்போகிறேன்' என்று வீணாக சங்கியாதே. ரங்கநாதனுடைய அவயவங்களுக்கு நட்பின் தொடர்பை விளைவிக்கின்ற அந்த ஸமுதாயஶோபையானது உன்னை எல்லா அவயவங்களையும் பூர்த்தியாக அநுபவித்தவனாகச் செய்துவிடும்.*]

3. பெரி-வ்யா-ப்ர-தி-5.
4. பெரி-வ்யா-ப்ர-தி-6.
5. பெரி-வ்யா-ப்ர-தி-21.

6. அநந்யாச் சிந்தயந்தோ மாம் யே ஜநா: பர்யுபாஸதே।
தேஷாம் நித்யாபியுக்தாநாம் யோகக்ஷேமம் வஹாம்யஹம் ॥

---

1. கடவல்லீ. 2. ர-ஸ்த 1-89. 6. கீதை 9-22.

[வேறு பிரயோஜன மற்றவர்களாய் என்னைச் சிந்தித்துக்கொண்டு எந்த மஹாத்மாக்கள் ரூபகுணவிபூதிகளுடன் கூடிய என்னைக் குறைவின்றியே உபாசிக்கிறார்களோ, என்னோடு நித்தியமான சேர்த்தியை விரும்பும் அவர்களுக்கு, என்னை அடைவதாகிற அலப்தலாபரூபமானயோகத்தையும் திரும்பிவருதலின்மையாகிற லப்தரக்ஷணரூபமான க்ஷேமத்தையும் கொடுக்கிறேன்.]

7. பெரி-வ்யா-ப்ர-தி 7.

8. ப்ராப்யஸ்ய ப்ரஹ்மணோ ரூபம் ப்ராப்துச்ச ப்ரத்யகாத்மந: ।
ப்ராப்த்யுபாயம் பலம் ப்ராப்தேஸ் ததா ப்ராப்திவிரோதி ச ॥
வதந்தி ஸகலா வேதாஸ் ஸேதிஹாஸபுராணகா: ।
முநயச்ச மஹாத்மாநோ வேதவேதார்த்தவேதிந: ॥

[அடையப்படுவதான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தையும், அடைபவனான ஜீவாத்மாவின் ஸ்வரூபத்தையும், அடையும் வழியையும், அடைந்து பெறும் பலனையும், அடைவதற்கு விரோதியையும், இதிஹாஸபுராணங்களோடு கூடிய வேதங்களும், வேதத்தின் சொற்பொருளுணர்ந்த மஹாத்மாக்களான முனிவர்களும் சொல்லுகின்றனர்.]

9. பெரி-வ்யா-ப்ர-தி-1
10. பெரி-வ்யா-ப்ர-தி-2.
11. பெரி-வ்யா-ப்ர-தி-3.
12. பெரி-வ்யா-ப்ர-தி-4.
13. பெரி-வ்யா-ப்ர-தி-8.

14. கோந்வஸ்மிந் ஸாம்ப்ரதம் லோகே குணவாந் கச்ச வீர்யவாந் ।
தர்மஜ்ஞச்ச க்ருதஜ்ஞச்ச ஸத்யவாக்யோ த்ருடவ்ரத: ॥

[இப்போது இவ்வுலகில் சீலகுணமுடையவன் யார்? வீர்யவானும், தருமமறிந்தவனும், நன்றிமறவாதவனும், உண்மையுரைப்போனும், உறுதியான விரதமுடையவனும் யார்?]

---

8. ஹாரீதஸம்ஹிதை. 14. ரா-பா 1-2.

15. இக்ஷ்வாகுவம்ஶப்ரபவோ ராமோ நாம ஜநை: ச்ருத: ।
நியதாத்மா மஹாவீர்யோ த்யுதிமாந் த்ருதிமாந் வஶீ ॥
[இக்ஷ்வாகுவமிசத்துதித்தவனும், ராமனென்று குடிகளிடம் பிரஸித்தமானவனும், நெஞ்சையடக்கினவனும், மஹாவீரியசாலியும், ஒளிமிக்கவனும், தைரியமுடையவனும், இந்திரியங்களை வசத்திலுடையவனுமாயிருப்பவன்.]

16. பெரி - வ்யா - ப்ர - தி-9.
17. பெரி - வ்யா - ப்ர - தி-12.

18. ஜிதந்தே புண்டரீகாக்ஷ நமஸ்தே விச்வபாவந ।
நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ ॥
[செந்தாமரைக்கண்ணா! உன்னால் (இவ்வாத்மவஸ்து) ஜயிக்கப்பட்டது; (இது) என்னுடையதல்லவே; உன்னுடையதாயிற்றே. உலகையெல்லாம் உண்டாக்கினவனே! இந்திரியங்களை நியமிப்பவனே! கொடுப்பதில் சிறந்தவனே! (இவ்வாத்மவஸ்து) எனக்காகை தவிர்ந்து உனக்கேயாகவேணும்.]

19. பெரி-வ்யா-ப்ர-தி-11.
20. பெரி-வ்யா-ப்ர-தி-13.
21. பெரி-வ்யா-ப்ர-தி-8.

22. யயாதிஶாபத் வம்ஶோயமராஜ்யார்ஹோऽபி ஸாம்ப்ரதம் ।
மயி ப்ருத்யே ஸ்திதே தேவாநாஜ்ஞாபயது கிம் ந்ருபை: ॥
[யயாதியின் சாபத்தாலே இவ்வமிசம் ராஜ்யமாளத்தகாததாகிவிட்டபோதிலும், இப்போது நான் உங்களுக்கு வேலைக்காரனாயிருக்கையில், (இவ்வமிசம்) தேவர்களையே கட்டளையிடட்டும்; (அற்பரான) அரசர்களைக் கட்டளையிடவேண்டாம்.]

23. பெரி-வ்யா-ப்ர-தி-15.

24. நாவேவ யாந்தமுபயே ஹவந்தே

15. ரா-பா 1-8. 18. ஜிதந்தே 1-1. 22. வி-பு 5-21-12.
24. தைத்-ஸம் (கா, ப்ர-6, 1அ-12, பஞ்-3)

[(ஆற்றில்) படகிலே போகிறவனை இருகரையிலுள்ளாரும் அழைப்பதுபோலே, பரமபுருஷனை உபயவிபூதியிலுள்ளாரும் அழைக்கிறார்கள்.]

25. சக்ஷுர் தேவநாமுத மர்த்யாநாம்
[நித்யஸூரிகளுக்கும், மனிதர்களுக்கும் கண்ணாயிருப்பவன் பரமாத்மா.]

26. ஸர்வகந்தஸ் ஸர்வரஸ:
[(பரமபுருஷன்) எல்லா நறுமணங்களையுமுடையவன்; எல்லா நற்சுவைகளையுமுடையவன்.]

27. உபப்லாவ்யாதிஹ க்ஷத்தருபயாதோ ஜநார்த்தந: ।
குசஸ்தலே நிவஸதி ஸ ச ப்ராதரிஹைஷ்யதி ॥
[ஜநார்த்தனர் இன்று உபப்லாவ்யத்திலிருந்து இத்தேசத்துக்கு வந்திருக்கிறார்; இன்று குசஸ்தலத்தில் தங்கியிருக்கிறார்; நாளைக் காலை இவ்விடம் வருவார்.]

28. பெரி-வ்யா-ப்ர-தி-16.
29. பெரி-வ்யா-ப்ர-தி-17.

30. ப்ரணஷ்டஸ்ய யதா லாபோ யதா ஹர்ஷோ மஹோதய: ।
ததைவாகமநம் மந்யே ஸ்வாகதம் தே மஹாமுநே ॥
[மஹாமுனிவரே! இழந்த பொருள் கிடைத்தாற்போலும், பெருநன்மையாலுண்டாகும் ஆநந்தம்போலும் உம்முடைய வரவை நினைக்கிறேன். உமக்கு நல்வரவாகட்டும்.]

31. திகசுசிமவிநீதம் நிர்த்தயம் மாமலஜ்ஜம்
பரமபுருஷ! யோऽஹம் யோகிவர்யாக்ரகண்யை: ।
விதிசிவஸநகாத்யைர் த்யாதுமத்யந்ததூரம்
தவ பரிஜநபாவம் காமயே காமவ்ருத்த: ॥

---

25. யஜுர்-கா-4, ப்ர-6, அநு 5-2. 26. சாந் 3-14-2.
27. பார-உத்யோ. 30. ரா-பா 18-50. 31. ஸ்தோ-ர 47.

[புருஷோத்தமனே! (என்னுடைய) இஷ்டப்படியெல்லாம் நடக்கிறவன் என்று ப்ரஸித்தனான யாவனொரு நான், யோகிச்ரேஷ்டர்களுள் முதல்வராக எண்ணத்தகுந்த பிரமன், சிவன், ஸநகர் முதலியவர்களாலும் நினைப்பதற்கும் வெகுதூரமாயுள்ள உன்னுடைய கைங்கர்யத்தை விரும்புகிறேனோ, அபரிசுத்தனும் (ஓர் ஆசார்யனாலே) சிக்ஷிக்கப்படாதவனும், தயையற்றவனும், வெட்கமற்றவனுமான அப்படிப்பட்ட என்னை நிந்தித்துக்கொள்ள வேண்டும்.]

32. ஸர்வஜ்ஞோऽபி ஹி ஸர்வேசஃ ஸதா காருணிகோऽபி ஸந் ।
ஸம்ஸாரதந்த்ரவாஹித்வாத் ரக்ஷ்யா(க்ஷா)பேக்ஷாம் ப்ரதீக்ஷதே ॥

[அனைவரையும் நியமிக்கும் பரமபுருஷன் எல்லாமறிந்தவனாயும், எப்போதும் கருணையுள்ளவனாயுமிருந்த போதிலும் ஸம்ஸாரதந்திரத்தை நடத்துகிறவனாகையால் ரக்ஷிக்கப்படுபவனின் (ரக்ஷிக்க வேண்டுமென்னும்) பிரார்த்தனையை எதிர்பார்க்கிறான்.]

33. அவாக்யநாதர:

[(காம்பீர்யத்தாலே) ஒருவரிடமும் பேசாதவனாகவும், (ஒரு வஸ்துவினிடமும்) ஆதரம் அற்றவனாகவுமுள்ளவன் பரமாத்மா.]

34. பெரி-வ்யா-ப்ர-தி-18.

35. பாதாருந்துதமேவ பங்கஜரஜச் சேடீப்ருசாலோகிதை:
அங்கம்லாநிரதாம்ப ஸாஹஸவிதௌ லீலாரவிந்தக்ரஹ: ।
டோலா தே வநமாலயா ஹரிபுஜே ஹாகஷ்ட சப்தாஸ்பதம்
கேந ஸ்ரீரதிகோமளா தநுரியம் வாசாம் விமர்த்தக்ஷமா ॥

[தாயே! தாமரையின் மகரந்தத்துகள் உன் திருவடியைப் புண்படுத்துவதாயிருக்கிறது. சேடிகள் உற்றுப்பார்த்தால் உன் திருமேனி கன்றிவிடுகிறது; (கையில்) லீலாகமலத்தைப் பிடித்திருப்பது ஸாஹஸச்செயலாகிறது. எம்பெருமானுடைய கைகளில் வனமாலையோடு நீ இடிபடுவது 'ஐயோ! கஷ்டம்!' என்று சொல்லத்தக்கதாயுள்ளது. மிக மிருதுவான இந்த உன் திருமேனி எப்படி (என்) வார்த்தைகளுக்கு இலக்காகும்?]

32. லக்ஷ்மீதந்த்ரம் 17-78. 33. சாந் 3-14-2. 35. ஸ்ரீ குண-42.

36. பெரி-வ்யா-ப்ர-தி-17.

37. பெரி-வ்யா-ப்ர-தி-19.

38. ஆதிராஜ்யமதிகம் புவநாநாம் ஈஶ தே பிஶுநயந் கிலமௌளி: ।
சூளிகாமணி ஸஹஸ்ரமரீசேர் ஹஸ்திபூஷண பவத்யுதயாத்ரி: ॥
[அத்திகிரிக்கு அலங்காரமான அருளாளனே! எல்லாவுலகுக்கும் ஈச்வரனுயிருக்கும் தன்மையை மிகவும் கோட்சொல்லா நின்ற உன் திருவபிஷேகமானது (தன்) சிகரத்திலேயுள்ள மணியாகிற சூரியனுக்கு உதயமலைபாக ஆகாநின்றதன்றே.]

39. ராகாதிதூஷிதே சித்தே நாஸ்பதீ மதுஸூதந: ।
ந பத்நாதி ரதிம் ஹம்ஸ: கதாசித் கர்த்தமாம்பஸி ॥
[காமம், கோபம், லோபம், மோஹம், மதம், மாற்சரியம் ஆகிய வற்றால் கெட்டிருக்கும் நெஞ்சில் மதுஸூதனன் தங்கமாட்டான். ஹம்ஸம் ஒருபோதும் சேற்றுநீரில் ஆசைவைக்காதன்றே.]

40. 18–வது இலக்கம் காண்க.

41. வைகுண்டே து பரே லோகே ச்ரியா ஸார்த்தம் ஜகத்பதி: ।
ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ ॥
[மேலான உலகமான வைகுண்டத்தில், ஜகத்பதியும், நினைக்க வொண்ணாத ஸ்வரூபத்தை உடையவருமான விஷ்ணு, பக்தர்களுடனும், பாகவதர்களுடனும் கூடியவராய், ஸ்ரீதேவியுடன்கூட எழுந்தருளியிருக்கிறார்]

42. அஹமேவாஹரிஷ்யாமி ஸர்வலோகாந் மஹாமுநே ।
ஆவாஸம் த்வஹமிச்சாமி ப்ரதிஷ்டமிஹ காநநே ॥
[மஹாமுனிவரே! எல்லா உலகங்களையும் நானே ஸம்பாதித்துக் கொள்கிறேன். இக்காட்டில் நீர் கைகாட்டும் குடியிருப்பொன்றை நான் விரும்புகிறேன்.]

43. ஏஹி பச்ய ஶரீராணி முநீநாம் பாவிதாத்மநாம் ।
ஹதாநாம் ராக்ஷஸைர் கோரைர் பஹூநாம் பஹுதா வநே ॥

---

38. வரதராஜஸ்தவம்-25. 39. விஷ்ணுதர்மம் 9-11. 41. சைவம்.
42. ரா-ஆ 5-33. 43. ரா-ஆ 6-16.

[ராம! (இங்கு) வருவாயாக; பரமாத்மாவை தியானம்செய்பவர்களும், வனத்தில் கோரமான ராக்ஷஸர்களால் பலவிதமாக ஹிம்ஸிக்கப்பட்டவர்களுமான பல முனிவர்களுடைய சரீரங்களைப் பார்ப்பாயாக.]

44. தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: ।
மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: ॥

[தருமமுறை தவறாது நடப்பவர்களும், த்ருடமான விரதத்தையுடையவர்களுமான அந்த ருஷிகள், உதிக்கும் சந்திரனைப் போன்ற அந்த ராமபிரானைப் பார்த்து மங்களாசாஸனம் செய்து கொண்டு வரவேற்றார்கள்.]

45. ராமோ ராமோ ராம இதி ப்ரஜாநாமபவந் கதா: ।
ராமபூதம் ஜகதபூத் ராமே ராஜ்யம் ப்ரஶாஸதி ॥

['ராமன, ராமன், ராமன்' என்றே குடிகளுடைய பேச்சுகள் இருந்தன. ராமன் ராஜ்யமாளும்போது உலகம் முழுவதும் ராமமயமாயிருந்தது.]

46. பும்ஸாம் தாருண்யஞ்ச

[மனிதர்களின் யௌவனமும்]

47. ஐததாத்ம்யமிதம் ஸர்வம்

[இப்பரவஸ்துவை ஆத்மாவாகக்கொண்டது இவையனைத்தும்.]

48. & 49. பெரி-வ்யா-ப்ர-தி-20.

50. & 51. 14-வது இலக்கம் காண்க.

52. யதா வ்ருக்ஷஸ்ய ஸம்புஷ்பிதஸ்ய தூராத்கந்தோ வாதி
ஏவம் புண்யஸ்ய கர்மணோ தூராத் கந்தோ வாதி

[நன்கு பூத்த மரத்தின் மணம் எப்படி வெகுதூரம் வீசுகிறதோ அப்படியே புண்ணியகருமத்தின் மணமும் வெகுதூரம் வீசுகிறது.]

53. ஸ்ருஷ்டிஸ்தித் யந்தகரணீம் ப்ரஹ்மவிஷ்ணு ஶிவாத்மிகாம் ।
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி பகவாந் ஏக ஏவ ஜநார்த்தந: ॥

---

44. ரா-ஆ 1-11. 45. ரா-யு 131-102. 47. சாந் 6-8-7.
52. தை-நா-9. 53. வி-பு 1-2-16.

[ஞானம், பலம், ஐச்வர்யம், வீர்யம், சக்தி, தேஜஸ் என்னும் ஆறு குணங்களும் நிறைந்த ஜநார்த்தனன் ஒருவனே, படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழிலின் பொருட்டு பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் பெயர்களை அடைகிறான்.]

54. த்ரயோ தேவாஸ் துல்யாஸ் த்ரிதயமிதமத்வைதமதிகம்
த்ரிகாதஸ்மாத் தத்த்வம் பரமிதி விதர்க்காந் விகடயந் ।
விபோர் நாபீபத்மோ விதிசிவநிதாநம் பகவத:
ததந்யத் ப்ரூபங்கீபரவதிதி ஸித்தாந்தயதி ந: ॥

['மும்மூர்த்திகளும் ஸமர்' என்றும், 'இம்மூன்று மூர்த்திகளும் ஒன்றே' என்றும், 'இம்மூன்றைக் காட்டிலும் மேற்பட்டதொன்றே பரதத்வம்' என்றும் சொல்லும் விப்ரதிபத்திகளைப் போக்கடிப்பதாய், பிரமருத்ரர்களுக்கு மூலக்கிழங்காயிருக்கிற பெரிய பெருமாளுடைய நாபிக்கமலமானது, 'அவனையொழிந்த எல்லாப் பொருளும் அவனுடைய புருவநெறிப்புக்கு வசப்பட்டிருப்பது' என்று நமக்கு முடிவு கட்டித்தருகின்றது.]

55. க்வ தே ராமேண ஸம்ஸர்க்க: கதம் ஜாநாஸி லக்ஷ்மணம் ।
வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம: ॥

[உனக்கு ராமபிரானுடன் சேர்த்தி எப்படி உண்டாயிற்று? லக்ஷ்மணனை நீ எப்படி அறிவாய்? வாநரர்க்கும் நரர்க்கும் எப்படிச் சேர்த்தியுண்டாயிற்று?]

56. ஸர்வர்க்ஷஹரிஸங்காநாம் ஸுக்ரீவமகரோத் பதிம் ।
ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத ॥

[தேவி! கரடி குரங்குக்கூட்டங்கள் எல்லாவற்றுக்கும் ஸுக்ரீவனை அரசனாக்கினான் ராமபிரான். ராம ஸுக்ரீவர்களின் சேர்த்தி இம்மாதிரி ஏற்பட்டது.]

57. பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே ।
அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதச்ச தே ॥

---

54. ர-ஸ்த 1-116. 55. ரா-ஸு 35-2. 56. ரா-யு 35-51.
57. ரா-அ 31-25.

[நீர் வைதேஹியுடன் கூட மலைத்தாழ்வரைகளில் விளையாடுவீர்; அடியேன் நீர் விழித்துக்கொண்டிருக்கும்போதும், தூங்கும் போதும் உமக்கு எல்லா அடிமைகளையும் செய்வேன்.]

58. ஆஸ்தாம் தே குணராசிவத் குணபரீவாஹாத்மநாம் ஜந்மநாம்
ஸங்க்யா பௌமநிகேதநேஷ்வபி குடீகுஞ்ஜேஷு ரங்கேச்வர।
அர்ச்ய: ஸர்வஸஹிஷ்ணுரர்ச்சக பராதீநாகிலாத்மஸ்திதி:
ப்ரீணீஷே ஹ்ருதயாளுபிஸ் தவ தத: சீலாஜ்ஜடீபூயதே॥

[ஸ்ரீரங்கநாதரே! தேவரீருடைய குணக்கூட்டங்களுக்குப்போலே அக்குணங்களுக்குப் போக்குவீடான அவதாரங்களுக்கும் எண்ணிக்கை ஒருபுறமிருக்கட்டும். இப்பூமண்டலத்திலுள்ள ஆலயங்களிலும் கிருஹங்களிலும் ஆச்ரமங்களிலும், ஆராதிக்கத் தக்கவராகவும், எல்லா அபசாரத்தையும் பொறுப்பவராயும், அர்ச்சகர்களுக்கு அடங்கியிருக்கும் எல்லா நிலைமைகளையும் உடையவராகவும் உகந்தருளாநின்றீர். அப்படிப்பட்டதான தேவரீருடைய சீலகுணத்தினாலே ஈரநெஞ்சினர்களான ஆழ்வார்கள் மோஹிக்கிறார்கள்.]

59. பெரி-வ்யா-ப்ர-தி-21.

60. பெரி-வ்யா-ப்ர-தி-22.

61. யோ ப்ரஹ்மாணம் விதாதி பூர்வம்
யோ வை வேதாம்ச்ச ப்ரஹிணோதி தஸ்மை।
தம் ஹி தேவமாத்மபுத்திப்ரஸாதம்
முமுக்ஷுர் வை சரணமஹம் ப்ரபத்யே॥

[எவன் பிரமனை முன் படைத்தானோ, எவன் வேதங்களையும் அவனுக்கு உபதேசித்தானோ, அப்படிப்பட்ட தேவனும், தன் விஷயமான ஞானத்தை ப்ரகாசிப்பிப்பவனுமான பரமபுருஷனை, மோக்ஷமடைய விரும்பும் நான் சரணமடைகிறேன்.]

62. ஸௌந்தர்யாக்யா ஸரிதுரஸி விஸ்தீர்ய மத்யாவருத்தா
ஸ்தாநால்பத்வாத் விஷமகதிஜாவர்த்தகர்த்தாபநாபி:।
ப்ராப்ய ப்ராப்தப்ரதிமஜகநம் விஸ்த்ருதா ஹஸ்திநாத
ஸ்ரோதோர்பேதம் பஜதி பவத: பாததேசாபதேசாத்॥

58. ர-ஸ்த 2-74. 61. ச்வே 6-18. 62. வரத-ஸ்த-55.

[அத்திகிரியப்பனே! திருமார்பில் பரவி (வரும்போது) (குறுகிய) இடைப்ரதேசத்தில் தடைபட்டு, இடைவெளி குறைவாயிருப்பதாலே திரும்பிப் போவதாலுண்டான சுழிபோன்றிருக்கிற நாபியையுடைத்தான ஸௌந்தர்யமென்னும் பெயருள்ள நதியானது பருத்த ஜகநப்ரதேசத்தை அடைந்து (முன்போல்) பரவியதாகி, உன்னுடைய திருவடிகளாகிற வியாஜத்தாலே இரண்டு வாய்க்கால்களாகப் பிரிகின்றது.]

63. பெரி-வ்யா-ப்ர-தி-24.

64. பெரி-வ்யா-ப்ர-தி-5.

65. பரவாநஸ்மி காகுத்ஸ்த த்வயி வர்ஷஶதம் ஸ்திதே ।
ஸ்வயம் து ருசிரே தேஶே க்ரியதாமிதி மாம் வத ॥

[ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவரே! நீர் இருக்கையில் எப்போதும் நான் (உமக்கு) அடிமையாயிருக்கிறேன். நீராகவே "அழகிய தேசத்தில் பர்ணசாலை கட்டப்படட்டும்" என்று என்னை ஆஜ்ஞையிடுவீராக.]

66. தாஸபூதாஸ் ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந: ।
[பரமாத்மாவுக்கு, எல்லா ஆத்மாக்களும் இயற்கையாகவே அடிமைப்பட்டவர்களன்றோ.]

67. அஹமஸ்யாவரோ ப்ராதா குணைர் தாஸ்யமுபாகத:
[நான் இவருடைய நினைவினால் (இவருக்குத்) தம்பி; (உண்மையில்) இவருடைய குணங்களால் அடிமைப்பட்டவன்.]

68. தனியன் வ்யா-ப்ர-தி-7.

69. 42-வது ப்ரமாணம் காண்க.

70. இந்த்ரியாணாம் ஹி சரதாம் யந்மநோऽநுவிதீயதே ।
ததஸ்ய ஹரதி ப்ரஜ்ஞாம் வாயுர் நாவமிவாம்பஸி ॥

---

65. ரா-ஆ 15-7. 66. ஹாரீதஸ்ம்ருதி; ஈச்வரஸம்ஹிதை-சிவவாக்யம். 67. ரா-கி 4-12. 70. கீதை 2-67.

[விஷயங்களில் மேயும் இந்திரியங்களை யாதொரு மனமானது பின்தொடரச்செய்யப்படுகிறதோ, அந்த மனம் எதிர்காற்று கடலில் கப்பலை அலையவைப்பதுபோலே, இவனுடைய அறிவை விஷயங்களில் அலையவைக்கிறது.]

71. நேயமஸ்தி புரீ லங்கா ந யூயம் ந ச ராவண: ।
யஸ்மாதிக்ஷ்வாகுநாதேந பத்தம் வைரம் மஹாத்மநா ॥

[மஹாபுருஷனும், இக்ஷ்வாகுகுலநாதனுமான ராகவனால் விரோதம் வைக்கப்பட்டதாகையால், இந்த லங்காபுரியும், நீங்களும், ராவணனும் அஸத்ஸமராய்விட்டீர்கள்.]

72. பீஷா஽ஸ்மாத் வாத: பவதே । பீஷோதேதி ஸூர்ய: ॥
பீஷா஽ஸ்மாதக்நிச்சேந்த்ரச்ச । ம்ருத்யுர் தாவதி பஞ்சம: ॥

[இந்தப் பரமபுருஷனிடத்தில் பயத்தாலேயே காற்று அடிக்கிறது; (இவனிடத்தில்) பயத்தாலேயே ஸூர்யன் உதிக்கிறான்; அக்நியும், இந்திரனும் ஐந்தாமவனான ம்ருத்யுவும் இவனிடத்தில் பயத்தினாலேயே தங்கள் காரியத்தைச் செய்கிறார்கள்.]

73. தேஷாம் ஸம்பாஷமாணாநாமந்யோந்யம் ஸ விபீஷண: ।
உத்தரம் தீரமாஸாத்ய கஸ்த ஏவ வ்யதிஷ்டத ॥

[ஒருவருக்கொருவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில், அவ்விபீஷணன் (லங்கையின்) வடக்குக்கரையை அடைந்து ஆகாயத்திலேயே நிலைநின்றான்.]

74. இஹ ஸந்தோ ந வா ஸந்தி ஸதோ வா நாநுவர்த்தஸே ।
ததாஹி விபரீதா தே புத்திராசாரவர்ஜிதா ॥

[இவ்விலங்கையில் நல்லோர்கள் இல்லையோ? இல்லை; இருக்கிறார்கள்; இருக்கும் நல்லோர்களை நீ அநுவர்த்திப்பதில்லையோ? ஏனெனில்: உன்னுடைய அறிவு சாஸ்திரமுறைக்கு மாறுபட்டதாகவும் நன்னடத்தையோடு கூடியிராததாயும் இருக்கிறது.]

---

71. ரா-ஸு 43-25. 72. தை-ஆந 8-1. 73. ரா-யு 17-8.
74. ரா-ஸு 21-9.

75. அந்யஸ் த்வேவம்விதம் ப்ரூயாத் வாக்யமேதந் நிசாசர ।
அஸ்மிந் முஹூர்த்தே ந பவேத் த்வாம் து திக் குலபாம்ஸநம் ॥
[ராக்ஷஸனே! வேறொருவன் இம்மாதிரி வாக்கியத்தைச் சொல்லியிருந்தானாகில் இம்முஹூர்த்தத்திலேயே இல்லையாயிருப்பான். குலத்தைக் கெடுக்கவந்த உன்னை (வாயால்) சுடுகிறேன்.]

76. பெரி-வ்யா-ப்ர-தி-26.

77. பெரி-வ்யா-ப்ர-தி-27.

78. தேந ஸீதா ஜநஸ்தாநாத் ஹ்ருதா ஹத்வா ஜடாயுஷம் ।
ருத்தா ச விவசா தீநா ராக்ஷஸீபி: ஸுரக்ஷிதா ॥
[ஜடாயுவைக்கொன்று, அவ்விராவணனால் ஜநஸ்தானத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டாள் சீதாபிராட்டி; பரவசையாய், வருந்தத்தக்கவளான அப்பிராட்டி சிறையிடப்பட்டவளாய் ராக்ஷஸிகளால் நன்கு ரக்ஷிக்கப்பட்டாள்.]

78*. பெரி-வ்யா-ப்ர-தி-28.

79. ஏதத் ஸாம காயந்நாஸ்தே । ஹா வுஹா வுஹா வு ।
அஹமந்நமஹமந்நமஹமந்நம் । அஹமந்நாதோऽஹமந்நாதோ-
ऽஹமந்நாத: ।
[முக்தாத்மா (பரமாத்மாவையடைந்து) இந்த ஸாமத்தைப் பாடிக்கொண்டிருக்கிறான்,—ஹா வுஹா வுஹா வு; நான் (பரமாத்மாவுக்கு) அன்னமாயிருப்பவன்; நான் அன்னமாயிருப்பவன்; நான் அன்னமாயிருப்பவன்; நான் (பரமாத்மாவின் ப்ரீதியாகிற) அன்னத்தை புஜிப்பவன்; நான் அன்னத்தைப் புஜிப்பவன்; நான் அன்னத்தை புஜிப்பவன்.]

80. காயந்தி கேசித் ப்ரணமந்திகேசித்
ந்ருத்யந்தி கேசித் ப்ரஹஸந்தி கேசித் ।
பதந்தி கேசித் விசரந்தி கேசித்
ப்லவந்தி கேசித் ப்ரலபந்தி கேசித் ॥

---

75. ரா-யு 16-15. 78. ரா-யு 17-11. 79. தை-ப்ருகு 10-6.
80. ரா-ஸு 61-14.

[சில வானரர்கள் பாடுகிறார்கள்; சிலர் வணங்குகிறார்கள்; சிலர் ஆடுகிறார்கள்; சிலர் சிரிக்கிறார்கள்; சிலர் கீழ்விழுகிறார்கள்; சிலர் திரிகிறார்கள்; சிலர் தாவுகிறார்கள்; சிலர் கூச்சலிடுகிறார்கள்.]

81. ஹ்ருதயம் தத் விஜாநீயாத் விச்வஸ்யாயதநம் மஹத்

[அந்த இருதயத்தை ஸர்வேச்வரனுக்குப்பெரிய கோயிலாக அறியக்கடவன்.]

82. ஸ்ரீவத்ஸஸம்ஸ்தாநதரமநந்தே ச ஸமாஸ்ரிதம் ।
ப்ரதாநம் புத்திரப்யாஸ்தே கதாரூபேண மாதவே ॥

[ஸ்ரீவத்ஸமென்னும் மறுவுருவானதாய், ஆதிசேஷன்மேல் வைக்கப் பெற்றதாயிருப்பது ப்ரக்ருதி. 'மஹான்' என்றும் 'புத்தி' என்றும் சொல்லப்படும் தத்வமும் கதையுருவில் மாதவனிடமிருக்கிறது.]

83. ஆத்மாநமஸ்ய ஜகதோ நிர்லேபமகுணாமலம் ।
பிபர்த்தி கௌஸ்துபமணிஸ்வரூபம் பகவாந் ஹரி: ॥

[இவ்வுலகை வியாபித்திருப்பதும், (உலகின்) குணங்களால் தீண்டப்பெறாததும், ப்ராக்ருதிகுணங்களும் அழுக்குகளும் அற்றதும் கௌஸ்துபமணிஸ்வரூபமாயிருப்பதுமான ஜீவாத்மதத்வத்தை பகவான் ஹரி (திருமார்பில்) தரிக்கிறார்.]

84. ஸத்த்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம் ரஜஸோ லோப ஏவ ச ।
ப்ரமாதமோஹௌ தமஸோ பவதோऽஜ்ஞாநமேவ ச ॥

[ஸத்வகுணத்திலிருந்து ஞானமுண்டாகிறது. ரஜோகுணத்திலிருந்து (ஸ்வர்க்கம் முதலியபலன்களில்) ஆசையுண்டாகிறது. தமோகுணத்திலிருந்து கவனமின்மையினாலேற்படும் அஸத்கர்மப்ரவ்ருத்தியும், விபரீத ஜ்ஞானமும், அஜ்ஞானமும் ஏற்படுகின்றன.]

86. கர்மவச்யா குணா ஹ்யேதே ஸத்வாத்யா: ப்ருதிவீபதே ।
அவித்யாஸஞ்சிதம் கர்ம தச்சாசேஷேஷு ஜந்துஷு ॥

---

81. தை-நா-11. 82. வி-பு 1-22-69. 83. வி-பு 1-22-68.
84. கீதை 14-17. 86. வி-பு 2-13-70.

[அரசனே! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்னும் இம்முக்குணங்களும் கர்மத்துக்கு வசப்பட்டவை. (ஆத்மாவல்லாத தேஹத்தை ஆத்மாவென்று நினைக்கும்) அறியாமையால் வளர்ந்தது கர்மம். இது பிரமன் முதல் எல்லா ஜந்துக்களிடமும் உள்ளது.]

87. தர்மேண பாபமபநுததி
[கர்மாநுஷ்டானத்தாலே பாபத்தைப் போக்கடிக்கிறான்.]

88. யே ச வேதவிதோ விப்ரா யே சாத்யாத்மவிதோ ஜநா:।
தே விதந்தி மஹாத்மாநம் க்ருஷ்ணம் தர்மம் ஸநாதநம்॥
[வேதமறிந்த ப்ராஹ்மணர்களும், ஆத்ம ஸ்வரூபமறிந்த பெரியோர்களும் மஹாத்மாவான கிருஷ்ணனையே பழமையான தர்மமாக அறிகிறார்கள்.]

89. ராமோ விக்ரஹவாந் தர்ம: ஸாது: ஸத்யபராக்ரம:।
ராஜா ஸர்வஸ்ய லோகஸ்ய தேவாநாம் மகவாநிவ॥
[ராமன் தர்மமே உருவெடுத்தவன்; நல்லோன்; உண்மையான பராக்ரமமுள்ளவன். எல்லா தேவர்களுக்கும் இந்திரன் அதிபதியாயிருப்பதுபோல், எல்லா உலகிற்கும் அவன் அரசன்.]

90. யத்ப்ரஹ்ம கல்பநியுதாநுபவேऽப்யநாச்யம்
தத் கில்பிஷம் ஸ்ருஜதி ஜந்துரிஹ க்ஷணார்த்தே
[யாதொரு பாபம், பல்லாயிரம் ப்ரஹ்மகல்பங்கள் அனுபவித்தாலும் நசிக்காதோ, அந்தப்பாபத்தை இந்த ஜந்து இங்கு அரைக்ஷண நேரத்தில் செய்கிறான்.]

91. ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ।
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச:॥
[(பலஸாதனமான) எல்லா தர்மங்களையும், வாஸனையுடன் விட்டு, என்னை ஒருவனையே உபாயமாக அடை; நான் உன்னை எல்லாப்பாபங்களினின்றும் விடுவிக்கிறேன்; துக்கிக்காதே.]

---

87. தை-நா-50. 88. பார-ஆர 87-26 89. ரா-ஆ 37-13.
90. வை-ஸ்த-60. 91. கீதை 18-66.

92. ஈச்வரோऽஹமஹம் போகீ ஸித்தோऽஹம் பலவாந் ஸுகீ
[நானே ஈச்வரன். நானே போகத்தை அடைபவன். நான் இயற்கையாகவே ஸித்தனாயிருப்பவன்; (இயற்கையாகவே) பலவானாகவும், ஸுகத்தை அநுபவிப்பவனாகவுமிருப்பவன் நானே.]

93. அஹமஸ்ம்யபராதாநா மாலயோऽகிஞ்சநோऽகதி: ।
த்வமேவோபாயபூதோ மே பவேதி ப்ரார்த்தநாமதி: ॥
ஶரணாகதிரித்யுக்தா ஸா தேவேऽஸ்மிந் ப்ரயுஜ்யதாம் ॥
["நான் குற்றங்களுக்கு ஓர் இருப்பிடமாயிருக்கிறேன். (என்னை ரக்ஷித்துக்கொள்ள) ஒரு உபாயமுமற்றவனாயிருக்கிறேன்; (உன்னையொழிய) வேறு கதியற்றவனாயுமிருக்கிறேன்; நீயே எனக்கு உபாயமாக ஆவாயாக" என்று பிரார்த்திக்கும் புத்தியே சரணாகதியெனப் படுகிறது. அது இந்த பகவான் விஷயத்தில் செய்யப்படட்டும்.]

94. பெரி-வ்யா-ப்ர-தி-31.

95. பெரி-வ்யா-ப்ர-தி-10.

96. தபஸாऽபி த்வமாத்மாநம் யோஜய ப்ராத்ருபி:ஸஹ ।
தபஸோ ஹி பரம் நாஸ்தி தபஸா விந்ததே மஹத் ॥
[ஸஹோதரர்களோடு கூடிய நீ தவத்தையும் ஸம்பாதிப்பாயாக. தவத்தைக்காட்டிலும் மேலானதில்லை; தவத்தால் பெரும்பலனை அடைகிறான் மனிதன்.]

97. மஹதா தபஸா ராம மஹதா சாபி கர்மணா ।
ராஜ்ஞா தஶரதேநாஸி லப்தோऽம்ருதமிவாமரை: ॥
[ராமபிரானே! பெருந்தவத்தாலும், பெருங்கருமத்தாலும், தேவர்கள் அமுதம் பெற்றதுபோல் ராஜாவான தசரதரால் நீர் பெறப்பட்டீர்.]

98. தே தம் ஸோமமிவோத்யந்தம் த்ருஷ்ட்வா வை தர்மசாரிண: ॥
மங்களாநி ப்ரயுஞ்ஜாநா: ப்ரத்யக்ருஹ்ணந் த்ருடவ்ரதா: ॥
[தருமமுறை தவறாது நடப்பவர்களும், த்ருடமான விரதத்தையுடையவர்களுமான அந்த ருஷிகள், உதிக்கும் சந்திரனைப் போன்ற அந்த ராமபிரானைப் பார்த்து மங்களாசாஸனம் செய்து கொண்டு வரவேற்றார்கள்.]

---

92. கீதை 16-14. 93. அஹிர்புத் 37-30. 96. பார-வந 89-19.
97. ரா-அ 66-3. 98. ரா-ஆர 1-11.

99. ஹிரண்யவர்ணாம் ஹரிணீம் ஸுவர்ணரஜதஸ்ரஜாம் ।
சந்த்ராம் ஹிரண்மயீம் லக்ஷ்மீம் ஜாதவேதோ ம ஆவஹ ॥

[வேதங்களைப்பிறப்பித்த எம்பெருமானே! பொன்போன்ற நிறத்தையுடையவளும் மான்போன்றவளும், பொன்வெள்ளிமாலைகளையுடையவளும், சந்திரனைப்போல் ஆனந்திப்பவளும், ஸுவர்ணமயமானவளுமான பெரியபிராட்டியாரை என்னிடத்தில் ஆவிர்ப்பவிக்கச் செய்வீராக]

100. காம் ஸோஸ்மிதாம் ஹிரண்யப்ராகாராம்
ஆர்த்ராம் ஜ்வலந்தீம் த்ருப்தாம் தர்ப்பயந்தீம் ।
பத்மே ஸ்திதாம் பத்மவர்ணாம்
த்வாமிஹோபஹ்வயே ஸ்ரியம் ॥

[சப்திப்பவளாகவும், (ப்ரஹ்மத்தின்) பெருமைக்குக் காரணமாயிருப்பவளாகவும், (திருவாரமாகிற) பொன்மயமான மதிளை உடையவளாகவும், ஈரநெஞ்சை உடையவளாகவும், ஒளிவிடுபவளாகவும், நித்ய திருப்தியுடையவளாகவும், (எம்பெருமானை) திருப்தி செய்விப்பவளாகவும், தாமரையிலிருப்பவளாகவும், தாமரை போன்ற திருநிறத்தை உடையவளாகவுமுள்ள ஸ்ரீதேவியான தேவரீரை இங்கு அழைக்கிறேன்.]

101. பெரி-வ்யா-ப்ர-தி-32.
102. ,, ,, 33.
103. ,, ,, 34.
104. ,, ,, 35.
105. ,, ,, 36.

106. ரமயது ஸ மாம் கண்ட:ஸ்ரீரங்கநேதுருதஞ்சித
க்ரமுகதருண க்ரீவாகம்பு ப்ரலம்பமலிம்லுச: ।
ப்ரணயவிலகல்லக்ஷ்மீ விச்வம்பரா கரகந்தளீ
கநகவலயக்ரீடா ஸங்க்ராந்தரேக இவோல்லஸந் ॥

[பெரியபெருமாளுடைய செழித்து வளர்ந்த பாக்குமரத்தினுடைய இளங்கழுத்தினுடையவும், சங்கினுடையவும் அழகைக் கொள்ளைகொண்டதாயும், அன்போடு அணைத்துக்கொள்ளும், திருமகளுடையவும் நிலமகளுடையவும் வாழைத்தண்டுபோன்ற

---

99. ஸ்ரீஸூக்தம்-1. 100. ஸ்ரீஸூக்தம்-4. 106. ர-ஸ்த 1-104.

கைகளிலுள்ள பொன் வளையல்கள் விளையாடுவதாலே ஏற்பட்ட ரேகைகளை உடையதுபோல் விளங்குவதுமான அந்தத் திருக் கழுத்து அடியேனை மகிழ்விக்கவேணும்.]

107. க்ருஷ்ணாஷ்டகமிதம் புண்யம் ப்ராதருத்தாய ய: படேத்।
கோடிஜந்மக்ருதம் பாபம் தத்க்ஷணாதேவ நச்யதி॥

[புண்ணியமான இந்தக் கிருஷ்ணாஷ்டகஸ்தோத்ரத்தைக் காலையில் எவன் படிக்கிறானோ, அவனால் கோடி ஜந்மங்களில் செய்யப் பட்ட பாவம் அக்கணத்திலேயே அழிகின்றது.]

108. தேவிம் ப்ரதி ருத்ர:—தத: க்ரோதபரீதேந ஸம்ரக்தநயநேந ச।
வாமாங்குஷ்ட்டநகாக்ரேண சிந்நம் தஸ்ய ஶிரோ மயா॥
ப்ரஹ்மா—யஸ்மாதநபராதஸ்ய ஶிரச்சிந்நம் த்வயா மம।
தஸ்மாச்சாபஸமாவிஷ்ட: கபாலீ த்வம் பவிஷ்யஸி॥
ருத்ர:—ப்ரஹ்மஹாऽऽகுலிதோ பூத்வா சரந் தீர்த்தாநி பூதலே।
ததோऽஹம் கதவாந்தேவி! ஹிமவந்தம் ஶிலோச்சயம்॥
தத்ர நாராயணச் ஸ்ரீமாந் மயா பிக்ஷாம் ப்ரயாசித:।
ததஸ்தேந ஸ்வகம் பார்ச்வம் நகாக்ரேண விதாரிதம்॥
மஹதீ ஸ்ரவதீ தாரா தஸ்ய ரக்தஸ்ய நிஸ்ஸ்ருதா॥
விஷ்ணுப்ரஸாதாத்ஸுச்ரோணி! கபாலம் தத்ஸஹஸ்ரதா।
ஸ்புடிதம் பஹுதா யாதம் ஸ்வப்நலப்தம் தநம் யதா॥

[தேவியைக் குறித்து ருத்ரன்:—'பிறகு கோபத்தையுடையவனும் சிவந்த கண்களை உடையவனுமான என்னால், அப்பிரமனுடைய தலை இடதுகைக் கட்டைவிரல் நகத்தின் நுனியால் வெட்டப் பட்டது' பிரமன்:—'அபராதமற்ற என்னுடைய தலை, உன்னால் அறுக்கப்பட்டபடியால் நீ சாபத்தை அடைந்து கபாலியாக (கபாலத்துடன் கூடியவனாக) ஆவாய்.' ருத்ரன்:—தேவி! ப்ரஹ்ம ஹத்தி செய்தவனாயும் கலங்கினவனாகவும் பூமியில் தீர்த்தங்களைச் சுற்றிக்கொண்டிருந்த நான் அதற்குப்பின் ஹிமாசலமலைக்குச் சென்றேன். அங்கு ஸ்ரீமந்நாராயணன் என்னால் பிச்சைக்காக யாசிக்கப்பட்டான். அதன்பின் அவனால் தன் (தேஹத்தில்) ஒரு பாகம் நகத்தின் நுனியால் கிழிக்கப்பட்டது. அதிலிருந்து

107. க்ருஷ்ணாஷ்டகம். 108. மாத்ஸ்யபுராணம்-182.

பெரிதாக வெள்ளமிடும் ரத்ததாரை பெருகிற்று. ........அழகிற் சிறந்தவளே! விஷ்ணுவினுடைய அருளினல் அக்கபாலம் ஆயிரக் கணக்கான பல துண்டுகளாக வெடித்து, கனவில் கிடைத்த பணம்போல் சென்றது.]

109. மாநுஷ்யம் ப்ராப்ய லோகேऽஸ்மிந் ந மூகோ பதிரோऽபிவா।
நாபக்ராமதி ஸம்ஸாராத் ஸ கலு ப்ரஹ்மஹா பவேத்॥

[இவ்வுலகில் மனிதவுருவையடைந்து, ஊமையாகவும் செவிடாகவுமில்லாமலிருந்தும், ஸம்ஸாரத்திலிருந்து விலகி மோக்ஷமடையாவிடில், அவன் ப்ரஹ்மஹத்தி செய்தவனுவான்.]

110. வர்ணாச்ரமவிருத்தஞ்ச கர்ம குர்வந்தி யே நரா:।
கர்மணா மநஸா வாசா நிரயேஷு பதந்தி தே॥
ஸ்தாவரக்ரிமயோப்ஜாச்ச பக்ஷிணச்ச ஸரீஸ்ருபா:।

[எந்த ஜீவர்கள் மனோவாக்காயங்களாகிற மூக்கரணங்களாலும் வர்ணாச்ரமவிருத்தமான காரியங்களைச் செய்கிருர்களோ அவர்கள் நரகத்தில் விழுகிருர்கள். மரம் முதலிய அசையாப்பொருள்கள், (ஸூக்ஷ்மமான) கிருமிகள், நீர்வாழும் மீன் முதலியவை, ஆகாசசாரிகளான பக்ஷிகள், பாம்புகள் முதலிய ஊர்வன முதலியவையாகப் பிறகு பிறக்கிருர்கள்.]

112. யஸ்யாத்மா ஶரீரம்
[எந்தப்பரமாத்மாவுக்கு ஆத்மா சரீரமோ....]

113. 108-வது ப்ரமாணம் காண்க.

114. ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைச்ச ஸமஹர்ஷிபி:।
த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:॥

[அந்தக் காகாஸுரன், தந்தையினுலும், (தாயினுலும்) மஹர்ஷிகளுடன் கூடிய தேவர்களாலும் கைவிடப்பட்டவனுய், மூன்று உலகங்களையும் சுற்றித்திரிந்து அந்த ராமனையே சரணமடைந்தான்]

---

110. வி-பு 2-6-33. 112. ப்ருஹ 5-7-22. 114. ரா-ஸு 38-33.

115. ப்ரஹ்மா ஸ்வயம்பூச் சதுராநநோ வா
ருத்ரஸ் த்ரிணேத்ரஸ் த்ரிபுராந்தகோ வா।
இந்த்ரோ மஹேந்த்ரஸ் ஸுரநாயகோ வா
த்ராதும் ந ஶக்தா யுதி ராமவத்யம்॥

[நான்முகனும், முதலிலுண்டான பிரமனும், திரிபுரமெரித்த முக்கண்ணனான உருத்திரனும், தேவர்தலைவனும் பெருஞ்செல்வமுடையோனுமான இந்திரனும், சண்டையில் ராமனால் கொல்லப்படவிருப்பவனை ரக்ஷிக்க ஸமர்த்தரல்லர்.]

116. பவித்ராணாம் பவித்ரம் யோ மங்களாநாஞ்ச மங்களம்।
தைவதம் தேவதாநாஞ்ச பூதாநாம் யோऽவ்யய: பிதா॥

[பரிசுத்தர்களுள் எவன் மிகப் பரிசுத்தமானவனோ, மங்களங்களுள் எவன் மிக மங்களமானவனோ, தேவதைகளுக்கும் எவன் தேவதையோ, ஸகல ஜீவராசிகளுக்கும் எவன் அழியாத் தந்தையோ........]

117. ஸேந்த்ராய தக்ஷகாய
[இந்திரனோடு கூடிய தக்ஷகனுக்கு]

118. கஸ்ய பிப்யதி தேவாச்ச ஜாதரோஷஸ்ய ஸம்யுகே
[சண்டையில் கோபங்கொண்ட எவனைக்கண்டு தேவர்களும் பயப்படுகிறார்கள்?]

119. ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே।
அபயம் ஸர்வபூதேப்யோ ததாம்யேதத் வ்ரதம் மம॥

[ஒரு தடவை சரணமடைந்தவன் பொருட்டும், 'உனக்கு அடியேனாகிறேன்' என்று பிரார்த்திப்பவன் பொருட்டும், எல்லா ப்ராணிகளிடத்தினின்றும் அபயமளிக்கிறேன். இது எனக்கு விரதம்.]

120. தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்।
க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு॥

---

115. ரா-ஸு 51-45. 116. பார-விஷ்ணுஸஹஸ்ரநாமாத்யாயம்.
117. 118. ரா-பா 1-4. 119. ரா-யு 18-33. 120. கீதை 16-19.

[ (என்னை) த்வேஷிப்பவர்களும், கொடூரமானவர்களும், மனிதர்களுள் கீழ்மையானவர்களும், சுபமற்றவர்களுமான அவர்களை ஸம்ஸாரத்தில், அதிலும் அஸுரயோனிகளில் எப்போதும் தள்ளுகிறேன்.]

121. உபாப்யாமேவ பக்ஷாப்யாமாகாமே பக்ஷிணும் கதி: ।
தைவ ஜ்ஞாநகர்மப்யாம் ப்ராப்யதே புருஷோத்தம: ॥

[ஆகாசத்தில் பக்ஷிகளுக்கு இரண்டு இறக்கைகளாலேயே ஸஞ்சாரம் ஏற்படுகிறது. அப்படியே ஜ்ஞாநகர்மங்களாகிற இரண்டு இறக்கைகளாலேயே (ஜீவனுகிற பக்ஷியால்) புருஷோத்தமன் அடையப்படுகிறுன்.]

122. அத்தா சராசரக்ரஹணுத்

[("யஸ்ய ப்ரஹ்மச" என்னும் சுருதியிலே) உணவருந்துமவனுகச் சொல்லப்படுமவன் பரமாத்மாவே; அசைவனவும், அசையாதனவுமான சேதநாசேதநங்களை உணவாக எடுக்கையாலே.]

123. யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் சோபே பவத ஓதந:
ம்ருத்யுர் யஸ்யோபஸேசநம்

[எந்தப் பரப்ரஹ்மத்திற்கு ப்ராஹ்மணக்ஷத்ரியர்களாகிற இரண்டு ஸமூஹமும் உணவாகின்றனவோ, யமன் எவனுக்கு ஊறுகாய் ஆகின்றுனோ....]

124. அஸந்நேவ ஸ பவதி । அஸத் ப்ரஹ்மேதி வேத சேத் ।
அஸ்தி ப்ரஹ்மேதி சேத் வேத । ஸந்தமேநம் ததோ விது: ॥

[ப்ரஹ்மம் இல்லையென்று அறிந்தானுகில் அவன் இல்லாதவனுகவே ஆகிறுன். ப்ரஹ்மம் இருக்கிறதென்று அறிந்தானுகில் அக்காரணத்தினுலேயே இவனை இருக்கிறவனுக அறிகிறுர்கள்.]

125. மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந ।
தோஷோ யத்யபி தஸ்ய ஸ்யாத் ஸதாமேததகர்ஹிதம் ॥

---

121. நாரஸிம்ஹபுராணம் 64-11. 122. ப்ர-ஸூ 1-2-9.
123. கட 1-2-15. 124. தை-ஆந 6. 125. ரா-யு 18-3.

[நண்பனுடைய வேஷத்தோடு நெருங்கின இவ்விபீஷணனை ஒரு போதும் கைவிடமாட்டேன். அவனிடம் தோஷமிருந்தாலும் இருக்கட்டுமே; நல்லோர்களுக்கு இவனை ஏற்றுக்கொள்வது நிந்திக்கத்தக்கதல்ல.]

126. ஏதௌ த்வௌ விபுதச்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌ ஸ்ம்ருதௌ ।
ததாதர்ஶிதபந்தானௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ ॥
[(பரமபுருஷனின்) உகப்பாலும், கோபத்தாலும் பிறந்தவர்களான பிரமன் உருத்திரன் என்னும் தேவர் தலைவர்களான இவ்விருவரும், அப்பரமபுருஷனால் வழிகாட்டப்பட்டு ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்கிறார்கள்.]

127. ச்ருதி: ஸ்ம்ருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சேதீ மம த்ரோஹி மத்பக்தோऽபி ந வைஷ்ணவ: ॥
[வேதமும், ஸ்ம்ருதியும் என்னுடைய ஆஜ்ஞையே. எவனொருவன் அதை மீறி நடக்கிறானோ அவன் என் ஆஜ்ஞையை மீறினவன்; எனக்கு த்ரோஹம் செய்தவன்; என்னுடைய பக்தனாயிருந்தபோதிலும் (அவன்) வைஷ்ணவனல்லன்.]

128. ப்ரஹ்மண: புத்ராய ஜ்யேஷ்டாய
[பிரமனின் முதல் புத்திரனான ருத்ரனுக்கு]

129. ஸ கோஷோ தார்த்தராஷ்ட்ராணாம் ஹ்ருதயானி வ்யதாரயத் ।
[அந்த சங்கநாதம் த்ருதராஷ்ட்ரபுத்ரர்களுடைய ஹ்ருதயங்களைப் பிளந்தது.]

130. 38-வது ப்ரமாணம் காண்க.

131. மாதா பிதா ப்ராதா நிவாஸச் ஶரணம் ஸுஹ்ருத் கதிர் நாராயண:
[நாராயணன் தாயாகவும், தந்தையாகவும், தன்னுடன் பிறந்தவனாகவும், தங்குமிடமாகவும், மோக்ஷோபாயமாகவும், நண்பனாகவும், மோக்ஷத்தில் அடையப்படுபவனாகவுமிருப்பவன்.]

126. பார-சாந்தி 350-19. 127. விஷ்ணுதர் 6-31.
128. ஸாமவேதம். 129. கீதை 1-19. 131. ஸுபால-16.

132. தஸ்மாத் ப்ரணம்ய ப்ரணிதாய காயம்
ப்ரஸாதயே த்வாமஹமீஶமீட்யம் ।
பிதேவ புத்ரஸ்ய ஸகேவ ஸக்யு:
ப்ரிய: ப்ரியாயார்ஹஸி தேவ ஸோடும் ॥

[நீ ஸகலவித பந்துவுமாயிருக்கையாலே, மநோவாக்காயங்களாலே உன்னை வணங்கி, ஈசனும் துதிக்கத்தக்கவனுமான உன்னை உகப்பிக்கிறேன். தேவனே! தந்தை மகன் குற்றம் பொறுப்பது போலும், நண்பன் நண்பன் குற்றம் பொறுப்பதுபோலும், காதலன் காதலியின் குற்றம் பொறுப்பதுபோலும் நீ என் குற்றம் பொறுக்கவேணும்.]

133. இத்யுக்த்வா பருஷம் வாக்யம் ராவணம் ராவணாநுஜ: ।
ஆஜகாம முஹூர்த்தேந யத்ர ராமஸ் ஸலக்ஷ்மண: ॥

[இப்படி மாதிரியான கடுமையான சொல்லை ராவணனைக்குறித்துச் சொல்லிவிட்டு, லக்ஷ்மணனோடுகூடிய ராமன் எங்கிருக்கிறானோ அவ்விடத்துக்கு ஒரு முகூர்த்தகாலத்தில் வந்தான் விபீஷணன்.]

134. பெரி-வ்யா ப்ர-தி 37.

135. ஜாயமாநம் ஹி புருஷம் யம் பச்யேந் மதுஸூதந: ।
ஸாத்விகஸ் ஸ து விஜ்ஞேய: ஸ வை மோக்ஷார்த்தசிந்தக: ॥

[பிறந்துகொண்டிருக்கும்போது எந்தப் புருஷனை மதுஸூதனன் பார்க்கிறானோ, அவனே ஸத்வகுணமுடையவனென்று அறியத்தக்கவன். அவனே மோக்ஷபலத்தை நினைப்பவன்.]

136. ய ஏஷோऽந்தராதித்யே ஹிரண்மய:
புருஷோ த்ருச்யதே ஹிரண்யச்மச்ருர்
ஹிரண்யகேஶ ஆப்ரணகாத் ஸர்வ ஏவ ஸுவர்ண: ।
தஸ்ய யதா கப்யாஸம் புண்டரீகமேவமக்ஷிணீ ॥

[ஸூர்யனுக்கு நடுவில் தங்கம்போல் அழகிய உருவையுடைய எந்த இந்தப்பரமபுருஷன் காணப்படுகிறானோ, அவன் ஸுவர்ணம்

132. கீதை 11-44. 133. ரா-யு 17-1. 135. பார-சாந் 358-73.
136. சாந் 1-6,7.

போன்று அழகான மீசையையும், கேஶங்களையும், எல்லா அவயவங்களையும் உடையவன். அவனுக்கு ஸூர்யனால் மலரும் தாமரைபோன்ற இரு கண்கள் உள.]

137. ஶங்கசக்ரகதாபாணே! த்வாரகாநிலயாச்யுத! ।
கோவிந்த! புண்டரீகாக்ஷ! ரக்ஷ மாம் ஶரணாகதாம் ॥

[(ஆச்ரிதரை ரக்ஷிக்க) சங்கம், சக்ரம், கதை முதலிய ஆயுதங்களைக் கையிலே தரித்திருப்பவனே! த்வாரகையில் வசிப்பவனே! அடியவரை (ஒருபொழுதும்) நழுவ விடாதவனே! கோவிந்தா! செந்தாமரைக்கண்ணா! சரணமடைந்த என்னை ரக்ஷிப்பாயாக.]

138. அஹம் பீதோऽஸ்மி தேவேஶ ஸம்ஸாரேऽஸ்மிந் பயாவஹே ।
பாஹி மாம் புண்டரீகாக்ஷ ந ஜாநே ஶரணம் பரம் ॥

[ஸூரிகள் தலைவனே! தாமரைக்கண்ணனே! பயத்தைக்கொடுக்கும் இந்த ஸம்ஸாரத்தில் அடியேன் பயப்படாநின்றேன். அடியேனைக் காத்தருள்வாயாக. உன்னைத்தவிர வேறொரு உபாயத்தை அறிகின்றிலேன்.]

139. தமோ ஹிரண்யரூபேண பரிணமமுபாகதம்

[தமோகுணம் 'ஹிரண்யன்' என்னும் உருவாக வடிவெடுத்தது.]

140. பரமேச்வரஸம்ஜ்ஞோऽஜ்ஞ கிமந்யோ மய்யவஸ்திதே ।
ததாபி மர்த்துகாமஸ் த்வம் ப்ரப்ரவீஷி புந: புந: ॥

[மூடனே! நானிருக்கையில், பரமேச்வரன் என்னும் பெயருள்ள வேறொருவனிருக்கிறானோ? அப்படியும் சாக விருப்பங்கொண்டு நீ மறுபடியும் மறுபடியும் அவனைச் சொல்லுகிறாயே.]

141. ஏவமுக்த: ச்வபாகேந பலவாந் ப்ரஹ்மராக்ஷஸ: ।
அமர்ஷவஶமாபந்நோ ந ச கிஞ்சித் தமப்ரவீத் ॥

[சண்டாளனான நம்பாடுவானால் இப்படி சொல்லப்பட்ட பருத்த ப்ரஹ்மராக்ஷஸன் கோபங்கொண்டவனாய், அவனிடம் வார்த்தை சொல்லவில்லை.]

---

137. பார-ஸபா-66. 138. ஜிதந்தே 1-8. 140. வி-பு 17-23.
141. கைசிகபுராணம்-16.

142. பெரி-வ்யா-ப்ர-தி 38.

143. யா ப்ரீதிரவிவேகாநாம் விஷயேஷ்வநபாயிநீ ।
த்வாமநுஸ்மரதஸ் ஸா மே ஹ்ருதயாந் மாபஸர்ப்பது ॥
[விவேக மற்றவர்களுக்கு விஷயங்களில் யாதொரு அழிவற்ற பிரீதியுள்ளதோ, அப்பிரீதி உன்னை நினைக்கும்போது என் நெஞ்சைவிட்டு அகலாமலிருக்கட்டும்.]

144. மயி பக்திஸ் தவாஸ்த்யேவ பூயோப்யேவம் பவிஷ்யதி ।
வரஸ்து மத்த: ப்ரஹ்லாத வ்ரியதாம் யஸ்தவேப்ஸித: ॥
[பிரஹலாதனே! என்னிடத்தில் உனக்கு பக்தியுள்ளது. மேலும் இப்படியே இருக்கும். உனக்குப் பிரியமான வரத்தை என்னிடமிருந்து வரிப்பாயாக.]

145. ஸக்ய: பச்யத க்ருஷ்ணஸ்ய முகமத்யருணேக்ஷணம் ।
விகாஸிசாரதாம்போஜமவச்யாய ஜலோக்ஷிதம் ।
பரிபூய ஸ்திதம் ஜந்ம ஸபலம் க்ரியதாம் த்ருசா: ॥
[ஸகிகளே! மிகவும் சிவந்த திருக்கண்களை உடையதும், பனி ஜலத்தினால் தெளிக்கப்பட்டிருக்கும் மலர்ந்த சரத்காலத் தாமரையை வெற்றிகொண்டிருப்பதுமான க்ருஷ்ணனுடைய முகத்தைப் பாருங்கள். கண்களைப் பெற்றிருப்பதை ப்ரயோஜனமுள்ளதாகச் செய்யுங்கள்.]

146. க்ருபயா பரயா கரிஷ்யமாணே
ஸகலாங்கம் கில ஸர்வதோऽக்ஷிநேத்ரே ।
ப்ரதமம் ச்ரவஸீ ஸமாஸ்த்ருணுதே
இதி தைர்க்யேண விதந்தி ரங்கநேது: ॥
[மேலான கருணையால் எல்லா அங்கங்களையும் எல்லாவிதத்திலும் கண்ணாகப் பண்ணப்போகிற பெரியபெருமானுடைய திருக்கண்கள், முதன்முதலில் திருச்செவிகளை அலையெறிகின்றன என்று நீட்சியினால் அறிகின்றனர்.]

---

143. வி-பு 1-20-19. 144. வி-பு 1-20-20. 145. வி-பு 5-20-54.
146. ர-ஸ்த 1-98.

147. ப்ரஹ்மதண்ட ப்ரகாசாநாம் வித்யுத்ஸத்ருசவர்சஸாம் ।
ஸ்மரந் ராகவபாணாநாம் விவ்யதே ராக்ஷஸேச்வர: ॥
[*ராக்ஷஸர் தலைவனான ராவணன், ப்ரஹ்மதண்டம்போல் ஜ்வலிப்பவையும், மின்னல்போல் ஒளிவிடுபவையுமான ராமபாணங்களை நினைத்து மனம் வெதும்பினான்.*]

148. அப்ரஜ்ஞாதண்டலிங்காநி
[*அறிவின்மை, விபரீதாநுஷ்டானம் ஆகிய அடையாளங்களையுடையது கலிகால ஜந்துக்கள்*]

149. பகவத்ஸ்வரூபதிரோதாநகரீம்
[*பகவத்ஸ்வரூபத்தை மறைப்பதான (ப்ரக்ருதியை)*]

150. வேதாந்த விஜ்ஞாந ஸுநிச்சிதார்த்தா:
ஸந்யாஸயோகாத் யதய: சுத்தஸத்வா:
தே ப்ரஹ்மலோகே து பராந்தகாலே
பராம்ருதாத் பரிமுச்யந்தி ஸர்வே ॥
[*வேதாந்தஜ்ஞானத்தாலே மிகவும் உறுதிபெற்ற தத்வஜ்ஞானத்தையுடையவர்களாய், ஸந்யாஸமென்னும் ப்ரபத்தியைப் பற்றிநிற்கையால் ஸந்யாஸிகளாய், சுத்தமான நெஞ்சையுடையரான பெரியோர்கள் கடைசி சரீரத்தின் முடிவுகாலத்தில் பரமபதத்தில் பரமனை அடைந்து பந்தத்திலிருந்து விடுபடுகிறார்கள்.*]

151. நஷ்டோ மோஹ: ஸ்ம்ருதிர் லப்தா த்வத்ப்ரஸாதாந் மயாऽச்யுத ।
ஸ்திதோऽஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ ॥
[*அச்சுதனே! (விபரீதஜ்ஞானமாகிய)மோஹம் நசித்தது. உன்னருளால் உண்மை அறிவு என்னால் அடையப்பட்டது. ஸந்தேஹம் நசிக்கப்பெற்றவனாயிருக்கிறேன். உன் வசனத்தின்படியே(யுத்தம்) செய்கிறேன்.*]

151*. ஸ்ரீஸ்தநாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயமாச்ரயே ।
சிந்தாமணிமிவோத்வாந்த முத்ஸங்கேऽநந்தபோகிந: ॥
[*பிராட்டியின் திருமுலைத்தடத்திற்கு அலங்காரமானதும், ஆதிசேஷனுடைய மடியிலே கக்கப்பட்ட சிந்தாமணி போன்றதும்,*

147. ரா-யு 60-3. 149. சரணாகதிகத்யம்-12. 150. தை-நா 10-22.
151. கீதை 18-73. 151*. ரஸ்த 1-8.

திருவரங்கத்தில் பள்ளிகொண்டிருப்பதுமான தேஜஸ்ஸை அடைகின்றேன்.]

151/. பேரி-வ்யா-ப்ர-தி 37.

152. த்ருதகநகஜகிரிபரியிளதுததி-
ப்ரசலிதலஹரிவதஹமஹமிகயா ।
ஸ்நபயதி ஜநமிமமபஹரதி தம:
பணிஶயமரதகமணிகிரணகண: ॥

[அரவணைமேற் பள்ளிகொள்ளும் பெரியபெருமாளாகிற மரதகப் பச்சையினுடைய காந்திஸமூஹமானது (காய்ந்து) உருகின பொன்மலையோடு கூடாநின்ற கடலில் நின்றும் பரவின அலைகள் போன்று முற்கோலிவந்து அடியேனை நீராட்டுவிக்கின்றது; அக விருளை அகற்றுகிறது.]

153. வரம் ஹுதவஹஜ்வாலா பஞ்ஜராந்தர்வ்யவஸ்திதி: ।
ந ஶௌரிசிந்தாவிமுக ஜநஸம்வாஸ வைஶஸம் ॥

[அக்னிஜ்வாலை சூழ்ந்த கூட்டினுள் நிற்பது சிறந்தது; கண்ணனைப் பற்றிய நினைவற்ற ஜனங்களிடையே இருக்கும் உயிர்க்கொலை சிறந்ததன்று.]

154 ஸர்வபுண்யமயோ தேஶ:

[எல்லாப் புண்யமும் நிறைந்தது இத்தேசம்]

155. பவித்ராணும் ஹிகோவிந்த: பவித்ரம் பரமுச்சதே ।
புண்யாநாமபி புண்யோऽஸௌ மங்களாநாஞ்ச மங்களம் ॥

[பரிசுத்தமானவைகளுள் கோவிந்தன் மேலான பரிசுத்தப் பொருளாகச் சொல்லப்படுகிறுன்; புண்ணியங்களினுள்ளும் மிகப் புண்ணியமானவன் இவனே; மங்களங்களுக்குள் மிக மங்களமானவன் இவனே.]

156. நிமக்ந ஆப: ப்ரணவ: (ப்ரவண:?)

[பள்ளத்திலே இயற்கையாகப் பாய்வது தண்ணீர்?]

157. ஆஹ்லாதஶீதநேத்ராம்பு: புளகீக்ருதகாத்ரவாந் ।
ஸதா பரகுணுவிஷ்டோ த்ரஷ்டவ்ய: ஸர்வதேஹிபி: ॥

152. ர-ஸ்த 1-86. 153. சௌநகஸம்ஹிதை. 155. பார-வந 88-27.
157. ஸ்ரீவிஷ்ணுதத்வம்.

[ஸந்தோஷத்தினாலுண்டான குளிர்ந்த ஆநந்தக்கண்ணீரையுடையவனாகவும், மயிர்க்கூச்செறியும் உடம்பையுடையவனாகவும், பரமபுருஷனுடைய குணங்களால் ஆட்கொள்ளப்பட்டவனாகவும், பகவத்பக்தனானவன் எல்லா ஜீவர்களாலும் காணத்தக்கவன்.]

158. ஸக்ருத் த்வதாகாரவிலோகநாஶயா
த்ருணீக்ருதாநுத்தமபுக்திமுக்திபி: ।
மஹாத்மபிர் மாமவலோக்யதாம் நய
க்ஷணேऽபி தே யத்விரஹோऽதிதுஸ்ஸஹ: ॥

[எந்தப் பெரியோர்களின் பிரிவானது உனக்கு ஒரு க்ஷணப்பொழுதும் மிகவும் பொறுக்கமுடியாததாயிருக்கிறதோ, ஒரு தடவை உன்னுடைய திருமேனியைக் காணவேணுமென்னும் ஆசையினால் திருணம்போல் நினைக்கப்பட்ட மேலான போகமோக்ஷங்களை உடையரான அப்பெரியோர்களால் கடாக்ஷிக்கத்தக்கவனாயிருக்கும் தன்மையை (அடையும்படி) என்னைச் செய்தருளவேணும்.]

159. அஸங்கேதமநாலாபம்

[(அர்ச்சாமூர்த்தியானது) ஸங்கேதம் செய்யாதது; பேசாதது.]

160. தஸ்ய தச்சேதஸோ தேவ: ஸ்துதிமித்தம் ப்ரகுர்வத: ।
ஆவிர்பபூவ பகவாந் பீதாம்பரதரோ ஹரி: ॥

[இப்படித் துதிக்குமந்தப் பிரஹலாதனுடைய நெஞ்சில் பீதகவாடையணிந்த பகவான் ஹரி தோன்றினன்.]

161. இத்யுக்த்வா பகவாந் ராஜம்ஸ் தத்ரைவாந்தரதீயத ।
அத்ருச்ய: ஸர்வபூதாநாம் பூஜித: பரமேஷ்டிநா ॥

[அரசனே! எல்லா பூதங்கட்கும் காணவொண்ணாத பகவான், பிரமனால் பூஜிக்கப்பட்டு, இப்படிச் சொல்லிவிட்டு அங்கேயே மறைந்தான்.]

162. ந மாம்ஸசக்ஷுரபிவீக்ஷதே தம்

[மாம்ஸத்தாலான இக்கண் அப்பரமபுருஷனைக் காணாது.]

163. ந ஸந்த்ருஶே திஷ்டதி ரூபமஸ்ய
ந சக்ஷுஷா பச்யதி கச்சநைநம் ।

158. ஸ்தோ-ர 56. 160. வி-பு 1-20-14. 161. பாகவதம் 7-10-31.
162. ருக்வேதம் 163. தை-நா 1-10.

ஹ்ருதா மநீஷா மநஸாऽபிக்லுப்தோ
ய ஏநம் விதுரம்ருதாஸ்தே பவந்தி ||

[இந்தப் பரமபுருஷனுடைய திவ்யமங்களவிக்ரஹம் நாம் காணும் படி நிற்பதில்லை. எவனும் இவனைக் கண்ணால் காண்பதில்லை. பக்தியினாலும், சஞ்சலத்தன்மையற்ற மனத்தாலும் நினைக்கப்படுகிறானிவன். எவர்கள் இவனை அறிகின்றனரோ அவர்கள் முக்தராகின்றனர்.]

164. பெரி-வ்யா-ப்ர-தி-39.

165. தைவீ ஸம்பத் விமோக்ஷாய நிபந்தாயாஸுரீ மதா |
மா ஶுசஸ் ஸம்பதம் தைவீமபிஜாதோऽஸி பாண்டவ ||

[(என் ஆஜ்ஞைப்படி நடப்பதாகிற) தைவிகச்செல்வம் மோக்ஷத்தின் பொருட்டாகிறது. (அதை மீறி நடப்பதாகிற) ஆஸுரச் செல்வம் அதோகதிக்கு இலக்காக்குகிறது. பாண்டு புத்திரனே! நீ வருந்தேல். நீ தைவிகச் செல்வத்தைப் பிறப்பிலேயே பெற்றுள்ளாய்.]

166. சஞ்சலம் ஹி மந: க்ருஷ்ண ப்ரமாதி பலவத் த்ருடம் |
தஸ்யாऽஹம் நிக்ரஹம் மந்யே வாயோரிவ ஸுதுஷ்கரம் ||

[கிருஷ்ணா! மனம் நிலையற்றதாகவும், நிலைகலங்கச் செய்வதாயும் பலமுள்ளதாகவும், (கீழான விஷயங்களில்) நிலையானதாகவுமிருக்கிறதன்றோ. வாயுவைப்போல், அதை அடக்குவதையும் மிகவும் செய்தற்கரியதாகவே நான் நினைக்கிறேன்.]

167. விஸஸ்மார ததாத்மாநம் நாந்யத் கிஞ்சிதஜாநத |
அஹமேவாவ்யயோऽநந்த: பரமாத்மேத்யசிந்தயத் ||

[அந்தப் பிரஹலாதன் அப்போது தன்னை மறந்தான்; வேறொன்றையும் அறிந்தானல்லன்; 'நானே அழிவற்றவனும், முடிவற்றவனுமான பரமாத்மா' என்று நினைத்தான்.]

168. பெரி-வ்யா-ப்ர-தி-40.

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு
முற்றிற்று.

அழகியமணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்.

---

165. கீதை 16-5. 166. கீதை 6-34. 167. வி-பு 1-20-2.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# முநிவாஹநபோக ப்ரமாணத்திரட்டு

1. ஏஷ கர்த்தா ந க்ரியதே

[இவனே எல்லாவற்றையும் ஸ்ருஷ்டிப்பவன்; இவன் ஒருவராலும் ஸ்ருஷ்டிக்கப்படுவதில்லை.]

2. கருணா க்வாபி புருஷே

[எத்தனையேனும் தாழ்ந்த புருஷனிடமும் பரமபுருஷனின் கருணை வெள்ளமிடுகிறது.]

3. யோ ஹ்யேநம் புருஷம் வேத தேவா அபி ந தம் விது:

[எவன் இப்பரமபுருஷனை அறிகிறானோ தேவர்களும் அவனை அறிகிறார்களல்லர்.]

4. அத்ய ப்ரப்ருதி ஹே லோகா யூயம் யூயம் வயம் வயம்।
வயம் து கிங்கரா விஷ்ணோ: யூயமிந்த்ரியகிங்கரா:।

[உலகினரே! இன்று முதல் நீங்கள் நீங்களே; நாங்கள் நாங்களே; நாங்கள் விஷ்ணுவின் அடிமைகள்; நீங்கள் இந்திரியங்களுக்கு அடிமைகள்.]

5. நாயனார் வ்யா-ப்ர-தி-92.

6. தாஸபூதா: ஸ்வதஸ் ஸர்வே ஹ்யாத்மாந: பரமாத்மந:।
அதோऽஹமபி தே தாஸ இதி மத்வா நமாம்யஹம்॥

[எல்லா ஆத்மாக்களும் பரமாத்மாவுக்கு இயற்கையாகவே அடிமைப்பட்டவர்கள்; ஆகையால் நானும் உனக்கு அடிமை என்று அறிந்து உன்னை நான் நமஸ்கரிக்கிறேன்.]

7. நாயனார் வ்யா-ப்ர-தி-58.

8. அவிஜ்ஞாதா

[(அடியாருடைய தோஷங்களைக்) காணாதவன்.]

9. தேந வஞ்சயதே லோகாந் மாயாயோகேந கேஶவ:।
யே தமேவ ப்ரபத்யந்தே ந தே முஹ்யந்தி மாநவா:॥

---

4. திருவயிந்திரபுரத்தில் வில்லிபுத்தூர்ப்பகவர் வார்த்தை.
6. ஈச்வரஸம்ஹிதை; சிவவாக்கியம். 8 ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமம்.
9. பார-உ.த் 67-15.

[தன் மாயாயோகத்தாலே கேசவன் உலகினரை வஞ்சிக்கிறான். எவர்கள் அவனையே சரணமடைகிறார்களோ, அந்த மனிதர்கள் மயங்குவதில்லை.]

10. அவஜாநந்தி மாம் மூடா மாநுஷீம் தநுமாச்ரிதம்।
பரம் பாவமஜாநந்தோ மம பூதமஹேச்வரம்॥

[பூதங்களுக்குப்பெரிய ஈச்வரனாயிருக்கும் என் மேலான தன்மையை அறியாமல் மனிதவுருக்கொண்ட என்னை மூடர்கள் அவமதிக்கிறார்கள்.]

11. தாஸ்யமைச்வர்யயோகேந(வாதேந) ஜ்ஞாதீநாஞ்ச கரோம்யஹம்।
அர்த்தபோக்தா ச போகாநாம் வாக்துருக்தாநி ச க்ஷமே॥

[ஐச்வர்யம் என்னும் பெயரில் ஜ்ஞாதிகளுக்கு நான் அடிமைத்தனம் செய்கிறேன். போகங்களை (அவர்களோடு) பங்கிட்டுக்கொண்டு உண்கிறேன். அவர்களுடைய துஷ்டப்பேச்சுக்களைப் பொறுக்கிறேன்.]

12. நாயனார் வ்யா-ப்ர-தி-140.

13. உதாரா: ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்

[இவர்கள் அனைவரும் உதாரர்கள்; ஞானியோவெனில் எனக்கே ஆத்மா என்பது என்முடிவு.]

14. தே தம் புக்த்வா ஸ்வர்க்கலோகம் விசாலம்
க்ஷீணே புண்யே மர்த்யலோகம் விசந்தி।
ஏவம் த்ரயீதர்மமநுப்ரபந்நா
கதாகதம் காமகாமா லபந்தே॥

[அவர்கள் விசாலமான சுவர்க்கலோகத்தை அநுபவித்து, புண்ணியம் அழிந்தவுடன் மனிதருலகை அடைகிறார்கள். வேதத்தின் பூர்வபாகத்தை இப்படிக் கடைப்பிடிப்பவர்களாய், ஸ்வர்க்காதி பலன்களில் விருப்பமுள்ளவர்களான அவர்கள் சென்று சென்று திரும்பும் உலகங்களை அடைகிறார்கள்.]

---

10. கீதை 9-11. 11. பார-சாந்தி 81-5. 13. கீதை 7-18.
14. கீதை 9-21.

15. ஸ்வோஜ்ஜீவநேச்சா யதி தே ஸ்வஸத்தாயாம் ஸ்ப்ருஹா யதி।
ஆத்மதாஸ்யம் ஹரே: ஸ்வாம்யம் ஸ்வபாவஞ்ச ஸதா ஸ்மர॥

[உன்னுடைய உஜ்ஜீவனத்தில் உனக்கு விருப்பமிருக்குமாகில், உன் இருப்பில் ஆசையிருக்குமாகில், ஆத்மாவினுடைய தாஸனுயிருக்கும் தன்மையையும், ஹரியினுடைய ஸ்வாமியாயிருக்கும் தன்மையையும் (இவைகளின்) ஸ்வபாவத்தையும் எப்போதும் நினைப்பாயாக.]

16. ஜ்ஞாநீ து பரமைகாந்தீ ததாயத்தாத்மஜீவந:।
தத்ஸம்ச்லேஷ வியோகைகஸுகது:க்கஸ் ததேகதீ:॥

[ஏகாந்திகளுள் சிறந்தவனுன ஞானியோவெனில், பரமபுருஷனையே பற்றிநிற்கும் வாழ்வையுடையவனுய், அவனோடு கூடுவதையும், பிரிவதையுமே இன்பமாகவும் துன்பமாகவும் கொண்டவனுய், அவனையே நினைப்பவனுயுள்ளவன்.]

17. மச்சித்தா மத்கதப்ராணு போதயந்த: பரஸ்பரம்।
கதயந்தச்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச॥

[என்னிடம் நெஞ்சையுடையவர்களாய், என்னைப்பற்றிநிற்கும் வாழ்வையுடையவர்களாய், (என் குணங்களை) ஒவருர்க்கொருவர் அறிவிப்பவர்களாய், என் திவ்யசரிதங்களைச் சொல்லுமவர்களாய், எப்போதும் சொல்லியும், கேட்டும் ஆனந்திக்கிருர்கள்.]

18. நாயனுர் வ்யா-ப்ர-தி-115.

19. த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்।
ஏஷ மே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம:॥

[இரண்டாகப்பிளக்கப்பட்டாலும் படுவேனேயொழிய, இப்மாதிரி ஒருவனுக்கும் வணங்கமாட்டேன். இது என்னுடன் பிறந்ததான தோஷம். (அவரவர்களுடைய) ஸ்வபாவம் மீறமுடியாததன்றே.]

---

15. விஷ்ணுதத்வம். 16. கீதார்த்தஸங்க்ரஹம் 29.
17. கீதை 10-9. 19. ரா-யு 36-11.

20. தமேந்த்ரியாநநம் கோரம் யோ மநோரஜநீசரம் ।
விவேகஶரஜாலேந ஶமம் நயதி யோகிநாம் ॥

[பத்து இந்திரியங்களாகிற பத்துத்தலைகளை உடையதும், கோர மானதுமான யோகிகளின் மனமாகிற ராவணனை விவேகமாகிற அம்புக்கூட்டத்தாலே அழிக்கிறான் எம்பிரான்.]

21. விதிதஸ் ஸ ஹி தர்மஜ்ஞ: ஶரணாகதவத்ஸல: ।
தேந மைத்ரீ பவது தே யதி ஜீவிதுமிச்சஸி ॥

[(ராவணா!) ஸ்ரீராமபிரான் தர்மத்தை அறிந்தவராகவும், சரண மடைந்தவரிடம் வாத்ஸல்யமுடையவராகவும் பிரஸித்தமானவர். நீ உயிர்வாழ விரும்பினாயாகில் அவருடன் உனக்கு நட்பு உண்டாகட்டும்.]

22. அராக்ஷஸமிமம் லோகம் கர்த்தாऽஸ்மி நிஶிதை: ஶரை: ।
ந சேச்சரணமப்யேஷி மாமுபாதாய மைதிலீம் ॥

[பிராட்டியைத் திருப்பிக்கொண்டுவந்து என்னை சரணமடைய வில்லையாகில், கூர்மையான அம்புகளாலே இவ்வுலகை ராக்ஷஸப் பூண்டற்றதாகச் செய்வேன்.]

23. பெரி-வ்யா-ப்ர-தி-28.

24. தாமோதரம் பந்தகதம்

[கட்டுண்ட தாமோதரனை]

25. பெரி-வ்யா-ப்ர-தி-30.

26. ப்ரியமிதரததாபி வா யத் யதா
விதரஸி வரத ப்ரபோ த்வம் ஹி மே ।
தததுபவநமேவ யுக்தம் ஹி மே
த்வயி நிஹிதபரோऽஸ்மி ஸோऽஹம் யத: ॥

---

20. ஸாத்வதஸம் 12-51. 21. ரா-ஸு 21-20.
22. ரா-யு 41-66. 26. வரத-ஸ்த 91.

[வரதராஜனே! இப்படி அடியேன் பிரார்த்தித்தபோதிலும், தேவரீர், எனக்குப்பிரியமானதோ, அப்ரியமானதோ ஆகிய எதை எனக்கு எப்படிக் கொடுத்தாலும் அப்படியே அதை அநுபவிப்பதன்றோ எனக்கு அடுத்தது; ஏனெனில்; அடியேன் தேவர் பக்கல் பரஸமர்ப்பணம் பண்ணிக்கிடக்கிறேனன்றோ.]

27. தவ பரோ஽ஹமகாரிஷி தார்மிகை:
ஶரணமித்யபி வாசமுதைரிரம் ।
இதி ஸஸாக்ஷிகயந்நிதமத்ய மாம்
குரு பரம் தவ ரங்கதுரந்தர ॥

[திருவரங்கநாதனே! அடியேன் தர்மிஷ்டர்களான ஆசாரியர்களாலே தேவரீருடைய பாரமாகச் செய்யப்பட்டேன்; சரணம் என்கிற சொல்லையும் வாய்விட்டுச் சொன்னேன்; என்கிற இதைப்பிரமாணமாகக் கொண்டு இன்று அடியேனை தேவரீருடைய பொறுப்பாக ஏற்றுக்கொள்ளவேணும்.]

28. நராஜ்ஜாதாநி தத்த்வாநி நாராணீதி ததோ விது: ।
தாந்யேவ சாயநம் தஸ்ய தேந நாராயண: ஸ்ம்ருத: ॥

[நரனென்கிற பகவானிடமிருந்து உண்டானவை தத்துவங்களெல்லாம். ஆகையால் அவற்றை நாரங்களென்று அறிகின்றனர். அவையே அவனுக்கு இருப்பிடமாயின. ஆகையால் அவன் நாராயணன் என்று எண்ணப்படுகிறான்.]

29. நாயனார் வ்யா-ப்ர-தி-151.

30. நாயனார் வ்யா-ப்ர-தி-18.

31. புருஷாணாம் ஸஹஸ்ரேஷு தேஷு வை ஶுத்தயோநிஷு ।
அஸ்மாந்ந கச்சிந் மநஸா சக்ஷுஷா வாப்யபூஜயத் ॥

[சுத்தயோநிகளான அந்தப்பல்லாயிரக்கணக்கான ச்வேதத்வீபவாஸிகளில் ஒருவரும் எங்களை நெஞ்சாலும் கண்ணாலும் கணிசிக்கவில்லை.]

---

27. ர-ஸ்த 2-102. 28. பார-ஆநு 186-7. 31. பார-ஶாந்தி 344-54.

32. ஸுதப்தம் வஸ்தபோ விப்ரா: ப்ரஸந்நேநாந்தராத்மநா ।
யூயம் ஜிஜ்ஞாஸவோ பக்தா: கதம் த்ரக்ஷ்யத தம் விபும் ॥

[அந்தணர்களே! தெளிந்த மனத்தோடு, உங்களால் நன்றாகத் தவம் செய்யப்பட்டது. நீங்கள் பகவானைக் காணவிரும்பும் தசையிலிருக்கும் பக்தர்கள்; அப்பரமனை நீங்கள் எப்படி (இதற்குள்) காணமுடியும்?]

33. ப்ராப்ய ச்வேதம் மஹாத்வீபம் நாரதோ பகவாந் ருஷி: ।
ததர்ஶ தாநேவ நராந் ச்வேதாம்ச் சந்த்ரஸமப்ரபாந் ॥
பூஜயாமாஸ ஶிரஸா மநஸா தை: ஸுபூஜித: ॥

[மஹர்ஷியான நாரதபகவான் ச்வேதத்வீபத்தை அடைந்து வெள்ளை நிறத்தவரும், சந்திரன் போன்று ஒளியுள்ளவருமான அந்தப்புருஷர்களையே கண்டார். நெஞ்சாலே அவர்களால் நன்கு பூஜிக்கப்பட்டவராய், அவர்களைத் தலையாலே வணங்கினார்.]

34. ஏவம் ஸந்தர்ஶயித்வா து நாரதம் பரமேஷ்டிஜம் ।
உவாச வசநம் பூயோ கச்ச நாரத மா சிரம் ॥
இமே ஹ்யநிந்த்ரியாஹாரா மத்பக்தாச் சந்த்ரவர்ச்சஸ: ।
ஏகாக்ராச் சிந்தயேயுர் மாம் நைஷாம் விக்நோ பவேதிதி ॥

[பரமபதத் திருமேனியிலிருந்து தோன்றிய உருவை இம்மாதிரியாகக் காட்டிவிட்டு, பகவான் அவரைக் குறித்து மறுபடி பின் வருமாறு வார்த்தை அருளினான்,—"நாரதனே! விரைவில் இங்கிருந்து செல்வாயாக; இவர்கள் இந்திரியமும், ஆகாரமுமற்றவர்கள்; என்னடியார்கள்; சந்திரன் போல் ஒளியுள்ளவர்கள்; ஒரே நினைவுடன் என்னை நினைப்பார்கள் இவர்கள்; இவர்களுடைய தியானத்திற்கு இடையூறு நேரலாகாது" என்று.]

35. தனியன் வ்யா-ப்ர-தீ-4.

முமுக்ஷுப்படி ப்ரமாணத்திரட்டு முற்றிற்று.
தூப்புற்பிள்ளை திருவடிகளே சரணம்.

---

32. பார-ஶாந்தி 344-31. 33. பார-ஶாந்தி 346-1.
34. பாம்-ஶாந்தி 347-18, 19.

# பிழைதிருத்தமும் பாடபேதமும்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 3 | 25 | मृणाले | मृणाल |
| 14 | 13 | ग्राह्यत | ग्राहयत |
| 15 | 8 | क्ववचित् | क्वचित् |
| 30 | 14 | विन्दाङ्कश | विन्दाङ्कुश |
| 43 | 21 | परिवाहात्मनां | परीवाहात्मनां |
| 48 | 19 | चिद्चिद | चितचिद् |
| 48 | 21 | சிதசித | சிதசித் |
| 70 | 6 | शक्या | शक्ता |
| 70 | 7 | ஶக்யா | ஶக்தா |
| 73 | 13 | என்கிறபடியே. | என்கிறபடியே, |
| 74 | 22 | ओदनं....ஓதநம் | ओदनः....ஓதந: |
| 81 | 27 | அழித்தது | அழித்தது. |
| 82 | 2 | னரங்கத | னரங்கத் |
| 83 | 8 | ஞப்போலே | ருப்போலே |
| 85 | 28 | தோற்றுகிறது | தோற்றுகிறது. |
| 86 | 6 | சிறிக்கனுக்கு | சிறுக்கனுக்கு |
| 86 | 13 | ஊண் | ஊன் |
| 86 | 24 | ब्रह्मणे | ब्रह्मणो |
| 86 | 26 | தாவாநு | தவாநு |
| 89 | 3 | கடவதிறே | கடவதிறே. |
| 89 | 11 | அமலத்வம் | அமலத்வம். |
| 90 | 3 | ச்ரியபதி | ஶ்ரிய:பதி |
| 90 | 7 | மென்னுதல் | மென்னுதல். |
| 90 | 10 | யிருக்கை | யிருக்கை. |
| 92 | 18 | ஆதாரத்தைப் | ஆதரத்தைப் |
| 94 | 20 | நுஷ்டானத்துக்குக் குடலான | நுஷ்டானத்துக்கு உடலான |
| 108 | 22 | पश्यन्ति | पश्यन्ति |
| 111 | 20 | (பா) அநுபவ | (பா) பகவதநுபவ |
| 112 | 16 | (பா)ஞனவனுடைய | (பா) ஞன அவனுடைய |
| 113 | 8 | (பா) அவதாரணம் | (பா) அவதாரணமும் |
| 113 | 16 | (பா) கர்த்ருத்வாதிகளிலே | (பா) கர்த்ருத்வாதிகளாலே |

| | | | |
|---|---|---|---|
| 114 | 12 | (பா) ஈச்வரச்சுணை | (பா) ஈச்வரத்வச்சுணை |
| 114 | 20 | (பா) காணான் (என்றது காணாம்!) என்றதுவும் | (பா) காணான் என்றது, காணாமதுவும் |
| 115 | 9 | अवजानत्ति | अवजानन्ति |
| ,, | 11 | “दास्य | 11 “दास्य |
| ,, | 12 | “परमे | 12 “परमे |
| 116 | 2 | (பா) ஓடிவந்து | (பா) ஓடின |
| ,, | 14 | (பா) யும், மற்றும்.... அவற்றில் | (பா) யும், ஶரண்யத்வத்தையும், மற்றும் ஸர்வ ப்ரகாரோபகாரகத்வத்தையும், க்ருபாவிஶேஷவத்வத்தையும், ஸ்வாதந்த்ர்யத்தையும், அவற்றில் |
| 116 | 18 | (பா) விஶேஷத்தையும், | (பா) விஶேஷவத்வத்தையும் |
| 116 | 25 | (பா) காரணகாஷ்டை | (பா) காரணத்வகாஷ்டை |
| 119 | 5 | (பா) ஶரணாகதரானவன்று | (பா) ஶரணாகதராக |
| ,, | 27 | (பா) பற்றின | (பா) பற்றி |
| 120 | 21 | (பா) உத்தராவதியாயிருந்துள்ளதாய், | உத்தராவதியாயிருந்து, |
| 128 | 31 | ப்ரஸ்தாபகமான | ப்ரஸ்தாவகமான |
| 131 | 5 | (பா) ப்ரஹ்லாதன் அநுபவி | (பா) ப்ரஹ்லாதன் அணுகி அநுபவி |
| 138 | 25 | ஹேயூரக | கேயூரக |
| 144 | 25 | மரணாந்தாணி | மரணாந்தாநி |
| 147 | 24 | நவாநுகம்பா | தவாநுகம்பா |
| 151 | 8 | ப்ர-தி 12 | ப்ர-தி 11 |
| 151 | 16 | ப்ர-தி 11 | ப்ர-தி 12 |
| 151 | 19 | ஶாபத் | ஶாபாத் |
| 152 | 4 | தேவநா | தேவாநா |

★ ★ ★

# அமலனுதிபிரான் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டு அட்டவணை

குறிப்பு:— r இக்குறி எண்ணுக்கு முன் இருந்தால் தனியன் வ்யாக்யான ப்ரமாணத்திரட்டென்றும், பின் இருந்தால் பெரியவாச்சான்பிள்ளை வ்யாக்யான ப்ரமாணத்திரட்டென்றும், இல்லாமலிருந்தால் நாயனார்வ்யாக்யான ப்ரமாணத்திரட்டென்றும், இருபுறமுமிருந்தால் முனிவாஹனபோக ப்ரமாணத்திரட்டென்றும் கொள்க.


அ

அகமஹோததி: 31r
அதரமதுராம் r8
அத்தாசராசர 122
அத்ரௌஸயா 39r
அநச்நந் 10r
அப்ரஜ்ஞா 148
அராக்ஷஸ r22r
அர்ச்சகபரா r7r
அவஜாநந்தி r10r
அவாக்யநாதர: 33
அவிஜ்ஞாதா r8r
அஸங்கேத 159
அஸந்நேவ 124
அஸ்மாபிஸ் 15r
அஹமஸ்ம்யப 93
அஹம்ஸர்வம் 57

ஆ

ஆஜகாம 133
ஆதிராஜ்ய 38
ஆதீயதே 12r
ஆத்மாநமஸ்ய 83
ஆநயைநம் 8r
ஆவாஸம் 42
ஆவிர்பபூவ 160
ஆஸ்தாந்தே 58

இ

இக்ஷ்வாகு 15
இந்த்ரியாணும் 70
இந்த்ரோமஹே 115
இஹஸந்தோ 74

ஈ

ஈச்வரோஹ 92

உ

உதாராஸ் r13r
உபாப்யாமேவ 121
உவாசமதுரம் r34r

ஏ

ஏகைகஸ்மிந் 2
ஏததேவாப்ருதம் r2
ஏநத்ஸாம 79
ஏதௌத்வௌ 126
ஏவம்ஸந்தர் r31r
ஏஷகர்த்தா 11r
ஏஹிபச்ய 43

ஐ

ஐததாத்ம்யம் 47

க

கதாபுந: 34
கபாலீத்வம் 108
கருணுக்வாபி r20r
கர்மவச்யா 86
கச்சவீர்ய 51
கஸ்யபிப்யதி 118
கிரீடகேயூர §5
குருஷ்வமாம 6§
குஸஸ்தலே 27
கோகுணவாந் 14
க்ருதக்ருத்ய: 17§
க்ருபயாபரயா 146
க்ருஷ்ணம்தர் 88
க்வாஹம்ரஜ: 38r

ख

கஸ்தஏவ 73

ग

கச்சாநுஜாநாமி 28r
காயந்திகேசித் 80
குணைர்தாஸ்ய 67

ச

சக்ஷுர்தேவாநா 25
சஞ்சலம்ஹி 166
சாபமாநய 22r
சிந்தாமணி 151r

ஜ

ஜாயமாநம 135
ஜிதந்தே 40
ஜ்ஞாநீதுபர r16r

த

ததாதர்ஸித 126
தத்க்ஷணுதேவ 107
தத்ரைவாந்தர 161
தத்விஷ்ணோ: 40r
தபஸாவிந் 96
தமோஹிரண்ய 139
தவபரோஹ r27r
தேதப்புக்த்வா r14r
தேதப்ஸோம 44
தேநமைத்ரீ 32r
தேநவஞ்சயதே r9r
தேநவஸீதா 78
த்ரயோதேவா 54
த்ரிவிதசிதசித் r7,68
த்ரீந்லோகாந் 114

த்வாம்ஹ்ருதிக் 75
த
தத்ருஶு: 13r
தேவேந்த்ரியா r20r
தாமோதரம்பந்த r24r
தாஸபூதாஸ் 66, r6r
தாஸோஹம்கோஸ 36r
தாஸ்பமைச் r11r
தீப்தபாவக 20r
தூதோராமஸ்ய 35r
தூராத்கந்தோ 52
தைவீம்ஸப்ப 165
த்ரஷ்டவ்யஸ் 157
த்ருதகஜ 152
த்விதாபஜ்யே r19r
த
தர்மேணபாப 87
ந
நகச்சித் 33r
நசக்ஷுஷார்யச் 163
நநமேயம் r19r
நமாம்ஸசக்ஷு 162
நராஜ்ஜாதாதி r23r
நஷ்டோமோஹ: 151
நாராயணகதா 3r
நாவேவயாந்த 24
நாஸ்பதி 39
நிமக்நஆயு: 156
நேயமஸ்திபுரீ 71
நோபஜநம் 41r
ப
பட்டம்கிலோ r7
பதிம்விச்வஸ்ய 24r
பத்யாமபி 16r
பரமேச்வர 140
பரவாநஸ்மி 65
பரிகோபமா: 103
பவித்ராணம்ஹி 155
பாதாருந்துத 35
பாவநஸ்ஸர்வ 9r
புண்டரீகாக்ஷத 138
புண்டரீகாக்ஷ ராக்ஷ 137
பும்ஸாம்காரு 46
புருஷாணும் r31r
பூர்ணம் 1
பூர்வஜ 18
ப்ராணஷ்டஸ்ய 30
ப்ரஸவாந்தஞ்ச 23r
ப்ராப்யச்வே r32r
ப்ராப்யஸ்ய 8
ப்ரியமித்ர r26r
ப
பலவாந் ப்ரஹ்ம 141
ப்ரஹ்மண:புத்ரா 128
ப்ரஹ்மதண்ட 147
ப்ரஹ்மவிஷ்ணு சிவா 53
ப்ரஹ்மா ஸ்வயம்பூ: 115
ப
பகவத்ஸ்வரூப 149
பாவோநாந்யத்ர r4
பீஷோதேதி 72
பூதாநாம்யோ 116
ம
மச்சித்தா r17r
மதீயமூர்த்தா 18r
மயிபக்திஸ் 144
மயிப்ருத்யே 22
மஹதாதபஸா 97
மாதாபிதா 131
மாநுஷ்யப்ரா 111
மித்ரபாவேந 125
ய
யதாகப்பாஸம் 136
யதிஹாஸ்தி 4r
யதோவாசோ 7r
யத்ப்ரஹ்மகல் 90
யத்யதர்மோ 27r
யத்ராம: 133
யஸ்யப்ரஹ்ம 123
யஸ்யாத்மா 112
யஸ்யாஸ்மி 25r
யாப்ரீதிரவி 143
யூயமிந்த்ரிய r4r
யூயம்ஜிஜ்ஞா r32r
யோகக்ஷேமம் 6
யோப்ரஹ்மாணம் 61
யோஹ்யேகம் r3r
ர
ரக்ஷ்யாபேக்ஷா 32
ரத்நஹாரீ 11r
ரமயதாஸ 116
ராமம்மேது r3
ராமஸுக்ரீ 56
ராமோராமோ 45
ராமோவிக் 89
ல
லங்காம்ராவண 36r
வ
வரம்ஹுதவஹ 153
வாநராணும் [illegible]5
விதிதஸ்ஸஹி r21r
விதிஶிவஸநகா 31
விச்வஸ்யா 81
விஸ்மார 16[illegible]
வேதாநத்யாப 3r
வேதாந்தவிஜ் 150
வேதாபப்ரும்ஹ 1r
வ்யாஸநேஷுமது 19r
ஶ
ஶிஞ்ஜாந r6
ஶேஷ்யேபுர 21r
ச்ருதி: ஸ்ம்ரு 127
ஶ்ரியாஸார்த்தம் 41
ஸ்ரீமாந்மயா 108

ஸ்ரீமாங்ஸாக r1
ஸ்ரீரங்கேசய r6
ஸ்ரீவத்ஸஸம் 82
ஸ்ரீஸ்தநா
பரணம் 151*

ஸ

ஸகலுப்ராஹ் 109
ஸகோகேஷா 129
ஸக்ருதேவ 119
ஸக்ருத்த்வதா 158
ஸக்ய: பச்யத 145
ஸதாபச்யந்தி 40r
ஸத்வாத்ஸஞ்ஜா 84
ஸங்கமேகம் 124
ஸபித்ராச 114
ஸமயாபோதித: 34r
ஸர்வகந்த: 26
ஸர்வபாபே 30r
ஸர்வபுண்ய 154
ஸர்வபூஷண 34r
ஸர்வை: பரி 29r
ஸிஞ்சேதிமஞ்ச 39r
ஸூதப்தம்வஸ் r32r
ஸேந்த்ராய 117
ஸௌந்தர்யாக்யா 62
ஸ்தாவரக்ரிம 110
ஸ்நேஹோமே r4
ஸ்ருஷ்டிஸ்தி 53

ஹ

ஹிரண்யப்ரா 100
ஹிரண்யவர் 99
ஹாவுஹாவு 79

க்ஷ

க்ஷணேமிதே 158
க்ஷிபாமி 120

---

## புதுக்கோட்டை ஸ்ரீ உ. வே. ஸ்ரீநிவாஸராகவன் ஸ்வாமியின் முனிவாஹனபோகப் பதிப்பிலுள்ள சில குறிப்புகள்.

### 1. குறும்பறுத்த நம்பி [பக்கம்-114 வரி-10]

குறும்பறுத்த நம்பி—முக்குறும்புகளையும் (குலம், தொழில், ஐச்வர்யம்) என்றவற்றால் வரும் கர்வங்களை நீக்கின பெரியார். குயவர் வகுப்பில் பிறந்தவரான ஒரு பக்தர் குறும்பறுத்த நம்பி எனப்படுவர். இவர் மண்ணாலே திருவேங்கடமுடையானுக்குத் திருமேனி ஏற்படுத்தி, அவருக்கு அடிமை செய்துகொண்டு வந்தார். தினமும் தன் தொழிலான மண்பாண்டங்கள் செய்வது முடியுமளவில், கையில் ஒட்டிய மண்ணைக்கழுவி ஒரு புஷ்பமாகச் செய்து அப்பெருமாள் திருமுடியில் அதைப் பரமபக்தியுடன் சாத்திவருவார். அக்காலத்தில் ஒரு ராஜபுத்திரன் ஸ்வர்ணபுஷ்பங்களால் மாலை செய்து திருவேங்கடமுடையானுக்குச் சாத்துவித்தான். அவன் முக்குறும்புள்ளவனாகையால், அது திருமுடியில தங்கவில்லை. ஆவேசமுகத்தாலே 'குறும்பறுத்த நம்பி இடும் பூ நமக்கு உண்டு' என்று நியமனமாயிற்று. இப்படி குறும்பறுத்த நம்பி என்பவர் தம் ஜாதிவ்ருத்த நிகர்ஷத்தைப்பாராதே திருமுடிக்குப் பூ இட்டார் என்கிற சரித்திரம் இங்கே குறிப்பிடப்பட்டது.

### 2. சாவேறு [பக்கம்-123 வரி-25]

சாவேறு—பகையரசனைச் சூழ்ந்துகாக்கும் படைமீது ஒருமுகமாய்ப் பாய்ந்து ஊடறுத்துச் செல்லமுயன்று அங்கிலையில் உயிர்துறத்தலையே விரதமாகக்கொண்ட வீரர்தொகுதி.

# ஸ்ரீஸூக்திமாலா வெளியீடுகள்

[பதவுரை, அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு முதலான வற்றோடுகூடிய பூர்வாசார்ய க்ரந்தங்கள்]

| க்ரந்தங்கள் | விலை | தபாற் கூலி |
|---|---|---|
| 1. பரந்த ரஹஸ்யம் முதலிய எட்டு ரஹஸ்யங்கள் | 1-8-0 | 3 |
| 2. ஸ்தோத்ரரத்ன சதுச்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள் | 3-0-0 | 6 |
| 3. திருப்பல்லாண்டு வ்யாக்யானம் | 1-8-0 | 3 |
| 4. முதல் திருவந்தாதி வ்யாக்யானம் | 1-14-0 | 4 |
| 5. பெருமாள் திருமொழி வ்யாக்யானம் | 1-14-0 | 4 |
| 6. திருமாலை வ்யாக்யானம் | 2-12-0 | 5 |
| 7. திருவாசிரியம் பெரிய திருவந்தாதி வ்யாக்யானம் | 1-10-0 | 4 |
| 8. சது:ச்லோகீ வ்யாக்யானம் (நாயஞ்ஜீயர்ச்சான்பிள்ளை) | 1-8-0 | 3 |
| 9. கத்ய வ்யாக்யானங்கள் | 2-0-0 | 4 |
| 10. நாச்சியார் திருமொழி வ்யாக்யானம் | 4-0-0 | 8 |
| 11. திருச்சந்த விருத்த வ்யாக்யானம் | 3-0-0 | 6 |
| 12. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம் (விவரணத்துடன்) | 2-8-0 | 6 |
| ஷை மலிவுப் பதிப்பு | 2-0-0 | 6 |
| 13. ஸ்ரீராமாயண தசிச்லோகம் (விவரணத்துடன்) | 3-8-0 | 6 |
| ஷை மலிவுப் பதிப்பு | 2-12-0 | 6 |
| 14. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம் | 0-8-0 | 1 |
| 15. பாசுரப்படி ராமாயணம் (விலையில்லை தபாற் கூலி 0-1-0) | | |

## ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடுகள்

| | | |
|---|---|---|
| 1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம் | 1-8-0 | |
| 2. திருப்பாவை வ்யாக்யானம் | 2-4-0 | 4 |
| 3. ஸந்த்யா வந்தந பாஷ்யம் | 2-4-0 | 4 |
| 4. புருஷஸூக்த வ்யாக்யானம் | 0-12-0 | |
| 5. நாராயணஸூக்த வ்யாக்யானம் | 0-12-0 | |
| 6. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம் | 2-0-0 | 6 |
| ஷை மலிவுப் பதிப்பு | 1-8-0 | 6 |
| 7. அபயப்ரதராஜ விஜயம் | 0-10-0 | |
| 8. கம்பராமாயணம் (கையடைப்படலம் முடிய) | 2-8-0 | 6 |
| 9. ராமாநுஜதேசிக ஸ்தோத்ரங்கள் | 1-0-0 | 3 |
| 10. பலதாரமணம் | 0-4-0 | |
| 11. பாகவத தசமஸ்கந்த கீர்த்தனை பூர்வ பாகம் | 4-0-0 | |
| ஷை உத்தர பாகம் | 4-0-0 | |
| 12. ஸ்ரீகேசவ மணிமாலை | 0-8-0 | 1 |

கிடைக்குமிடம்:—

ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி.

ஸ்ரீநிவாஸம் பிரஸ், புத்தூர், திருச்சி.